காலிபுரத்தை பரிசுத்தமாக்கிய பாததூளியை உடையவர்களாயும், நற்கர்மங்களாகிற தாமரை ஓடைகளை மலரச் செய்வதில் சூர்யர்களாயும், அண்டிய பக்த ஜனங்களுக்கு சந்தோஷத்தை அளிப்பதில் சந்திர உதயங்களாயும் இருக்கும் ஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதர் என்று பெயர் பெற்ற பெரியோர்கள், ரகு வம்சத்தின் கொடி போன்று விளங்கும் ஸ்ரீ ராமனாகவே விளங்குகிறார்கள்.

4. இவர்களின் பாததூளியைக்கொண்டு பரிசுத்தமான புத்தி சக்தியை அடைந்து (க்ஷேமமுற்றேன்.)

பரிசுத்தமான ஆசார்யனாகிற மேகங்களால் நிறைக்கப்பெற்ற என் இதயமாகிற ஓடை, சொற்களாகிற ஜலத்தைக்கொண்டு, சாதுக்களின் உள்ளங்களாகிற க்ஷேத்திரங்களை எப்பொழுதும் நனைக்கிறது.

கங்கையின் உத்பத்தி ஸ்தலமான இமயம் முதல் நிகரற்ற பெருமை வாய்ந்த ராம ஸேது வரை ஸ்ரீராமாயணத்தை யார் கானம் செய்தாரோ, அப்படிப் பட்டவரும், யாகம் செய்தவரும் ஆன ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் சிறந்து விளங்குகிறார்.

என் பிதாவிற்கு ஸகல வித்யையும் போதித்ததுமல்லாமல், பகவத் கதா பிரசங்கத்தையே வ்ருத்தியாக வைத்துக்கொள்ள ஆக்ஞாபித்ததும் ஸ்ரீ முத்தண்ணாவாளே. கல்லூரியில் சம்ஸ்க்ருத போதனாசிரியர் வேலை கிடைத்ததாம். அதை ஒப்புக்கொள்ளலாமா என்று குருவைக் கேட்டாராம். "என்னிடம் அப்யஸித்த வித்தையை, அப்படி விக்ரயம் செய்யவேண்டாம்" என்று சொல்லி, ஸ்ரீ ராமாயண க்ரந்தத்தை எடுத்துக் கொடுத்து, "முதலில் என்னிடமே சொல்லு. உனக்கு சகல புருஷார்த்தங்களும் ஏற்படும்" என்று அனுக்ரஹித்தார்களாம். அது முதல் ஐம்பது வருஷங்கள் பகவத் கதைகள் சொல்லி வந்திருக்கிறார்.

आगङ्गावारि पूरादनुपम विभवादा च काकुत्स्थसेतोः ।
यद्गीतं रामगीतं जयति विजयते कृष्णशास्त्री स यज्वा ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆகங்காவாரி பூராசதனுபம
விபவாதா ச காகுத்ஸ்தஸேதோ: ।
யத்கீதம் ராமகீதம் ஜயதி விஜயதே
க்ருஷ்ணசாஸ்த்ரீ ஸ யஜ்வா ॥

ஸ்ரீ முத்தண்ணுவாள் ஆயுளுக்குள்ளேயே தன் சிஷ்யன் ப்ரபல ஸ்திதி அடைந்து வருவதை அப்போதைக் கப்போது ஆமோதித்து, அநுக்ரஹித்து வந்தார்களாம். சென்னை, கோவிந்தப்ப நாயக்கன் வீதியில் ஸ்வக்ருஹத்தில் பிதா, 'பாகவத ஸப்தாஹம்' சொல்லி வந்தார். ஏராளமான கூட்டம். ஒரு நாள் திடீரென்று 'ஸ்ரீ முத்தண்ணுவாளுக்கு சரீர உபாதி' என்று தந்தி வந்தது. பிதாவாள் ஸ்ரீ முத்தண்ணுவாளின் மேன்மையை தாரை யாய்க் கண்ணீர் உதிர்த்துக்கொண்டு சபையில் விளக்கி விட்டு ரயிலுக்கு வேகவேகமாய் ஓடினுர்கள். (1893-ம் வருஷம்) எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்போது மதராஸிலிருந்த பக்தர்களுக்கிடையே இந்த விஷயம் பரபரப்பை உண்டுபண்ணிற்று.

வருஷாவருஷம் ஸ்ரீ முத்தண்ணுவாள் ஆராதனையை பிதாவாள் செய்துவந்தார்கள். பக்தி மார்கமே தனக்குப் போதுமென்று எண்ணி வந்தவர்கள், அறுபது வயதிற்கு மேல் தன் குருபோல் ஸோம யாகம் முதலியன செய்ய வேண்டும் என்று சங்கல்பித்து குருபுத்ரர்களைக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் ப்ரபலமாய் ஸோம யாகமும், பருத்தியூர் ஸ்ரீ கோதண்டராம ஸன்னிதியில் அதிராத்ரம் என்னும் யாகத்தையும் செய்து அக்னி ஹோத்ரிகளாகவும் ஆனுர்கள்.

குரு புத்ரர்களான தங்கள் பிதாக்களிடத்தில் அதே பக்தியும், ப்ரேமையும் பூண்டிருந்தார்கள். திருச்சேறை ஸ்ரீ சாரநாதன் ஸந்நிதியில் கதை சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் தங்கள் பிதாக்களை சேங்காலிபுரத்திலிருந்து அழைத்து வந்தார்கள். ப்ரும்மஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர், ப்ரும்மஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் இரண்டு பேரும் வந்தார்கள். அப்போ பிதாவிற்கு உடம்பு சாதாரணமாய் ஆரோக்கியமாகவே இருந்தது. நானும், என்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தமையன் கல்யாணராம சாஸ்திரியும் இருந்தோம். குரு புத்ராளை நோக்கி, "நான் ஸ்ரீ முத்தண்ணுவாளைப் போல் ஆபத்து ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளட்டுமா? அல்லது ஆஹிதாக்னி ஸம்ஸ்காரம் ஸ்லாக்யமா?" என்று கேட்டார். தங்கள் பெரியோர்கள் ஏது காரணத்தைக் கொண்டோ ஆஹிதாக்னி ஸம்ஸ்காரமே நீதியென்று அபிப்ராயப் பட்டார்கள். "அப்படியானல் இப்போதிருந்தே புத்ரர்களுக்கு அந்த விதிகளை சிக்ஷியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார் ஆனல் 'பிதா இன்னும் வெகு நாட்கள் இருப்பார்' என்று நம்பின எங்களுக்கு இது அபசகுனமாகத் தோன்றியபடியால் நாங்கள் கவனிக்கவில்லை. ஆனல் ஒரு வாரத்திற்குள் ஜ்வரம் வந்து குடவாசலுக்கு பிதாவை அழைத்துச் சென்றோம். "कामनेवं विधोलोकः" (காமமேவம் விதோலோகः) என்ற கால் ஸ்லோகத்தைச் சொல்லிவிட்டு த்யானத்தில் அமர்ந்துவிட்டார்கள். நான் மருந்து கொடுக்கப் போனேன். "நான் ஆத்மாராமன். எனக்கு இதெல்லாம் வேண்டாம்" என்று கண்டித்துவிட்டார். குடவாசல் நரசிம்மாசார் முதலிய பக்தர்களுக்கு திவ்ய ஸ்வப்னம் ஆனதும் யோகிகள் போகும் மார்க்கத்தில் (பத்ததியில்) அவாள் சென்றதும் ப்ரபலம். இதில் இங்கே கவனிக்கக்கூடியது, 'குரு ஸாயுஜ்யம் வேண்டும்' என்று சதா ஆசைப்பட்டுக்கொண்டிருந்து குருவுக்கு அவாள் செய்யவேண்டிய ஆராதனை தினத்தன்றே முக்தி கிடைத்தது. நிச்சயமாக குரு ஸாயுஜ்யம் கிடைத்திருக்கும் என்று நம்மை நம்பச் செய்கிறது.

மஹான்களுடைய கீர்த்தி நாளுக்கு நாள் விருத்தியாகுமே தவிர குறையாது. ஸ்ரீ முத்தண்ணுவாள் புண்ய கீர்த்தி, ப்ரதான சிஷ்யரான என் பிதாவால் முன் காலத்திலும், அவர் சந்ததியிலேயே உதித்த தங்களால், பல விதங்களில் இந்நாட்களில் பரவி வருவதும் மிகப்பொருத்தமே. வேணும். அநேக நமஸ்காரம்.

தங்கள் இஷ்டன்,

பருத்தியூர் K. பட்டாபிராம சாஸ்திரி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

58323
16930

மற்றொரு சிஷ்யருக்குக் குருவான ஆச்சர்யம்.

சய்யானம் ராமஸ்வாமி சாஸ்த்ரிகள் என்பவர்கள் நாடகம், அலங்காரம், வ்யாகரணம் முதலியவைகளைப் படித்து, ஸ்ரீமத் ராமாயண உபன்யாஸம் செய்து வந்தார்கள். அவருக்கு வேதாந்த சாஸ்த்ரம் படிக்கவேண்டுமென்று தோன்றியது. பல குருக்களிடம் சென்றார்கள். ஒரு குருவிடம் சென்று பழம், தேங்காய், திராக்ஷை, கற்கண்டு முதலிய பல வஸ்துக்களை வைத்து நமஸ்கரித்து, காலை பத்து மணிக்கு தான் வந்த காரியத்தையும் தெரிவித்தார்கள். இவர்களை, "எங்கு போஜனம் செய்யப்போகிறாய்" என்று கூடக் கேட்காமல், மாலையில் வந்து பார்க்கும்படிச் சொன்னார்கள். ஆனால் அங்கு ப்ரும்ம வித்தையைக் கற்க மனமில்லை. மற்றொரு குருவினிடம் சென்றார்கள். அவர்களையும் அதேபோல் நமஸ்கரித்து வேண்டிக்கொண்டார். அவர்களும் உபதேசிப்பதாய் அன்புடன் சொன்னார்கள். ஆனால் அவரிடத்தில் சதாசாரம் பரிபூர்ணமாக இல்லாததால் அங்கும் ப்ரும்ம வித்தையைக் கற்க மனமில்லை. உடன் ஸ்ரீரங்கக்ஷேத்ரம் சென்று, ஏகாதசியன்று காலை ஸ்ரீரங்கநாதனை நமஸ்கரித்தார்கள். உபவாஸ ச்ரமத்தால் சற்று மயக்கமுற்று எழுந்திருக்கவில்லை. அப்பொழுது ஸ்வப்னம். அதில் ஸ்ரீரங்கநாதன் பன்னிரண்டு திருநாமங்களுடனும், பொன்னாடை போர்த்திய திருமேனியுடனும், துளஸீ மாலையுடனும் தர்சனம் அளித்து, ஸ்ரீ வாஞ்சியம் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் யாகம் நடக்கிறதைப் பார். அதில் ஆத்வரம் செய்யும் மகான் சேங்காலிபுரம் ஸ்ரீ முத்தண்ணாவாள் என்கிற ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் அவர்களை வேதாந்த குருவாக க்ரஹித்துக்கொள்" எனக் கூறி மறைந்துவிட்டார்கள். இவர்கள் தெற்கு சீமையைச் சேர்ந்தவர்களாகையால், 'ஸ்ரீவாஞ்சியம் எங்கு இருக்கிறது? சேங்காலிபுரம் எங்கு இருக்கிறது?' என்று தெரியாமல் விசாரித்துக்கொண்டு அன்று இரவே சேங்காலிபுரம் வந்து சேர்ந்தார்கள். தெருவின் ஆரம்பத்தில் ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் அவர்களின் சிஷ்யரான ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதரை எழுப்பிக் கண்டார். இவர்தான்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதாந்த குருவோ என யோசித்தார். ஆனால் ஸ்ரீரங்க நாதன் ஸ்வப்னத்தில் காண்பித்த உருவம் இல்லையே என சந்தேஹித்தார். "ஸ்ரீ முத்தண்ணுவாள் என்கிற ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் என்பவர் தாங்கள்தானோ?" என்று கேட்டார்கள். அதற்கு ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள், தான் ஸ்ரீ முத்தண்ணுவாள் சிஷ்யர் என்றும், 'அவர்கள் இப்பொழுது நாமசங்கீர்த்தனம் செய்துவிட்டு சயனம் செய்துகொண்டிருப்பார் என்றும், விடியற்காலை நான்கு மணிக்கு சிஷ்யர்களுக்கு வேதத்தை உபதேசித்துக்கொண்டு ஸ்நானத்திற்கு வருவார்கள்' என்றும் சொல்லி, தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்றும், ஏதாவது கொஞ்சம் ஆகாரம் செய்யவேண்டும் என்றும் சொன்னார். 'அதற்கு சாஸ்திரிகள் இன்று "சுத்தோபவாஸம்" என்றும், "ஸ்ரீரங்கத்திலிருந்து வருகிறேன்" என்றும் சொன்னார். ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் மிகுந்த ஸம்ஸாரியாயினும் யாருக்கும் அன்னமிடுவதில் மிகுந்த ஆவல் கொண்டவராகையால், நிர்ப்பந்தம் செய்து, "கொஞ்சம் க்ஷீரமாவது சாப்பிட வேண்டும்" என வேண்டினார். அதற்கு ஸ்ரீ முத்தண்ணுவாளை தரிசனம் செய்தபிறகுதான் சாப்பிடப்போவதாகக் கூறி, ஸ்ரீ சாஸ்திரிகள் ஏகாதசி சுத்தோபவாஸத்துடன் இரவு தூங்காமலேயே ஸ்ரீ முத்தண்ணுவாளின் வரவையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அதேபோல் விடியற்காலை சிஷ்யர்களுடன் ஸ்ரீ முத்தண்ணுவாள் வந்தார்கள். தான் ஸ்வப்னத்தில்கண்ட உருவமாகவே வந்த ஸ்ரீமுத்தண்ணுவாளின் சரணங்களில் ஸ்ரீ சாஸ்திரிகள் நமஸ்கரித்து, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, ஸ்ரீரங்கநாதனுடைய ஸந்நிதியில் தான் கண்ட ஸ்வப்னத்தையும் சொன்னார்கள். அதைக் கேட்ட ஸ்ரீ முத்தண்ணுவாள், ஸ்ரீ ரங்கநாதன் மோக்ஷ வித்தையை உபதேசம் செய்ய தான் தகுதி உள்ளவர் என்று கூறினரா என ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். அன்புடன் அவருக்கு வேதாந்தத்தை உபதேசம் செய்தார்கள். 'ஸ்ரீ மஹாகுரு தசகம்' என்னும் ஸ்தோத்ரத்தில் இவ்விஷயத்தைக்கூறும் ச்லோகமாவது: (மார்க்கபந்து ஸ்தோத்ரம்போல் சொல்லவேண்டியது.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

श्रीवैद्यनाथाध्वरीन्द्रं — विश्व
वन्द्यं सुमन्त्रं भजेहं यतीन्द्रम् (श्रीवैद्यनाथाध्वरीन्द्रम्)
रङ्गालये स्वप्न काले — रङ्ग
नाथेन गुर्वर्थमादर्शितस्यं
श्रीवाञ्छ्यदेशे सुयज्ञे — राम
स्वाम्याख्यशास्त्री गुरूं तं प्रपेदे (श्रीवैद्यनाथाध्वरीन्द्रम्)

ஸ்ரீவைத்யநாதாத்வரீந்த்ரம் — விஸ்வ
வந்த்யம் ஸுமந்த்ரம் பஜேஹம் யதீந்த்ரம்
(ஸ்ரீவைத்யநாதாத்வரீந்த்ரம்)

ரங்காலயே ஸ்வப்ன காலே — ரங்க
நாதேன குர்வர்த்தமாதர்ஸிதம்யம்
ஸ்ரீவாஞ்ச்யதேஸே ஸுயக்ஞே — ராம
ஸ்வாம்யாக்யஸாஸ்த்ரீ குரும் தம் பரபேதே
(ஸ்ரீவைத்யநாதாத்வரீந்த்ரம்)

இவர்களது அனுக்ரஹ சக்தி

ஒரு சமயம் இவர்களிடம் ஒருவர் ரோகத்தினுல் உடம்பு முழுவதும் வெளுப்பாகி, இவர்களை நமஸ்கரித்துக் கண்ணீர் சொரிந்தார். இவர்கள் 15 நிமிஷமே கண்ணை மூடி தியானம் செய்துவிட்டு, ஸஹஸ்ராவ்ருத்தி (ஆயிரம் தடவை) காயத்ரியை நித்யம் ஜபம் செய்யும்படி உபதேசித்தார்கள். பிறகு ஒரு மண்டலம் கழித்து அவர் தனது மனைவியுடன் சிறத்த மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில், பழங்கள், வஸ்திரங்கள், பொருள் முதலியவைகளுடன் வந்து இவர்களை நமஸ்கரித்தார். மேலும் அவர், "முன்பு தங்களிடம் ரோகத்துடன் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்து ஸஹஸ்ராவிருத்தி காயத்திரியை நித்யம் ஜபம் செய்யும்படி உபதேசம் பெற்றுக்கொண்டு செய்தேன். இப்போது ரோகம் நன்ருக நிவர்த்தியாகிவிட்டது" என்ருர். உடன் அவர் கொண்டுவந்த வஸ்த்ரம், பொருள் முதலியவற்றை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருப்பதி வெங்கடாஜலபதிக்குக் கொடுக்கும்படி ஸ்ரீ முத்தண்ணுவாள் சொன்னுர்கள். அவரும் அதே போல் செய்து பல க்ஷேமங்களை அடைந்தார்.

இன்னெரு சமயத்தில் உபநிஷத் பாஷ்ய பாடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் வந்து வெகு தூரத்திற்கு அப்பால் வீதியில் விழுந்து, நமஸ்கரித்து, வாக்கினுல் கதறினுர். ஸ்ரீ முத்தண்ணுவாள் சிறிது கண்ணை மூடிப் பார்த்து, "எத்தனை நாட்கள் ஆயிற்று" என்று கேட்டார்கள். ஆறு தினங்கள் ஆனதாக அவர் கூறினுர். இன்னும் எட்டு தினங்கள் கழித்துத் தன்னிடம் வரும்படியும், புத்ர லாபத்தைக் கொடுக்கக்கூடிய சிறந்த சாலக்ராமத்தைத் தருவதாகவும் சொன்னுர்கள். அது சமயம் சிஷ்யர்கள் கேட்டதின் பேரில் ஸ்ரீ முத்தண்ணுவாள், "புத்ர சோகம் ஏற்பட்டு ஆறு தினங்கள் ஆகிறது. மீண்டும் அவன் புத்திரன் அடையவேண்டுமென்பதற்காக மறுபடியும் வரும்படிச் சொன்னேன்" என்று அவர்களிடம் கூறினுர். அதே போல் அவர் ஒரு வாரம் கழித்து இவர்களிடம் வந்து, சாலக்ராமத்தை வாங்கிக்கொண்டு போய் ஆராதித்து, மறுபடியும் புத்ர லாபத்தை அடைந்தார். இவ்வாறு பக்தர்களுக்கெல்லாம் அனுக்ரஹித்திருக்கிறுர்கள்.

ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் என்பவர் ஸ்ரீ முத்தண்ணுவாளின் சிஷ்யரும், பந்துவுமாவர். அவர் ஒரு சமயம் முடிகொண்டான் என்ற சிறந்த கிராமத்திற்குச் சென்றுர். அவர் விடியற்காலை ஸ்நானம் செய்ய வேண்டி குளத்திற்குச் சென்று, மற்ற எல்லா சரீர சௌகர்யங்களையும் முடித்துக்கொண்டு மிகுந்த நேரங் கழித்துத் தான் எழுந்ததாக நினைத்து மிக்க பரபரப்புடன் ஸ்நானம் செய்ய ஜலத்தில் இறங்கினுர். உடனே ஏதோ காலைப்பிடித்து இழுத்தது. அதை மீள முயன்றும் முடியவில்லை. நன்கு பலமாக இழுத்து அவர் ஜலத்தில் மூழ்கியதும் கழுத்தையும் பிடித்தது. அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அகாலத்தில் எழுந்து வந்து விட்டோம் என்பதையும், பிடிப்பது ப்ரும்மரக்ஷஸ் என்றும் உணர்ந்து ஸ்ரீ குரு முத்தண்ணுவாள் உபதேசம் செய்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சூலினி தேவதையின் மந்திரத்தை ஜபம் செய்தார். உடனே பிடிப்பது நின்றது மட்டுமல்லாமல் இவரைத் தூக்கிக் கரையிலும் கொண்டுவந்து விட்டது. சிரமத்தில் சிறிது நேரம் சோர்ந்து படுத்திருந்தார்.

அதாவது, ஒரு சமயம் ஸ்ரீ முத்தண்ணுவாள் எல்லா மந்த்ரங்களையும் உபதேசித்து ஸ்ரீ சூலினி மந்த்ரத்தையும் உபதேசித்து இதை நித்யம் ஜபிப்பதோடு ஏதாவது கஷ்டம் வந்த ஸமயத்திலும் ஜபம் செய்தால் அக்கஷ்டம் நீங்கி க்ஷேமம் உண்டாகும் என்று சொன்னதையும், அனுக்ரஹத்தின் பெருமையையும் ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் நினைத்து உள்ளூர சந்தோஷித்துக்கொண்டிருந்தார். ஆனால் வெகு நேரம் ஜலத்தில் மூழ்கி யிருந்ததாலும், கழுத்தை ரொம்பவும் பலமாக பிடித்திருந்ததாலும் சிறிது சோர்வு அவரிடம் காணப்பட்டது.

விடியற்காலையில் அங்குள்ள எல்லோரும் ஸ்நானத்திற்காக அங்கு வந்து படுத்திருக்கும் இவரைக் கண்டு திடுக்கிட்டார்கள். பிறகு ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் என்பதை அறிந்து, களைப்பைப் போக்கி விசாரித்தார்கள். அதற்கு அவரும் நடந்தவைகளைக் கூறி, ஸ்ரீ முத்தண்ணுவாளின் அனுக்ரஹத்தையும், அவர்கள் உபதேசித்த மந்த்ரத்தின் பெருமையையும் சொன்னார்களாம். அதைக் கேட்ட எல்லோரும் மிகுந்த ஆனந்தமடைந்தார்கள்.

ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாள் ஸ்நானம் செய்துவிட்டு காலை 5½ மணிக்கு வீடு திரும்புவார்கள். அது சமயம் இவர்களை எதிர்பார்த்துக்கொண்டு பாதையின் ஒரு பக்கத்தின் வெகு தூரத்தில் ஐந்தாவது ஜாதியினர் (ஹரி ஜனங்கள்) நின்று கொண்டிருப்பார்கள். இவர்கள் வருவதைப் பார்த்ததும், நமஸ்கரித்து, வீட்டில் ஜுரம் முதலிய தங்கள் குறைகளைக் கூறி, காக்கவேண்டுமென் பார்கள். அதைக் கேட்கும் ஸ்ரீ முத்தண்ணுவாள் மன மிரங்கி, சிறிது நேரம் நின்று 'சௌக்யமாகிவிடும்' என்று கையால் ஜாடை செய்துவிட்டுப் புறப்படுவார்கள். இதில் அவர்கள் சந்தோஷம் அடைந்து, இவர்கள் சென்றதும், அங்குச் சென்று, இவர்கள் பாதம் பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மண்ணை எடுத்துக்கொண்டு வீடு சென்று, துன்பமடைந் தவர்களின் நெற்றியிலிடுவார்கள். பிறகு மறுதினம் தங்கள் குறை நீங்கியதும், இவர்களிடம் அதே காலை நேரத்தில் எதிர்பார்த்துக்கொண்டிருந்து கூறி நமஸ்கரிப் பார்கள். இவர்கள் இவ்விதம் யாராவது சிறிது குறை என்று கூறினாலும், உடன் மனமிரங்கி, பகவானைப் பிரார்த்தித்து அவர்களுக்கு க்ஷேமம் ஏற்பட வேண்டும் என்று நினைப்பது இவர்களது உயர்ந்த குணமாகும்.

வாக்ஸித்தி

ஸ்ரீ பெரிய முத்தண்ணா, தனது ஞாதியும், சிஷ்யரு மான ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதரிடம் மிகுந்த அனுக்ரஹ புத்தி கொண்டவர். அதற்கு ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதருக்கு வேதங் களிலும், ச்ரௌதங்களிலும், கர்மாக்களிலும் உள்ள சிறந்த பக்தியும், நல்ல குணங்களுமே காரணமாகும். ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதரின் மாதாவின் ஆப்தீகம் (தலை சிரார்தம்) வந்தது. அந்த தினத்தன்று இரண்டு பிராம் மணர்களுக்கு வேண்டிய வேஷ்டிகள், (பத்தாறுகள்) குடை, பாதரக்ஷை பாத்திரங்கள் முதலியவைகளை சேகரம் செய்து வைத்திருந்தார். அது ஸமயம் வழக்கம் போல் ஸ்ரீ முத்தண்ணாவும் விசாரிக்க அவர் வீட்டிற்குக் காலையில் சென்றார். அதாவது முன் காலத்தில் ஒருவர் வீட்டில் ச்ரார்த்தம் என்றால் பந்துக்கள் யாவரும் அவர் வீட்டிற்குச் சென்று என்ன சாமான்கள் இருக்கிறது, என்னென்ன வேண்டும் என விசாரித்து வேண்டிய உதவி செய்வது வழக்கம். அதேபோல் ஸ்ரீ முத்தண்ணா வாள் கேட்டதின் பேரில் ஸ்ரீ தீக்ஷிதர் தான் சேர்த்து எடுத்து வைத்திருந்ததைக் காண்பித்தார். அதைப் பார்த்து ஸ்ரீ முத்தண்ணாவாள், "ஏன் இரண்டு பேர் களுக்கு எடுத்து வைத்திருக்கிறாய்? நம் குடும்பத்தில் மாதாவின் சிரார்த்தத்தன்று பித்ரு வரணத்தைச் சேர்த்து மூன்று பேர்களை அல்லவா சொல்ல வேண்டும்?" என்றும்,

"मातृ श्राद्धे तु सम्प्राप्ते पितरं तत्र भोजयेत् ।
अभोजिते तु पितरि मात्रा पिण्डो न गृह्यते ॥"

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாத்ரு ஶ்ராத்தே து ஸம்ப்ராப்தே
பிதரம் தத்ர போஜயேத் ।
அபோஜிதே து பிதரி
மாத்ரா பிண்டோ ந க்ருஹ்யதே ॥

என்ற வாக்யமும் உனக்குத் தெரியுமே. ஏன் இவ்விதம் செய்தாய்?" என்றும் கேட்டார். உடனே ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் கண்ணீர் பெருக்கி, "என்னிடம் இவ்வளவே சக்தி இருக்கிறது. வசதி இல்லாததாலேயே இவ்விதம் செய்தேன்" என்றார். உடன் ஸ்ரீ முத்தண்ணுவாள், "வேண்டியதை நான் அனுப்புகிறேன். மூன்று பேர்களையே வைத்துச் செய்" என்றார். ஸ்ரீ தீக்ஷிதர், "பத்து நாழிகை ஆகிவிட்டதே இனி பிராம்மணாள் கிடைக்காதே" என்றார். அதற்கு ஸ்ரீ முத்தண்ணுவாள் "நீ கவலைப் படாதே. சிராத்த ஆரம்பத்திற்கு முன்பு யாராவது பெரியவாள் வருவாள்" என்று சொல்லி வீட்டிற்குச் சென்று சாமான்களையும் அனுப்பினார்கள்.

அதேபோல் ஸ்ரீ தீக்ஷிதர் பிராம்மணர்களுக்கு எண்ணெய் கொடுக்க சித்தமாய் இருக்கும்போது, லால்குடி த்ரியம்பக தீக்ஷிதர் என்ற பெரியவர்கள் அக்னிஹோத்ரத்தை எடுத்துக்கொண்டு, (பத்னியுடன்) வருவதைக் கண்டு, மிகுந்த சந்தோஷமடைந்து, அவர்களை அழைத்து பாத்யம், ஆஸனம் முதலியவைகளை அளித்து உபசரித்தார். மேலும் நமஸ்கரித்து, "இன்று சிராத்தம். அதற்கு தாங்கள் ஒரு பிராம்மணர்களாக இருந்து அனுக்ரஹிக்கவேண்டும்" என்று வேண்டினார். அதற்கு அவர் "பரான்ன நியமம் வைத்திருக்கிறேன். நான் எவ்விதம் இருக்க முடியும்?" என்றார். உடன் ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர், "தாங்கள் என் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளாவிடில் ச்ராத்தம் நஷ்டமாகிவிடும்" என்று மீண்டும் நிர்பந்தித்தார். உடன் "அப்படியானால் நான் இருக்கிறேன்" என்று ஒத்துக்கொண்டார். அப்பொழுது ஸ்ரீ முத்தண்ணுவாள், 'யாராவது வருவாள்' என்று கூறியதை நினைத்து ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவரிடம் கூறி ஆனந்தம் அடைந்தார். பிறகு சிராத்தம் நன்கு நிறைவேறியது. கடைசி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யில் ஸ்ரீ முத்தண்ணுவாளை நமஸ்கரித்து, "தங்கள் அனுக்ரஹத்தினுல் மாத்ரு சிராத்தம் நன்கு நடந்தது. நானும் பாக்கியசாலி ஆனேன்" என்ருர். இவ்விதம் பல உதவிகள் பந்துக்களுக்குச் செய்திருக்கிருர்கள்.

சிதம்பர தரிசனம்

ஸ்ரீ முத்தண்ணுவாள் ஒவ்வொரு வருஷத்திலும் பல முறை அக்னிஹோத்ரத்துடன் காலால் நடந்து ஸ்ரீ சித்சபேசனை தர்சிக்க சிதம்பரம் போவார்கள். நித்யம் தன் கிராமத்திலும் சாயங்காலம் அக்னிஹோத்ரத்தையும், சிவ தரிசனத்தையும், ஸ்ரீ விஷ்ணு ஆலயத்தில் ஸ்ரீ ரங்கநாத தர்சனத்தையும் விடா மழை பெய்தாலும், தர்சனம் செய்து தான் இரவில் போஜனம் செய்வார்கள். ஊரிலும் சிவ தர்சனம் செய்யும் பொழுது ஸ்ரீ நடராஜா சன்னிதியில் சுமார் 15 நிமிஷத்திற்குக் குறையாமல் நின்று கண்களை மூடிக்கொண்டு த்யானம் செய்வார்கள். 'ஸ்ரீ சித்சபேச சதகம்' என்று ஸ்ரீ நடராஜா பற்றி ஓர் ஸ்தோத்திரம் இவர்கள் செய்திருப்பதாகப் பெரியோர்கள் சொல்லிக் கேள்வி. ஆனுல் அது கிடைக்கவில்லை. இவர்கள் ஒரு சமயம் சிதம்பரம் போனபொழுது திருவண்ணுமலையில் விளங்கிய ஸ்ரீ ரமண மஹரிஷிகள் அவர்கள் சிறு வயதில் தங்கள் ஊரிலிருந்து திருவண்ணுமலைக்கு முதல் தடவையாகப் போவதற்காக சென்றபொழுது இவர்களைச் சிதம்பரத்தில் தர்சனம் செய்தார்களாம்.

சிறு வயதுள்ள ஸ்ரீரமண மஹரிஷி அவர்கள், "நான் திருவண்ணுமலைக்குப் போகலாம் என நினைக்கிறேன். எனக்கு அருள் புரிய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்களாம். அதற்கு ஸ்ரீ முத்தண்ணுவாள், "ஸ்மரணாதருணாசலம்" (ஸ்மரணுதருணுசலம்) திருவண்ணுமலையை நினைத்தாலே முக்தி ஏற்படும். நேரில் சென்று தர்சனம் செய்தால் நிச்சயம் முக்தி கிடைக்கும் என்பதில் சந்தேஹம் இல்லை" எனக் கூறினுர்களாம். இந்த விஷயத்தை ஸ்ரீ ரமண மஹரிஷியின் சிஷ்யராகிய ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமிகள் என்பவர் என்னிடம் தமது குரு தன்னிடம் சொன்னதாகச் சொன்னுர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குரு பக்தி

இவர்கள் தனது வேதாந்த குருவாகிய ஸ்ரீ நாராயணனந்தா ஸ்வாமிகள் அவர்களை ஒரு சமயம் கம்ஸபுர க்ஷேத்திரத்திலிருந்து சேங்காலிபுரம் கிராமத்திற்கு அழைத்து வந்தார்களாம். வெளியூருக்கே சஞ்சாரம் செய்யாதிருந்த குருவும், சிஷ்யரிடத்திலிருந்த அன்பினால் சம்மதித்தார்களாம். அவர்கள் இரவில்தான் புறப்படுவது வழக்கமாம். அதிலும் குதிரை வண்டியில்தான் ஏற சம்மதித்தார்களாம். இரவில் ஸ்ரீ முத்தண்ணுவாள் தமது ஸ்ரீ குருவை அழைத்து வரும்போது சேங்காலிபுரத்திலிருந்து சுமார் ஆறு பர்லாங் தூரத்திலுள்ள 'அன்னவாசல்' என்ற இடத்தில் வண்டியின் ஓர் பக்கத்து ஏற்கால் உடைந்துவிட்டது. இவர்கள் மெதுவாக வண்டியிலிருந்து இறங்கி விட்டனர். அந்த இடம் குளத் தங்கரை. அக்கரையில் ஓர் வாண்டையாரின் அழகிய பங்களா மட்டிலும் தனித்து உள்ளது. அந்த வாண்டையார் வாசலில் கட்டிலில் படுத்து இருந்தார், தூங்கும் அவரை ஸ்ரீ முத்தண்ணுவாள் பெயர் சொல்லி அழைத்தார். அவர் உடனே விழித்துக்கொண்டு, ஸ்ரீ முத்தண்ணுவாளைப் பார்த்து ஆச்சர்யம் அடைந்து, "என்ன எனக்கு இப்படி இரவில் தர்சனம் கிடைத்ததே. என்ன பாக்கியம்!" எனச் சொல்லி நமஸ்கரித்தார். ஸ்ரீ முத்தண்ணுவாள் தனது ஸ்ரீ ஆசார்யாள் அங்கு வந்திருப்பதையும், வண்டி முறிந்த விபரத்தையும் சொன்னுர்கள். அப்பொழுது வாண்டையார், தான் தன் குதிரை வண்டியிலேயே கொண்டு விட்டு விடுவதாயும், "இரவு மூன்று மணிக்குமேல் ஆகிவிட்டதால், இந்தப் படித்துறையிலேயே தங்கி, ஸ்நானம், அனுஷ்டானம் முதலியவைகளைச் செய்து செல்லவேண்டும்" என நமஸ்கரித்து வேண்டினுர். அதேபோல் அனுஷ்டானம் முதலியவைகளைச் செய்தார்கள். உதயமானதும் வாண்டையார் உயர்ந்த தம் குதிரைவண்டியை, புஷ்பம் முதலியவற்ருல் அலங்காரம் செய்து, இவர்கள் இருந்த படித்துறைக்குப் பக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தினுர். அந்த வண்டியில் ஏறிப் புறப்பட்டுச் சாலைக்குப் போனதும், சாலை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முழுவதும் பந்தல் போடப்பட்டு, தோரணங்கள் கட்டி, அலங்காரம் செய்திருந்ததைக் கண்ட ஸ்ரீ நாராயணு னந்தா ஸ்வாமிகள் அளவுகடந்த ஆனந்தத்தை அடைந் தார்கள்.

ஸ்ரீ முத்தண்ணுவாள் க்ருஹம் வந்து சேர்ந்ததும் ஸ்ரீ ஸ்வாமிகள், வாண்டையாருக்கு விபூதியை அனுக் ரஹம் செய்து கொடுத்து, "தங்களுக்கு மனதில் ஏதா வது குறை உண்டா?" என வாண்டையாரைக் கேட் டார்கள். தனக்குக் குழந்தை இல்லாத குறையை அவர் தெரிவித்தார். சந்யாஸியான ஸ்ரீ நாராயணுனந்தா ஸ்வா மிகள், "அடுத்த வருஷம் தங்களுக்குப் புருஷப்ரஜை பிறக்கப் போகிறது என்றும், அக்குழந்தைக்கு நாரா யணன் என்று பெயர் வைக்கும்படியும் சொன்னுர்கள். அதேபோல் அடுத்த வருடம் புருஷப்ரஜை பிறந்து நாரா யணன் என்றும் பெயர்வைத்தார். அவர் நாராயண வாண்டையார் என பரம ஆஸ்திகராக விளங்கினுர். ஸ்ரீ முத்தண்ணுவாளின் குருவான ஸ்ரீ நாராயணுனந்தா ஸ்வாமிகள் கம்ஸபுர க்ஷேத்ரமான கஞ்சனூர் கிராமத் திலேயே ஸித்தி ஆனுர்கள். மணிகர்ணிகா தீர்த்தம் என்ற மணியன் குளத்திற்கு வடகரையில் இன்றும் ஸ்ரீ நாராயணுனந்தா ஸ்வாமிகளின் அதிஷ்டானம் விளங்கி வருகிறது. எங்கள் பெரியோர்களும், நாங்களும் அந்த க்ஷேத்ரம் போனுல் ஸ்ரீ ஸமாதியை தர்சனம் செய்து வருவது வழக்கம்.

ஸ்ரீ முத்தண்ணுவாள் கஞ்சனூரிலும், அதற்குப் பக்கத்திலுள்ள கோட்டூர் முதலிய கிராமங்களிலும் தங்கள் குடும்பத்திற்குச் சம்பந்தம் செய்துகொள்வது வழக்கம். அதற்குக் காரணம், அங்கு காவேரி வடக்கு நோக்கிச் செல்வதாம். அதில் ஸ்நானம் செய்தால் எண்பது (80) க்ருச்ரபலம். यत्र कुत्राऽपि कावेरी गच्छत्युत्तर वाहिनी अशीति कृच्छ्र फलदा। (யத்ர குத்ராऽபி காவேரீ கச்சத்யுத்தரவாஹினீ அஶீதீ க்ருச்ச்ர பலதா) அதாவது, கோடிக்கணக்கான கோக்களை தானம்செய்த பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையே ஆகும். நித்யம் விடியற்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காலம் ஸ்நானம், அக்னிஹோத்ரம், வேதாந்த உபதேசம், அச்வத்த ப்ரதக்ஷிணம், ஸ்ரீ மஹாபாரத ப்ரவசனம், ப்ரும்ம யக்ஞப்ரச்னம் முதலிய காலையில் செய்யவேண்டிய காரியங்களைத் தவறுமல் செய்துவந்தார்கள்.

பகல் போஜனமான பிறகு ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் முதலிய க்ரந்தங்களை திரும்பத் திரும்ப பாராயணம் செய்து உபதேசம் செய்வார்கள். தமது வாழ்நாள் முழுவதும் தெய்வீகமான காரியங்களிலேயே ஈடுபடுவதற்காக நித்யம் ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு வேத சாஸ்திரம், ச்ரௌதம் முதலியவைகளை உபதேசித்து வந்தனர். பல சந்யாஸிகளுக்கு அகத்தில் பிக்ஷை அளித்தும், பல வித்யார்த்திகளுக்கு அன்னம் இட்டும் வந்தார்கள். பல ப்ரும்மசாரிகள் பிக்ஷை வாங்கிய அன்னத்தை அகத்தில் வைத்துக்கொண்டு புசிப்பார்கள். இவர்களது தம்பியான ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாளான ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் என்பவர்கள், வேதம், சாஸ்த்ரம், நாடகம் முதலியவற்றை வித்யார்த்திகளுக்கு உபதேசிப்பார்கள். இவர்கள் மதுரமாக ஸ்லோகம் சொல்வதைக் கேட்டு, பல வித்யார்த்திகள் இவர்களிடத்திலேயே, நாடகம், காவ்யம் படிக்க ஆவல் கொள்ளுவார்களாம். ஸ்ரீ சின்ன முத்தண்ணு அவர்கள், ஸ்ரீ ராமனிடத்தில் லக்ஷ்மண ஸ்வாமி பக்தி செலுத்தியதுபோல் நடந்து வந்தார்கள். லக்ஷ்மணர், ஸ்ரீ ராமருக்கு முன்பே வைகுண்டம் போனதுபோல் இவர்களும் காலமானுர்கள். இவர்கள் காலமாகும் தருணத்தில் பெரிய முத்தண்ணு, "சுப்பராம! உனக்கு ஸந்யாசத்தில் தாத்பர்யமுண்டோ?" எனக் கேட்டார்கள். "நாற்பது வருஷ காலம் தங்களுக்கு பணிவிடை புரிந்த புண்யமே எனக்குப் போதும்" என்றும், "ஆஹிதாக்னி சம்ஸ்காரமே போதும்" என்றும் சொன்னுர்களாம். ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளின் வாழ்நாளில் மனதிற்கு சிரமம் ஏற்பட்டது என்பது ஸ்ரீ சின்ன முத்தண்ணுவின் காலமான செய்தி ஒன்றுதான். வேறு எவ்விதமான துக்கமும் ஏற்பட்டதில்லையாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருமலை யாத்திரை

பிரிய சிஷ்யர்களான ராமாயணம் பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள் அவர்கள் திருப்பதிக்குத் தன் குருவான ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளை அக்னிஹோத்ரத் துடன் அழைத்துச் சென்றார்கள். அங்கு சில தினங்கள் தங்கி ஸ்ரீ ஸ்ரீனிவாசனைத் தர்சனம் செய்து தீர்த்தச் ரார்த்தம், க்ஷேத்ரபிண்டம் முதலியவைகளையும் செய்தார் களாம். அங்கு பல ஏழைகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரி கள் பொருள்களை சக்திக்கு மீறிக் கொடுத்தார்கள். இதைக்கண்ட குருவான பெரிய முத்தண்ணுவாள் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகளை " நீ கலியுக கர்ணன் " எனச் சொன்னார்களாம்.

ஸ்ரீ ராமேஸ்வர யாத்திரை

ஒரு முறை ஸேது ஸ்நானத்திற்கு ஸ்ரீ முத்தண்ணு அவர்கள் அக்னிஹோத்ரத்துடனும் தன் தம்பி குழந்தை கள். சிஷ்யர்கள், பந்துக்கள் எல்லோருடனும் காலால் நடந்து சென்றார்கள். பல வண்டிகள் சாமான்களுடன் கூட வந்தனவாம். ஒவ்வொரு க்ஷேத்ரமாகச் சென்று ஸ்நானம், அக்னிஹோத்ரம் முதலியன செய்து, ஸேது மஹாத்ம்யத்தைப் படித்து, உபதேசித்துக் கொண்டு சென்றார்களாம். நூற்றுக்கணக்கானவர்கள் கூடச் சென் றார்கள். இவர்களை நவபாஷானத்திலேயே வந்து, ராமேஸ்வரத்தில் வசிக்கிறவரும், அக்னிஹோத்ர பரம் பரையைச் சேர்ந்தவருமான ஸ்ரீவெங்கடாஜலபதி தீக்ஷிதர் அவர்கள், பூர்ணகும்பத்துடன் வரவேற்றார்களாம். இவர்கள் அங்கு சக்கரதீர்த்தக் கரையில் அச்வமேத ப்ரச்னத்தை ப்ரம்மயக்ஞ ப்ரச்னமாக சிஷ்யர்களுடன் அழகிய குரலில் ஜபித்ததை ஸ்ரீ வெங்கடாசல தீக்ஷிதர் கேட்டு மெய்சிலிர்த்து பரவசமாக ஆனார்கள். அப் பொழுது " आस्यताम् " (ஆஸ்யதாம்) என்று ஸ்ரீ முத்தண் ணுவாள் உட்காரும்படி கூறியும், அஞ்சலி செய்து நின்று கொண்டே இருந்தார்களாம். இந்த நிகழ்ச்சியை ஸ்ரீ வெங்கடாசல தீக்ஷிதர் அவர்களே நேரில் என்னிடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறியுள்ளார். இவர்கள் பஞ்சாயதன பூஜை செய்யும் பொழுது ஆயிரம் உருத்திராக்ஷங்களைத் தரித்துக் கொண்டு பூஜை செய்வது வழக்கம். இவர்கள் ஸ்ரீ கண பதி, ஸ்ரீ சுப்ரமண்யம், பஞ்சாட்சரம், மேதா தக்ஷிணு மூர்த்தி, சூலினி முதலிய மந்திரங்களை நித்யம் ஏகாந்த மாக உட்கார்ந்து ஜபிப்பார்களாம். அந்த மந்த்ரங்களை தமது புத்ரர், சிஷ்யர் முதலியவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறுர்கள். அவர்கள் பூஜை செய்யும்பொழுதும், அக்னிஹோத்ரம் செய்யும்பொழுதும், தரிசிப்பவர்களுக்கு அவர்கள் உபாஸிக்கும் தேவதையே இவர்கள் எனத் தோன்றுமாம்.

பந்து பிரியம்

இவர்களது ஞாதியான நாராயண தீக்ஷிதர் என்பவர் தனது இரண்டு சிறு குழந்தைகளையும், தனது மனைவி யையும் விட்டுப்பிரிந்து காலமாகிவிட்டார்கள். இவர்கள் பிறருடைய வீட்டில் குடியிருந்ததால் முதல் தினம் ஸம்ஸ்காரம் ஆகி கிழக்கே உள்ள குளத்தங்கரையில் ஸ்நானமானதும், இக்குழந்தைகளையும், அவர்களது மனைவியையும் யார் ரக்ஷிப்பது என மரித்தவரின் தம்பியே தனது ஏழ்மைத்தனத்தால் கவலைப்பட்டார். அப்பொழுது ஸ்ரீ முத்தண்ணுவாள், "நம்மாத்திற்கு நான் அழைத்துச் செல்கிறேன்" எனச் சொல்லி, அக்குழந்தைகளையும், அவர் மனைவியையும் தன் வீட்டிற்கு அழைத்து வந்து வைதிக கர்மங்களையெல்லாம் நடத்தி முடித்து, தன் வீட்டிலேயே வைத்து ரக்ஷித்து வந்தார்கள். மரித்தவரின் மூத்த புத்ரனே ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் என விளங்கினுர்கள், இவர்களுக்கு விவாஹம் செய்துவைத்து, புருஷ ப்ரஜை பிறந்து, குழந்தைக்கு அப்த பூர்த்தியும் ஆனது. ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் தான் வேறு வீட்டிலிருப்பதற்கு மாதம் 4 அணு வாடகைக்குப் பேசி இருப்பதைத் தனது குருவி னிடம் தெரிவித்தார்கள். வேதம், சாஸ்திரம், ச்ரௌதம் முதலியவற்றை ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதருக்கு உபதேசம் செய்து தனது புத்ரன் போல் நினைத்த ஸ்ரீ முத்தண்ணு வாள் அவரை தனித்து ஜாகைக்கு அனுப்ப மனமில்லா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மலிருந்தபோதும், அவர் கோரிக்கையை பூர்த்தி செய்வதற்காக சம்மதித்தார்கள். ஆனால், அவர் பார்த்த வீட்டை வேண்டாமெனச் சொல்லி, மேலத் தெருவில் தானே ஒரு வீட்டை இரண்டணா வாடகைக்கு ஏற்பாடு செய்து, "இந்த வீடு பிறகு உனக்கே கிடைக்கும்" என்று சொன்னார்களாம். அவ்வாறே சிறிது காலம் கழித்து ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் தான் குடியிருந்த வீட்டை நூற்றைம்பது ரூபாய் விலைக்கு வாங்கிவிட்டார்கள்.

ஸ்வப்னத்தில் அனுக்ரஹம்

ஸ்ரீ முத்தண்ணாவாள் ஸித்தியான பிறகு ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களுக்கு ஸ்ரீ கருட சயனம் செய்யவேணுமென ஆவல் உண்டாகியது. தனது குரு புத்ரர்களான ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்களையும், ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களையுமே ஆத்வர ஹௌத்ரம் செய்ய வேண்டுமெனக் கூறினார்கள். இவ்விருவர்களும் ஸ்ரீமுக் தண்ணா அவர்களிடத்தில் ஸோமயாகம் முடிய ஆத்வர ஹௌத்ரம் பிரயோகத்தைக் கற்றவர்கள். ஆதலால் அதற்கு மேலான கருடசயனப் ப்ரயோகத்தைத் தங்களால் நடத்த முடியாது எனக் கூறிவிட்டார்கள். இதைக் கேட்ட ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர், இவர்கள் ஆத்வர ஹௌத்ரம் செய்யாவிடில் கருடசயனம் செய்வதில்லை எனத் தீர்மானித்து விட்டார்கள். சில தினங்களானதும், ஒரு தினம் ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களுக்கு ஸ்வப்னத்தில் ஸ்ரீ முத்தண்ணாவாள் காஷாயம், தண்டகமண்டலுடன் சன்னியாசி ரூபத்தில் தரிசனமளித்து, தனது குழந்தைகளான ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்களை தனது ஸமாதியில் வந்து, நமஸ்கரித்து, ஆத்வர ப்ரயோகத்தைப் படிக்கும்படியும், தம்பியான ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களுக்கு ஹௌத்ரத்தை ஸமாதி ஸந்நிதியிலேயே சந்தை சொல்லும்படியும் கூறினார்களாம். இந்த ஸ்வப்னம் கண்டு விழித்ததும் ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் இதை இவ்விருவர்களிடத்திலும் விடியற்காலையிலேயே தெரிவித்தார்கள். அன்று பொழுது விடிந்ததுமே நாள் நன்றாக இருந்ததால் அன்றே ஆரம்பம் அமோக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாக நடந்தது. இவ்விருவர்களுமே ஆத்வரஹௌத்ரம் செய்தார்கள். இவ்விருவர்களின் ப்ரயோக ஞானத்தைக் கண்டு பெரியோர்கள் எல்லோரும் ஆனந்தம் அடைந்தார்கள்.

விவாஹம்

ஸ்ரீ முத்தண்ணு அவர்கள் கஞ்சனூரில் ஒத்தத்தெருவிலுள்ள ஸ்ரீ முத்து சாஸ்த்ரிகள் என்ற வேதவித்தின் சகோதரியான ஸ்ரீ நாகலக்ஷ்மியை விவாகம் செய்து கொண்டார்கள். கஞ்சனூருக்குப் பக்கத்தில் உள்ள துகிலி கிராமத்தில் ஸ்ரீ சாமா தீக்ஷிதர், ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் என்ற மஹான்களின் சகோதரியை, ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள் விவாஹம் செய்துகொண்டார்கள். பெரிய முத்தண்ணுவாளின் மனைவியான மாதுஸ்ரீ நாக லெக்ஷிமி அம்மாள், ஸ்ரீ முத்தண்ணுவாள் சித்தியான பிறகு வெகுகாலம் ஜீவித்திருந்தார்கள். நித்யம் ஆயிரக் கணக்கான பகவந்நாமாக்களை ஜபிப்பது வழக்கம். சிவ தரிசனம், விஷ்ணு தரிசனம், அக்னிஹோத்ர தரிசனம் முதலியவைகளைத் தவருமல் செய்து வருவது வழக்கம். வயது முதிர்ந்து தள்ளாத நிலைமையில் இருக்கும் பொழுது சிறிய குழந்தைகளான நாங்கள் ஸ்நானம் செய்வித்து பணிவிடை செய்வது வழக்கம். அப்பொழுது அந்த அம்மாள் எங்களுக்குச் செய்த அனிக்ரங்களை எழுத்தாலோ, சொல்லாலோ தெரிவிக்கமுடியாது. தர்ம சாஸ்த்ரங்களை எல்லாம் அந்த அம்மாளே கூறுவாள்.

வயது முதிர்ந்த தனது மாமியாரான இவர்களுக்கு எங்கள் தாயார் மாதுஸ்ரீ சுப்பலக்ஷ்மி அம்மாள் இரண்டு காலமும் நமஸ்காரம் செய்து, "இன்று ஸ்வாமி நைவேத்யம் (சமையல்) என்ன செய்வது?" என்று கேட்பார்கள். அவர்கள் கூறியதையே செய்வார்கள். எங்கள் தாயாருக்கு அவர்கள் செய்த அனுக்ரஹமும் அளவில் அடங்காதது. எங்களுக்கு பாட்டியான நாகலக்ஷ்மி அம்மாளும், எங்கள் தாயாருமே பல புண்ணிய கதைகளையும், குடும்பத்திலுள்ள பல பெரியோர்களின் வரலாறு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களையும், அறுபது வருஷங்களின் பெயர்களையும், இருபத்து ஏழு நக்ஷத்திரங்களின் பெயர்களையும், வாரம், மாதம், மேஷம் முதலிய ராசிகளின் பெயர்களையும், இன்னும் பல பகவத் கதைகளையும் சிறு வயதிலேயே சொல்லிக் கொடுப்பது வழக்கம். அதாவது குழந்தைகளை சிறு வயதிலேயே, நல்ல பழக்கங்களையும், தெய்வ நம்பிக்கையையும் சொல்லிக் கொடுத்து விட்டால், அதனுல் அவர்கள் பின்பு பல க்ஷேமங்களை அடைவார்கள் என்ற எண்ணத்திஞலேயே இவ்விதம் செய்து வந்தார்கள்.

ஸ்ரீ பெரிய முத்தண்ணுவின் சிறந்த குணம்

மேலும் ஸ்ரீபெரிய முத்தண்ணுவாள் அவர்கள் குடும்பத்திற்கு ராஜாக்கள் ஸர்வ மான்யமாக நஞ்சை நிலம் கொடுத்திருந்தார்கள். அதாவது வேதம், சாஸ்திரம் முதலியவைகளை ரக்ஷித்து வருவதற்காகவே இவர்களுக்கு இந்த உதவி செய்திருந்தார்கள். இவைகளுக்கு வரி கிடையாது. இவ்விதமான நிலங்கள் சேர்ந்து ஊரின் ஸமீபத்தில் ஓர் இடத்தில் இருக்கிறது. அதனுலேயே அதனை ஸர்வமான்யம் என்று அழைத்து வருகிருர்கள். அந்த நிலங்களை குத்தகையாக நான்காவது வர்ணத்தார் களிடம் ஒப்புவித்திருந்தார்கள். அவர்கள் மாசூல் சமயத்தில் வந்து, மொத்தம் கண்ட நெல்களைக் கூறி, "தங்களுக்குக் கொடுத்தது போக, மீதமான இவ்வளவு நெல் நான் எடுத்துக்கொள்ளுகிறேன்" எனக்கூறி அவ்விதமே செய்வார்கள். ஏதாவது ஒரு தினம் இவர்களிடம் வந்து "தாங்கள் ஒரு தடவை வயலைப் (நிலத்தைப்) பார்க்க வர வேண்டும்" என்று நமஸ்கரித்துச் சொல்வார்கள். அவர்களும் அவ்விதமே வருஷம் ஒரு முறை சென்று பார்க்கச் செல்வார்கள். அப்படிச் செல்லும் சமயத்தில், சமீபத்தில் வேலை செய்துகொண்டிருக்கும் யாவரும் அங்கேயே நமஸ்கரித்து இவர்கள் திரும்பும்வரை கைகூப்பியே நின்றுகொண்டிருப்பார்கள். இவர்கள் இவ்விதம் ஒரு தடவை சென்று பார்ப்பதாலேயே நிறைய நெல் விளைவதாக குத்தகைக்காரர்கள் திடமாக நம்புவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீ முத்தண்ணுவாளின் இளைய சகோதரரைச் சின்ன முத்தண்ணு என்று அழைப்பார்கள். அவர் தனது தமையனுரான பெரிய முத்தண்ணுவாளை தெய்வமென்றே கருதுவார்கள். எங்காவது வெளியூர் சென்ருலும் பெரிய வரை நமஸ்கரித்து, அனுக்ரஹம் பெற்றுத்தான் புறப் படுவார்கள். அவ்விதம் ஒரு சமயம் ஸ்ரீ சின்னமுத்தண் ணுவாள் செதலப்பதி என்ற பந்து கிராமத்திற்குச் சென் றிருந்தார். அங்கிருந்து இரவில் முடிகொண்டான் என்ற ஊருக்குப்போகும்படி நேர்ந்தது. அந்தப் பாதை முழு வதும் மிகுந்த மரங்கள் நிறைந்திருக்கும். அதிலும் மத்தியில் ஓர் பெரிய ஆலமரம் மிக அடர்ந்து பரவி வளர்ந்திருக்கிறது. அவ்விடத்தில் தான் திருடர்கள் மறைந்து நின்று வருகிறவர்களிடமிருந்து பொருள்களைப் பறிப்பது வழக்கமாம்.

அதே பாதையில் ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள் போய்க்கொண்டிருந்தார். அந்த பயங்கரமான ஆல மரத்தைத் தாண்டியதும் ஓர் பலத்த குரல் கேட்டது. ஆதாவது, "ஓ சுப்பராம தீக்ஷிதரே! தாங்கள் ரொம்பவும் நன்ருக வேதத்தைப் பதம் சொல்வீராமே!" என்றது. இதைக் கேட்ட ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள் என்ற ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலடிச் சத்தம் கேட்காமல் சமீபத்தில் குரல் பலமாக இருப்பதையும் எண்ணி, ஆலோசித்து, இது 'ப்ரும்ம ரக்ஷஸ்' என்று அறிந்தார். பிறகு, "நான் அறிந்த வரை சுமாராகச் சொல்லுவேன்" என்ருர். உடன் அது, வேதத்தில் ஸம்ஹிதை என்ற பாகத்தில், இரண்டாவது காண்டத்தை ஆரம்பித்துச் சொல்லிற்று. இவர்களும் அதோடு சர்ச்சையாகச் சொல்லிக்கொண்டே நடந்து சென்ருர். அதுவும் தொடர்ந்து சொல்லிக் கொண்டே சென்றது. (சர்ச்சை என்ருல் ஒருவர் ஒரு பதம், அடுத்தவர் அதற்கு மேல் பதம், இவ்விதம் இருவர் மாறி மாறிச் சொல்வதே ஆகும்). முடிகொண்டான் சமீ பம் சென்று கொண்டிருந்தனர். அது சமயம் அங்கு சற்று தூரத்தில் ஒருவர் ரோடில் வீட்டிற்குள் தூங்குகிற வனை, "மணி நான்கு ஆகிவிட்டது. சீக்கிரம் வண்டி பூட்டவேண்டும் எழுந்து வா" என்று அழைத்துக் கொண்டிருந்தார், அதற்குள் நூற்றுக்கணக்கான

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பஞ்சாதி ஆகியும் பொழுது விடியாததை அறிந்து, ஸ்ரீ முத்தண்ணுவாள், 'அகாலத்தில் (இரவில்) தாம் வந்து விட்டோம்' என்றுணர்ந்தார். முன்பு அழைத்துக்கொண் டிருந்த வீட்டின் சமீபம் வந்ததும், அந்த ப்ரும்ம ரக்ஷஸ், "என்னைக் கைவிட்டு விடாதீர்கள்" என்று உரக்க அழுது, "எனக்கு நல்ல கதி கிடைக்கும் என்று தாங்கள் அனுக்ரஹிக்கவேண்டும்" என்றது. பிறகு அவர்கள், "பகவானைப் பிராத்தனை செய்யுங்கள், கிடைத்து விடும்" என்றுர்களாம். அதுவும் நகர்ந்து விட்டது. இவர்களும் அந்த வீட்டண்டை சென்றதும், அங்கிருந்தவர் இவர்களைக் கண்டு வியந்து, "சற்று தூரத்தில் அழுகை கேட்கிறதே, யார் அழுவது ? என்ன விசேஷம் ? " என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள் நடந்த விவரங்களைக்கூறி, "ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாள் அனுக்ரஹத்தால் சிறிதும் பிசகு இல் லாமல் வேதம் கூறினேன். இல்லாவிடில் ஏதாவது பெரியகஷ்டம் ஏற்பட்டிருக்கும்" என்று கூறினுர்கள். இதைக் கேட்டு அங்குள்ள எல்லோரும் மிகவும் ஆச்சர்ய மடைந்தார்கள். பிறகு இவர்கள் ஊருக்கு வந்து ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளை நமஸ்கரித்து, நடந்தவை களைக்கூறி, "தங்கள் அனுக்ரஹத்தால் எனக்கு ஓர் கஷ் டமும் ஏற்படாமல் க்ஷேமமாக வந்து சேர்ந்தேன்" எனக் கண்ணீர் வடித்துக் கூறினுர். அவர்களும் ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாளைத் தூக்கிக் கட்டித்தழுவி ஸமாதானம் செய்து, "ஸ்ரீ பகவானை நம்பினவர்களுக்கு ஒரு குறை யும் வராது" என்று கூறினுர். அதிலிருந்து ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள் வெளியூர் போகவேண்டி யிருந்தால் நான்கு சிஷ்யர்களைக் கூட அனுப்புவார்கள்.

ஸ்ரீ முத்தண்ணுவாளின் தெய்வ நம்பிக்கை

ஸ்ரீ முத்தண்ணுவாள் அவர்கள் வாழ்நாளில் எந்த நேரம் பேசினுலும் முடிவில் தெய்வ பக்தி என்றும், 'ஈஸ்வரானுக்ரஹம்,' 'தர்மம்' என்றுமே கூறுவார்கள். மேலும் தன் சிஷ்யர்களுக்கோ, புத்ராள் முதலிய பந்துக் களுக்கோ, மாடு, கன்று முதலியவற்றிற்கோ சிறிதேனும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நோய் ஏற்பட்டால், உடன் தன் ஊரின் மேற்கு எல்லையில் உள்ள குளத்தின் கீழ் கரையிலிருக்கும் விநாயகர் ஆலயம் சென்று பிரார்த்திப்பார். அந்த விநாயகர் ரொம்பவும் மஹிமை வாய்ந்தவர்; ஏதாவது அவரைப் பிரார்த்தனை செய்துகொண்டு ஆரம்பிப்பார்கள். மங்களமாக அக்கார்யம் பூர்த்தியாகும். அந்த விநாயகரையே தர்சனம் செய்து, ப்ரார்த்தனை செய்து, தேங்காய் உடைத்து, நைவேத்தியம் செய்துகொண்டு வருவார். உடன் துன்பம் நீங்கினவர்களாய்க் காணப்படுவார்கள். பிரார்த்தனை செய்த உடனேயே குணம் ஆகும் என்பது திண்ணம். இவ்விதம் அவர்களிடம் வேறு யாராவது தன் குறைகளைக் கூறினாலும் அவர்களுக்கும் அந்த விநாயகரையே வேண்டும்படியும், தர்சனம் செய்துவரும்படியும் கூறுவார்கள். இவ்விதம், தான் பக்தியாய் இருந்து நன்மை பெறுவது மட்டுமல்லாமல், தன்னை அண்டியவர்களையும் தெய்வ பக்திகொண்டு சுகமான பெருவாழ்வு வாழச் செய்வதே பெருநோக்கமாகும். நிற்க, அவர்கள் வசித்த ஊருக்கு சிவகாளிபுரம் என்று பெயர் குறிப்பிட்டிருப்பது நினைவிருக்கலாம் அதாவது ஊரின் தெற்கு திசை எல்லையில் ஒரு காளி கோவிலும், ஸ்ரீ சிவன் ஆலயமும் இருக்கிறது. அந்தக் காளிதேவி வடக்கு திசையை (அந்த ஊரை) நோக்கியே பார்த்துக்கொண்டிருக்கிறாள். அதனாலேயே அந்த ஊருக்கு மிகுந்த பெருமை உண்டு. அந்த ஸ்ரீ காளியை தர்சனம் செய்ய இவர்கள் அடிக்கடி அங்கு செல்வது வழக்கம். "அந்தக் காளியும் ரொம்பவும் கருணை கொண்டே நம் ஊரில் இருக்கிறாள்" என்று கூறுவார்கள். இன்னும் அநேக பெருமைகள் எல்லோரும் நேரில் கண்டிருக்கிறார்கள். அந்தக் காளி தேவி கோவில்கொண்டு ஊரின் எல்லையில் வடக்கு முகமாக இருந்துகொண்டு தன் கடாக்ஷத்தினால் எங்கள் கிராமத்தை ரக்ஷித்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

மந்திர சக்தி

சேங்காலிபுரம் என்ற தன் ஊரில், ஓர் பெரிய கிரஹஸ்தரும், ஆஸ்திகரும், தனவந்தருமான ஒருவருடைய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பத்னிக்கு ப்ரும்மரக்ஷஸ் பிடித்திருந்தது. அது வீட்டிலுள்ள யாவருக்கும் துன்பமளித்தது. பல மந்திரவாதிகளைக்கொண்டு, அந்த ப்ரும்மரக்ஷஸ்ஸை விரட்ட முற்பட்டார்கள். ஆயினும் ஒன்றும் பூர்ணமான பயனளிக்கவில்லை. பிறகு கடைசியாக ஓர் பெரிய மந்திரவாதியைக் கொண்டு பல மஹன்யாஸ ஜப ஹோமங்கள் இரண்டு, மூன்று தினங்கள் செய்தார்கள். கடைசி தினத்தன்று அம்மந்திரவாதி அந்த ப்ரும்மரக்ஷஸை அழைத்து, "நீ போகப்போகிருயா? இல்லையா? உனக்கு ஏதேனும் பலி வேண்டுமா? நீ சீக்கிரம் போகாவிடில் இன்னும் கடுமையாய் ஜபம் செய்து உனக்கு மிகுந்த துன்பத்தைத் தரப் போகிறேன்" என்ருர். அதுவரை பேசாதிருந்த அந்த ப்ரும்மரக்ஷஸ், "நான், இவ்வூரில் இருக்கும் ஸ்ரீ பெரிய முத்தண்ணு என்கிற ஸ்ரீ வைத்யனுத தீக்ஷிதர் இங்கு வந்து, அவர் வாக்கினுல் எனக்கு நல்ல கதி கிடைக்கும் என்று கூறினுல், சீக்கிரமே இவ்விடத்தை விட்டுப் போய் விடுகிறேன்" என்று கூறியது.

அதைக் கேட்ட வீட்டிலுள்ள யாவரும், ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளிடம் வந்து "தங்களால்தான் எங்களுக்கு க்ஷேமம் ஏற்படவேண்டும். தங்களைத்தவிர வேறு கதி எங்களுக்கு இல்லை" என்று நமஸ்கரித்து வருந்தினுர்கள். பிறர் துன்பப்படுவதைச் சகியாத ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளும், இம்மாதிரி கார்யங்களினுல் ஈடுபட மனமில்லாது இருந்தும், கருணையால் அவர் வீட்டிற்குச் சென்று, அந்த ப்ரும்மரக்ஷஸை, "ஏன் ஒரு குடும்பத்தை துக்கப்படும்படி செய்யவேண்டும்?" என்று கேட்டார். அதற்கு ப்ரும்மரக்ஷஸ், "தங்கள் வாக்கினுல் எனக்கு நல்ல கதி கிடைக்கும் என்று கூறினுல் நான் இவ்விடத்தை விட்டுச் செல்கிறேன்" என்றது.

ஸ்ரீ முத்தண்ணுவாள், "உனக்கு ஸ்ரீ பகவான் நல்ல கதி கொடுப்பார்" என்ருர். உடன் பிரம்மரக்ஷஸ், "தாங்கள் இவ்விதம் கூறியதே போதும். நான் பாவம் நீங்கி, நல்ல லோகம் சென்று விடுவேன். சீக்கிரமே இங்கு விட்டுப் போய் விடுகிறேன்" என்றது. அது ஸமயம் அங்கிருந்த மந்திரவாதி முதலியோர்கள், "நீ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செல்வது எங்களுக்கு எவ்விதம் தெரியும்?'' என்று கேட்டார்கள். அது நான் போகும்போது, கொல்லையில் இருக்கும் பெரிய புளியமரத்தின் கிளையை முறித்துச் செல்வேன்'' என்றது. இவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அவ்விதமே படபடவென்று, நடு இரவில் சத்தம் கேட்டதைக் கேட்டு, கொல்லையில் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். பெரிய புளியமரத்தின் பெருத்த கிளை, காரணமின்றி முறிவதைக் கண்டு வியந்தார்கள்.

ப்ரும்மரக்ஷஸ் விட்ட ஸ்த்ரீ, பிறகு யாதும் துன்பமில்லாமல் சௌக்கியமாக இருந்தாள். அவர்கள் குடும்பம் முழுவதும், மந்திரவாதியும் ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளின் அனுக்ரஹத்தையும் பெருமையையும் எப்பொழுதும் கூறி ஆனந்தமடைந்தார்கள்.

இவர்களின் ஊருக்குப் பக்கத்தில் சிமிழி என்ற கிராமம் உள்ளது. அங்குள்ள யாவரும் இவர்களிடம் மிகுந்த பக்தி உள்ளவர்கள். 'பரசு ஐயா' என்றவர் இவர்களில் ஒருவராவர். அவர் ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளிடம் தர்க்கம் முதலிய சாஸ்திரங்கள் பயின்று, வேதாந்தங்களையும் கற்றறிந்தார். வேதாந்தங்களில் இவர்களுடைய ஞானம் உலகப் பிரசித்தியானது. ஒரு சமயம் இவரைக் கண்டு, பல வேதாந்த வித்வான்கள், "தாங்கள் யாரிடம் வேதாந்தம் கற்றீர்கள்? மிகவும் த்ருடமான ஞானம் இருக்கிறது'' என்று கேட்டார்கள். அதற்கு ஸ்ரீ பரசு ஐயா அவர்கள், "சேங்காலிபுரத்தில் ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாள் என்கிற பெரியோர்களிடம் வேதாந்தம் பயின்றேன்'' என்றார்.

இவ்விதமிருக்க, சுமார் நாற்பத்தைந்து வயது இருக்கும் அவருக்கு. ஒரு தினம், 'நாம் இவ்வளவு வயதாகியும், பல சாஸ்த்ரங்களை அப்யஸித்தும் என்ன பயன்? வேதம் இல்லாமல் இவை யாவும் பயனில்லை'' எனத் தோன்றியது. உடன் சேங்காலிபுரம் சென்று, தனது சாஸ்த்ர ஆசார்யாளான ஸ்ரீ முத்தண்ணுவாளை நமஸ்கரித்து, எனக்கு வேதங்களை அறிவிக்கவேண்டும்'' என

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டினர். ஸ்ரீ பரசய்யாவின் தீவிர முயற்சியையும், பக்தியையும் கண்டு, "அவ்விதமே செய்கிறேன்" என அன்றே கற்பிக்கத் தொடங்கினர்.

ஒரு தினம் பரசு அய்யா வேதத்தைக் கற்று சிமிழிக்குப் புறப்பட்டுப் போனர். அவர் புறப்பட்டுப் போன சிறிது நேரத்திற்கெல்லாம் பெரிய மழை வந்தது. அப்பொழுது இரவு மணி எட்டு. ஜபம் செய்துகொண்டிருந்த ஸ்ரீ முத்தண்ணுவாள், பரசு ஐயாவுக்கு ஏதாவது ஆபத்து வந்திருக்கக் கூடும் என்று தோன்றி, சிஷ்யனுடன் போய்ப் பார்த்தார். நடு வழியில் ஒரு வாய்க்காலில் பரசு ஐயா தவறி விழுந்து பிரக்ஞை தப்பியிருந்தார். உடனே அவரை ஸ்ரீ முத்தண்ணுவாள் சிஷ்யருடன் தூக்கி, நெற்றியில் விபூதியை மந்திரித்து இட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் பரசு ஐயாவுக்கு பிரக்ஞை வந்ததாம். சேங்காலிபுரத்திற்கே அழைத்து வந்து மறு தினம்தான் வண்டியில் அனுப்பினர்கள். இம்மாதிரி அவர்களுடைய தபஸ்ஸும், அன்பும் அளவு கடந்தது.

சில வருஷங்களிலேயே வேதம் முழுவதும் (அதாவது ஸம்ஹிதை, சாகை, பதம், கிரமம்) இவைகளைக் கற்று முடித்தார். பரசு அய்யா பிறகு தன் ஊரான சிமிழிக்குச் சென்று, ஊரிலுள்ள யாவருக்கும் வேதத்தை அப்யாஸம் செய்வித்தார். சிமிழிக்குச் சமீபத்தில் 'எங்கண்' என்ற முருக க்ஷேத்ரம் உள்ளது. அங்கு தை மாதம் 'புஷ்யோத்ஸவம்' மிகச் சிறப்பாக நடக்கும். அந்த உத்ஸவத்தில் ஒரு அக்னிஹோத்ரி குடும்பத்தால் நடத்தப்பட்டு வரும் வேத பாராயணங்களில் இவரே முதன்மையான ஸ்தானம் வஹிப்பார். அதிலிருந்து அந்த பரசய்யா வேத பாராயணம் செய்யாத நேரமே இராது எனக் கூறலாம். எல்லோரும் இந்த பரசய்யாவைப் பார்த்து, " இவ்வளவு வயதிற்குப் பின் தங்களுக்கு எவ்விதம் வேதம் வந்தது ? " எனக் கேட்பார்கள். அவர்களுக்கு, " நான் வேதத்தை பால்யத்தில் கற்கவில்லை. ஸ்ரீ பெரிய முத்தண்ணு அவர்களின் அனுக்ரஹத்தால் எல்லாம் என் வாக்கில் வருகிறது " என்று ஸ்ரீ பரசய்யா கூறுவார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இப்படி அவர்களிடத்தில் வேதம் அத்யயனம் செய்தவர்கள் பல சிஷ்யர்களை வேதம் அத்யயனம் செய்வித்துத் தானும் அவைகளை எப்பொழுதும் பாராயணம் செய்து வருவதிலேயே தன் காலம் முழுவதையும் கழிப்பார்கள்.

ஒரு சமயம் ஸ்ரீ முத்தண்ணவாள் தனது குருக்கள் இருக்கும் கஞ்சனூருக்கு அக்னிஹோத்ரத்துடனும், சிஷ்யர்களோடும் கால்நடையாகச் சென்றனர். விடியற்காலம் பருத்தியூரில் தனது சிஷ்யர் கிருஹத்தில் அக்னிஹோத்ரம் செய்துவிட்டு, அங்கிருந்து 'கன்றமாணிக்கம்' என்ற ஊர் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அதுசமயம் வழியில் சிமிழியில் வஸித்துவந்த, 'அன்னவாசல் கிருஷ்ணய்யர்' என்றவர் எதிரில் 'கருவேலி' என்ற இடத்திலிருந்து வந்தார். அந்த சமயம் ஆடி மாதம். ஸ்ரீ முத்தண்ணவாளைக் கண்டதும், ஸ்ரீ கிருஷ்ணய்யர் தான் ஸ்நானம் முதலியன செய்யாமல் அவர்களின் எதிரில் செல்ல வெட்கமடைந்து, ரோடை விட்டிறங்கி வயல் பக்கம் வெகு தூரம் சென்றார். ஸ்ரீ முத்தண்ணவாள் ஸ்ரீ கிருஷ்ணய்யரை, "ஏ, கிருஷ்ணா! இங்கே வா!" என்றழைத்து, "எங்கிருந்து வருகிறாய்?" எனக் கேட்டார்கள். அவர் கருவேலியிலிருந்து வருவதாகச் சொன்னார். "வரும் மார்க்கத்தில் உள்ள நதிகளில் தீர்த்தம் இருக்கிறதா?" எனக்கேட்டார்கள். எல்லாவற்றிலும் நிரம்ப ஜலம் போவதாக ஸ்ரீ கிருஷ்ணய்யர் கூறினார். ஸ்ரீ முத்தண்ணவாள் "பல் துலக்கி, விபூதி இட்டு, சந்த்யாவந்தனத்தையாவது செய்து வரக் கூடாதா?" என்று கேட்டார்கள். அன்று முதல் விடியற்காலையில், ஸ்நானம், உதயோபஸ்தானம், ப்ரும்மயக்ஞ ப்ரச்னம் (வேதத்தை ஜபித்தல்) முதலியவைகளைக் தனது ஆயுள் பூராவும் ஸ்ரீ கிருஷ்ணய்யர் செய்து வந்தார்கள். இவர்களுடையபுத்ரன் சிமிழி ஸ்ரீவேங்கடராம சாஸ்திரிகள் என்பவர். இவர் வேதம், சாஸ்திரங்களை நன்கு அறிந்தது மட்டுமல்லால் ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் முதலியவைகளை நன்கு உபன்யஸித்தும் வந்தார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தீர்த்தஸ்நான நம்பிக்கை

ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாளை வீட்டில் அக்னிஹோத்ரம் செய்யும்படி சொல்லி, ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாள் ஸேது ஸ்நானத்திற்கு மற்றவர்களுடன் சென்றிருந்தார்கள். ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாளை பிறகு ஸேதுக்கு அனுப்பலாமென ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாள் நினைத்திருக்கலாம். பிறகு பல வருஷங்களாகியும் ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள் போகநேரவில்லை. ஸ்ரீலக்ஷ்மணஸ்வாமி முதலில் ஸ்ரீ வைகுண்டம் போனதுபோல் ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள் காலகதி அடையநேரிட்டது. அந்த ஸமயத்தில் ஸ்ரீ சின்ன முத்தண்ணுவாள், ஸ்ரீ பெரிய முத்தண்ணுவாளிடம், "நான் ஸேது ஸ்நானம் செய்யவில்லையே" என வருத்தத்துடன் கூறினராம். அதற்கு .பெரிய முத்தண்ணுவாள், "நான் ஸ்நானம் செய்த புண்யம் முழுவதையும் உனக்கு கொடுத்து விட்டேன்" என சொன்னார்களாம். "மஹான்களான தாங்கள் ஸேது ஸ்நான புண்ய முழுவதும் எனக்கு கொடுத்துவிட்டேன் என்று சொன்னதும், எனக்கு அந்த புண்யம் கிடைத்து விட்டதாகவே ஆனந்தம் உண்டாயிற்று" என கண்ணீர் வடித்து ஸ்ரீசின்ன முத்தண்ணு அவர்கள் கூறினர்களாம்.

அவர்கள் வாழ்க்கையின் இறுதி

இப்போது சென்ற நந்தன வருஷத்துக்கு முன் நந்தன வருஷம் தை மாதம் 2-ந்தேதி (1893 கி. பி.) ஏகாதசி, கனு கோ பூஜை யன்று 63 வயதில் காலை செய்யவேண்டிய அக்னிஹோத்ரம் முதலியவைகளைச் செய்து முடித்தார்கள். பிறகு இவர்களது மனைவி ஸ்ரீ நாகலக்ஷ்மி அம்மாள் இவர்களது தம்பியின் குமாரியை அழைத்துக்கொண்டு குளத்திற்குக் கனுப்பிடி வைக்கச் சென்றிருக்கும் போது இவர்கள் ஸர்வ ப்ராயச் சித்தம் செய்துகொண்டு சந்யாஸ ஸ்வீகாரம் செய்துகொண்டார்கள். இவர்களது தம்பியான ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் அவர்களுக்குத்தான் இரண்டு குமாரர்களும் ஒரு குமாரியும் இருந்தார்கள். இம்மூன்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குழந்தைகளும் பெரிய முத்தண்ணு அவர்களேயே பிதா என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். சின்ன முத்தண்ணு அவர்களை பிதா என்று வெகுகாலம் கழித்துத் தான் அறிந்தார்கள். சின்ன முத்தண்ணுவாளான ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் அவர்களுடைய இரண்டாவது குமாரரான ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதரை (என் பிதாவை) ஸ்ரீ பெரிய முத்தண்ணு அவர்கள் முன்பே ஸ்வீகாரம் செய்துகொண்டிருந்தார்கள். இவர்கள் சந்யாஸம் செய்துகொள்ளப்போகும் நோக்கத்தை அறிந்த புத்ரரான ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களும், தம்பியின் குமாரரான ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்களும், இன்னும் சிஷ்யர்களும் வருத்தப்பட்டார்கள். அப்போது ஸ்ரீ முத்தண்ணு அவர்கள், "பாஷ்ய ச்ரவணம் செய்திருக்கிறீர்கள். யதி தர்மத்தை அவலம்பிப்பதைப் பார்த்து வருத்தப்படுவது உசிதமில்லை. அதிலும் ஸ்ரீ பகவத் கீதையிலுள்ள "𑌨𑌹𑌿 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣 𑌕𑍃𑌤𑍍 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌿𑌂 𑌤𑌾𑌤 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿"

(நஹி கல்யாண க்ருத் கஶ்சித் துர்கதி தாத கச்சதி)

(நல்ல காரியத்தைச் செய்கிறவன் ஒருபோதும் கெடுதலை அடையமாட்டான்) என்ற பாதி ஸ்லோகத்தை எப்பொழுதும் ஞாபகம் வைத்துக்கொண்டால் க்ஷேமமாக இருப்பீர்கள்" என்றும் "ஏதாவது மனக்கவலை இருந்தால் எனது ஸமாதியில் வந்து தரிசனம் செய்து ப்ரார்த்தித்துக் கொண்டால் எல்லாக் கவலைகளும் நீங்கிவிடும்" என்றும் அபயப்ரதானம் செய்தார்களாம். தனது புத்ரருக்கும், தம்பியின் புத்ரருக்கும் ஸந்ததி இல்லாததால் பரிஹாரம் செய்ய வேண்டிய க்ரமங்கள் ஏட்டுச் சுவடியில் எழுதிவைத்திருப்பதாயும், இன்னும் ஒரு வருஷத்திற்குப் பிறகு சந்ததி உண்டாகும் என்றும் சொல்லி அனுக்ரஹித்தார்கள். அதேபோல் பரிஹாரங்கள் செய்து ஒரு வருஷம் கழித்துக் குழந்தைகள் பிறந்தார்கள்.

இவர்களது சிஷ்யர்களில் ஒருவர் வைத்தியத்திலும், தாது பார்ப்பதிலும் நிபுணராக இருந்தார். அவர் "தங்களுக்கு தாது நன்ருக இருக்கிறது. இப்போது சந்யாசம் வேண்டாம்" என்று சொன்னர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதற்கு இவர்கள் "துவாதசியாகி நாளையதினம் பகல் பதினைந்து நாழிகைக்கு ஸித்தி அடைந்துவிடப் போகிறேன். என் தாது உனக்கு அகப்படாது" என்று சொன்னார்கள். அப்படி ஜீவித்திருந்தால் தன் சிஷ்யன் ஊராகிய பருத்தியூர் கிராமத்தில் வசிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதற்கு அவசியம் ஏற்படாமல் துவாதசி அன்றே ஸித்தி அடைந்து விட்டார்கள்.

இவர்களது குல கூடஸ்தர்களின் வரிசைக் கிரமத்தைக் காட்டும் ஸ்லோகம் :—

वैकुण्टनाथमखिनं कूटस्थं प्रणमाम्यहम् ।
अपर्याप्तामृतञ्चापिदीक्षितं तत्सुतं द्विजम् ।
श्रीनिवासाख्य यज्वानं तत्पुत्रञ्च नतोऽस्म्यहम् ।
नारायणमखीन्द्रञ्च पुत्रं तस्यापि सद्विजम् ॥

वैद्यनाथाध्वरीद्रञ्च प्रणम्य शिरसा मुहुः ।
नारायणाख्य यज्वानं पुत्रं तस्यापि सद्गुरुम् ॥

अनन्तराममखिनं यतिराजं नमाम्यहम् ।
ततो जातो वैद्यनाथ दीक्षितो गुरुसत्तमः ॥

मुत्तण्णा इति विख्यातः शिष्यायुत सुपूजितः ।
शिवकालीपुरग्रामे समाधिस्थो विराजते ।
पितामहम् जगत्पूज्यं तं गुरुम् प्रणमाम्यहम् ॥

வைகுண்டநாதமகினம் கூடஸ்த்வம் ப்ரணமாம்யஹம் ।
அபர்யாப்தாம்ருதஞ்சாபிதீக்ஷிதம் தத்ஸுதம் த்விஜம் ॥
ஶ்ரீநிவாஸாக்ய யஜ்வானம் தத்புத்ரஞ்ச
நதோऽஸ்ம்யஹம் ।
நாராயணமகீந்த்ரஞ்ச புத்ரம் தஸ்யாபி ஸத்விஜம் ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வைத்யநாதாத்வரீத்ரஞ்ச ப்ரணம்ய ஶிரஸா முஹு:।
நாராயணக்ய யஜ்வானம் புத்ரம் தஸ்யாபி ஸத்குரும் ॥

அனந்தராமமகினம் யதிராஜம் நமாம்யஹம்।
ததோ ஜாதோ வைத்யநாத தீக்ஷிதோ குருஸத்ரம: ॥

முத்தண்ண இதி விக்யாத: ஶிஷ்யாயுத ஸுபூஜித:।
ஶிவகாளீபுரக்ராமே ஸமாதிஸ்தோ விராஜதே।
பிதாமஹம் ஜகத்பூஜ்யம் தம் குரும் ப்ரணமாம்யஹம் ॥

இவர்களது தலைமுறை :— (மேற்சொன்ன ஸ்லோகத்தின் கருத்து)

1. ஸ்ரீ வைகுண்டநாத தீக்ஷிதர் — அவரது புத்ரர்.
2. ஸ்ரீ அபர்யாப்தாம்ருத தீக்ஷிதர் — ,, ,,
3. ஸ்ரீ ஸ்ரீனிவாச தீக்ஷிதர் — ,, ,,
4. ஸ்ரீ நாராயண தீக்ஷிதர்
5. ஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதர்
6. ஸ்ரீ நாராயண தீக்ஷிதர்
7. ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் — அவரது புத்ரர்
8. ஸ்ரீ முத்தண்ணவாள் என்கிற
ஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதர்.

ஸ்ரீ யோகி கண்ட தேஜஸ்

வடதேசத்திலிருந்து பிரும்மசாரியான யோகி ஒருவர் கம்ஸபுரம் என்னும் கஞ்சனூர் க்ஷேத்திரத்திற்கு வந்தார். அங்கு காவேரி வடக்கு நோக்கிச் செல்கிறது. (உத்தர வாஹினி) அங்கு ஸ்நானம் செய்கிறவர்களுக்கு லக்ஷக் கணக்கில் கோதானம் செய்த புண்யம் கிட்டுமாம். அங்கு சிறிது காலம் ஸ்நானம், ஜபம் செய்த யோகி சேங்காலி புரத்தில் ஸ்ரீமுத்தண்ணவாளுடைய ஸமாதியை தர்சனம் செய்வதற்காக குறுக்குமார்க்கமாக நடந்தே வந்தார். ஸ்ரீ ஸமாதியில் சில தினங்கள் தங்கி ஜபம் செய்து கொண்டிருந்தார்கள். அவர் ஸ்ரீதத்தாத்ரேய உபாஸகர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவர் ஆஹாரம் ஒன்றும் செய்வதில்லை. குருவாரத்தன்று மட்டிலும் யாராகிலும் சித்ரான்னம் செய்துகொண்டு வந்து கொடுத்தால் அதை ஸ்ரீ ஸமாதிக்கு நிவேதனம் செய்து அதில் ஒரு பாகத்தை குளத்தில் உள்ள மீன் களுக்குப் போட்டு, பக்தர்களுக்கு ஒரு பாகத்தைக் கொடுத்து சிறிது தானும் உட்கொள்ளுவது வழக்கம். நித்யம் நெல்லிக்காய், இஞ்சி, ஓமம் இம்மூன்றையும் சேர்த்து அரைத்து எலுமிச்சம் பழத்தை சிறிது பிழிந்து யாராவது கொடுத்தால் அதை மட்டிலும் உட்கொண்டு வந்தார். அவர்களது தேஜஸ்ஸை யார் பார்த்தாலும் உடனே அளவு கடந்த பக்தி உண்டாகும். அப்பொழுது எங்கள் பிதா ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்கள் இருந் தார்கள். அவர்கள் வந்த மறுதினம் அபிஷேகத்திற்குச் சென்ற என் பிதா அவர்களைப் பார்த்தார்கள். இங்கு மந்திர ஜபம் செய்வதற்காக தான் வந்திருப்பதாயும் இரவு இரண்டு ஸமாதியிலும் ஓர் ஜ்யோதிஸ் தெரிவதா யும், ஆனந்தக் கண்ணீர் விட்டுச் சொன்னார்கள். அபி ஷேகம் செய்த பஞ்சாம்ருதத்தை அவர்களிடம் என் பிதா கொடுத்தார்கள். அதை அப்படியே தன் தலையில் கொட்டிக்கொண்டு ஆனந்தமடைந்தார்கள். இந்த சன்னிதியில் வந்து தர்சிப்பவர்கள், பிரார்த்தித்துக் கொள் பவர்கள், ஸகல பாக்யங்களையும் அடைவார்கள் என்று மனமுருகிச் சொன்னார்கள். இம்மாதிரியான நிகழ்ச்சி நடக்கும்போது அங்கு நானும் பக்கத்தில் இருந்தேன்.

ஸ்ரீ மஹா குருவைப் பற்றிய கீர்த்தனம்

செய்யானம் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் என்ற பெரியவாள் ஸ்ரீமத் ராமாயண உபன்யாஸம் பல வருஷங் கள் பல முறைகள் ஸங்கீதத்துடன் செய்து வந்தார்கள். இவர்கள் ஸ்ரீ முத்தண்ணுவாளுடைய சிஷ்யாள் என்பது முன்னமேயே எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் தனது குருவான ஸ்ரீ முத்தண்ணுவாளைப்பற்றி "நாதநாமக்ரியா" என்ற ராகத்தில் ஆதி தாளத்தில் தனது குருவை நேரில் பார்ப்பது போல் யாவரும் உணர்வதற்காக स्मितविकसितवक्त्र (ஸ்மிதவிகஸிதவக்த்ரம்) (புன்முறுவலுடன் மலர்ந்த முகம்) भक्तवात्सल्य (பக்தவாத்ஸல்ய) (அன்பனிடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அன்பு கொண்ட) இந்த இரண்டு ச்லோகங்களையும் எழுதினார்கள்.

ஸ்ரீ மஹா குரு கீர்த்தனம்

[ராகம் — நாதநாமக்கிரியை] [தாளம் — ஆதி]

प. वन्दे श्री गुरुराजं वरदमपार कृपांबुधिमनिशं
वन्दे श्री गुरुराजं ॥

अ. प. मन्दहास सुन्दरमुखकमलं महादेव हरिपूजन विमलं

च. त्रिपुण्ड्रभासित विराजितफालं दिनकरसन्निभ तेजोजालम्
पावनरुद्राक्षोज्ज्वलमालं पवित्रयशसं पाण्डुरचेलम् ॥
(वन्दे)

सकलवेदवेदाङ्गनिधानं सदाकलितपरमात्मध्यानं ।
सर्वभूत समाभवज्ञानं सं श्रितार्तिहारिणमसमानम् ॥ (वन्दे)
शुद्धहविस्तर्पित सुरबृन्दं शुभभाषित निर्जितमकरन्दम् ।
रागरहितमनुभूतानन्दं रामदासनुतपदारविन्दम् ॥ (वन्दे)

பல்லவி

வந்தே ஸ்ரீ குருராஜம் வரதமபார
க்ருபாம்புதிமனிஶம் வந்தே ஸ்ரீ குருராஜம் ॥

அநுபல்லவி

மந்தஹாஸ ஸுந்தரமுககமலம்
மஹாதேவ ஹரிபூஜன விமலம்

சரணம்

த்ரிபுண்ட்ரபாஸித விராஜிதாபாலம்
தினகரஸன்னிப தேஜோஜாலம்
பாவனருத்ராக்ஷோஜ்ஜ்வலமாலம்
பவித்ரயஶஸம் பாண்டுரசேலம் ॥ (வந்தே)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஓ அண்ணு, அரசர்களுக்கு உரிய ஸகல லக்ஷணங்களையும் உடைய ராஜா எல்லாவுலகங்களுக்கும் அதிபதியாவான். அந்த லக்ஷணங்களை உடையவர் யுதிஷ்டிரர். அவரை தாங்கள் சமீபத்தில் வைத்துக் கொண்டு காப்பாற்ற வேண்டியதாய் இருக்க, அவரைக் காட்டிற்கு துரத்திவிட்டீர். நீர் ராஜலக்ஷணமற்றவர். உமக்கு நேத்ரமில்லை. நீர் தர்மாத்மாவாகவும் தர்மமறிந்தவராகவும் இருந்த போதிலும் ராஜ்யம் உமக்கு ராஜ்யமில்லாமையால் உம் தம்பி பாண்டு ராஜ்யத்தை அடைந்தார். ஆகையால் இராஜ்யம் அந்த வம்சத்துக்கே உரியது. யுதிஷ்டிரர் மிருதுவான ஸ்வபாவமும் தயை, தர்மம், ஸத்யம், சூரத் தன்மை முதலிய குணங்கள் உடையவரானபடியாலும் நீர் அவருக்கு பெரியோரானபடியாலும் நீர் செய்து வந்த உபத்திரவங்களைப் பொறுத்து வந்திருக்கிருர். இராஜ்யம் ஆளுகிறவன் பண்டிதனுக இருக்கவேண்டும். அந்த குணம் பாண்டவர்களிடத்தில் இருக்கிறது. உம்முடைய புத்திரர்களிடத்திலில்லை. அப்படியிருக்க துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாஸனன் இவர்களிடத்தில் இராஜ்யத்தைக் கொடுத்து நீர் எவ்வாறு க்ஷேமத்தை அடைய விரும்புகிறீர்? இனி விதுரர் செய்யும் உபதேசங்கள்.

आत्मज्ञानं समारम्भः तितिक्षा धर्मनित्यता ।
यमर्था नापकर्षन्ति स वै पण्डित उच्यते ॥ १

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆத்மக்ஞானம் ஸமாரம்ப: திதிக்ஷா தர்மநித்யதா ।
யமர்த்தான் நாபகர்ஷந்தி ஸ வை பண்டித உச்யதே ॥

பரமாத்மாவை அறிதல், நல்ல முயற்சி, பொறுமை, நித்யம் தர்மத்தை அனுஷ்டித்தல், இவைகள் எவனை புருஷார்த்தத்திலிருந்து நழுவச் செய்யவில்லையோ, அவனே அறிவாளியாவான். (அதாவது இவைகள்தான் புருஷார்த்தமென ஜன்மாவை அடைந்ததற்கு பயனெனக் கருத்து.)

निषेवते प्रशस्तानि निन्दितानि न सेवते ।
अनास्तिकः श्रद्दधान एतत्पण्डितलक्षणम् ॥ २

நிஷேவதே ப்ரஶஸ்தாநி நிந்திதாநி ந ஸேவதே ।
அநாஸ்திக: ஶ்ரத்ததாந ஏதத்பண்டித லக்ஷணம் ॥

நல்ல காரியங்களைச் செய்வான். கெட்ட காரியங்களைச் செய்யமாட்டான். நாஸ்திகத் தன்மையில்லாதவனும் சிரத்தையுள்ளவனும் இருப்பான். இவ்வாறு பண்டிதன் இருப்பான்.

यथाशक्ति चिकीर्षन्ति यथाशक्ति च कुर्वते ।
न किंचिदवमन्यन्ते नराः पण्डितबुद्धयः ॥ ३

யதா ஶக்தி சிகீர்ஷந்தி யதாஶக்தி ச குர்வதே ।
ந கிஞ்சிதவமந்யந்தே நரா: பண்டிதபுத்தய: ॥

அறிவாளிகளான மனிதர்கள் தன் சக்திக்கு ஏற்றவாறு காரியங்களைச் செய்ய விரும்புகிறார்கள். தன் சக்திக்குத் தக்கவாறு காரியங்களைச் செய்யவும் செய்வார்கள். சிறிதளவு கூட யாரையும் அவமதிப்பதில்லை.

नाप्राप्यमभिवाञ्छन्ति नष्टं नेच्छन्ति शोचितुम् ।
आपत्सु च न मुह्यन्ति नराः पण्डितबुद्धयः ॥ ४

நாப்ராப்யமபிவாஞ்சந்தி நஷ்டம் நேச்சந்தி ஶோசிதும் ।
ஆபத்ஸு ச ந முஹ்யந்தி நரா: பண்டிதபுத்தய: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அறிவாளிகளான மனிதர்கள் கிடைப்பதற்கரிதான பொருளில் ஆசை வைப்பதில்லை. நஷ்டமான பொருளைக் குறித்து துயரத்தை அடைவதுமில்லை. ஆபத்துக்கள் வந்த போதிலும் கலங்குவதில்லை.

आर्यकर्मणि रज्यन्ते भूतिकर्माणि कुर्वते ।
हितं च नाभ्यसूयन्ति पण्डिता भरतर्षभ ॥ ५

ஆர்யகர்மணி ரஜ்யந்தே பூதிகர்மாணி குர்வதே ।
ஹிதம் ச நாப்யஸூயந்தி பண்டிதா பரதர்ஷப ।

ஓ பரத குலத்தில் சிறந்த திருதராஷ்டிரனே, அறிவாளிகளான மனிதர்கள் பெரியோர்கள் செய்துவந்த காரியங்களைச் செய்ய ஆசைப்படுவார் ள். ஸம்பத்துக்களை உலகத்துக்கு அளிக்கும் நல்ல கர்மங்களையும் செய்வார்கள். நன்மையை உபதேசிப்பவர்களிடம் பொருமைப்படுவதில்லை.

न हृष्यत्यात्मसंमाने नावमानेन तप्यते ।
गाङ्गो ह्रद इवाक्षोभ्यः यः स पण्डित उच्यते ॥ ६

ந ஹ்ருஷ்யத்யாத்மஸம்மானே நாவமானேன தப்யதே ।
காங்கோ ஹ்ரத இவாக்ஷோப்ய: ய:ஸ பண்டித உச்யதே

தன்னை யாராவது பூஜித்தால் அதற்காக சந்தோஷப் படுவதில்லை. அவமதித்தாலும் தாபத்தை அடைவ்திில்லை. கங்கையின் மடுவைப் போல் எவன் கலக்கமடையாமல் இருக்கிருனே, அவனே அறிவாளி எனச் சொல்லப்படுவான்.

प्रवृत्तवाक् चित्रकथः ऊहवान् प्रतिभानवान् ।
आशु ग्रन्थस्य वक्ता च यः स पण्डित उच्यते ॥ ७

ப்ரவ்ருத்தவாக் சித்ரகத: ஊஹவான் ப்ரதிபானவான் ।
ஆஶு க்ரந்தஸ்ய வக்தா ச ய: ஸ பண்டித உச்யதே ॥

எந்த மனிதன் தடங்கலில்லாத சொற்களை உடையவனே, ஆச்சரியமான கதைகளைக் கூறுவானே, விஷயங்களை ஊஹத்தால் அறிவானே, மேன்மேலும் புதிது புதிதாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யோசனை கூறுவானே, நூல்களிலுள்ள விஷயங்களை உடன் ஸபையில் சொல்லுவானே, அவனே அறிவாளியெனப் படுவான்.

श्रुतं प्रज्ञानुगं यस्य प्रज्ञा चैव श्रुतानुगा ।
असंभिन्नार्यमर्यादः पण्डिताख्यां लभेत सः ॥ ८

ஶ்ருதம் ப்ரக்ஞானுகம் யஸ்ய ப்ரக்ஞா சைவ ஶ்ருதானுகா
அஸம்பிந்நார்ய மர்யாத: பண்டிதாக்யாம் லபேத ஸ: ।

எவனுடைய சாஸ்திர பயிற்சியானது அறிவை வளரச் செய்கிறதோ, எவனுடைய அறிவானது சாஸ்திரத்தை விட்டு விலகாமலிருக்கிறதோ, பெரியோர்களுடைய ஆசாரம் முதலியவற்றை எவன் விட்டுவிடாமல் பாதுகாத்து வருகிறானே, அவனே அறிவாளியெனப்படுவான்.

अश्रुतश्च समुन्नद्धः दरिद्रश्च महामनाः ।
अर्थांश्चाकर्मणा प्रेप्सुः मूढ इत्युच्यते बुधैः ॥ ९

அஶ்ருதஶ்ச ஸமுந்நத்த: தரித்ரஶ்ச மஹாமநா: ।
அர்த்தாம்ஶ்சாகர்மணா ப்ரேப்ஸு: மூட இத்யுச்யதே புதை: ॥

எவன் படிக்காமலே கர்வத்தை அடைகிறானே, எவன் தரித்ரனாக இருந்து உதாரியாக இருக்கிறானே, வேலை செய்யாமல் சோம்பேரியாக இருந்துகொண்டு பொருளை சம்பாதிக்க ஆசைப்படுகிறானே, அவனை புத்திமான்கள் மூடன் எனச் சொல்வார்கள்.

स्वमर्थं यः परित्यज्य परार्थमनुतिष्ठति ।
मिथ्याचरति मित्रार्थे यश्च मूढः स उच्यते ॥ १०

ஸ்வமர்த்தம் ய: பரித்யஜ்ய பரார்த்த மநுதிஷ்டதி ।
மித்யாசரதி மித்ரார்த்தே யஶ்ச மூட: ஸ உச்யதே ॥

எவன் தன் தர்மத்தை விட்டுவிட்டு பிறருக்கு தர்ம காரியங்களை நடத்தி வைக்கிறானே, எவன் ஸ்நேஹிதன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விஷயத்தில் பொய் பேசி கபடமாக நடக்கிருனோ, அவன் மூடன் எனப்படுகிறான்.

अकामान्कामयति यः कामयानान्परित्यजेत् ।
बलवन्तं च यो द्वेष्टि तमाहुर्मूढचेतसम् ॥ ११

அகாமான்காமயதி ய: காமயானன் பரித்யஜேத் ।
பலவந்தம் ச யோ த்வேஷ்டி தமாஹுர்மூட சேதஸம் ॥

தன்னிடத்தில் அன்பில்லாதவர்களிடம் எவன் ஸ்நேஹம் செய்ய விரும்புகிருனோ, அன்புள்ளவர்களை விட்டு விடுகிருனோ, பலசாலியை துவேஷிக்கிருனோ, அவன் மூடனெனப்படுவான்.

अमित्रं कुरुते मित्रं मित्रं द्वेष्टि हिनस्ति च ।
कर्म चारभते दुष्टं तमाहुर्मूढचेतसम् ॥ १२

அமித்ரம் குருதே மித்ரம் மித்ரம் த்வேஷ்டி ஹிநஸ்தி ச
கர்ம சாரபதே துஷ்டம் தமாஹுர்மூடசேதஸம் ॥

எவன் சத்ருவை ஸ்நேஹிதனுகச் செய்து கொண்டு ஸ்நேஹிதனை துவேஷித்து துன்புறுத்துகிருனோ, கெட்ட காரியங்களையும் செய்யத் தொடங்குகிருனோ, அவனை மூட புத்தியுள்ளவன் எனக் கூறுகின்றனர்.

संसारयति कृत्यानि सर्वत्र विचिकित्सते ।
चिरं करोति क्षिप्रार्थे स मूढो भरतर्षभ ॥ १३

ஸம்ஸாரயதி க்ருத்யானி ஸர்வத்ர விசிகித்ஸதே ।
சிரம் கரோதி க்ஷிப்ரார்த்தே ஸ மூடோ பரதர்ஷப ॥

எவன் காரியங்களை வளத்திச் செய்கிருனோ எவன் எல்லா காரியங்களிலும் ஸந்தேஹப்படுகிருனோ, உடன் செய்யவேண்டியதை தாமதித்து ஆரம்பிக்கிருனோ, அவனை மூடனெனக் கூறுகின்றனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

श्राद्धं पितृभ्यो न ददाति दैवतानि न चार्चति ।
सुहृन्मित्रं न लभते तमाहुर्मूढचेतसम् ॥ १४

ஶ்ராத்தம் பித்ருப்யோ ந ததாதி தைவதாநி ந சார்சதி ।
ஸுஹ்ருன்மித்ரம் ந லபதே தமாஹுர் மூடசேதஸம் ॥

எவன் பித்ருக்களுக்கு சிராத்தத்தைச் செய்வதில்லையோ, குலதெய்வம் முதலிய தேவர்களை ஆராதிப்பதில்லையோ, நல்ல மனமுடைய மனிதனை ஸ்நேஹிதனாகச் செய்து கொள்ளவில்லையோ, அவனை மூட புத்தியுள்ளவனாக மஹான்கள் கூறுகின்றனர்.

अनाहूतः प्रविशति अपृष्टो बहुभाषते ।
अविश्वस्ते विश्वसिति मूढचेता नराधमः ॥ १५

அநாஹூத: ப்ரவிஶதி அப்ருஷ்டோ பஹுபாஷதே ।
அவிஶ்வஸ்தே விஶ்வஸிதி மூடசேதா நராதம: ।

எவன் அழைக்காமல் பிறர் வீட்டிற்கு அடிக்கடிச் செல்லுகின்றானோ, தன்னைக் கேளாமல் இருப்பவனிடம் தானாகவே பல விஷயங்களை கூறுகின்றானோ, அவனை மூட புத்தியுள்ள கீழ்பட்ட மனிதன் எனக் கூறுகின்றனர்.

परं क्षिपति दोषेण वर्तमानः स्वयं तथा ।
यश्च क्रुध्यत्यनीशानः स च मूढतमो नरः ॥ १६

பரம் க்ஷிபதி தோஷேண வர்தமாந: ஸ்வயம் ததா
யஶ்ச க்ருத்யத்யநீஶாந: ஸ ச மூடதமோ நர: ॥

தான் தப்பு செய்கிறவனாய் இருந்து கொண்டு தப்புச் செய்யும் பிற மனிதனை தப்பு செய்கிறாய் என எவன் குறை கூறுகிறானோ, எவன் தான் சக்தியற்றவனாய் இருந்து கோபமடைகிறானோ, அவன் மிகுந்த முட்டாள் என பெரியோர்கள் கூறுகின்றனர்.

आत्मनो बलमज्ञाय धर्मार्थपरिवर्जितम् ।
अलभ्यमिच्छन्नैष्कर्म्यात् मूढबुद्धिरिहोच्यते ॥ १७

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆத்மனோ பலமக்ஞாய தர்மார்த்தபரிவர்ஜிதம் ।
அலப்யமிச்சந்நைஷ்கர்ம்யாத் மூடபுத்திரிஹோச்யதே ॥

தர்மம் அர்த்தம் இவைகளற்ற தனது சக்தியை அறியாமல் கிடைக்கக்கூடாத பொருளை முயற்சி செய்யாமலே அடைய எவன் விரும்புகிருனோ அவனை மூட புத்தியுள்ளவன் என இவ்வுலகில் கூறுகின்றனர்.

अशिष्यं शास्ति यो राजन् यश्च शिष्यं नशास्ति च ।
कदर्यं भजते यश्च तमाहुर्मूढचेतसम् ॥ १८

அஶிஷ்யம் ஶாஸ்தி யோ ராஜன் யஶ்ச ஶிஷ்யம் நஶாஸ்தி ச ।
கதர்யம் பஜதே யஶ்ச தமாஹுர்மூட சேதஸம் ॥ 18

ஓ அரசனே, எவன் தனக்கு சிஷ்யனாக இல்லாதவனை திருத்துகிருனோ, அவ்வாறே சிஷ்யனை திருத்தாமல் இருக்கிருனோ, தான் கூட தனது பொருளை அனுபவிக்காத லோபியை எவன் உபாஸிக்கிருனோ, அவனை மூட புத்தியுள்ளவன் எனக் கூறுகின்றனர்.

अर्थं महान्तमासाद्य विद्यामैश्वर्यमेव वा ।
विचरत्यसमुन्नद्धः यः स पण्डित उच्यते ॥ १९

அர்த்தம் மஹாந்தமாஸாத்ய வித்யாமைஶ்வர்யமேவ வா ।
விசரத்யஸமுன்னத்த: ய: ஸ பண்டித உச்யதே ॥ 19

எவன் நிறம்ப பொருளை அடைந்தும் அதே போல் கல்வியையும் அதிகாரத்தையும் அடைந்தும் கர்வமில்லாமல் உலகில் பழகுகிருனோ, அவன் பண்டிதன் எனக் கூறப்படுகிருன்.

एकः सम्पन्नमश्नाति वस्ते वासश्च शोभनम् ।
योऽसंविभज्य भृत्येभ्यः को नृशंसतरस्ततः ॥ २०

ஏகஸ்ஸம்பன்னமஶ்நாதி வஸ்தே வாஸஶ்ச ஶோபநம் ।
யோ ऽஸம்விபஜ்ய ப்ருத்யேப்ய: கோ ந்ருஶம்ஸதரஸ்தத: 20

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எவன் தன்னிடம் வேலை செய்கிறவர்களுக்குக் கொடாமல் நல்ல உணவை உட்கொள்ளுகிருனே, அதே போல் நல்ல ஆடைகளை தரித்துக் கொள்ளுகிருனே, இவனுக்கு மேல் கடினமான மனமுடையவன் வேறு யார் இருக்க முடியும்?

एकं हन्यान्न वा हन्यादिषुर्मुक्तो धनुष्मता ।
बुद्धिर्बुद्धिमतोत्सृष्टा हन्याद्राष्ट्रं सराजकम् ॥ २१

ஏகம் ஹன்யான் ந வா ஹந்யாதிஷுர்முக்தோ தநுஷ்மதா ।
புத்திர்புத்திமதோத்ஸ்ருஷ்டா ஹந்யாத்ராஷ்ட்ரம் ஸராஜகம் ॥ 21

வில்லாளியால் விடப்பட்ட அம்பானது ஒருவனைக் கொல்லும், அல்லது கொல்லாமல் விட்டாலும் விடும். புத்திமானுல் உபயோகிக்கப்பட்ட புத்தியானது அரசனுடன் கூடிய தேசத்தை அழித்துவிடும்.

एकं विषरसो हन्ति शस्त्रेणैकश्च हन्यते ।
सराष्ट्रं सप्रजं हन्ति राजानं मन्त्रविप्लवः ॥ २२

ஏகம் விஷரஸோ ஹந்தி ஶஸ்த்ரேணைகஶ்ச ஹன்யதே ।
ஸ ராஷ்ட்ரம் ஸப்ரஜம் ஹந்தி ராஜாநம் மந்த்ர விப்லவ: ॥ 22

விஷரஸமானது ஒருவனைக் கொல்லுகின்றது. அதே போல் ஆயுதத்தால் ஒருவன் கொல்லப்படுகிருன். ஆனுல் அரசன் செய்த தவருன மந்திராலோசனையானது மக்களுடன் கூடிய அரசனையும் தேசத்தையும் அழிக்கும்.

एकः स्वादु न भुञ्जीत एकश्चार्थान्न चिन्तयेत् ।
एको न गच्छेदध्वानं नैकः सुप्तेषु जागृयात् ॥ २३

ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத ஏகஶ்சார்த்தான் ந சிந்தயேத் ।
ஏகோ ந கச்சேதத்வானம் நைக: ஸுப்தேஷு ஜாக்ருயாத் ॥ 23

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ருசியான வஸ்துவை ஒருவனுக சாப்பிடக் கூடாது. விஷயங்களை ஒருவனுக ஆலோசிக்கக் கூடாது. ஒருவனுக வழியில் நடக்கக்கூடாது. எல்லோரும் தூங்கும்போது ஒருவனுக விழித்துக் கொண்டிருக்கக் கூடாது. (பலர் தூங்கும் போது ஒருவன் விழித்துக் கொண்டிருந்து யாருடைய பொருளாவது காணுமற் போனுல் இவனையே சந்தேஹிப் பார்கள். எனக் கருத்து).

एकमेवाद्वितीयं तत् यद्राजन्नावबुद्ध्यसे ।
सत्यं स्वर्गस्य सोपानं पारावारस्य नौरिव ॥ २४

ஏகமேவாத்விதீயம் தத் யத்ராஜன்நாவபுத்யஸே ।
ஸத்யம் ஸ்வர்கஸ்ய ஸோபாநம் பாராவாரஸ்ய நௌரிவ ॥ 24

அரசனை திருதராஷ்டிரன் நல்ல போகங்களையும் புண்ய லோகங்களையும் அடைய விரும்பி அது எதனுல் கிடைக்குமெனக் கேழ்க்க விரும்பினுன். அதற்கு விதுரர், ஓ அரசனே, நீர் எந்த பரமாத்மாவை அறியவில்லையோ, அது இரண்டற்ற ஒன்ருகவே உள்ளது. ஸத்யமாகவும் உள்ளது. அதுவே நல்ல போகங்களையும் புண்ய லோகங்களையும் அடைவதற்கு படிக்கட்டாக அமைந்து ஸமுத்திரத்தை தாண்டுவதற்கு கப்பலைப் போல் உள்ளது.

एकः क्षमावतां दोषः द्वितीयो नोपपद्यते ।
यदेनं क्षमया युक्तं अशक्तं मन्यते जनः ॥ २५

ஏகః க்ஷமாவதாம் தோஷః த்விதீயோ நோபபத்யதே ।
யதேநம் க்ஷமயா யுக்தம் அஶக்தம் மந்யதே ஜநః ॥ 25

பொறுமையுள்ளவர்களிடம் ஒரு தோஷத்தைத்தான் சொல்ல முடியும். பொறுமையுள்ள இவனை ஜனங்கள் சக்தியில்லாதவனுக நினைக்கின்ருர்கள் என்ற ஒரு தோஷம்தான். வேறு தோஷம் அவர்களுக்கு வர முடியாது. ஆனுல் அது இவனுக்கு தோஷமல்ல. அந்த பொறுமையானது இவனுக்கு பெரிய பலமாகும். (சக்தியாகும்).

क्षमा गुणो ह्यशक्तानां शक्तानां भूषणं क्षमा ।
क्षमा वशीकृतिर्लोके क्षमया किं न साध्यते ॥ २६

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ஷமா குணோ ஹ்யஶக்தானாம் ஶக்தானாம்
பூஷணம் க்ஷமா ।
க்ஷமா வஶீக்ருதிர்லோகே க்ஷமயா கிம் ந ஸாத்யதே ॥

சக்தியில்லாதவர்களுக்கு பொறுமை குணமாகிறது. சக்தியுள்ளவர்களுக்கு பொறுமை அலங்காரமாகிறது. பொறுமையால் உலகத்தை வசப்படுத்தலாம். பொறுமையால் எதைத்தான் சாதிக்க முடியாது.

शान्तिखड्गः करे यस्य किं करिष्यति दुर्जनः ।
अतृणे पतितो वह्निः स्वयमेवोपशाम्यति ॥ २७

ஶாந்திகட்க: கரே யஸ்ய கிம் கரிஷ்யதி துர்ஜன:
அத்ருணே பதிதோ வஹ்னி: ஸ்வயமேவோபஶாம்யதி ।

பொறுமையாகிற கத்தி எவனது கையில் இருக்கிறதோ அவனை கெட்ட மனிதன் என்ன செய்ய முடியும்? கூளமில்லாத இடத்தில் மணலில் விழுந்த நெருப்பானது தானே அணைந்து விடுகிறது.

द्वाविमौ ग्रसते भूमिः सर्पो बिलशयानिव ।
राजानं चाविरोद्धारं ब्राह्मणं चाप्रवासिनम् ॥ २८

த்வாவிமௌ க்ரஸதே பூமி: ஸர்போ பிலஶயாநிவ ।
ராஜாநம் சாவிரோத்தாரம் ப்ராம்மணம் சாப்ர
வாஸினம் । 28

எந்த அரசன் சத்ருவை எதிர்த்து அடக்கவில்லையோ, எந்த பிருமணன் தீர்த்தம் க்ஷேத்திரம் இவைகளுக்குச் செல்லவில்லையோ, இவ்விருவர்களையும் பூமியானது வளையில் இருக்கும் எலிகளை பாம்பு விழுங்குவதுபோல் விழுங்கி விடுகிறது. (அதாவது கீர்த்தி அற்றவர்களாக ஆகி அவர்களது குலமும் மங்கி விடுகிறதென்பது கருத்து.)

द्वे कर्मणी नरः कुर्वन्नस्मिँल्लोके विरोचते ।
अब्रुवन् परुषं किंचित् असतोऽनर्चयंस्तथा ॥ २९

த்வேகர்மணீ நர: குர்வன்நஸ்மின்லோகே விரோசதே ।
அப்ருவன் பருஷம் கிஞ்சித் அஸதோऽநர்சயம்ஸ்ததா ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவ்வுலகில் இரண்டு காரியங்கள் செய்கிறவன் நன்கு பிரகாசிக்கிருன். கடூரமான சொல்லைச் சொல்லாமலும் துஷ்டர்களை பூஜிக்காமலும் இருப்பது என்ற இவ்விரண்டு மேயாகும்.

द्वाविमौ पुरुषव्याघ्र परप्रत्ययकारिणौ ।
स्त्रियः कामितकामिन्यः लोकः पूजितपूजितः ॥ ३०

த்வாவிமௌ புருஷவ்யாக்ர பரப்ரத்யயகாரிணௌ ।
ஸ்த்ரியः காமிதகாமின்யः லோகः பூஜித பூஜிதः ॥ 30

ஓ புருஷச்ரேஷ்டனே! இவ்வுலகில் இரண்டு பேர்கள் பிறர் செய்வதைப் பார்த்து தானும் செய்வார்கள். ஸ்திரீகள் பிறர் ஆசை கொண்ட வஸ்துவில் ஆசைப்படுவார்கள். ஸாமான்ய ஜனங்கள் பிறரால் கொண்டாடப்பட்டவர்களை தானும் கொண்டாடி பூஜிப்பார்கள்.

द्वाविमौ कण्टकौ तीक्ष्णौ शरीर परिशोषिणौ ।
यश्चाधनः कामयते यश्च कुप्यत्यनीश्वरः ॥ ३१

த்வாவிமௌः கண்டகௌ தீக்ஷ்ணௌ ஶரீர
பரிஶோஷிணௌ ।
யஶ்சாதனः காமயதே யஶ்ச க்ருத்யத்யனீஶ்வரः ॥ 31

பொருளற்றவன் தான் போகங்களை அனுபவிப்பதற்காக பல வஸ்துக்களை வாங்க விரும்புவதும் சக்தியற்றவன் கோபித்துக் கொள்வதும் இவ்விரண்டும் கூர்மையான முள் குத்தி துயரத்தை அளிப்பது போல் சரீரத்தை தபிக்கச் செய்துவிடும்.

द्वावेव न विराजेते विपरीतेन कर्मणा ।
गृहस्थश्च निरारम्भः कार्यवांश्चैव भिक्षुकः ॥ ३१

த்வாவேவ ந விராஜேதே விபரீதேந கர்மணு ।
க்ருஹஸ்தஶ்ச நிராரம்பः கார்யவாம்ஶ்சைவ பிக்ஷுகः ॥

குடும்பியானவன் முயற்சி இல்லாமலிருத்தலும் ஸன்யாஸியானவர் பல காரியங்களைச் செய்வதும், என்ற இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விபரீதமான காரியங்களால் இவ்விருவரும் பிரகாசிப்பதில்லை. (ஸன்யாஸி பிரணவஜபம் செய்துகொண்டு பகவத் தியானம் செய்ய வேண்டும். குடும்பியான கிரஹஸ்தன் தன் ஸ்வ தர்மத்தை அனுஷ்டித்துக் கொண்டு யதிகளையும் பூஜிக்க வேண்டும்.) இப்படி இல்லாமலிருப்பது மாறுதல் எனக் கூறப்பட்டுள்ளது.

द्वाविमौ पुरुषौ राजन् स्वर्गस्योपरि तिष्ठतः।
प्रभुश्च क्षमया युक्तः दरिद्रश्च प्रदानवान् ॥ ३३

த்வாவிமௌ புருஷௌ ராஜன் ஸ்வர்கஸ்யோபரி
திஷ்டத: ।
ப்ரபுஶ்ச க்ஷமயா யுக்த: தரித்ரஶ்ச ப்ரதானவான் ॥ 33

ஓ அரசனே, இந்த இரண்டு புருஷர்கள் ஸ்வர்கத்துக்கும் மேலாகிய பிரம்மலோகம் முதலியவைகளில் இருப்பவர்களாக ஆகிறுர்கள். அவர்களில் ஒருவர் பிரபுவாக இருந்து பொறுமையாக இருப்பவர். மற்றொருவர் தரித்திரனுக இருந்தும் நிரம்ப தானங்களைச் செய்பவர்.

न्यायागतस्य द्रव्यस्य बोद्धव्यौ द्वावतिक्रमौ।
अपात्रे प्रतिपत्तिश्च पात्रे चाप्रतिपादनम् ॥ ३४

ந்யாயாகதஸ்ய த்ரவ்யஸ்ய போத்தவ்யௌ
த்வாவதிக்ரமௌ ।
அபாத்ரே ப்ரதிபத்திஶ்ச பாத்ரே சாப்ரதிபாதனம் ॥ 34

நல்லவழியில் ஸம்பாதித்த பொருள் தன்னைவிட்டு விலகுவதற்கு இரண்டு காரணங்கள் என்பதை புத்திமான்கள் உணரவேண்டும். ஒன்று அயோக்யனுக்கு தானம் செய்வது மற்றொன்று நல்லவர்களுக்கு கொடாமலிருப்பது.

द्वावम्भसि निवेष्टव्यौ गले बद्ध्वा दृढां शिलाम्।
धनवन्तमदातारं दरिद्रं चातपस्विनम् ॥ ३५

த்வாவம்பஸி நிவேஷ்டவ்யௌ கலே பத்வா த்ருடாம்
ஶிலாம் ।
தனவந்தமதாதாரம் தரித்ரம் சாதபஸ்வினம் ॥ 35

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டு பேர்களை கழுத்தில் கடினமான கல்லைக்கட்டி ஜலத்தில் போடவேண்டும். ஒருவன் பணமிருந்தும் தானம் செய்யாமலிருப்பவன். மற்ரெருவன் தரித்திரனுய் இருந்து மந்திர ஜபங்களைச் செய்யாமலும் ஸ்தோத்திரம் முதலியவைகளைப் படிக்காமலும் இருப்பவன்.

द्वाविमौ पुरुषव्याघ्र सूर्यमण्डलभेदिनौ ।
परिव्राड्योगयुक्तश्च रणेचाभिमुखो हतः ॥ ३६

த்வாவிமௌ புருஷவ்யாக்ர ஸூர்யமண்டல பேதிநௌ
பரிவ்ராட்யோக யுக்தஶ்ச ரணேசாபிமுகோ ஹத: ॥ 36

ஓ புருஷச்ரேஷ்டனே, இந்த இரண்டு பேர்களும் சூரிய மண்டலத்தை தாண்டிக் கொண்டு செல்வார்கள். அதில் ஒருவர் தியானயோகத்துடன் கூடிய யதி, மற்ரெருவர் யுத்தத்தில் பின்புறம் காட்டாமல் எதிர்த்து யுத்தம் செய்து மரித்தவர்.

चत्वारि राज्ञा तु महाबलेन वर्ज्यान्याहुः पण्डितस्तानि विद्यात् ।
अल्पप्रज्ञैः सह मन्त्रं न कुर्यान्न दीर्घसूत्रै रलसैश्चारणैश्च ॥ ३७

சத்வாரி ராக்ஞாது மஹாபலேன
வர்ஜ்யான்யாஹு: பண்டிதஸ்தாநி வித்யாத்।
அல்ப ப்ரக்ஞை: ஸஹமந்த்ரம் ந குர்யான்
ந தீர்கஸூத்ரை ரலஸைஶ்சாரணைஶ்ச ॥ 37

அரசன் இந்த நான்கு காரியங்களை விட்டுவிட வேண்டும். அதை அறிவாளி என்னவென்று அறிய வேண்டும் அவைகளோவெனில் அல்ப புத்தியுள்ளவர்களுடனும், சீக்கிரமாகச் செய்ய வேண்டிய காரியத்தை தாமதித்துச் செய்கிறவனுடனும், சோம்பேறிகளுடனும், வேலை செய்யாமல் புகழ்ந்து பேச்சை மட்டும் பேசிக் கொண்டிருப்பவர்களுடனும் மந்திராலோசனை செய்யக்கூடாது.

चत्वारि ते तात गृहे वसन्तु श्रियाऽभिजुष्टस्य गृहस्थधर्मे ।
वृद्धो ज्ञातिरवसन्नः कुलीनः सखा दरिद्रो भगिनी चानपत्या ॥ ३८

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சத்வாரி தே தாத க்ருஹே வஸந்து
ஶ்ரியாऽபிஜுஷ்டஸ்ய க்ருஹஸ்த தர்மே ।
வ்ருத்தோ க்ஞாதிரவஸன்னः குலீநः
ஸகா தரித்ரோ பகினீ சானபத்யா ॥ 38

ஓ அரசனே, நிறம்ப பொருளுள்ள கிரஹஸ்த தர்மத்திலிருக்கும் உனது வீட்டில் இந்நான்கு பேர்களும் எப்பொழுதும் வஸிக்கட்டும். வயது முதிர்ந்த பங்காளியும், பந்துக்களில்லாத ஸத்குலத்தில் பிறந்தவனும் தரித்திரனுன ஸ்னேஹிதனும் குழந்தையில்லாத சகோதரியுமாவார்கள். (வயது முதிர்ந்த பங்காளி யாவருக்கும் குலதர்மங்களை உபதேசிப்பார். ஆதரவற்ற ஸத் குலத்தில் பிறந்தவன் குழந்தைகளுக்கு ஸதாசாரங்களை உபதேசிப்பான். தரித்ரனுன ஸ்னேஹிதன் நன்மையை உபதேசிப்பான். குழந்தை இல்லாத சகோதரி பொருளை பாதுகாப்பாள்.)

दैवतानां च संकल्पं मनुभावं च धीमताम् ।
विनयं कृतविद्यानां विनाशं पापकर्मिणाम् ॥ ३९

தேவதானும் ச ஸங்கல்பம் அனுபாவம் ச தீமதாம் ।
விநயம் க்ருதவித்யானும் விநாஶம் பாபகர்மிணும் ॥ 39

பிருஹஸ்பதியானவர் உடன் பலனை அளிக்கக் கூடிய நான்கு விஷயங்களை உபதேசித்தார். அவைகளை உமக்குக் கூறுகிறேன். ஓ அரசனே, கேளும். தேவதைகளுடைய எண்ணம், புத்திமான்களுடைய மஹிமை, நன்கு படித்தவர்களுடைய வணக்கம், பாபிகளுடைய கெட்ட செயல் இவைகள் உடன் பயன் அளிக்கும். (தேவர்களை நாம் பூஜித்ததும் அவர்கள் நமக்கு அனுக்ரஹிக்க வேண்டும் என்று நினைத்ததும் பயன் கிட்டிவிடும், புத்திமான்களான மஹான்களை ஸேவித்தால் அவர்களுடைய மஹிமை உடன் நமக்குப் பயனை அளித்துவிடும்.)

चत्वारि कर्माण्यभयङ्कराणि भयं प्रयच्छन्त्ययथाकृतानि
मानाग्निहोत्रमुत मानमौनं मानेनाधीतमुत मानयज्ञः ॥ ४०

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சத்வாரி கர்மாண்யபயங்கராணி
பயம் ப்ரயச்சந்த்ய யதாக்ருதாநி ।
மாநாக்நிஹோத்ரமுத மாநமௌனம்
மாநேநாதீதமுத மானயக்ஞ: ॥ 40

அக்னி ஹோத்ரம், மௌனம், அத்யயனம், யக்ஞம் இந்த நான்கு கர்மாக்களும் அபயத்தை அளிக்கக்கூடியன. அவைகள் வேறு விதமாக கௌரவத்திற்காகச் செய்யப்பட்டால் பயத்தை அளிக்கின்றன.

पञ्चाग्नयो मनुष्येण परिचर्याः प्रयत्नतः ।
पिता माताऽग्निरात्मा च गुरुश्च भरतर्षभ ॥ ४१

பஞ்சாக்னயோ மனுஷ்யேண பரிசர்யா: ப்ரயத்நத: ।
பிதா மாதாऽக்னிராத்மாச குருச்ச பரதர்ஷப ॥ 41

தந்தை, தாய், அக்னி, ஆத்மா, குரு, அக்னிக்கொப்பான இவ்வைந்து பேர்களையும் மனிதன் முயற்சியுடன் ஆராதிக்கவேண்டும்.

पञ्चैव पूजयंल्लोके यशः प्राप्नोति केवलम् ।
देवान्पितॄन्मनुष्यांश्च भिक्षूनतिथिपञ्चमान् । ४२

பஞ்சைவ பூஜயம் லோகே யஶ: ப்ராப்நோதி கேவலம் ।
தேவான் பித்ரூன் மனுஷ்யாம்ஶ்ச பிக்ஷூனதி
தி பஞ்சமான் ।। 42

உலகில் தேவர்கள், பித்ருக்கள், மனுஷ்யர்கள், யதிகள், அதிதிகள், ஆகிய இந்த ஐந்து வகையார்களையும் பூஜிப்பவன் இவ்வுலகில் மிகப் புகழை அடைவான்.

पञ्च त्वानुगमिष्यन्ति यत्र यत्र गमिष्यसि ।
मित्राण्यमित्रा मध्यस्था उपजीव्योपजीविनः ॥ ४३

பஞ்சத்வானுகமிஷ்யந்தி யத்ர யத்ர கமிஷ்யஸி।
மித்ராண்ய மித்ரா மத்யஸ்தா உபஜீவ்யோப ஜீவின: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஓ அரசனே, எங்கு தாங்கள் சென்ருலும் இவ்வைந்து பேர்களும் தங்களை துடர்ந்து இருக்கவேண்டும். ஸ்நேஹிதர் சத்ருக்கள், மத்யஸ்தர்கள் (நடுநிலைமை வஹிக்கிறவர்கள்). நாம் ஆச்ரயிக்கவேண்டிய பெரியோர்கள், நம்மை அண்டி பிழைப்பவர்கள், இவர்களாகும். (குறிப்பு) எதிர் கக்ஷிக் காரர்கள் அரசனிடமுள்ள தவறுகளை தைர்யமாக கூறுவார் கள். நடுநிலைமை வஹிக்கிறவர்கள் அவர்கள் சொன்ன தவறை திருத்திக்கொள் எனக் கூறுவார்கள்.

षड्दोषाः पुरुषेणेह हातव्या भूतिमिच्छता ।
निद्रा तन्द्रा भयं क्रोधः आलस्यं दीर्घसूत्रता ॥ ४४

ஷட்தோஷா: புருஷேணேஹ ஹாதவ்யாபூதி மிச்சதா।
நித்ரா தந்த்ரா பயம் க்ரோத: ஆலஸ்யம் தீர்க
ஸூத்ரதா॥ 44

ஸம்பத்தை விரும்புகின்ற மனிதன், அதிக நித்ரை, சோம்பல், பயம், கோபம், முயற்சி செய்யாமலிருப்பது, காரியத்தை தாமதமாகச் செய்வது என்ற இந்த ஆறு தோஷங்களையும் விட்டுவிட வேண்டும்.

षडिमान्पुरुषो जह्यात् भिन्नां नावमिवार्णवे ।
अप्रवक्तारमाचार्यं अनधीयानमृत्विजम् ॥
अरक्षितारं राजानं भार्यां चाप्रियवादिनीम् ।
ग्रामकामं च गोपालं वनकामं च नापितम् ॥ ४५

ஷடிமான் புருஷோஜஹ்யாத் பின்னும் நாவமி
வார்ணவே।
அப்ரவக்தாரமாசார்யம் அநதீயான ம்ருத்விஜம்॥
அரக்ஷிதாரம் ராஜாநம் பார்யாம்சாப்ரியவாதி நீம்।
க்ராம காமம் சகோபாலம் வனகாமம்ச நாபிதம்॥ 45

கல்வியை நன்கு சொல்லிக் கொடுக்காத ஆசார் யனையும், வேத மந்திரங்களை நன்கு ஆவ்ருத்தி செய்யாத ரித்விக்கையும், பாதுகாக்காத அரசனையும், அப்ரியமாகப் பேசும் மனைவியையும், பசுக்களை திடல்களில் மேயவிட்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தெருவில் வந்து திரியும் மாடு மேய்ப்பவனையும், தெருவில் சஞ்சரிக்காமல் காட்டிற்குச் செல்லும் க்ஷவரகனையும் மனிதன் உடைந்த தோணியை ஸமுத்ரத்தில் தள்ளுவது போல் விட்டுவிட வேண்டும்.

षडेव तु गुणाः पुंसा न हातव्याः कदाचन ।
सत्यं दानमनालस्यं अनसूया क्षमा धृतिः ॥ ४६

ஷடேவது குணா: பும்ஸா நஹாதவ்யா: கதாசன।
ஸத்யம் தானம நாலஸ்யம் அனஸூயா க்ஷமாத்ருதி:॥

மனிதன் ஸத்யம், தானம், சோம்பலின்மை; பொறாமை இல்லாமை, பொறுமை, தைர்யம், ஆகிய ஆறு குணங்களையும் ஒரு பொழுதும் விட்டுவிடக் கூடாது.

अर्थागमो नित्यमरोगिता च प्रिया च भार्या प्रियवादिता च ।
वश्यश्च पुत्रोऽर्थकरी च विद्या षड् जीवलोकस्य सुखानि राजन् ॥

அர்த்தாகமோ நித்யமரோகிதாச ப்ரியாச பார்யா
ப்ரிய வாதிதாச।
வஶ்யஶ்ச புத்ரோऽர்த்தகரீச வித்யா ஷட் ஜீவ
லோகஸ்ய ஸுகாநி ராஜன்॥ 47

ஓ அரசரே, தினமும் பொருளின் வரவு, நோயில்லாமல் இருத்தல், அன்பு கொண்ட மனைவி, பிரியமாகப் பேசுதல், தனக்கு அடங்கிய பிள்ளை, பொருளை அளிக்கும் கல்வி, இந்த ஆறும் இவ்வுலகிலுள்ள மனிதனுக்கு சுகத்தை அளிக்கும்.

षडिमानि विनश्यन्ति मुहूर्तमनवेक्षणात् ।
गावः सेवा कृषिर्भार्या विद्या वृषलसंगतिः ॥ ४८

ஷடிமாநி விநஶ்யந்தி முஹூர்த்தம நவேக்ஷணாத்।
காவ: ஸேவா க்ருஷிர் பார்யா வித்யா வ்ருஷல
ஸங்கதி:॥ 48

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பசுக்கள், ஊழியம், பயிர் செய்த பூமி, மனைவி, கல்வி, வேலைக்காரன் செய்யும் வேலை, இவைகளை ஒரு மணி நேரம் கவனிக்காவிடில் வீணாகிவிடும்.

षडेते ह्यवमन्यन्ते नित्यं पूर्वोपकारिणम् ।
आचार्यं शिक्षिताः शिष्याः कृतदाराश्च मातरम् ॥
नारीं विगतकामास्तु कृतार्थाश्च प्रयोजकम् ।
नावं निस्तीर्णकान्तारा आतुराश्च चिकित्सकम् ॥ ४९

ஷடே தேஹ்யவமந்யந்தே நித்யம் பூர்வோப காரிணம்।
ஆசார்யம் ஶிக்ஷிதாஶ்ஶிஷ்யா: க்ருததாராஶ்சமாதரம்।
நாரீம் விகதகாமாஸ்து, க்ருதார்த்தாஶ்சப்ரயோஜகம்।
நாவம்நிஸ்தீர்ணகாந்தாரா ஆதுராஶ்சசிகித்ஸகம்॥ 49

கல்விகற்று முடிந்தவர்கள் ஆசார்யனையும், மனைவியை மணந்துகொண்டவர்கள் தாயையும், காமம் நீங்கினவன் பெண்டீரையும், உதவியை அடைந்தவர்கள் உதவி செய்தவனையும், நதியைத் தாண்டி கரை சென்றவன் தோணியையும், வியாதி நீங்கினவன் வைத்யனையும், அவமதிப்பார்கள் (இந்த ஆறு பேர்களும் முன்பு உபகரித்தவர்களையும் மறந்துவிடுவார்கள் எனக் கருத்து.)

आरोग्यमानृण्यमविप्रवासः सद्भिर्मनुष्यैस्सह सम्प्रयोगः ।
स्वप्रत्ययावृत्तिरभीतवासः षड्जीवलोकस्य सुखानि राजन् ॥ ५०

ஆரோக்ய மாந்ருண்யமவிப்ரவாஸ:, ஸத்பிர்
மநுஷ்யை ஸ்ஸஹஸம்ப்ரயோக: ।
ஸ்வப்ரத்யயாவ்ருத்திரபீதவாஸ: ஷட்ஜீவலோ
கஸ்ய, ஸுகாநிராஜன் । 50

வியாதியின்மை, கடனில்லாமை வெளியூர்களுக்கு அடிக்கடி அலையாமலிருத்தல், ஸாதுக்களின் சேர்க்கை தன் புத்தி பலத்தினால் ஜீவித்தல், பயமில்லாமல் குடி இருத்தல். ஓஅரசனே இந்த ஆறும் மனித உலகத்திற்கு ஸுகத்தைத் தருகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अष्टौपूर्वे निमित्तानि नरस्यविनशिष्यतः ।
ब्राह्मणान् प्रथमं द्वेष्टि ब्राह्मणैश्च विरुध्यते ॥
ब्राह्मणस्वानिचादत्ते ब्राह्मणांश्च जिघांसति ।
रमतेनिन्दयाचैषां प्रशंसांनाभिनन्दति ॥
नैनान् स्मरति कृत्येषु याचितश्चाभ्यसूयति ।
एतान्दोषान्नरः प्राज्ञः बुद्धयेत् बुध्वा विसर्जयेत् ॥ ५१

அஷ்டௌ பூர்வ நிமித்தாநி, நரஸ்யவிநஸிஷ்யத: ।
பிராமணான் பிரதமம்த் வேஷ்டி பிராமணைஸ்ச
விருத்யதே ॥
பிராமண ஸ்வாநிசாதத்தே பிராமணாம்ஸ்ச ஜிகாம்ஸதி।
ரமதேநிந்தயாசைஷாம் ப்ரஸம்ஸாம் நாபிநந்ததி ।
நைனான்ஸ்மரதிக்ரு : த்யேஷுயாசிதஸ்சாப் யஸூயதி ।
ஏதான் தோஷான் நர : ப்ராக்ஜ : புத்யேத் புத்
வாவிஸர் ஜயேத் ॥ 51

மனிதன் நாசத்தை அடைவதற்கு முன்பு எட்டு குறிகள் ஏற்படும். முதலில் பிராமணர்களைத் துவேஷிப்பான், பிராமணர்களுடன் விரோதிப்பான். பிராமணர்களுடைய பொருள்களை அபகரிப்பான். பிராமணர்களைக் கொல்ல விரும்புவான், பிராமணர்களை பிறர் தூஷிப்பதைக் கண்டு சந்தோஷப்படுவான். இவர்களை புகழ்வதைக் கண்டு துக்கிப்பான். நல்ல காரியங்களில் இவர்களை அழைக்க மாட்டான். இவர்கள் யாசிப்பதைக் கண்டு அஸூயைப் படுவான். புத்தியுள்ள மனிதன் இவைகள் எட்டும் நாசத்தை அளிக்கும் தோஷங்களென உணர்ந்து அவைகளை விட்டுவிட வேண்டும்.

अष्टा विमानिहर्षस्य नवनीतानि भारत ।
वर्तमानानि दृश्यन्ते तान्येवस्वसुखान्यपि ॥
समागमश्चसखिभिः महांश्चैव धनागमः ।
पुत्रेण च परिष्वङ्गः सन्निपातश्चमैथुने ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

समये च प्रिया लापः स्वयूथ्येषु समुन्नतिः ।
अभिप्रेतार्थ लाभश्च पूजा च जनसंसदि ॥ ५२

அஷ்டாவிமாநிஹர் ஷஸ்ய நவநீதாநி பாரத।
வர்தமாநாநித்ருஶ்யந்தே தான்யே வஸ்வஸுகான்யபி।
ஸமாகமஶ்சஸகிபி: மஹாம்ஶ்சைவத நாகம:।
புத்ரேணசபரிஷ்வங்க: ஸன்னி பாதஶ்சஹைமதுநே॥
ஸமயேசப்ரியாலாப: ஸ்வயூத்யேஷுஸமுன்னதி:।
அபிப்ரேதார்த்த லாபச்ச பூஜாச ஜனஸம்ஸதி॥ 52

ஓ பரத சிரேஷ்டரே ஸ்நேஹிதர்களின் சேர்க்கை... நிரம்ப பொருள் வருதல், தன் குழந்தையின் ஆலிங்கனம் அன்புகொண்ட ஸ்திரீபுருஷர்களின் சேர்க்கை நல்ல சமயத்தில் பிரியமாக பேசுதல், தனது வகுப்பினருக்குள் தலைமையாக இருத்தல், கோரிய பொருளை அடைதல், பெரிய கூட்டத்தில் பூஜையைப்பெறுதல் இந்த எட்டும் சந்தோஷத்தை அளிப்பதற்கு வெண்ணெய் போன்றவைகள், அவைகளே தனக்கு சுகத்தை அளிக்கின்றவைகளாகவும் இருக்கின்றன.

अष्टौ गुणाः पुरुषं दीपयन्ति प्रज्ञा च कौल्यं च दमः श्रुतं च ।
पराक्रमश्चाऽबहुभाषिता च दानं यथाशक्ति कृतज्ञता च ॥ ५३

அஷ்டௌகுணா: புருஷம்தீ பயந்திப்ரக்ஞாச
கௌல்யஞ்சதம: ஶ்ருதஞ்ச।
பராக்ரமஶ்சாऽபஹுபாஷிதாச தானம்யதாஶக்தி
க்ருதக்ஞதா ச॥ 53

அறிவு நற்குலத்தில் பிறப்பு, அடக்கம், படிப்பு, பராக்ரமம், அதிகமாய் பேசாமலிருத்தல் தன் சக்திக்கு தக்க தானம் செய்தல் நன்றி மறவாமை இந்த எட்டு குணங்களும் மனிதனை பிரகாசப்படுத்துகின்றன.

प्राप्यापदं न व्यथते कदाचित् उद्योगमन्विच्छति चाप्रमत्तः ।
दुःखं च काले सहते महात्मा धुरन्धरस्तस्य जिताः सपत्नाः ॥ ५४

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ராப்யாபதம் நவ்யததே கதாசித் உத்யோகமந்
விச் சதி சாப்ரமத்த : ।
துக்கஞ்சகாலே ஸஹதே மஹாத்மா துரந்தர
ஸ்தஸ்யஜிதாஸ்ஸபத்நா : ॥ 54

ஆபத்தை அடைந்தும் ஒரு பொழுதும் மனதை துன் புறுத்திக் கொள்ளான், தவறிவிடாமல் முயற்சி செய்வான், துக்கம் நேரிட்ட காலத்தில் அதை ஸஹிப்பான். இப்படிப் பட்டவன்தான் மஹாத்மா. அவன் சத்ருக்களையெல்லாம் ஜெயித்துவிடுவான்.

अनर्थकं विप्रवासं गृहेभ्यः पापैस्सन्धिं परदाराभिमर्शम् ।
दम्भं स्तैन्यं पैशुनं मद्यपानं नसेवते यश्च सुखी सदैव ॥ ५५

அனர்த்தகம், விப்ரவாஸம் கிருஹேப்ய : பாபைஸ்
ஸந்திம்பரதாராபிமர்ஶம், ।
தம்பம் ஸ்தைன்யம், பைஶுனம் மத்யபானம்
நஸேவதே யஶ்சஸுகீஸதைவ ॥ 55

காரியமில்லாமல் வீட்டை விட்டு வெளிதேசம் செல் வதையும், பாபிகளின் சேர்க்கையையும், பிறர் மனைவியை தொடுவதையும், டம்பத்தையும், திருட்டையும், கோள் சொல்வதையும், கள் குடித்தலையும் எவன் விட்டுவிடுகிறானோ அவன் எப்பொழுதும் சுகியாக இருப்பான்.

नवैरमुद्दीपयति प्रशान्तं नदर्पमारोहति नास्तमेति ।
नदुर्गतोस्मीति करोत्यकार्यं तमार्यशीलं परमाहुरार्याः ॥ ५६

நவ்வர முத்தீபயதிப்ரஶாந்தம் நதர்ப மாரோஹதி
நாஸ்தமேதி ।
நதுர்கதோஸ்மீதிக ரோத்யகார்யம் தமார்ய
ஶீலம்பரமாஹுரார்யா : ॥ 56

கீழே போன சண்டையை மறுபடி பேசி வளர்ப்ப தில்லை; பொருள் முதலிய லாபங்கள் கிடைத்ததும் கர்வம் அடைவதில்லை; தானம் செய்யவேண்டுமே என

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கவலைகொண்டு தரித்ரனாக நடிப்பதில்லை, கஷ்டத்தை அடைந்து விட்டேனென தப்புக் காரியம் செய்வதில்லை, அப்படிப்பட்டவனை மஹான்கள் பெரியோர்களின் ஆசாரத்தைக் கைப்பிடித்த உத்தமனென கூறுகிறார்கள்.

न स्वे सुखे वै कुरुते प्रहर्षं नान्यस्य दुःखे भवति प्रहृष्टः ।
दत्त्वा न पश्चात्कुरुतेऽनुतापं स कथ्यते सत्पुरुषार्यशीलः ॥ ५७

நஸ்வேஸுகேவை. குருதே, ப்ரஹர்ஷம்,
நான்யஸ்ய, து : கே, பவதி, ப்ரஹ்ருஷ்ட : ।
தத்வா, ந, பஶ்சாத் குருதேநுதாபம், ஸகத்யதே.
ஸத்புருஷார்யஶீல :। 57

தனக்கு சுகமேற்பட்டபோது சந்தோஷமடையாதவனும், பிறருடைய துக்கத்தைக் கண்டு சந்தோஷமடையாதவனும், தானம் கொடுத்துவிட்டு, பின் வருத்தப்படாதவனுமான மனிதன் ஸத்புருஷனாகவும், புகழத்தக்க ஒழுக்கமுடையவனாகவும் சொல்லப்படுகிறான்.

दम्भं मोहं मत्सरं पापकृत्यं राजद्विष्टं पैशुनं पूगवैरम् ।
मत्तोन्मत्तैः दुर्जनैश्चापिवादं यः प्रज्ञावान् वर्जयेत्स प्रधानः ॥ ५८

தம்பம் மோஹம் மத்ஸரம் பாபக்ருத்யம்
ராஜத்விஷ்டம் பைஶுநம் பூகவைரம் ।
மத்தோன்மத்தை: துர்ஜனைஶ்சாபிவாதம்
ய: ப்ரக்ஞாவான் வர்ஜயேத்ஸப்ரதான: ॥ 58

டம்பத்தையும், மோஹத்தையும்,(அக்ஞானத்தையும்) பொறாமையையும், பாவச் செயலையும், அரசாங்கத்துடன் த்வேஷத்தையும், கோள் சொல்வதையும், ஜனக்கூட்டத்தை விரோதிப்பதையும், கள் முதலியவற்றால் மதங்கொண்டவர்களோடும், பித்தர்களோடும், கெட்டவர்களோடும், பேச்சைத் தள்ளுகிற பேரறிவாளனே சிறந்தவன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

यस्सर्वभूतप्रशमे निविष्टः सत्यो मृदुर्मानकृच्छुद्धभावः।
अतीव सञ्ज्ञायते ज्ञातिमध्ये महामणिर्जात्य इव प्रसन्नः॥ ५९

யஸ்ஸர்வபூதப்ரஶமே நிவிஷ்ட:
ஸத்யோம்ருதுர்மானக்ருச்சுத்தபாவ: ।
அதீவஸக் ஞாயதே க்ஞாதிமத்யே
மஹாமணிர் ஜாத்யஇவப்ரஸன்ன: । 59

எல்லோருடைய கஷ்டங்களேயும் போக்கி யாவரும் ஒற்றுமையாக இருக்கும்படி செய்கிறவனும் உண்மை பேசுகிறவனும், மிருதுஸ்வபாவமுள்ளவனும், (யாவரும் தன்னை அண்டும்படியான குணமுள்ளவனும்) பெரியோர்களை நன்கு பூஜிக்கிறவனும், சுத்தமான எண்ணமுள்ளவனுயும் இருப்பவன் நல்ல ஜாதிரத்தினம் போல் மனிதர்களுக்குள் தலைவனுக விளங்குவான்.

प्रदायैषामुचितं तात राज्यं सुखीपुत्रैः सहितो मोदमानः।
न देवानां नापि च मानुषाणां भविष्यसि त्वं गर्हणीयो नरेन्द्र॥ ६०

ப்ரதாயைஷாமுசிதம் தாதராஜ்யம்
ஸுகீபுத்ரை:ஸஹிதோ மோதமாந: ।
ந தேவாநாம் நாபிச மாநுஷாணும்
பவிஷ்யஸி த்வம் கர்ஹணீயோ நரேந்திர ॥ 60

ஓ அண்ணு, இந்த பாண்டவர்களுக்குச் சேர வேண்டிய இராஜ்யத்தைக் கொடுத்து புத்ரர்களுடன் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருப்பீர். அவ்வாறு செய்தால், தேவர்களுக்கோ, மனிதர்களுக்கோ நிந்திக்கத்தக்கவராக ஆகமாட்டீர்.

यः प्रमाणं न जानाति स्थाने वृद्धौ तथा क्षये।
कोशे जनपदे दण्डे न स राज्येऽवतिष्ठते॥ ६१

ய:பிரமாணம்நஜாநாதிஸ்தானேவிருத்தெள
ததாக்ஷயே ।
கோஶேஜநபதே தண்டேநஸராஜ்யேऽவதிஷ்டதே ॥ 61

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எவன் கோட்டை முதலான இருப்பிடத்திலும் பொருள் முதலியவைகளின் வளர்ச்சியிலும், அவைகளின் குறைவிலும் பொக்கிஷத்திலும், பட்டணத்திலும், சேனையிலும் அளவை அறியாதவனோ அவன் இராஜ்யத்தில் நிலைத்திருக்க முடியாது.

न राज्यं प्राप्तमित्येव वर्तितव्यमसाम्प्रतम् ।
श्रियं ह्यविनयो हन्ति जरा रूपमिवोत्तमम् ॥ ६२

நராஜ்யம்ப்ராப்தமித்யேவ வர்திதவ்யமஸாம்ப்ரதம் ।
ஶ்ரியம்ஹ்யவிநயோஹந்தி ஜராரூபமிவோத்தமம் ॥ 62

இராஜ்யம் கிடைத்துவிட்டதென கர்வம் கொண்டிருக்கக்கூடாது. கிழத்தனம் சிறந்த அழகை அழிப்பது போல் அஹங்காரமானது இராஜ்யத்தை அழித்துவிடும்.

यच्छक्यं ग्रसितुं ग्रस्यं ग्रस्तं परिणमेच्च यत् ।
हितं च परिणामे यत्तदाद्यं भूतिमिच्छता ॥ ६३

யச்சக்யம் கிரஸிதும்க்ரஸ்யம்க்ரஸ்தம் பரிணமேச்சயத்
ஹிதஞ்சபரிணாமேயத் ததாத்யம்பூதிமிச்சதா ॥ 63

எதைச் சாப்பிடமுடியுமோ, அதைச் சாப்பிட வேண்டும். ஆனால் சாப்பிட்ட பிறகு அது ஜெரிக்க வேண்டும். ஜெரித்தபிறகு அது நன்மையைச் செய்ய வேண்டும். க்ஷேமத்தைக் கோறுகிறவன் அப்படிப்பட்ட ஆகாரத்தைத்தான் உட்கொள்ள வேண்டும்.

यथा मधु समादत्ते रक्षन् पुष्पाणि षट्पदः ।
तद्वदर्थान्मनुष्येभ्यः आदद्यादविहिंसया ॥ ६४

யதாமது ஸமாதத்தே ரக்ஷன் புஷ்பாணி ஷட்பத: ।
தத்வதர்தான் மநுஷ்யேப்ய: ஆதத்யாதவிஹிம்ஸயா ॥

எவ்வாறு தேன் பூச்சியானது புஷ்பங்களுக்கு தீங்கு வராமல் தேனை எடுத்து வருகிறதோ, அதுபோல் அரசன் பிரஜைகளை ஹிம்ஸிக்காமல் வரியை வசூல் செய்யவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

पुष्पं पुष्पं विचिन्वीत मूलच्छेदं न कारयेत् ।
मालाकार इवारामे न यथाङ्गारकारकः । ६५

புஷ்பம் புஷ்பம்விசிங்வீத மூலச்சேதம் நகாரயேத் ।
மாலாகார இவாராமே ந யதாங்காரகாரக: ॥ 65

பூத்தோட்டத்தில் மாலை கட்டுகிறவன், மரங்களிலுள்ள புஷ்பங்களை எடுப்பானே அல்லாமல் கரி சுடுகிறவன் மரத்தை அடியோடு வெட்டுவதுபோல் வெட்டுவதில்லை. (அதுபோல் மனிதர்களை அடியோடு கஷ்டப்படுத்தி வரி வாங்காமல் சிறிது சிறிதாக வரி வாங்கவேண்டும்.)

किन्नु मे स्यादिदं कृत्वा किन्नु मे स्यादकुर्वतः ।
इतिकर्माणि सञ्चिन्त्य कुर्याद्वा पुरुषो न वा ॥ ६६

கிந்நுமேஸ்யாதிதம்க்ருத்வா கின்னுமேஸ்யாதகுர்வத: ।
இதிகர்மாணிஸஞ்சிந்த்ய குர்யாத்வா புருஷோ நவா ॥

மனிதன் இதைச் செய்தால் என்ன உண்டாகும், இதைச் செய்யாவிடில் என்ன ஏற்படும் என்பதை நன்கு ஆலோசித்து காரியங்களைச் செய்யவேண்டும். அல்லது செய்யாமலிருக்க வேண்டும்.

प्रसादो निष्फलो यस्य क्रोधश्चापि निरर्थकः ।
न तं भर्तारमिच्छन्ति षण्ढं पतिमिव स्त्रियः ॥ ६७

ப்ரஸாதோநிஷ்பலோயஸ்ய க்ரோதஸ்சாபிநிரர்தக: ।
நதம் பர்தாரமிச்சந்தி ஷண்டம் பதிமிவ ஸ்த்ரிய: । 67

எவனுடைய சந்தோஷம், கோபம், இரண்டும் பயனில்லாமலிருக்கிறதோ, அவனை பிரஜைகள் நபும்ஸகனை பெண்கள் விரும்பாதது போல் விரும்பமாட்டார்கள்.

कांश्चिदर्थान्नरः प्राज्ञः लघुमूलान्महाफलान् ।
क्षिप्रमारभते कर्तुं न विघ्नयति तादृशान् ॥ ६८

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காம்ஶ்சிதர்தான் நர:ப்ராக்ஞ:
லகுமூலான் மஹாபலான் ।
க்ஷிப்ரமாரபதே கர்தும் நவிக்னயதி தாத்ருஶான் ॥

புத்திமானுன மனிதன் சிறு முயற்சியால் பெரிய பயன்களை அளிக்கும் காரியங்களை சீக்கிரம் ஆரம்பிப்பான். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய தாமதிப்பதில்லை.

ऋजु पश्यति यः सर्वं चक्षुषा नु पिबन्निव ।
आसीनमपि तूष्णीकं अनुरज्यन्ति तं प्रजाः ॥ ६९

ருஜு பஶ்யதியஸ்ஸர்வம் சக்ஷுஷாநுபிபன்னிவ ।
ஆஸீனமபி தூஷ்ணீகம் அநுரஜ்யந்தி தம் ப்ரஜா: ॥

மனதில் தோஷமில்லாமல் ருஜுவாக யாவற்றையும் கண்ணால் பார்க்கும் அரசன் சும்மா இருந்தபோதிலும், பிரஜைகள் அவனை விரும்புவார்கள்.

यस्मात् त्रस्यन्ति भूतानि मृगव्याधान्मृगा इव ।
सागरान्तामपि महीं लब्ध्वा स परिहीयते ॥ ७०

யஸ்மாத்த்ரஸ்யந்திபூதாநி மிருகவ்யாதான்ம்ருகாஇவ ।
ஸாகராந்தாமபிமஹீம் லப்த்வா ஸ பரிஹீயதே ॥ 70

மிருகங்களைக் கொல்லும் வேடர்களைக் கண்டு மிருகங்கள் பயப்படுவதுபோல் எவனைக் கண்டு பிரஜைகள் பயப்படுகின்றனரோ ; அப்படிப்பட்டவன் ஸமுத்திரங்களுக்குள் பட்ட பூமி முழுவதையும் ஆண்ட போதிலும் பதவியைவிட்டு நழுவிவிடுவான்.

धर्ममाचरतो राज्ञः सद्भिश्चरितमादितः ।
वसुधा वसुसम्पूर्णा वर्धते भूतिवर्धनी ॥ ७१

தர்மமாசரதோராக்ஞ: ஸத்பிஸ்சரிதமாதித: ।
வஸுதா வஸுஸம்பூர்ணா வர்ததே பூதிவர்தனீ ॥ 71

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதற்கு முன்புள்ள ஸாதுக்களான அரசர்கள் செய்து வந்த தர்மத்தை விடாமல் செய்யும் அரசனுடைய பூமியானது, ஸுவர்ணம் நிரம்பி மேன்மேலும் ஸம்பத்துக்களை விருத்தி செய்வதாக ஆகிறது.

धर्मेणराज्यं विन्देत धर्मेण परिपालयेत् ।
धर्ममूलां श्रियं प्राप्य नजहाति नहीयते ॥ ७२

தர்மேணராஜ்யம் விந்தேத தர்மேண பரிபாலயேத் ।
தர்மமூலாம் ஶ்ரியம் ப்ராப்ய நஜஹாதி நஹீயதே ॥ 72

தர்ம வழியாகத்தான் இராஜ்யத்தைப் பெறவேண்டும், தர்மம் வழுவாமல் இராஜ்யத்தை பரிபாலிக்க வேண்டும். நியாயமான வழியில் வரி வாங்கவேண்டும். அப்படிப்பட்ட அரசனிடமிருந்து இராஜ்யம் வழுவாது. குறைவையும் அடையமாட்டான்.

अप्युन्मत्तात्प्रलपतः बालाच्च परिजल्पतः ।
सर्वतस्सारमादद्यात् अश्मभ्य इव काञ्चनम् ॥ ७३

அப்யுன்மத்தாத்ப்ரலபதஃ பாலாச்ச பரிஜல்பதஃ ।
ஸர்வதஸ்ஸாரமாதத்யாத் அஶ்மப்யஇவ காஞ்சனம் ।

பயித்தியக்காரன் புலம்புகின்ற சொற்களிலிருந்தும், மாறி மாறிப் பேசுகின்ற குழந்தைகளின் சொற்களிலிருந்தும் மற்றும் எல்லா இடங்களிலிருந்தும் ஸாரத்தைக் கற்களிலிருந்து தங்கத்தை எடுப்பதுபோல் எடுக்கவேண்டும்.

गन्धेन गावः पश्यन्ति वेदैः पश्यन्ति ब्राह्मणाः ।
चारैः पश्यन्ति राजानः चक्षुर्भ्यामितरेजनाः ॥ ७४

கந்தேன காவஃ பஶ்யந்தி வேதைஃ பஶ்யந்தி ப்ராம்மணஃ ।
சாரைஃ பஶ்யந்தி ராஜாநஃ சக்ஷுர்ப்யாமிதரே ஜநாஃ ॥

வஸ்துக்களை பசுக்கள் வாசனையால் அறிகின்றன (பார்க்கின்றன), பிராமணர்கள் வேதங்களால் இவ்வுலகம் அவ்வுலகம் யாவற்றையும் பார்க்கின்றனர், அரசர்கள் கண்ணுக்குத் தெரியாத பொருள்களை சாரர்களால் பார்க்கின்றனர், மற்ற மனிதர்கள் கண்களால் பொருள்களை பார்க்கின்றனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

पर्जन्यनाथाः पशवः राजानो मन्त्रिबान्धवाः ।
पतयो बान्धवाः स्त्रीणां ब्राह्मणा वेदबान्धवाः ॥ ७५

பர்ஜன்யநாதா: பஶவ: ராஜானோ மந்த்ரிபாந்தவா: ।
பதயோ பாந்தவா: ஸ்திரீணாம் பிராம்மணா
வேதபாந்தவா: ॥ 75

பசுக்கள் மழையை நாதனாக உடையவைகள், அரசர்கள் மந்திரிகளை பந்துக்களாக கொண்டவர்கள், ஸ்திரீகளுக்கு கணவர்கள் தான் பந்துக்கள், பிராமணர்கள் வேதங்களையே பந்துக்களாக உடையவர்கள்.

सत्येन रक्ष्यते धर्मः विद्या योगेन रक्ष्यते ।
मृजया रक्ष्यते रूपं कुलं वृत्तेन रक्ष्यते ॥ ७६

ஸத்யேநரக்ஷ்யதே தர்ம: வித்யா யோகேந ரக்ஷ்யதே ।
ம்ருஜயா ரக்ஷ்யதே ரூபம் குலம் வ்ருத்தேந ரக்ஷ்யதே ॥

தர்மம் ஸத்யத்தால் காக்கப்படுகிறது, கல்வி, அப்யாஸத்தால் (திரும்ப திரும்ப படிப்பதால்) ரக்ஷிக்கப்படுகிறது, அழகு சுத்தம் செய்வதால் (அழுக்கைப் போக்குவதால்) ரக்ஷிக்கப்படுகிறது, குலம் நன்னடத்தையால் காக்கப்படுகிறது.

मानेन रक्ष्यते धान्यं अश्वान् रक्षत्यनुक्रमः ।
अभीक्ष्णदर्शनं गाश्च स्त्रियो रक्ष्याः कुचेलतः ॥ ७७

மானேநரக்ஷ்யதேதான்யம் அஶ்வான்ரக்ஷ்யத்யநுக்ரம: ।
அபீக்ஷ்ணதர்சனம் காஶ்ச ஸ்திரியோ
ரக்ஷ்யா: குசேலத: ॥ 77

அளவினால் நெல் முதலிய தான்யங்களை பாதுகாக்க வேண்டும். குதிரைகளை தேய்ப்பது, நடத்திச் செல்வது முதலியவற்றால் காக்கவேண்டும். அடிக்கடி பார்ப்பதால் பசுக்களை ரக்ஷிக்கவேண்டும். ஸ்திரீகளை மட்டமான வஸ்திரங்களைக் கொடுக்காமல் நல்ல வஸ்திரங்களைக் கொடுத்து பாதுகாக்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

न कुलं वृत्तहीनस्य प्रमाणमिति मे मतिः ।
अन्तेष्वपि हि जातानां वृत्तमेव विशिष्यते ॥ ७८

நகுலம்வ்ருத்தஹீநஸ்ய ப்ரமாணமிதிமேமதி: ।
அந்தேஷ்வபிஹிஜாதாநாம் விருத்தமேவவிஶிஷ்யதே ॥

நல்ல நடத்தை இல்லாதவனது குலம் நல்லதாக இருந்தபோதிலும் அது சிறப்பைத் தராதென என் கருத்து, கீழ்ப்பட்ட வகுப்பில் பிறந்தவனாய் இருந்தபோதிலும் அவனது நல்ல நடத்தையே அவனுக்கு சிறப்பை அளிக்கும்.

य ईर्षुः परवित्तेषु रूपे वीर्ये कुलान्वये ।
सुख सौभाग्य सत्कारे तस्य व्याधिरनन्तकः ॥ ७९

ய ஈர்ஷு: பரவித்தேஷு ரூபே வீர்யே குலாந்வயே ।
ஸுகஸௌபாக்யஸத்காரே தஸ்யவ்யாதிரநந்தக: ॥ 79

முடிவில்லாத பல வியாதிகள் ஓர் மனிதனுக்கு ஏற்படுவதற்குக் காரணத்தைக் கூறுகிறார். அதாவது பிறருடைய பொருள்களையும், அழகையும், வீர்யத்தையும், சிறந்த பாக்யங்களையும் பூஜையையும் கண்டு பொருமைப்படுகிறவனுக்கு முடிவில்லாத பல வியாதிகள் ஏற்படும் எனக் கருத்து.

विद्यामदो धनमदः तृतीयोऽभिजनो मदः ।
मदा एते ऽवलिप्तानां एत एव सतां दमाः ॥ ८०

வித்யாமதோதநமத: த்ருதீயோபிஜநோமத: ।
மதாஏதே ऽவலிப்தாநாம் ஏதஏவஸதாம்தமா: ॥ 80

வித்யையால் ஏற்படும் மதம் (கொழுப்பு) தனத்தினுல் ஏற்படும் மதம், நற்குலப் பிறப்பினுல் ஏற்படும் மதம், இம் மூன்றும் ஸாதுக்களுக்கு மதத்திற்கு எதிரிடையான தமமாய் (அடக்கமாய்) ஆகின்றன.

असन्तोऽभ्यर्थिताऽस्माद्भिः कश्चित्कार्यं कदाचन ।
तावन्नतस्य सुकृतं किंचित्कार्यं कदाचन ॥ ८१

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஸந்தோப்யர்திதாஸ்ஸத்பி: க்வசித்கார்யேகதாசந।
தாவந்நதஸ்ய ஸுக்ருதம் கிஞ்சித்கார்யம் கதாசந । 81

அஸத்துக்களை ஸாதுக்கள் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென எப்பொழுதாவது வேண்டினர்களே யானுல், சிறிது கூட அந்தக் காரியத்தைச் செய்யாமல் அவர்கள் தன்னை வேண்டிய மாத்திரத்தில் (அஸத்துக்கள்) தன்னை ஸத்தாக நினைத்துக்கொண்டு விடுகின்றனர்.

गतिरात्मवतां सन्तः सन्त एव सतां गतिः ।
असतां च गतिस्सन्तः न त्वसन्तः सतां गतिः ॥ ८२

கதிராத்மவதாம்ஸந்த: ஸந்தஏவ ஸதாம் கதி:।
அஸதாஞ்ச கதிஸ்ஸந்த: நத்வஸந்த: ஸதாம்கதி: ||

பிராணிகள் யாவருக்கும் ஸத்துக்களே கதி, ஸாதுக்களுக்கு ஸாதுக்களே கதி, அஸத்துக்களுக்கும் ஸாதுக்கள் தான் கதி, ஒரு போதும் அஸத்துக்கள் ஸாதுக்களுக்கு கதியல்ல.

सभाजिता वस्त्रवता मिष्टाशा गोमता जिता ।
अध्वा जितो यानवता सर्वं शीलवता जितम् ॥ ८३

ஸபாஜிதா வஸ்த்ரவதா மிஷ்டாஶா கோமதா ஜிதா
அத்வா ஜிதோ யாநவதா ஸர்வம் ஶீலவதா ஜிதம் ||

நல்ல வஸ்திரம் தரித்தவன் சபையை ஜெயித்து விடுவான். (முன்பின் தெரியாதவர்கள்கூட நல்ல வஸ்திரம் தரித்தவனை சபையோர்கள் கௌரவிப்பார்கள் எனக் கருத்து.) நல்ல ஆகாரத்தை விரும்புகிறவன் பசுக்கள் உள்ளவனுய் இருந்தால் அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டுவிடுவான். நல்ல வாஹனமுள்ளவன் வழியை ஜெயித்துவிடலாம் (வெகுதூரத்துக்கு அப்பால் செல்ல வேண்டுமானுலும் உடன் சென்றுவிடலாம்) நல்ல நடத்தை உள்ளவன் எல்லா உலகங்களையும் ஜெயித்துவிடலாம்.

शीलं प्रधानं पुरुषे तद्यस्येह प्रणश्यति ।
न तस्य जीवितेनार्थो न धनेन न बन्धुभिः ॥ ८४

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஶீலம் ப்ரதானம் புருஷே தத்யஸ்யேஹ ப்ரணஶ்யதி ।
நதஸ்ய ஜீவிதேநார்த: நதனேந நபந்துபி: ॥ 84

மனிதனுக்கு நல்ல நடத்தையும், நல்ல எண்ணமும் தான் முக்யமானது. அவைகள் எவனிடம் இல்லையோ, அவனுக்கு உயிரினாலும் பணத்தினாலும், பந்துக்களாலும் ஒரு பயனுமில்லை.

सम्पन्नतरमेवान्नं दरिद्रा भुञ्जते सदा ।
क्षुत्स्वादुतां जनयति साचाढ्येषु सुदुर्लभा ॥ ८५

ஸம்பன்னதரமேவான்னம் தரித்ரா புஞ்சதே ஸதா ।
க்ஷுத்ஸ்வாதுதாம் ஜநயதி ஸாசாட்யேஷு
ஸுதுர்லபா ॥ 85

நிரம்ப உணவுகளை தரித்ரர்கள் எப்பொழுதும் நன்கு சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு எப்பொழுதும் பசி இருக்கிறது. அந்தப் பசியானது, எந்த உணவிலும் ருசியை உண்டுபண்ணுகிறது. அம்மாதிரியான பசியோ, ருசியோ, பணக்காரர்களிடம் மிகவும் துர்லபம்.

प्रायेण श्रीमतां लोके भोक्तुं शक्तिर्नविद्यते ।
जीर्यन्त्यपिहि काष्ठानि दरिद्राणां महीपते ॥ ८६

ப்ராயேண ஶ்ரீமதாம் லோகே போக்தும்
ஶக்திர்நவித்யதே ।
ஜீர்யந்த்யபிஹி காஷ்டாநி தரித்ராணாம் மஹீபதே ॥ 86

பெரும்பாலும் பணக்காரர்களுக்கு சாப்பிடுவதற்கு சக்தி இருப்பதில்லை, தரித்ரர்களுக்கு மரக்கட்டைகளை சாப்பிட்டாலும் ஜெரித்துவிடும்.

अवृत्तिर्भयमन्त्यानां मध्यानां मरणाद्भयम् ।
उत्तमानांतु मर्त्यानां अवमानात्परं भयम् ॥ ८७

அவ்ருத்திர்பயமந்த்யாநாம் மத்யாநாம் மரணாத்பயம் ।
உத்தமாநாந்து மர்த்தியாநாம் அவமாநாத் பரம் பயம் ॥

 Sri Vedachalam Sastri Collection, Karaikudi

 CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கீழ்ப்பட்ட மனிதர்களுக்கு பிழைப்பில்லாமையால் பயமும், நடுத்தர மனிதர்களுக்கு மரணத்தினுல் பயமும், மேலான மனிதர்களுக்கு அவமானத்தினுல் மிக பயமும் ஏற்படும்.

धर्मार्थौ यः परित्यज्य स्यादिन्द्रियवशानुगः।
श्रीप्राण धनदारेभ्यः क्षिप्रं स परिहीयते ॥ ८८

தர்மார்த்தெளயः பரித்யஜ்ய ஸ்யாதிந்திரியவஶாநுகः
ஶ்ரீப்ராணதனதாரேப்யः க்ஷிப்ரம் ஸ பரிஹீயதே । 88

தர்மம் அர்த்தம் இவைகளை விட்டுவிட்டு எவன் இந்திரியங்களுக்கு வசமாக இருக்கிருனே அவன் சீக்கிரத்தில் லக்ஷ்மி, உயிர், பொருள், மனைவி இவைகளிலிருந்து நழுவி விடுவான்.

असन्त्यागात्पापकृतामपापान् तुल्यो दण्डः स्पृशते मिश्रभावात्।
शुष्केणार्द्रं दह्यते मिश्रभावात् तस्मात्पापैस्सह संधिं न कुर्यात् ॥ ८९

அஸந்த்யாகாத்பாபக்ருதாமபாபான்
துல்யோதண்டःஸ்ப்ருஶதே மிஶ்ரபாவாத் ।
ஶுஷ்கேணார்த்ரம்தஹ்யதே மிஶ்ரபாவாத்
தஸ்மாத்பாபைஸ்ஸஹஸந்திம்நகுர்யாத் ॥ 89

தப்பு செய்தவர்களுடன் நல்லவர்கள் சேருவதால், இவர்களையும் அவர்கள் செய்த குற்றம் வந்து அடைந்து விடும். எவ்வாறு பச்சைக் கட்டைகள் காய்ந்த கட்டைகளுடன் சேர்ந்தால் அதுவும் எரிந்து விடுமோ அது போலாகும்.

अनसूयार्जवं शौचं सन्तोषः प्रियवादिता।
दमस्सत्यमनायासः न भवन्ति दुरात्मनाम् ॥ ९०

அநஸூயார்ஜவம் ஶெளசம் ஸந்தோஷःப்ரியவாதிதா ।
தமஸ்ஸத்யமநாயாஸः ந பவந்தி துராத்மனும் ॥ 90

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஸூயை இல்லாமை, ருஜுவாக இருத்தல், பரிசுத்தம், சந்தோஷம் இனிமையான சொல் இந்திரியஜயம் ஸத்யம், சிரமப்படாமல் காரியம் செய்தல் இவைகளெல்லாம் அயோக்யர்களிடம் காணமுடியாது.

आत्मज्ञानमनायासः तितिक्षा धर्मनित्यता ।
वाक्चैव गुप्ता दानंच नैतान्यन्त्येषु भारत ॥ ९१

ஆத்மக்ஞானமநாயாஸ: திதிக்ஷா தர்மநித்யதா ।
வாக்சைவ குப்தா தானஞ்ச நைதான்யந்த்யேஷு
பாரத ॥ 91

உள்ளத்திலுள்ள ஸ்ரீபகவானை அறிதல், துயரத்தைக் கொடுக்காத காரியத்தை செய்தல், கஷ்டங்களை ஸஹித்தல், நித்யம் தர்மத்தை அநுஷ்டித்தல், அடக்கமாகப் பேசுதல், அடக்கமாக தானம் செய்தல் இந்த குணங்கள் மட்டமான மனிதர்களிடம் இருப்பதில்லை.

हिंसा बलमसाधूनां राज्ञां दण्डविधिर्बलम् ।
शुश्रूषा तु बलं स्त्रीणां क्षमा गुणवतां बलम् ॥ ९२

ஹிம்ஸாபலமஸாதூநாம் ராக்ஞாம்தண்டவிதிர்பலம் ।
ஶுஶ்ருஷாது பலம்ஸ்த்ரீணாம் க்ஷமாகுணவதாம்பலம் ॥

அயோக்யர்களுக்கு பிறரை ஹிம்ஸிப்பதே பலம், அரசர்களுக்கு தண்டிப்பதே பலம், ஸ்திரீகளுக்கு கணவனுக்குச் செய்யும் பணிவிடையே பலம், குணசாலிகளுக்கு பொறுமையே பலம்.

वाक्संयमो हि नृपते सुदुष्करतमो मतः ।
अर्थवच्च विचित्रंच नशक्यं बहुभाषितुम् ॥ ९३

வாக்ஸம்யமோ ஹி ந்ருபதே ஸுதுஷ்கரதமோ மத: ।
அர்த்தவச்ச விசித்ரஞ்ச ந ஶக்யம் பஹுபாஷிதும் ॥

ஓ அரசனே, வாக்கை அடக்குவது மிகவும் கடினமான காரியம், ஆச்சரியமாயும் நல்ல கருத்துள்ளதாயுமுள்ள பேச்சுகளை நிரம்பப் பேசுவது மிகக் கடினம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अभ्यावहति कल्याणं विविधं वाक्सुभाषिता ।
सैव दुर्भाषिता राजन् अनर्थायोपपद्यते ॥ १४

அப்யாவஹதிகல்யாணம் விவிதம் வாக்ஸுபாஷிதா ।
ஸைவ துர்பாஷிதா ராஜன் அனர்த்தாயோபபத்யதே ॥

பலவிதமான அழகான சொற்களைப் பேசினால், அந்தச் சொல்லானது கேழ்ப்பவர்களுக்கும் சொல்லுகிறவர்களுக்கும் மங்களத்தை நிரம்ப அளிக்கும். ஓ அரசனே, கெட்ட பொருளுடன் கூடிய அந்த சொல்லோவெனில் பெரும் துயரங்களை அளிப்பதற்குக் காரணமாகிவிடும்.

रोहते सायकैर्विद्धं वनं परशुना हतम् ।
वाचा दुरुक्तं बीभत्सं न संरोहति वाक्क्षतम् ॥ १५

ரோஹதே ஸாயகைர்வித்தம் வநம் பரஶுநாஹதம்
வாசா துருக்தம் பீபத்ஸம் ந ஸம்ரோஹதி வாக்க்ஷதம்॥

அம்பினால் அடிபட்ட புண் ஆறிவிடும். கோடாலியால் வெட்டப்பட்ட மரம் துளிர்த்துவிடும். கெட்ட சொற்களினால் மனதில் ஏற்பட்ட புண்ணானது ஆறவே ஆறாது.

कर्णिनालीकनाराचान् निर्हरन्ति शरीरतः ।
वाक्शल्यस्तु ननिर्हर्तुं शक्योहृदिशयो हि सः ॥ १६

கர்ணி நாளீக நாராசான் நிர்ஹரந்தி ஶரீரதः ।
வாக்ஶல்யஸ்து நநிர்ஹர்தும் ஶக்யோ
ஹ்ருதிஶயோஹிஸः ॥ 96

கர்ணி, நாளீகம், நாராசம் என்னும் பலவித அம்புகள் சரீரத்தில் போடப்பட்டால் அதை பிடுங்கி எடுத்து விடலாம். கெட்ட சொல்லாகிற அம்பைப் போட்டால் அதை உள்ளத்திலிருந்து எடுக்கமுடியாது. அங்கேயே தங்கிவிடும்.

यस्मै देवाः प्रयच्छन्ति पुरुषाय पराभवम् ।
बुद्धिं तस्यापकर्षन्ति सोऽवाचीनानि पश्यति ॥ १७

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யஸ்மை தேவா: ப்ரயச்சந்தி புருஷாய பராபவம் ।
புத்திம் தஸ்யாபகர்ஷந்தி ஸோவாசீநாநி பஸ்யதி ॥ 97

எவனுக்கு அவமானத்தை அளிக்க வேண்டுமென தேவர்கள் நினைக்கின்றனரோ, அவனது, நல்ல அறிவைக் கெடுத்துவிடுகின்றனர். அதனால் அந்த மனிதன் தப்பான காரியங்களைச் செய்ய விரும்புகிறான்.

सर्वतीर्थेषु वा स्नानं सर्वभूतेषु चार्जवम् ।
उभे त्वेते समे स्यातां आर्जवं वा विशिष्यते ॥ ९८

ஸர்வதீர்த்தேஷுவாஸ்நாநம் ஸர்வபூதேஷுசார்ஜவம் ।
உபே த்வேதே ஸமே ஸ்யாதாம் ஆர்ஜவம் வா
விஶிஷ்யதே ॥ 98

உலகத்திலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள் யாவற்றிலும் ஸ்நானம் செய்வதும், எல்லா பிராணிகளிடத்திலும் ருஜுவாய் (நேர்மையாய்) இருத்தலும் ஸமமாகும். அல்லது ருஜுவாக இருத்தல் அதிகமாகவும் ஆகலாம்.

आर्जवं प्रतिपद्यस्व पुत्रेषु सततं विभो ।
इह कीर्तिम् परां प्राप्य प्रेत्य स्वर्गमवाप्स्यसि ॥ ९९

ஆர்ஜவம் ப்ரதிபத்யஸ்வ புத்ரேஷு ஸததம் விபோ ।
இஹ கீர்திம் பராம் ப்ராப்ய ப்ரேத்ய
ஸ்வர்கமவாப்ஸ்யஸி ॥ 99

ஓ அரசனே, உமது புத்ரர்களான பாண்டவர்களிடத்தில் நேர்மையாக நடந்துகொள்ளும். அதனால் இவ்வுலகில் சிறந்த கீர்த்தியை அடைந்து பின்பு புண்ய லோகங்களையும் அடைவீர்.

यावत्कीर्तिर्मनुष्यस्य पुण्या लोके प्रगीयते ।
तावत्स पुरुषव्याघ्र स्वर्गे लोके महीयते ॥ १००

யாவத்கீர்திர்மநுஷ்யஸ்ய புண்யா லோகே ப்ரகீயதே ।
தாவத் ஸ புருஷவ்யாக்ர ஸ்வர்கே லோகே மஹீயதே ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஓ புருஷச்ரேஷ்டனே, எந்த மனிதன் செய்த புண்ய கார்யத்தினால் ஏற்பட்ட புகழ் இவ்வுலகில் விளங்குகிறதோ, அவ்வளவு காலம் அந்த தர்மம் செய்த மனிதன் புண்ய லோகங்களில் விளங்குவான். (ஆதலால்தான் புண்ய புருஷர்கள் சத்திரம், கோவில், வேத பாடசாலை, தண்ணீர் பந்தல், குளம், ஸன்யாசிகள் தங்கும் மடம், சுமைதாங்கி, பசுக்கள் உராய்ந்துகொள்ளும் கல் நாட்டுவது, படித்துறை கள் கட்டுவது, முதலிய தர்மங்களைச் செய்து வைக்கின்றனர். அதை பின்பும் பராமரிக்க பொருள்களை வைத்து தான் பரலோகம் சென்றாலும், அந்த தர்மங்கள் நீடித்து நடக்கும் படி செய்து, தன் புகழ் இவ்வுலகில் எப்பொழுதும் இருக்கும் படி செய்வார்கள்)

यां रात्रिमधिविन्ना स्त्री यां चैवाक्षपराजितः ।
यांच भाराभितप्तांगः दुर्विवक्तातु तां वसेत् ॥ १०१

யாம் ராத்ரிமதிவின்னா ஸ்த்ரீ யாம் சைவாக்ஷபராஜித: ।
யாஞ்சபாரா பிதப்தாங்க: துர்விவக்தாதுதாம் வஸேத் ॥

பொய்யாகத் தீர்ப்புக் கூறியவனும், பொய்யாகச் சாக்ஷி சொன்னவனும் மேலே கூறப்படும் மூன்று துக்கங்களையும் அடைவான் என்பதை ஓர் கதை மூலம் விதுரர் கூறுகிறார். மனைவி இருக்கும்போது மற்றொரு மனைவியை மணந்து கொண்டு வந்த தன் கணவனைக் கண்ட முந்திய மனைவி இரவு முழுவதும் எவ்விதம் கண்ணீர் விட்டுத் துயரத்தை அடைவாளோ மேலும் சூதாட்டத்தில் சொத்து முழுவதையும் வைத்துத் தோல்வி அடைந்தவன் அந்த இரவு முழுவதும் எந்த துக்கத்தை அடைவானோ பெரிய சுமையைச் சுமந்து வெய்யலில் வெகுதூரம் நடந்து வந்தவன் அந்த இரவு முழுவதும் உடம்பு வலியினால் எவ்வாறு துக்கப்படுவானோ அவ்வாறு பொய்ச் சாக்ஷி கூறியவனும் மாறாகத் தீர்ப்புக் கூறியவனும் ஆயுளுள்ளவரை கஷ்டத்தை அனுபவிப்பான்.

तस्माद्राजेन्द्र भूम्यर्थे नानृतं वक्तुमर्हसि ।
मा गमः ससुतामात्यः नाशंपुत्रार्थमब्रुवन् ॥ १०२

தஸ்மாத்ராஜேந்த்ர பூம்யர்த்தே நாந்ருதம்வக்து மர்ஹஸி ।
மாகம: ஸஸுதாமாத்ய: நாசம் புத்ரார்த்தமப்ருவன் ॥

Vedantham Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஓ ராஜ சிரேஷ்டனே, பூமி முழுவதையும் அடைவதற்காக நீ பொய் சொல்லுவது சரியல்ல. பிள்ளைகளிடத்தில் இருக்குமன்பினுல் ஸத்யம் பேசாமல் பிள்ளைகள் மந்திரிகள் இவர்களுடன் நீர் அழிந்து போகக்கூடாது.

यथा यथाहिपुरुषः कल्याणे कुरुते मनः ।
तथा तथाऽस्यसर्वार्थाः सिध्यन्ते नात्रसंशयः ॥ १०३

யதா யதாஹிபுருஷ:கல்யாணே குருதேமந: ।
ததா ததாஸ்ய ஸர்வார்த்தா:ஸித்யந்தே
நாத்ரஸம்ஶய: ॥ 103

ஒரு மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல காரியத்தில் மனதைச் செலுத்துகிருனே அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு எல்லாப் பொருள்களும் கைகூடும்.

नैनं छन्दांसि वृजिनात्तारयन्ति मायाविनं मायया वर्तमानम् ।
नीडं शकुन्ता इव जातपक्षाः छन्दांस्येनं प्रजहत्यन्तकाले ॥ १०४

நைநம் சந்தாம்ஸி வ்ருஜிநாத் தாரயந்தி
மாயாவிநம் மாயயா வர்த்தமானம் ।
நீடம்ஶகுந்தா இவ ஜாதபக்ஷா:
சந்தாம்ஸ்யேநம்ப்ரஜஹத்யந்தகாலே॥ 04

வேதம் கற்றவன் ஆசாரமில்லாமல் கபடமாய் வெளி வேஷத்துடன் இருப்பானேயாகில், மரண காலத்தில் அந்த வேதங்களோவெனில் குயில் குஞ்சுகள் தன் தாய்களால் காக்கையின் கூடுகளில் வைக்கப்பட்டிருந்த போதிலும் இறக்கை முளைத்ததும் காக்கையின் கூடுகளை விட்டுப் போவதுபோல் ஆசாரமில்லாதவனை விட்டு வெளியில் சென்று விடும்.

मद्यपानं कलहं पूगवैरं भार्यापत्योरन्तरं ज्ञातिभेदम् ।
राजद्विष्टं स्त्रीपुंसयोर्विवादं वर्ज्यान्याहुः यश्च पन्थाः प्रदुष्टः ॥ १०५

மத்யபாநம் கலஹம் பூகவைரம்
பார்யாபத்யோரந்தரம் க்ஞாதிபேதம் ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராஜத்விஷ்டம் ஸ்திரீபும்ஸயோர்விவாதம்
வர்ஜ்யான்யாஹு: யஶ்சபந்தா:ப்ரதுஷ்ட:

கள் குடித்தல், சண்டையிடுதல், பெரும் கூட்டத்தை எதிர்த்தல், கணவன் மனைவி இருவர்களையும் பிரித்தல், பங்காளிகளுக்குள் மனஸ்தாபத்தைச் செய்தல், அரசனை விரோதித்தல், ஸ்திரீ புருஷர்கள் கலகம் செய்தல், கெட்ட மார்கத்தில் செல்லுதல் இவைகளை விட்டுவிட வேண்டுமென பெரியோர்கள் கூறுகின்றனர்.

सामुद्रिकं वणिजं चोरपूर्वं शलाकधूर्तं च चिकित्सकं च ।
अरिंच मित्रंच कुशीलवंच नैतान्साक्ष्येत्वधिकुर्वीत सप्त ॥ १०६

ஸாமுத்ரிகம்வணிஜம் சோரபூர்வம்
ஶலாகதூர்த்தஞ்ச சிகித்ஸகஞ்ச ।
அரிஞ்ச மித்ரஞ்ச குஶீலவஞ்ச
நைதான்ஸாக்ஷயே த்வதிகுர்வீதஸப்த ॥

ரேகை பார்த்துச் சொல்லுகிறவனையும் முன்பு திருடனாக இருந்து பின்பு வியாபாரம் செய்கிறவனையும், யோகி வேஷம் பூண்டு கயிறு கம்பி வைத்துக்கொண்டு குறி சொல்லுகிறவனையும் வைத்யனையும் சத்ருவையும், நண்பனையும் பாடுகின்றவனையும் ஆக இந்த ஏழு பேர்களையும் ஸாக்ஷியாகவோ, மத்யஸ்தர்களாகவோ வைக்கக்கூடாது.

मानाग्निहोत्रमुतमानमौनं मानेनाधीतमुतमानयज्ञः ।
एतानि चत्वार्यभयङ्कराणि भयं प्रयच्छन्त्ययथाकृतानि ॥ १०७

மாநாக்நிஹோத்ரமுதமாநமௌநம்
மாநேநாதீதமுதமாநயக்ஞ: ।
ஏதாநி சத்வார்யபயங்கராணி
பயம் ப்ரயச்சந்த்ய யதாக்ருதாநி । 107

பிறர் தன்னை பூஜிப்பதற்காக செய்யும் அக்னி ஹோத்ரமும் பிறர் கொண்டாடுவதற்காக வைத்துக்கொண்ட மௌனமும், பிறர் தன்னை பூஜிப்பதற்காக கற்ற வேதமும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாவரும் தன்னைப் பெரியவன் எனச் சொல்லுவதற்காக செய்யும் தியாகமும் தப்பான எண்ணத்தினுல் மாறுபாடாகச் செய்யப்பட்டால் அவைகள் பயத்தை அளிக்கின்றன. இவைகளையே ஈச்வரார்பண புத்தியோடு செய்தால் பயத்தைப் போக்கிவிடும்.

अगारदाहीगरदः कुण्डाशी सोमविक्रयी ।
पर्वकारश्च सूचीच मित्रध्रुक्पारदारिकः ।
भ्रूणहा गुरुतल्पीच यश्चस्यात्पानपो द्विजः ।
अतितीक्ष्णश्च काकश्च नास्तिको वेदनिन्दकः ।
स्रुवप्रग्रहणो व्रात्यः कीनाशश्चात्मवानपि ।
रक्षेत्युक्तश्च यो हिंस्यात् सर्वे ब्रह्महभिस्समाः ॥ १०८

அகாரதாஹீகரத:குண்டாஶீஸோமவிக்ரயீ ।
பர்வகாரஶ்ச ஸூசீச மித்ரத்ருக்பாரதாரிக: ।
ப்ரூணஹா குருதல்பீச யஶ்சஸ்யாத் பாநபோ த்விஜ: ।
அதிதீக்ஷ்ணஶ்ச காகஶ்ச நாஸ்திகோ வேதநிந்தக: ।
ஸ்ருவப்ரக்ரஹணோ வ்ராத்ய:கீநாஶஶ்சாத்மவாநபி ।
ரக்ஷேத்யுக்தஶ்ச யோ ஹிம்ஸ்யாத் ஸர்வே
ப்ரம்மஹபி:ஸமா: ॥ 108

யத்ர வ்யதேயுரபி தேவா: ஸஶக்ரா: ।
புத்ரைர் வைரம் நித்யமுத்விக்னவாஸ:
யஶ: ப்ரணஶோ த்விஷதஶ்ச ஹர்ஷ: ॥ 206

ஓ இந்திரனுக்கு ஒப்பானவரே, பாண்டவர்களுடன் விரோதத்தை அடைவதால் ஏற்படும் தோஷத்தை யோசித்துப்பாரும். இவர்களுடைய விரோதம் இந்திராதி தேவர்களுக்கு துயரத்தை அளிக்கும். உமது புத்ரர்களால் உண்டுபண்ணப்பட்ட இந்த பகையானது, பயத்துடன் எப்பொழுதும் வசிப்பதையும், புகழுக்கு நாசத்தையும், சத்ருக்களுக்கு சந்தோஷத்தையும் அளித்து, பீஷ்மருக்கும் தங்களுக்கும் துரோணருக்கும் தர்ம புத்ரருக்கும், கோபத்தைக் கொடுத்து ஆகாயத்தில் காணப்படும் வால் நக்ஷத்திரம் போல் உலகத்தை அழித்துவிடும்.

तव पुत्रशतं चैव कर्णः पञ्च च पाण्डवाः ।
पृथिवीमनुशासेयुरखिलां सागराम्बराम् ॥ २०७

தவ புத்ரஶதம் சைவ கர்ண: பஞ்ச ச பாண்டவா:
ப்ருதிவீமனுஶாஸேயுரகிலாம் ஸாகராம்பராம் ॥ 207

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உங்கள் நூறுபுத்ரர்கள் கர்ணன் பாண்டவர்கள் ஆகிய இவர்கள் ஒன்று சேர்ந்தால் சமுத்திரத்தை ஆடையாக உடைய இந்த பூமி முழுவதும் ஆளுவார்கள்.

धार्तराष्ट्रा वनं राजन् व्याघ्राः पाण्डुसुता मताः ।
मा वनं छिन्धि सव्याघ्रं मा व्याघ्रा नीनशन्वनात् ॥ २०८

தார்தராஷ்ட்ரா வநம் ராஜன் வ்யாக்ரா:
பாண்டுஸூதா மதா: ।
மா வநம் சிந்தி ஸவ்யாக்ரம் மா வ்யாக்ரா
நீநஶன்வநாத் ।। 208

ஓ அரசனே, துரியோதனுதிகள் காடு, பாண்டவர்கள் புலிகள். புலியுடன் கூடிய காட்டை அழிக்காதே. காடில்லாமல் புலிகளும் நாசமடைய வேண்டாம்.

न स्याद्वनमृते व्याघ्रान् व्याघ्रा न स्युर्ऋते वनम् ।
वनं हि रक्ष्यते व्याघ्रैः व्याघ्रान् रक्षति काननम् ॥ २०९

ந ஸ்யாத் வநம்ருதே வ்யாக்ரான் வ்யாக்ரா ந
ஸ்யுர்ருதே வநம் ।
வநம் ஹி ரக்ஷ்யதே வ்யாக்ரை: வ்யாக்ரான்
ரக்ஷதி காநநம் । 209

புலி இல்லாமல் காடு இருக்க முடியாது. (அதாவது புலிகள் இல்லாவிடில் யாவரும் இரவிலும் சென்று மரங்களை வெட்டி காட்டை அழித்துவிடுவார்கள் எனக் கருத்து). காடில்லாமல் புலிகளும் இருக்கமுடியாது. புலிகளால் காடு காக்கப்படுகிறது. காட்டினுல் புலிகள் காக்கப்படுகின்றன.

न तथेच्छन्ति कल्याणान् परेषां वेदितुं गुणान् ।
यथैषां ज्ञातुमिच्छन्ति नैर्गुण्यं पापचेतसः ॥ २१०

ந ததேச்சந்தி கல்யாணுன் பரேஷாம் வேதிதும்
குணுன் ।
யதைஷாம் க்ஞாதுமிச்சந்தி நைர்குண்யம்
பாபசேதஸ: ।। 210

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாபிகள் பிறருடைய கெட்ட குணங்களை அறிவதில் எவ்வளவு விருப்பம் கொள்ளுகிருர்களோ, அவ்வளவு நல்ல குணங்களை அறிவதில் விருப்பம் கொள்ளுவதில்லை.

अर्थसिद्धिं परामिच्छन् धर्ममेवादितश्चरेत् ।
न हि धर्मादपैत्यर्थः स्वर्गलोकादिवामृतम् ॥ २११

அர்த்தஸித்திம் பராமிச்சன் தர்மமேவாதிதஸ்சரேத் ।
ந ஹி தர்மாதபைத்யர்த்தঃ ஸ்வர்க
லோகாதிவாம்ருதம் ॥ 211

பெரிய காரிய சித்தியை விரும்புகிறவன் ஆதிமுதல் தர்மத்தை கடைப்பிடிக்கவேண்டும். ஸ்வர்கத்திலிருந்து அமிருதம் விலகாததுபோல் தர்மத்திலிருந்து அர்த்த ஸித்தி விலகுவதில்லை.

यस्यात्मा विरतः पापात् कल्याणे च निवेशितः ।
तेन सर्वमिदं बुद्धं प्रकृतिर्विकृतिश्च या ॥ २१२

யஸ்யாத்மா விரதঃ பாபாத் கல்யாணே ச நிவேஶிதঃ ।
தேந ஸர்வமிதம் புத்தம் ப்ரக்ருதிர் விக்ருதிஸ்ச யா ॥

எவனுடைய மனம் பாபச் செயலிலிருந்து விலகி நல்ல காரியத்தில் ஈடுபடுகிறதோ அவனுல் நன்மைக்கு காரணமும் அதன் பயனுன சுகங்கள் யாவும் அறியப்பட்டதாக ஆகிறது. (அல்லது இவ்வுலகம் யாவையும் அறிந்தவனுக ஆகிருன் எனவும் கருத்து கொள்ளலாம்)

यो धर्ममर्थं कामं च यथाकालं निषेवते ।
धर्मार्थकामसंयोगं सोऽमुत्रेह च विन्दति ॥ २१३

யோ தர்மமர்த்தம் காமம் ச யதாகாலம் நிஷேவதே ।
தர்மார்த்தகாமஸம்யோகம் ஸோமுத்ரேஹ ச
விந்ததி ॥ 213

எவன் தர்மம், அர்த்தம், காமம் இவைகளை அந்தந்த காலத்தில் செய்கிருனே, அவன் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அவைகளின் பயனை நிரம்ப அடைகிருன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

सन्नियच्छति यो वेगं उत्थितं क्रोधहर्षयोः ।
स श्रियो भाजनं राजन् यश्चापत्सु न मुह्यति ॥ २१४

ஸந்நியச்சதி யோ வேகம் உத்திதம் க்ரோதஹர்ஷயோ:
ஸ ச்ரியோ பாஜனம் ராஜன் யச்சாபத்ஸு ந
முஹ்யதி ॥ 214

எவன் கோபம் சந்தோஷம் இவைகளின் வேகத்தை அடக்குகிறானோ எவனது மனம் ஆபத்துக்களில் கலக்கத்தை அடையவில்லையோ அவன் ஸம்பத்துக்கு இருப்பிடமாக ஆகிறான்.

महते योऽपकाराय नरस्य प्रभवेन्नरः ।
तेन वैरं समासज्य दूरस्थोऽस्मीति नाश्वसेत् ॥ २१५

மஹதே யோऽபகாராய நரஸ்ய ப்ரபவேந்நர:
தேந வைரம் ஸமாஸஜ்ய தூரஸ்தோऽஸ்மீதி
நாச்வஸேத் ॥ 215

பெரும் தீங்கைச் செய்ய வல்லமை உள்ளவனுடன் விரோதத்தை அடைந்து நாம் வெகுதூரத்தில் இருக்கிறோம் என்று நம்பி இருக்கக்கூடாது.

स्त्रीषु राजसु सर्पेषु स्वाध्यायप्रभुशत्रुषु ।
भोगेष्वायुषि विश्वासं कः प्राज्ञः कर्तुमर्हति ॥ २१६

ஸ்த்ரீஷு ராஜஸு ஸர்பேஷு ஸ்வாத்யாயப்ரபு
சத்ருஷு ।
போகேஷ்வாயுஷி விச்வாஸம் க: ப்ராக்ஞ:
கர்துமர்ஹதி ॥ 216

ஸ்திரீகளிடத்திலும் அரசர்களிடத்திலும் பாம்புகளிடத்திலும் தான் கற்ற வேதத்திலும், பணக்காரர்களிடத்திலும் சத்ருக்களிடத்திலும் போகங்களிலும் ஆயுஸ்ஸிலும் எந்த புத்திமான் விசுவாசம் வைக்கமுடியும்? (அடிக்கடி இவைகளை கவனித்து அறிய வேண்டுமெனக் கருத்து.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

प्रज्ञाशरेणाभिहितस्य जन्तोः चिकित्सकाः सन्ति न चौषधानि ।
न होममन्त्रा न च मङ्गलानि नाथर्वणा नाप्यगदाः सुसिद्धाः ॥ २१७

ப்ரக்ஞாஶரேணுபிஹிதஸ்ய ஜந்தோ:
சிகித்ஸகா: ஸந்தி ந சௌஷதாநி ।
ந ஹோமமந்த்ரா ந ச மங்களாநி
நாதர்வணு நாப்யகதா: ஸுஸித்தா: ॥ 217

சத்ருக்களுடைய புத்தியாகிற பாணத்தால் அடிபட்டவனுக்கு வைத்யர்களுமில்லை, மருந்துகளுமில்லை. ஹோமங்களோ மந்திரங்களோ இல்லை. நன்மையைச் செய்யும் காரியங்களுமில்லை. அதர்வண வேதங்களில் கூறிய ஆபிசார மந்திரங்களுமில்லை. மிக்களித்தியுள்ள ரஸகுளிகையுமில்லை.

सर्पश्चाग्निश्च सिंहश्च कुलपुत्रश्च भारत ।
नावज्ञेया मनुष्येण सर्वे ह्येतेऽतितेजसः ॥ २१८

ஸர்பஶ்சாக்நிஶ்ச ஸிம்ஹஶ்ச குலபுத்ரஶ்ச பாரத ।
நாவக்ஞேயா மனுஷ்யேண ஸர்வே ஹ்யே-
தேऽதிதேஜஸ: ॥ 218

ஓ பாரதரே, ஸர்பமும் அக்னியும் ஸிம்ஹமும் தன் குலத்தில் பிறந்த புத்ரனும் மனிதனுல் அவமதிக்கத் தகுந்தவர்களல்ல. இவர்கள் யாவரும் மிகுந்த தேஜஸ்ஸுள்ளவர்கள்.

लताधर्मा त्वं सपुत्रः शालाः पाण्डुसुता मताः ।
न लता वर्धते जातु महाद्रुममनाश्रिता ॥ २१९

லதாதர்மா த்வம் ஸபுத்ர: ஶாலா: பாண்டுஸுதா மதா: ।
ந லதா வர்த்ததே ஜாது மஹாத்ருமமநாஶ்ரிதா ॥ 219

பிள்ளைகளுடன் கூடிய நீர் கொடிக்கு சமமானவர். பாண்டுவின் புத்ரர்கள் சால (தேக்கு) மரங்களுக்கு ஒப்பானவர்கள். பெரிய மரத்தை அண்டாத கொடி ஒரு பொழுதும் விருத்தியாவதில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ऊर्ध्वं प्राणा ह्युत्क्रामन्ति यूनः स्थविर आयति ।
प्रत्युत्थानाभिवादाभ्यां पुनस्तान्प्रतिपद्यते ॥ २२०

ஊர்த்வம் ப்ராணு ஹ்யுத்க்ராமந்தி யூநஃ
ஸ்தவிர ஆயதி ।
ப்ரத்யுத்தாநாபிவாதாப்யாம் புனஸ்தான்ப்ரதிபத்யதே ॥

வயது முதிர்ந்தவர் வரும்போது யௌவனமுடைய மனிதனின் பிராணன் வெளிப்புறப்படுகின்றன. அவன் எதிர் கொள்வது நமஸ்காரம் செய்வது இவற்ருல் அந்த பிராணனை திரும்ப அடைகிருன்.

पीठं दत्त्वा साधवेऽभ्यागताय आनीयापः परिनिर्णिज्य पादौ ।
सुखं पृष्ट्वा प्रतिवेद्यात्मसंस्थां ततो दद्यादन्नमवेक्ष्य धीरः ॥ २२१

பீடம் தத்வா ஸாதவேऽப்யாகதாய
ஆநீயாபஃ பரிநிர்ணிஜ்ய பா³தௌ ।
ஸுகம் ப்ருஷ்ட்வா ப்ரதிவேத்யாத்மஸம்ஸ்தாம்
ததோ தத்யாதந்நம்வேக்ஷ்ய தீரஃ ॥ 221

தீரனுன மனிதன் தன் வீடு வந்த ஸாதுவுக்கு ஆஸனம் கொடுத்து ஜலத்தால் பாதங்களை அலம்பி ஸுகம் விசாரித்து தன் நிலையை அறிவித்து பின்பு சிரத்தையுடன் அன்னமளிக்க வேண்டும்.

यस्योदकं मधुपर्कं च गां च न मन्त्रवित् प्रतिगृह्णाति गेहे ।
लोभाद्भयादथ कार्पण्यतो वा तस्यानर्थं जीवितमाहुरार्याः ॥ २२२

யஸ்யோதகம் மதுபர்கம் ச காம் ச
ந மந்த்ரவித் ப்ரதிக்ருஹ்ணுதி கேஹே ।
லோபாத்பயாதத கார்பண்யதோ வா
தஸ்யாநர்த்தம் ஜீவிதமாஹுரார்யாஃ ॥ 222

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எவனுடைய வீட்டில் வேதம் அறிந்த அந்தணன் அவனுடைய லோபத்தினாலோ அவனிடமுள்ள பயத்தினாலோ அவனது கிருபணத் தன்மையினாலோ பாத்ய ஜலத்தையும் மதுபர்கத்தையும் பசுவையும் பெற்றுக் கொள்ளவில்லையோ அந்த வீட்டுக்காரனுடைய உயிர் வாழ்க்கையைப் பயனற்றதாக பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

अविक्रेयं लवणं पक्वमन्नं दधि क्षीरं मधु तैलं घृतं च ।
तिला मांसं फलमूलानि शाकं रक्तं वासः सर्वगन्धा गुडाश्च ॥ २२३

அவிக்ரேயம் லவணம் பக்வமன்னம்
ததி க்ஷீரம் மது தைலம் க்ருதம் ச ।
திலா மாம்ஸம் பலமூலானி ஶாகம்
ரக்தம் வாஸः ஸர்வகந்தா குடாஶ்ச ॥ 223

உப்பு, பக்வமான அன்னம், தயிர், பால், தேன், எண்ணெய், நெய், எள்ளு, மாம்ஸம், பழங்கள், கிழங்குகள், கீரை, சிகப்பு வஸ்திரம், நல்ல வாசனைப் பொருள்கள், வெல்லம் இவைகளை விற்கக்கூடாது. (இவைகள் நிரம்ப இருந்தால் இவைகள் இல்லாதவர்களுக்கு இனமாக கொடுக்கவேண்டுமென்றும் அதனால் நிரம்ப தர்மம் கிடைக்குமென்றும் கருத்து.)

अरोषणो यः समलोष्टाश्मकाञ्चनः प्रहीणशोको गतसन्धिविग्रहः ।
निन्दाप्रशंसोपरतः प्रियाप्रिये त्यजन्नुदासीनवदेष भिक्षुकः ॥ २२४

அரோஷணோ யः ஸமலோஷ்டாஶ்மகாஞ்சநः
ப்ரஹீணஶோகோ கதஸந்திவிக்ரஹः ।
நிந்தாப்ரஶம்ஸோபரதः ப்ரியாப்ரியே
த்யஜன் நுதாஸீநவதேஷ பிக்ஷுகः ॥ 224

சிறந்த சன்யாசி யார் என்பதைக் கூறுகிறார் — எவன் கோபமற்றவனோ, ஓட்டாஞ்சல்லி கருங்கல் பொன் இவைகளை சமமாக நினைப்பவனும், நிந்தை புகழ் இவற்றில் ஒழிவடைந்தவனும், விருப்பு வெறுப்புக்களை விட்டவனும் உதாஸீனன் போன்றவனுமாக இருக்கிறானோ அவன்தான் சிறந்த பிக்ஷு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

नीवारमूलेङ्गुदशाकवृत्तिः सुसंयतात्माऽग्निकार्येषु चोद्यः ।
वने वसन्नतिथिष्वप्रमत्तो धुरंधरः पुण्यकृदेष तापसः ॥ २२५

நீவாரமூலேங்குதஶாகவ்ருத்தி :
ஸுஸம்யதாத்மாऽக்னிகார்யேஷு சோத்ய: ||
வநே வஸன்நதிதிஷ்வப்ரமத்தோ
துரந்தர: புண்யக்ருதேஷ தாபஸ: || 225

வனத்தில் வசித்துக்கொண்டு தினை, கிழங்கு இங்குத விருக்ஷத்தின் காய் கீரை இவைகளால் ஜீவிப்பவனும் மனதை அடக்கினவனும் அக்னி கார்யங்களில் ஸாவதானமாக நடப்பவனும் அதிதிகளை பூஜிப்பதில் தவருதவனும் காரிய பாரத்தை வஹிக்கிறவனும் புண்யத்தைச் செய்கின்றவனும் ஆன இவனே தபஸ்வியாவான்.

अपकृत्य बुद्धिमतो दूरस्थोऽस्मीति नाश्वसेत् ।
दीर्घौ बुद्धिमतो बाहू याभ्यां हिंसति हिंसितः ॥ २२६

அபக்ருத்ய புத்திமதோ தூரஸ்தோऽஸ்மீதி
நாஶ்வஸேத் ।
தீர்க்கௌ புத்திமதோ பாஹூ யாப்யாம் ஹிம்ஸதி
ஹிம்ஸித: || || 226

புத்திமானுக்கு அபகாரத்தை செய்துவிட்டு தூரத்தில் இருக்கிறேனென ஸமாதானத்தை அடையக்கூடாது. புத்திமானுடைய கைகள் நீண்டவைகள். அவனை துன்புறுத்தினல் துன்புறுத்தினவனை அக்கைகளால் துன்புறுத்தி விடுவான்.

अनीर्षुर्गुप्तदारश्च संविभागी प्रियंवदः ।
श्लक्ष्णो मधुरवाक् स्त्रीणां न चासां वशगो भवेत् ॥ २२७

அநீர்ஷுர்குப்ததாரஶ்ச ஸம்விபாகீ ப்ரியம் வத: ।
ஶ்லக்ஷ்ணோ மதுரவாக் ஸ்த்ரீணாம் ந சாஸாம்
வஶகோ பவேத் || 227

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொருமை இல்லாதவனும் மனைவியைக் காக்கிறவனும் வரும்படி பிரித்துக் கொடுக்கிறவனும் பிரியத்தைச் சொல்லு கிறவனும் ம்ருதுவான ஸ்வபாவமுள்ளவனும் ஸ்திரீகளிடத் தில் இனிமையாகப் பேசுகிறவனுகவும், இருக்கவேண்டும். ஆனுல் ஸ்திரீகளுக்கு வசமாக ஆகிவிடக் கூடாது.

पूजनीया महाभागाः पुण्याश्च गृहदीप्तयः ।
स्त्रियः श्रियो गृहस्योक्ताः तस्माद्रक्ष्या विशेषतः ॥ २२८

பூஜநீயா மஹாபாகா: புண்யாஶ்ச க்ருஹதீப்தய: ।
ஸ்த்ரிய: ஶ்ரியோ க்ருஹஸ்யோக்தா: தஸ்மாத்
ரக்ஷ்யா விஶேஷத: ॥ 228

பூஜிக்கத்தக்கவர்களும் மஹாபாக்யமுள்ளவர்களும் பரிசுத்தர்களும் வீட்டை விளங்கச் செய்கிறவர்களுமான ஸ்திரீகள், வீட்டிற்கு லக்ஷ்மிகளாக சொல்லப்படுகிருர்கள் ஆகையால் அவர்கள் நன்கு காக்கப்படத்தகுந்தவர்கள்.

पितुरन्तःपुरं दद्यान्मातुर्दद्यान् महानसम् ।
गोषु चात्मसमं दद्यात्स्वयमेव कृषिं व्रजेत् ॥
भृत्यैर्वाणिज्यचारं च पुत्रैः सेवेत च द्विजान् । २२९

பிதுரந்த:புரம் தத்யான் மாதுர் தத்யான் மஹானஸம் ।
கோஷு சாத்மஸமம் தத்யாத் ஸ்வயமேவ க்ருஷிம்
வ்ரஜேத் ॥
ப்ருத்யைர் வாணிஜ்யசாரம் ச புத்ரை: ஸேவேத ச
த்விஜான் ॥ 229

தகப்பனுக்கு அந்தப்புரத்தின் மேல்பார்வையை அளிக்கவேண்டும். தாய்க்கு சமயற்கட்டின் மேல்பார்வையை அளிக்கவேண்டும். பசுக்களிடத்தில் தனக்கு சமமாயுள்ள கூடப்பிறந்தவர்கள் முதலியவர்களை மேல்பார்வைக்கு வைக்கவேண்டும். தானே வயல்களைப் பார்க்கச் செல்ல வேண்டும். வேலைக்காரர்களை வியாபாரத்தை கவனிக்க ஏவ வேண்டும் புத்திரர்களை பிராமணர்களுக்கு பணிவிடை செய்யும்படி ஏவ வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

नित्यं सन्तः कुले जाताः पावकोपमतेजसः ।
क्षमावन्तो निराकाराः काष्ठेऽग्निरिव शेरते ॥ २३०

நித்யம் ஸந்த: குலே ஜாதா: பாவகோபமதேஜஸ: ।
க்ஷமாவந்தோ நிராகாரா: காஷ்டேऽக்னிரிவ ஶேரதே ॥

அக்னிக்கு ஒப்பான தேஜஸ்ஸை உடையவர்களும் நற்குலத்தில் பிறந்தவர்களுமான ஸாதுக்கள் பொறுமையுடன் கூடியவர்களாகவும் உள்ளே இருக்கும் தேஜஸ்ஸை வெளிக்காட்டாதவர்களாகவும் கட்டைக்குள் அக்னி இருப்பது போல் இருக்கின்றனர்.

यस्य मन्त्रं न जानन्ति बाह्याश्चाभ्यन्तराश्च ये ।
स राजा सर्वतश्चक्षुः चिरमैश्वर्यमश्नुते ॥ २३१

யஸ்ய மந்த்ரம் ந ஜாநந்தி பாஹ்யாஶ்சாப்யந்தராஶ்ச யே
ஸ ராஜா ஸர்வதஶ்சக்ஷு: சிரமைஶ்வர்யமஶ்நுதே ॥

எந்த அரசனுடைய ஆலோசனையை, அவனைச் சேர்ந்தவர்களும் வெளியில் உள்ளவர்களும் அறியவில்லையோ எந்த அரசன் எங்கும் சாரர்களாகிய கண்களை உடையவனாய் இருக்கிறானோ அந்த அரசன் நீண்டகாலம் ஐச்வர்யத்தை அனுபவிப்பான்.

करिष्यन्न प्रभाषेत कृतान्येव तु दर्शयेत् ।
धर्मकामार्थकार्याणि तथा मन्त्रो न भिद्यते ॥ २३२

கரிஷ்யந் ந ப்ரபாஷேத க்ருதாந்யேவ து தர்ஶயேத் ।
தர்மகாமார்த்தகார்யாணி ததா மந்த்ரோ ந பித்யதே ॥

தர்மம் அர்த்தம் காமம் இவைகள் நிமித்தமான காரியங்களைச் செய்யப் போகிறவன் சொல்லக்கூடாது. செய்தவைகளைச் செய்த பிறகுதான் வெளியிட வேண்டும். அப்படியானால் ஆலோசனையானது வெளியாகாது.

गिरिपृष्ठमुपारुह्य प्रासादं वा रहोगतः ।
अरण्ये निःशलाके वा तत्र मन्त्रोऽभिधीयते ॥ २३३

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிரிப்ருஷ்டமுபாருஹ்ய ப்ராஸாதம் வா ரஹோகத: ।
அரண்யே நி:ஶலாகே வா தத்ர மந்த்ரோऽபிதீயதே ॥

மலையின் உச்சியிலோ உப்பரிகையிலோ ஏறி ஏகாந்தமாக இருந்து ஆலோசனை செய்யவேண்டும். செடி கொடிகள் இல்லாத காடாக இருந்தால் அவ்விடத்தில் ஆலோசனை செய்ய வேண்டுமென்ன கூறப்படுகிறது.

नासुहृत्परमं मन्त्रं भारतार्हसि वेदितुम् ।
अपण्डितो वाऽपि सुहृत् पण्डितो वाऽप्यनात्मवान् ॥ २३४

நாஸுஹ்ருத்பரமம் மந்த்ரம் பாரதார்ஹதி வேதிதும் ।
அபண்டிதோ வாऽபி ஸுஹ்ருத் பண்டிதோ
வாऽப்யநாத்மவான் ॥ 234

ஓ பாதரே, ஸ்நேஹிதனில்லாதவனும் ஸ்நேஹிதனானாலும் கல்வியில்லாதவனானாலும் கல்வியுள்ளவனாயிருந்தாலும் அடக்கமில்லாதவனானாலும் முடிவான ஆலோசனையை அறியத்தகுந்தவனல்ல.

अनधीत्य यथा वेदान्न विप्रः श्राद्धमर्हति ।
एवमश्रुत षाड्गुण्यो न मन्त्रं श्रोतुमर्हति ॥ २३५

அநதீத்ய யதா வேதான் ந விப்ர: ஶ்ராத்தமர்ஹதி ।
ஏவமஶ்ருதஷாட்குண்யோ ந மந்த்ரம் ஶ்ரோதுமர்ஹதி

வேதமறியாத பிருமணர்களை எப்படி சிரார்த்த பிருமணர்களாக வரிக்கக்கூடாதோ அப்படியே ஸந்தி விக்ரஹம் முதலிய ராஜநீதியை அறியாதவன் மந்திராலோசனையைக் கேழ்க்க அருகனாகமாட்டான்.

अमोघक्रोधहर्षस्य स्वयं कृत्वाऽन्ववेक्षिणः ।
आत्मप्रत्ययकोशस्य वसुदैव वसुन्धरा ॥ २३६

அமோகக்ரோதஹர்ஷஸ்ய ஸ்வயம்
க்ருத்வாऽன்வவேக்ஷிண: ।
ஆத்மப்ரத்யயகோஶஸ்ய வஸுதைவ வஸுந்தரா ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீணாகாத கோப, சந்தோஷங்களை உடையவனும் தானே செய்து பின்னும் பார்க்கிறவனும் தன்னால் அறியப் பட்ட பொக்கிஷசாலையை உடையவனுமாய் இருப்பவனுக்கு பூமியானது செல்வங்களை அளித்துக்கொண்டே இருக்கிறது.

नाममात्रेण तुष्येत छत्रेण च महीपतिः।
भृत्येभ्यो विसृजेदर्थान्नैकः सर्वहरो भवेत् ॥ २३७

நாமமாத்ரேண துஷ்யேத சத்ரேண ச மஹீபதி: ।
ப்ருத்யேப்யோ விஸ்ருஜேதர்த்தாந் நைக:
ஸர்வஹரோ பவேத் ॥ 237

அரசனானவன் அரசனென்கிற பேர் மாத்திரத்தினாலும் குடையினாலும்தான் சந்தோஷத்தை அடையவேண்டும். திரவியங்களை வேலைக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஒருவனாகவே எல்லாவற்றையும் கிரஹித்துக் கொள்ளுகிற வனாகவே இருக்கக்கூடாது.

ब्राह्मणं ब्राह्मणो वेद भर्ता वेद स्त्रियं तथा।
अमात्यं नृपतिर्वेद राजा राजानमेव च ॥ २३८

ப்ராம்மணம் ப்ராம்மணோ வேத பர்த்தா வேத
ஸ்திரியம் ததா ।
அமாத்யம் ந்ருபதிர் வேத ராஜா ராஜாநமேவ ச ॥ 238

பிராமணனை பிராமணனே அறிவான். ஸ்திரீயைக் கணவன் அறிவான். மந்திரியை அரசனே அறிவான்.

दैवतेषु प्रयत्नेन राजसु ब्राह्मणेषु च।
नियन्तव्यः सदा क्रोधो वृद्धबालातुरेषु च ॥ २३९

தைவதேஷு ப்ரயத்நேந ராஜஸு ப்ராஹ்மணேஷு ச ।
நியந்தவ்ய: ஸதா க்ரோதோ வ்ருத்தபாலாதுரேஷு ச ॥

தெய்வங்கள் அரசர்கள் பிராமணர்கள் வயதானவர்கள் குழந்தைகள் நோயாளிகள் இவர்கள் விஷயத்தில் கோபத்தை எப்பொழுதும் முயற்சியுடன் அடக்கவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

निरर्थं कलहं प्राज्ञो वर्जयेन्मूढसेवितम् ।
कीर्तिं च लभते लोके न चानर्थेन युज्यते ॥ २४०

நிரர்த்தம் கலஹம் ப்ராக்ஞோ வர்ஜயேன்
மூடஸேவிதும் ।
கீர்த்திம் ச லபதே லோகே ந சானர்த்தேன யுஜ்யதே ॥

அறிவுள்ளவன் மூடர்கள் செய்யும் பயனற்ற கலகத்தை விலக்கவேண்டும். அதனுல் உலகத்தில் கீர்த்தியை அடைவான். அவனுக்கு எல்லா காரியங்களும் சித்திக்கும்.

विद्याशीलवयोवृद्धान् बुद्धिवृद्धांश्च भारत ।
धनाभिजातवृद्धांश्च नित्यं मूढोऽवमन्यते ॥ २४१

வித்யாஶீலவயோவ்ருத்தான் புத்திவ்ருத்தாம்ஶ்ச
பாரத ।
தநாபிஜாதவ்ருத்தாம்ஶ்ச நித்யம் மூடோऽவமன்யதே ॥

மூடனுனவன், வித்யையால் சிறந்தவர்களையும் சீலத்தால் சிறந்தவர்களையும், வயது முதிர்ந்தவர்களையும் புத்தியினுல் சிறந்தவர்களையும் தனத்தால் பெரியவர்களையும் குலத்தால் மேலானவர்களையும் எப்பொழுதும் அவமதிப்பான்.

अनार्यवृत्तमप्राज्ञं असूयकमधार्मिकम् ।
अनर्थाः क्षिप्रमायान्ति वाग्दुष्टं क्रोधनं तथा ॥ २४२

அநார்யவ்ருத்தமப்ராக்ஞும் அஸூயகமதார்மிகம் ।
அனர்த்தா: க்ஷிப்ரமாயாந்தி வாக்துஷ்டம்
க்ரோதநம் ததா । 242

அனர்த்தங்கள் எல்லா வந்தடையும் என்பதைக் கூறுகிறார் — இழிவான செய்கை உடையவனையும் அறிவில்லாதவனையும் அஸூயை உடையவனையும் தர்மம் செய்யாதவனையும் கடுரமாகப் பேசுகிறவனையும் கோபமுடையவனையும் அனர்த்தங்கள் சீக்கிரம் வந்து அடைகின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अविसंवादनं दानं समयस्याव्यतिक्रमः।
आवर्तयन्ति भूतानि सम्यक् प्रणिहिता च वाक्॥ २४३

அவிஸம்வாதனம் தானம் ஸமயஸ்யாவ்யதிக்ரம:
ஆவர்த்தயந்தி பூதானி ஸம்யக் ப்ரணிஹிதா ச வாக் ||

தான் சொன்ன சொல் தவருமல் கொடுப்பதும் கூறிய காலத்தை மீருமல் இருப்பதும் இனிமையாகப் பேசுவதும் யாவரையும் தன்னிடம் வரும்படிச் செய்யும்.

अविसंवादको दक्षः कृतज्ञो मतिमानृजुः।
अपि संक्षीणकोशोऽपि लभते परिवारणम्॥ २४४

அவிஸம்வாதகோ தக்ஷ: க்ருதக்ஞோ மதிமாந் ருஜு:
அபி ஸம்க்ஷீணகோஶோऽபி லபதே பரிவாரணம் || 244

சொன்ன சொல் தவருதவனும் ஸமர்த்தனும் நன்றியறிந்தவனும் புத்திமானும் நேர்மையுள்ளவனுமான மனிதன் பொக்கிஷம் நசித்தாலும் பரிவாரத்தை அடைகிருன். அதாவது ஜனங்கள் யாவரும் அவனிடத்தில் அன்புகொண்டு வருவார்கள்.

धृतिः शमो दमः शौचं कारुण्यं वागनिष्ठुरा।
मित्राणां चानभिद्रोहः सप्तैताः समिधः श्रियः॥ २४५

த்ருதி: ஶமோ தம: ஶௌசம் காருண்யம்
வாகநிஷ்டுரா |
மித்ராணும் சாநபித்ரோஹ: ஸப்தைதா: ஸமித:
ஶ்ரிய: || 245

செல்வத்தை விருத்தி செய்யக் கூடியவைகளைக் கூறுகிருர் — தைர்யம், மனதை அடக்குதல், வெளியிலுள்ள கண் முதலிய இந்திரியங்களை அடக்குதல், சரீரசுத்தி, தயை, கடூரமில்லாத வார்த்தை, மித்ரர்களுக்கு துரோகம் செய்யாமை, இந்த ஏழும் செல்வத்தை நன்கு விருத்தி செய்கின்றவைகள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

असंविभागी दुष्टात्मा कृतघ्नो निरपत्रपः ।
तादृङ्नराधिपो लोके वर्जनीयो नराधिप ॥ २४६

அஸம்விபாகீ துஷ்டாத்மா க்ருதக்னோ நிரபத்ரப : ।
தாத்ருங் நராதிபோ லோகே வர்ஜநீயோ நராதிப ॥ 246

ஓ அரசனே, யாவரும் அனுபவிக்கும்படி பொருளைப் பிரித்துக் கொடாதவனும் கெட்ட மனமுடையவனும் நன்றி மறந்தவனும் லஜ்ஜை அற்றவனுமான அரசன் உலகத்தில் விலக்கத்தக்கவன்.

न च रात्रौ सुखं शेते ससर्प इव वेश्मनि ।
यः कोपयति निर्दोषं सदोषोऽभ्यन्तरं जनम् ॥ २४७

ந ச ராத்ரௌ ஸுகம் ஶேதே ஸஸர்ப இவ வேஶ்மநி ।
ய: கோபயதி நிர்தோஷம் ஸதோஷோऽப்யந்தரம் ஜநம் ॥ 247

எவன் குற்றமுள்ளவனாய் இருந்துகொண்டு தன்னிடமுள்ள குற்றமில்லாத மனிதனை கோபமடையச் செய்கிறானோ, அவன் பாம்புடன் கூடிய வீட்டில் வசிப்பவன் போல இரவில் சுகமாக தூங்குவதில்லை.

येषु दुष्टेषु दोषः स्यात् योगक्षेमस्य भारत ।
सदा प्रसादनं तेषां देवतानामिवाचरेत् ॥ २४८

யேஷு துஷ்டேஷு தோஷ: ஸ்யாத் யோகக்ஷேமஸ்ய பாரத ।
ஸதா ப்ரஸாதனம் தேஷாம் தேவதாநாமிவாசரேத் ॥

எவர்கள் மனவருத்தமடைந்தால் யோக க்ஷேமத்திற்கு தீங்கு ஏற்படுமோ அவர்கள் விஷயத்தில் தேவதைகளுக்குச் செய்வதுபோல் எப்பொழுதும் சந்தோஷம் வரும்படி நடக்க வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

येऽर्थाः स्त्रीषु समायुक्ताः प्रमत्तपतितेषु च ।
येचानार्ये समासक्ताः सर्वे ते संशयं गताः ॥ २४९

யேऽர்த்தா: ஸ்த்ரீஷு ஸமாயுக்தா:
ப்ரமத்தபதிதேஷு ச ।
யேசாநார்யே ஸமாஸக்தா: ஸர்வே தே
ஸம்ஶயம் கதா: ॥ 249

ஸ்திரீகளிடத்திலும் கள் முதலியவற்ருல் மதம் கொண்டவர்களிடத்திலும் ஒழுக்கமில்லாதவர்களிடத்திலும் இழிவானவர்களிடத்திலும் வைக்கப்பட்டிருக்கிற பொருள் சந்தேஹத்தை அடைந்தவைகளே. (அதாவது அவர்கள் நம்பி யாரிடமாவது கொடுத்து பொருள் ரக்ஷிக்கப்படாமல் போய்விடுமெனக் கருத்து.)

यत्र स्त्री यत्र कितवः बालो यत्रानुशासिता ।
मज्जन्ति तेऽवशा राजन् नद्यामश्मप्लवो यथा ॥ २५०

யத்ர ஸ்த்ரீ யத்ர கிதவ: பாலோ யத்ராநுஶாஸிதா ।
மஜ்ஜந்தி தேऽவஶா ராஜன் நத்யாமஶ்மப்லவோ யதா ॥

எந்த குடும்பத்தில் ஸ்திரீயும் சூதாடியும் சிறுவனும் அதிகாரம் செலுத்துகிருர்களோ அந்த குடும்பத்தினர் கல் தோணியால் நதியில் முழுகுவது போல் சுதந்திரமற்றவர்களாகி முழுகிவிடுவார்கள்.

यं प्रशंसन्ति कितवाः यं प्रशंसन्ति चारणाः ।
यं प्रशंसन्ति बन्धक्यो न स जीवति मानवः ॥ २५१

யம் ப்ரஶம்ஸந்தி கிதவா: யம் ப்ரஶம்ஸந்தி சாரணா: ।
யம் ப்ரஶம்ஸந்தி பந்தக்யோ ந ஸ ஜீவதி மாநவ: ॥ 251

எவனை சூதாட்டக்காரர்கள் புகழ்கின்றனரோ, எவனைக் கூத்தாடிகள் புகழ்கின்றனரோ, எவனை வியபிசாரிகள் புகழ்கின்றனரோ அவன் உயிருடன் நல்வாழ்க்கை நடத்த முடியாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

हित्वा तान्परमेष्वासान् पाण्डवानमितौजसः ।
आहितं भारतैश्वर्यं त्वया दुर्योधने महत् । २५२

ஹித்வா தான் பரமேஷ்வாஸான் பாண்டவாநமி-
தௌஜஸ: ।
ஆஹிதம் பாரதைஸ்வர்யம் த்வயா துர்யோதநே
மஹத் ॥ 252

ஓ பாரதரே, சிறந்த வில்லை உடையவர்களும் அளவற்ற பராக்ரமமுடையவர்களுமான பாண்டவர்களை விட்டு உம்மால் துரியோதனனிடத்தில் பெரிய ஐச்வர்யம் வைக்கப் பட்டிருக்கிறது.

तं द्रक्ष्यसि परिभ्रष्टं तस्मात्त्वमचिरादिव ।
ऐश्वर्यमदसंमूढं बलिं लोकत्रयादिव ॥ २५३

தம் த்ரக்ஷ்யஸி பரிப்ரஷ்டம் தஸ்மாத் த்வமசிராதிவ ।
ஐஸ்வர்யமதஸம்மூடம் பலிம் லோகத்ரயாதிவ ॥ 253

ஐச்வர்ய மதத்தால் புத்தி மயங்கி இருக்கின்ற அவன் அந்த ஐச்வர்யத்திலிருந்து, மூவுலகங்களிலிருந்தும் மஹாபலி நழுவினதுபோல் உன் பிள்ளை நழுவி வருத்தப்படுவதைப் பாரீர்.

धृतराष्ट्र उवाच —

अनीश्वरोयं पुरुषो भवाभवे सूत्रप्रोता दारुमयीव योषा ।
धात्रा तु दिष्टस्य वशे कृतोऽयं तस्माद्वद त्वं श्रवणे धृतोऽहम् ॥ २५४

த்ருதராஷ்ட்ர உவாச

அநீஸ்வரோயம் புருஷோ பவாபவே
ஸூத்ரப்ரோதா தாருமயீவ யோஷா ।
தாத்ரா து திஷ்டஸ்ய வஸே க்ருதோऽயம்
தஸ்மாத் வத த்வம் ஸ்ரவணே த்ருதோऽஹம் ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருதராஷ்டிரன் சொல்லுகிருர்

மனிதன் பிரம்மாவினுல் முன்வினைப்பயனை அனுசரித்து படைக்கப்பட்டு இருப்பதால் பொருள் உடையவனுகவும் பொருள் இல்லாதவனுகவும் கயிற்றில் கோர்க்கப்பட்டதும் மரத்தால் செய்யப்பட்டதுமான பெண் பொம்மை போல அசக்தனுக இருக்கிருன். ஆகையால் நீ அதைச் செய் இதைச் செய் எனக் கூறுகிருயே, எப்படிச் செய்யமுடியும் நீ கோபித்துக்கொள்ளாமல் நான் உறுதியுடன் கேழ்கிறேன் என திருதராஷ்டிரன் கேட்டான்.

विदुर उवाच —

अप्राप्तकालं वचनं बृहस्पतिरपि ब्रुवन् ।
लभते बुद्ध्यवज्ञानं अवमानं च भारत ॥ २५५

விதுர உவாச

அப்ராப்தகாலம் வசனம் ப்ருஹஸ்பதிரபி ப்ருவன் ।
லபதே புத்யவக்ஞானம் அவமானம் ச பாரத ॥ 255

விதுரர் சொல்லுகிருர்

ஓ அரசனே, ஸமயம் தவறி வார்த்தை சொல்லுகிறவன் பிருஹஸ்பதியாக இருந்தாலும் புத்திக் குறைவையும் அவமானத்தையும் அடைகிருன்.

प्रियो भवति दानेन प्रियवादेन चापरः ।
मन्त्रमूलबलेनान्यः यः प्रियः प्रिय एव सः ॥ २५६

ப்ரியோ பவதி தாநேந ப்ரியவாதேந சாபர: ।
மந்த்ரமூலபலேநாந்ய: ய: ப்ரிய: ப்ரிய ஏவ ஸ: 256

ஒருவன் தானத்தினுல் பிரியனுகிருன். மற்றொருவன் இனிமையாகப் பேசுவதினுல் பிரியனுகிருன். வேறு ஒருவன் நல்ல ஆலோசனையைக் கூறுவதினுல் பிரியனுகிருன். எவன் இயற்கையாகவே பிரியனுக இருக்கிருனே அவன் எப்பொழுதும் பிரியனுயிருப்பான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

द्वेष्यो न साधुर्भवति न मेधावी न पण्डितः ।
प्रिये शुभानि कार्याणि द्वेष्ये पापानि चैव ह । २५७

த்வேஷ்யோ ந ஸாதுர் பவதி ந மேதாவீ ந பண்டித: |
ப்ரியே ஶுபாநி கார்யாணி த்வேஷ்யே பாபாநி
சைவ ஹ || 257

வேண்டாதவன் நல்லவனுக இருந்தாலும் நல்லவனெனத் தோன்ருது. அதேபோல் புத்திமானும் புத்திமானுகத் தோன்றுவதில்லை. பண்டிதனும் பண்டிதனுகத் தோன்றுவதில்லை. பிடித்த மனிதன் காரியமெல்லாம் நல்லதென்றே தோன்றும். வேண்டாதவன் செய்த காரியமெல்லாம் கெட்டதென்றே தோன்றும்.

उक्तं मया ज्ञातमात्रेऽपि राजन् दुर्योधनं त्यज पुत्रं त्वमेकम् ।
तस्य त्यागात्पुत्रशतस्य वृद्धिः अस्यात्यागात्पुत्रशतस्य नाशः । २५८

உக்தம் மயா க்ஞாதமாத்ரேபி ராஜன்
துர்யோதனம் த்யஜ புத்ரம் த்வமேகம் |
தஸ்ய த்யாகாத் புத்ரஶதஸ்ய வ்ருத்தி:
அஸ்யாத்யாகாத் புத்ரஶதஸ்ய நாஶ: || 258

ஓ அரசனே, துர்யோதனன் பிறந்தவுடன் அவனை விட்டுவிடும்படியும் அந்த பிள்ளையை விடுவதால் மற்ற நூறு குழந்தைகள் விருத்தி அடைவார்கள் என்றும் அவனை விடாவிடில் மற்ற எல்லோருக்கும் நாசம் எனவும் நான் கூறினேன்.

न वृद्धिर्बहुमन्तव्या या वृद्धिः क्षयमावहेत् ।
क्षयोऽपि बहुमन्तव्यः यः क्षयो वृद्धिमावहेत् ॥ २५९

ந வ்ருத்திர் பஹுமந்தவ்யா யா வ்ருத்தி:
க்ஷயமாவஹேத் |
க்ஷயோபி பஹுமந்தவ்ய: ய: க்ஷயோ
வ்ருத்திமாவஹேத் || 259

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எந்த விருத்தியானது பின்பு நாசத்தை அளிக்குமோ அந்த விருத்தியை பெரிதென நினைக்கக்கூடாது. குறைவாக இருந்தாலும் எந்த குறைவானது பின்பு விருத்தியை அளிக்குமோ அதையே பெரிதாக நினைக்கவேண்டும்.

समृद्धा गुणतः केचित् भवन्ति धनतोऽपरे ।
धनवृद्धान् गुणैर्हीनान् धृतराष्ट्र विवर्जय ॥ २६०

ஸம்ருத்தா குணத꞉ கேசித் பவந்தி தநதோऽபரே ।
தநவ்ருத்தான் குணைர்ஹீநான் த்ருதராஷ்ட்ர
விவர்ஜய ॥ 260

ஓ திருதராஷ்டிரனே, சிலர் குணங்களால் பூர்ணர்களாக இருக்கிறார்கள். சிலர் தனத்தால் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். தனத்தினால் நிறைந்திருந்தாலும் குணத்தினால் குறைந்தவர்களை விட்டுவிடவேண்டும்.

धृतराष्ट्र उवाच —

सर्वं त्वमायतीयुक्तं भाषसे प्राज्ञसंमतम् ।
न चोत्सहे सुतं त्यक्तुं यतो धर्मस्ततो जयः ॥ २६१

த்ருதராஷ்ட்ர உவாச

ஸர்வம் த்வமாயதீத்யுக்தம் பாஷஸே ப்ராக்ஞஸம்மதம் ।
ந சோத்ஸஹே ஸுதம் த்யக்தும் யதோ தர்மஸ்ததோ
ஜய꞉ ॥ 261

திருதராஷ்டிரன் கேட்டார் — நீ கூறுவதானது அறிவு உள்ளவர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும் வருங்காலத்தில் நன்மையை அளிக்கக்கூடியதாகவும் உள்ளது. ஆனால் பிள்ளையை விட்டுவிட எனக்கு துணிவு இல்லை. எங்கு தர்மமோ அங்கு ஜெயம் (எனக் கூறினார்.)

Sri Vedachalam Şastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

विदुर उवाच —

अतीव गुणसंपन्नः न जातु विनयान्वितः ।
सुसूक्ष्ममपि भूतानां उपमर्दमुपेक्षते ॥ २६२

விதுர உவாச

அதீவ குணஸம்பன்ன: ந ஜாது விநயாந்வித:
ஸுஸூக்ஷ்மமபி பூதாநாம் உபமர்தமுபேக்ஷதே ॥ 62

விதுரர் பதில் கூறுகிறார் — நிறம்பிய குணமுள்ளவனும் வணக்கத்துடன் இருப்பவனுமான மனிதன் பிராணிகளுக்கு ஏற்படும் சிறிய நாசத்தைக்கூட பொறுக்கமாட்டான்.

निवर्तमाने सौहार्दे प्रीतिर्नीचे प्रणश्यति ।
या चैव फलनिर्वृत्तिः सौहृदे चैव यत्सुखम् ॥ २६३

நிவர்தமானே ஸௌஹார்தே ப்ரீதிர் நீசே ப்ரணஶ்யதி।
யா சைவ பலநிர்வ்ருத்தி: ஸௌஹ்ருதே சைவ
யத்ஸுகம் ॥ 263

இழிவானவனிடத்தில் ஸ்நேஹம் விலகும்போது அன்பும் அவனால் ஏற்படும் உதவியும் ஸ்நேஹத்தால் ஏற்பட்ட ஸுகமும் அழியும். அப்படிப்பட்டவனை விட்டுவிடவேண்டும்.

यतते चापवादाय यत्नमारभते क्षये ।
अल्पेऽप्यपकृते मोहात् न शान्तिमधिगच्छति ॥ २६४

யததே சாபவாதாய யத்னமாரபதே க்ஷயே।
அல்பேப்யபக்ருதே மோஹாத் ந ஶாந்திமதிகச்சதி ॥

எவன் அபவாதம் சொல்லுவதிலும், நாசம் செய்வதிலும் முயலுவானோ, அறியாமல் சிறிது அபகாரம் செய்தாலும் பொறுமையாக எவன் இருப்பதில்லையோ, அப்படிப்பட்ட நீசர்களை புத்தியினால் நன்கு ஆராய்ந்து புத்திமான் தூரத்தில் விலக்கிவிடவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

यो ज्ञातिमनुगृह्णाति दरिद्रं दीनमातुरम् ।
स पुत्रपशुभिर्वृद्धिं श्रेयश्चानन्त्यमश्नुते ॥ २६५

யோ க்ஞாதிமநுக்ருஹ்ணுதி தரித்ரம் தீநமாதுரம் ।
ஸ புத்ரபஶுபிர்வ்ருத்திம் ஶ்ரேயஶ்சாநந்த்யமஶ்னுதே ॥

எவன் பங்காளியையும் ஏழையையும் மனக்கவலை உள்ளவனையும் நோயாளியையும் உபகரித்து பாதுகாக்கிருனே, அவன் புத்ரர்களாலும் பசுக்களாலும் அபிவிருத்தியையும் அளவுகடந்த க்ஷேமத்தையும் அடைவான்.

ज्ञातयो वर्धनीयास्तैर्य इच्छन्त्यात्मनः शुभम् ।
कुलवृद्धिं च राजेन्द्र तस्मात्साधु समाचर ॥
श्रेयसा योक्ष्यते राजन् कुर्वाणो ज्ञातिसत्क्रियाम् ॥ २६६

க்ஞாதயோ வர்த்தநீயாஸ்தைர் ய இச்சந்த்யாத்மந: ஶுபம் ।
குலவ்ருத்திம் ச ராஜேந்த்ர தஸ்மாத் ஸாது ஸமாசர ॥
ஶ்ரேயஸா யோக்ஷ்யதே ராஜன் குர்வாணோ க்ஞாதிஸத்க்ரியாம் । 266

எவர்கள் தனக்கு நன்மையையும் குலத்திற்கு அபிவிருத்தியையும் விரும்புகிருர்களோ, அவர்கள் ஞாதிகளை விருத்தி அடையச் செய்யவேண்டும். ஆகையால் நன்மையைச் செய்யும். ஞாதிகளைப் பூஜிப்பவன் க்ஷேமத்தை அடைவான்.

विगुणा ह्यपि संरक्ष्या ज्ञातयो भरतर्षभ ।
किं पुनर्गुणवन्तस्ते त्वत्प्रसादाभिकाङ्क्षिणः ॥ २६७

விகுணு ஹ்யபி ஸம்ரக்ஷ்யா க்ஞாதயோ பரதர்ஷப ।
கிம் புனர் குணவந்தஸ்தே த்வத்ப்ரஸாதாபிகாங்க்ஷிண: ॥ 267

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

 CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஞாதிகள் கெட்ட குணங்கள் உள்ளவர்களாக இருந்தாலும் நன்கு ரக்ஷிக்கத்தகுந்தவர்கள். குணவான்களும் உனது அனுக்ரஹத்தை விரும்புகின்றவர்களுமான பாண்டவர்கள் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமா.

प्रसादं कुरु वीराणां पाण्डवानां विशांपते ।
दीयन्तां ग्रामकाः केचित् तेषां वृत्त्यर्थमीश्वर । २६८

ப்ரஸாதம் குரு வீராணாம் பாண்டவாநாம் விஶாம்பதே ।
தீயந்தாம் க்ராமகா: கேசித் தேஷாம்
வ்ருத்யர்த்தமீஶ்வர ॥ 268

ஓ ராஜனே, வீரர்களான பாண்டவர்களுக்கு அனுக்ரஹம் செய்யும். அவர்களுடைய ஜீவனத்திற்காக சில கிராமங்களைக் கொடும்.

एवं लोके यशः प्राप्तं भविष्यति नराधिप ।
वृद्धेन हि त्वया कार्यं पुत्राणां तात शासनम् ।
मया चापि हितं वाच्यं विद्धि मां त्वद्धितैषिणम् ॥ २६९

ஏவம் லோகே யஶ: ப்ராப்தம் பவிஷ்யதி நராதிப ।
வ்ருத்தேந ஹி த்வயா கார்யம் புத்ராணாம் தாத
ஶாஸனம் ॥
மயா சாபி ஹிதம் வாச்யம் வித்தி மாம் த்வத்
ஹிதைஷிணம் । 269

இப்படிச் செய்தால் உலகில் உமக்கு கீர்த்தி ஏற்படும். வயது முதிர்ந்த நீர் புத்ரர்களுக்கு உத்திரவு போடவேண்டும். நான் உமக்கு நன்மையைக் கூறக் கடமைப்பட்டவன். நான் உமது நன்மையைக் கோருகிறவன்.

ज्ञातिभिर्विग्रहस्तात न कर्तव्यः शुभार्थिना ।
सुखानि सह भोज्यानि ज्ञातिभिर्भरतर्षभ ॥ २७०

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ஞாதிபிர் விக்ரஹஸ்தாத ந கர்தவ்ய: ஶுபார்திநா ।
ஸுகாநி ஸஹ போஜ்யாநி க்ஞாதிபிர் பரதர்ஷப ॥ 270

மங்களத்தை விரும்புகிறவன் பங்காளிகளுடன் சண்டையிடக் கூடாது. ஞாதிகளோடு கூடத்தான் சுகங்களை அனுபவிக்க வேண்டும்.

संभोजनं संकथनं संप्रीतिश्च परस्परम् ।
ज्ञातिभिस्सह कार्याणि न विरोधः कदाचन ॥ २७१

ஸம்போஜனம் ஸங்கதனம் ஸம்ப்ரீதிஶ்ச பரஸ்பரம் ।
க்ஞாதிபிஸ்ஸஹ கார்யாணி ந விரோத: கதாசன ॥ 271

ஞாதிகளுடன் கூடி ஒருவரிடத்தில் ஒருவர் நல்ல போஜனம் நல்ல பேச்சுக்கள் நல்ல அன்பும் செய்யவேண்டும். ஒரு பொழுதும் விரோதம் செய்யத்தக்கதன்று.

ज्ञातयस्तारयन्तीह ज्ञातयो मज्जयन्ति च ।
सुवृत्तास्तारयन्तीह दुर्वृत्ता मज्जयन्ति च ॥ २७२

க்ஞாதயஸ்தாரயந்தீஹ க்ஞாதயோ மஜ்ஜயந்தி ச ।
ஸுவ்ருத்தாஸ்தாரயந்தீஹ துர்வ்ருத்தா
மஜ்ஜயந்தி ச ॥ 272

ஞாதிகள் ஆபத்துக்களை தாண்டுவிப்பார்கள். ஞாதிகள் ஆபத்துக்களில் முழுகும்படியும் செய்வார்கள். நல்ல குணமுள்ளவர்கள் தாண்டுவிப்பார்கள். தீய குணமுள்ளவர்கள் முழுகச் செய்வார்கள்.

श्रीमन्तं ज्ञातिमासाद्य यो ज्ञातिरवसीदति ।
दिग्धहस्तं मृग इव स एनस्तस्य विन्दति ॥ २७३

ஶ்ரீமந்தம் க்ஞாதிமாஸாத்ய யோ க்ஞாதிரவஸீததி ।
திக்தஹஸ்தம் ம்ருக இவ ஸ ஏனஸ்தஸ்ய விந்ததி ॥

எந்த ஞாதியானவன் பொருளுள்ள தனது ஞாதியை அடைந்தும் நன்மையை அடையவில்லையோ அந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஞாதியின் துன்பமானது விஷம் பூசிய பாணத்தால் மானைக் கொன்ற பாவம் வேடனை வந்து அடைவதுபோல் ஸ்ரீமானை ஞாதியை அடையும்.

पश्चादपि नरश्रेष्ठ तव तापो भविष्यति ।
तान्वा हतान्सुतान्वापि श्रुत्वा तदनुचिन्तय ॥ २७४

பஶ்சாதபி நரஶ்ரேஷ்ட தவ தாபோ பவிஷ்யதி ।
தாங்வா ஹதான் ஸுதான் வாபி ஶ்ருத்வா
ததநுசிந்தய ॥ 274

ஓ அரசனே, யுத்தத்தில் உமது பிள்ளைகள் மடிந்தாலும் பாண்டவர்கள் மடிந்தாலும் உமக்கு பின்பு தாபம் நிச்சயமேற்படும். அதை இப்பொழுதே யோசியும்.

येन खट्वां समारूढः परितप्येत कर्मणा ।
आदावेव न तत्कुर्यात् अध्रुवे जीविते सति ॥ २७५

யேந கட்வாம் ஸமாரூட: பரிதப்யேத கர்மணா ।
ஆதாவேவ ந தத்குர்யாத் அத்ருவே ஜீவிதே ஸதி ॥

உயிர் நிலையில்லாதது. எந்தக் காரியத்தைச் செய்தால் பின்பு கட்டிலில் படுத்து மனம் தவிக்குமோ, அந்தக் காரியத்தை முன்னமேயே யோசித்து செய்யாமல் இருக்க வேண்டும்.

दुर्योधनेन यद्येतत् पापं तेषु पुरा कृतम् ।
त्वया तत्कुलवृद्धेन प्रत्यानेयं नरेश्वर ॥ २७६

துர்யோதநேந யத்யேதத் பாபம் தேஷு புரா க்ருதம் ।
த்வயா தத்குலவ்ருத்தேந ப்ரத்யாநேயம் நரேஶ்வர ॥

துரியோதனனால் முன்பு தவறு செய்யப்பட்டு விட்டது என்றாலும் குலவிருத்தரான நீர் அதை சீர்திருத்தி அக்குற்றத்தை நீக்கிவிடும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

तांस्त्वं पदे प्रतिष्ठाप्य लोके विगतकल्मषः ।
भविष्यसि नरश्रेष्ठ पूजनीयो मनीषिणाम् ॥ २७७

தாம்ஸ்த்வம் பதே ப்ரதிஷ்டாப்ய லோகே
விகதகல்மஷ: ।
பவிஷ்யஸி நரஶ்ரேஷ்ட பூஜநீயோ மநீஷிணாம் ॥ 277

ஓ அரசனே, நீர் அவர்களை ஓரிடத்தில் நிலைக்கச் செய்து உலகில் உமக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்கிக் கொண்டு புத்திமான்களால் பூஜிக்கத்தக்கவராவீர்.

सुव्याहृतानि धीराणां फलतः परिचिन्त्य यः ।
अध्यवस्यति कार्येषु चिरं यशसि तिष्ठति ॥ २७८

ஸுவ்யாஹ்ருதாநி தீராணாம் பலத: ப்ரிசிந்த்ய ய: ।
அத்யவஸ்யதி கார்யேஷு சிரம் யஶஸி திஷ்டதி ॥ 278

எவன் தீரர்களுடைய நல்வார்த்தையைக் கேட்டு, பயனேற்படும் வரை ஆலோசித்து காரியங்களில் நிச்சயத்தை அடைகிறானோ, அவன் நீண்டகாலம் புகழுடன் விளங்குவான்.

असम्यगुपयुक्तं हि ज्ञानं सुकुशलैरपि ।
उपलभ्यं चाविदितं विदितं चाननुष्ठितम् ॥ २७९

அஸம்யகுபயுக்தம் ஹி க்ஞானம் ஸுகுஶலைரபி ।
உபலப்யம் சாவிதிதம் விதிதம் சாநநுஷ்டிதம் ॥ 279

மிகவும் ஸமர்த்தர்களாக இருந்தாலும் அறிய வேண்டியதை அறியாமலும் அந்தந்ததைச் செய்யாமலும் இருப்பார்களாகில் அவர்கள் தங்கள் அறிவை நல்லதில் உபயோகப்படுத்தினவர்களாக ஆக மாட்டார்கள்.

पापोदयफलं विद्वान् यो नारभति वर्धते ॥ २८०

பாபோதயபலம் வித்வான் யோ நாரபதி வர்த்ததே: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எவன் பாபத்தை அளிக்கும் காரியத்தை அறிந்து ஆரம்பிக்காமல் இருக்கிருனே, அவன் விருத்தி அடைவான்.

यस्तु पूर्वकृतं पापं अविमृश्यानुवर्तते ।
अगाधपङ्के दुर्मेधा विषमे विनिपात्यते ॥ २८१

யஸ்து பூர்வக்ருதம் பாபம் அவிம்ருஶ்யாநுவர்த்ததே ।
அகாதபங்கே துர்மேதா விஷமே விநிபாத்யதே ॥ 281

எவன் முன்பு செய்த பாபத்தை துடர்ந்து யோசியாமல் பின்பும் செய்கிருனே அவன் ஆழமான சேற்றில் தள்ளப்படுவான். (துன்பமான நரகங்களை அனுபவிப்பான் எனக் கருத்து.)

न वै श्रुतमविज्ञाय वृद्धाननुपसेव्य वा ।
धर्मार्थौ वेदितुं शक्यौ बृहस्पतिसमैरपि ॥ २८२

ந வை ஶ்ருதமவிக்ஞாய வ்ருத்தாநநுபஸேவ்ய வா ।
தர்மார்த்தௌ வேதிதும் ஶக்யௌ
ப்ருஹஸ்பதிஸமைரபி ॥ 282

பிருஹஸ்பதிக்கு ஸமானமான புத்தியுள்ளவர்களாக இருந்தபோதிலும் சாஸ்திரத்தை அறியாமலும் பெரியோர்களை ஸேவிக்காமலும் தர்மார்த்தங்களை அறிய மாட்டார்கள்.

नष्टं समुद्रे पतितं नष्टं वाक्यमशृण्वति ।
अनात्मनि श्रुतं नष्टं नष्टं हुतमनग्निकम् ॥ २८३

நஷ்டம் ஸமுத்ரே பதிதம் நஷ்டம் வாக்யமஶ்ருண்வதி ।
அநாத்மநி ஶ்ருதம் நஷ்டம் நஷ்டம் ஹுதமநக்னிகம் ॥

கடலில் விழுந்தது வீணே, கேளாதவனிடத்தில் நல்லதை கூறுவதும் வீணைதே. மனத்தை அடக்காதவனிடத்தில் இருக்கும் சாஸ்திரமும் வீணைதே. சாம்பலில் செய்த ஹோமமும் வீணே.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

अकीर्तिं विनयो हन्ति हन्त्यनर्थं पराक्रमः ।
हन्ति नित्यं क्षमा क्रोधं आचारो हन्त्यलक्षणम् ॥ २८४

அகீர்திம் விநயோ ஹந்தி ஹந்த்யநர்த்தம் பராக்ரமஃ ।
ஹந்தி நித்யம் க்ஷமா க்ரோதம் ஆசாரோ
ஹந்த்யலக்ஷணம் ॥ 284

அடக்கமானது அபகீர்தியைப் போக்கும். பராக்ரமம் கஷ்டத்தைப் போக்கும். பொறுமை எப்பொழுதும் கோபத்தைப் போக்கும். ஆசாரமானது அழகின்மையைப் போக்கும்.

परिच्छदेन क्षेत्रेण वेश्मना परिचर्यया ।
परीक्षेत कुलं राजन् भोजनाच्छादनेन च ॥ २८५

பரிச்சதேந க்ஷேத்ரேண வேஶ்மநா பரிசர்யயா ।
பரீக்ஷேத குலம் ராஜன் போஜநாச்சாதநேந ச ॥ 285

அனுபவிக்கும் பொருள்களாலும் பிறப்புக்குக் காரணமான தாய் தந்தையாலும் வஸிக்கும் வீட்டினுலும் ஆசாரத்தாலும் ஆஹாரத்தாலும் வஸ்திரத்தாலும் குலத்தை கண்டு அறியவேண்டும்.

उपस्थितस्य कामस्य प्रतिवादो न विद्यते ।
अपि निर्मुक्तदेहस्य कामरक्तस्य किं पुनः ॥ २८६

உபஸ்திதஸ்ய காமஸ்ய ப்ரதிவாதோ ந வித்யதே ।
அபி நிர்முக்ததேஹஸ்ய காமரக்தஸ்ய கிம் புனஃ ॥ 286

சரீரத்தில் அபிமானத்தை விட்டவனுக்குக் கூட காமமேற்பட்டால் அதைத் தடுக்கமுடியாது. சரீர அபிமானமுள்ளவனுக்குக் காமமேற்பட்டால் கேழ்கவும் வேண்டுமா?

प्राज्ञोपसेविनं वैद्यं धार्मिकं प्रियदर्शनम् ।
मित्रवन्तं सुवाक्यं च सुहृदं परिपालयेत् ॥ २८७

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ராக்ஞோபஸேவிநம் வைத்யம் தார்மிகம்
ப்ரியதர்ஶனம் ।
மித்ரவந்தம் ஸுவாக்யம் ச ஸுஹ்ருதம்
பரிபாலயேத் ॥ 287

புத்திமான்களை ஸேவிக்கின்றவனும், வித்வானும் தர்மிஷ்டனும் கண்ணுக்கு அழகாக இருப்பவனும், நல்ல ஸ்நேஹிதர்களை உடையவனும் நல்ல வார்த்தை பேசுகிறவனும் ஆன நண்பனை பரிபாலிக்க வேண்டும்.

दुष्कुलीनः कुलीनो वा मर्यादां यो न लङ्घयेत् ।
धर्मापेक्षी मृदुर्ह्रीमान् स कुलीनशताद्वरः ॥ २८८

துஷ்குலீந: குலீநோ வா மர்யாதாம் யோ ந லங்கயேத் ।
தர்மாபேக்ஷீ ம்ருதுர் ஹ்ரீமான் ஸ குலீநஶதாத்வர: ॥

கெட்ட குலத்தில் பிறந்தவனானாலும் நல்ல குலத்தில் பிறந்தவனானாலும் எவன் மரியாதையை (முன்னோர்களின் ஆசாரத்தை) தாண்டாமல் இருக்கிறானோ, தர்மத்தை விரும்புகிறவனும் வெட்கப்படுகிறவனும் அடக்கமுள்ளவனுமான அவன் நற்குலத்தோர்கள் நூறு பேர்களைக் காட்டிலும் சிறந்தவன்.

ययोश्चित्तेन वा चित्तं निभृतं निभृतेन वा ।
समेति प्रज्ञया प्रज्ञा तयोर्मैत्री न जीर्यति ॥ २८९

யயோஶ்சித்தேந வா சித்தம் நிப்ருதம் நிப்ருதேந வா ।
ஸமேதி ப்ரக்ஞயா ப்ரக்ஞா தயோர் மைத்ரீ ந ஜீர்யதி ॥

எந்த இருவர்களுக்கு எண்ணத்தோடு எண்ணமும் ரஹஸ்யத்தோடு ரஹஸ்யமும் அறிவோடு அறிவும் ஒத்துப் போகிறதோ அவர்களுடைய ஸ்நேஹமானது கெடுவதில்லை.

दुर्बुद्धिमकृतप्रज्ञं छन्नं कूपं तृणैरिव ।
विवर्जयीत मेधावी तस्मिन्मैत्री प्रणश्यति ॥ २९०

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

துர்புத்திமக்ருதப்ரக்ஞம் ச்சன்னம் கூபம் த்ருணைரிவ ।
விவர்ஜயீத மேதாவீ தஸ்மின் மைத்ரீ ப்ரணஶ்யதி ॥

மேதாவியானவன், கெட்ட புத்தி உடையவனையும் படிப்பில்லாமல் அறிவற்றவனாய் இருப்பவனையும், புல்லினால் மூடப்பட்ட காட்டிலுள்ள கிணற்றைப்போல் விலக்கவேண்டும். அவனிடத்தில் செய்யும் ஸ்நேஹம் கெட்டுவிடும்.

अवलिप्तेषु मूर्खेषु रौद्रसाहसिकेषु च ।
तथैवापेतधर्मेषु न मैत्रीमाचरेद्बुधः ॥ २९१

அவலிப்தேஷு மூர்க்கேஷு ரௌத்ரஸாஹஸிகேஷு ச।
ததைவாபேததர்மேஷு ந மைத்ரீமாசரேத் புத: ॥ 291

பண்டிதனானவன், கர்வம் கொண்டவர்களிடத்திலும் மூடர்களிடத்திலும் கோபமுள்ளவர்களிடத்திலும் ஆலோசிக்காமல் செய்கிறவர்களிடத்திலும் தர்மம் விலகினவர்களிடத்திலும் ஸ்நேஹம் செய்யக்கூடாது.

कृतज्ञं धार्मिकं सत्यमक्षुद्रं दृढभक्तिकम् ।
जितेन्द्रियं स्थितं स्थित्यां मित्रमत्यागि चेष्यते ॥ २९२

க்ருதக்ஞம் தார்மிகம் ஸத்யமக்ஷுத்ரம் த்ருடபக்திகம் ।
ஜிதேந்த்ரியம் ஸ்திதம் ஸ்தித்யாம் மித்ரமத்யாகி
சேஷ்யதே ॥ 292

நன்றி அறிந்தவனும் தர்மம் செய்பவனும் ஸத்யமுள்ளவனும் அற்பத்தனமில்லாதவனும் உறுதியான பக்தி உடையவனும் இந்திரியங்களை ஜெயித்தவனும் இருக்கவேண்டிய முறையில் இருப்பவனுமான மனிதனை வித்வான் மித்ரனாக விரும்பவேண்டும்.

मार्दवं सर्वभूतानां अनसूया क्षमा धृतिः ।
आयुष्याणि बुधाः प्राहुः मित्राणां चाविमानना ॥ २९३

மார்தவம் ஸர்வபூதாநாம் அனஸூயா க்ஷமா த்ருதி: ।
ஆயுஷ்யாணி புதா: ப்ராஹு: மித்ராணும் சாவிமானனு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எல்லா பிராணிகளும் அண்டும்படி அடக்கத்துடன் இருக்கும் குணமும் அஸூயை இல்லாமை, பொறுமை, தைர்யம் மித்ரர்களை அவமதியாமல் இருத்தல் இவைகளை பண்டிதர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பதற்குக் காரண மெனக் கூறுகிறார்கள்.

अपनीतं सुनीतेन योऽर्थं प्रत्यानिनीषते ।
मतिमास्थाय सुदृढां तदकापुरुषव्रतम् ॥ २९४

அபநீதம் ஸுநீதேந யோऽர்த்தம் ப்ரத்யாநிநீஷதே ।
மதிமாஸ்த்தாய ஸுத்ருடாம் ததகாபுருஷவ்ரதம் ॥ 294

எவன் அநீதியால் கெடுக்கப்பட்ட பொருளை நியாய மான முறையில் மறுபடி திருப்ப விரும்புகிறானோ, அவனுடைய அச்செய்கை உத்தம புருஷர்களின் விரதமாகிறது.

आयत्यां प्रतिकारज्ञः तदात्वे दृढनिश्चयः ।
अतीते कार्यशेषज्ञः नरोऽर्थैर्न प्रहीयते ॥ २९५

ஆயத்யாம் ப்ரதிகாரக்ஞः ததாத்வே த்ருடநிஶ்சயः ।
அதீதே கார்யஶேஷக்ஞः நரோऽர்த்தைர்ந
ப்ரஹீயதே ॥ 295

மேலே வரப்போகும் துக்கத்தைப் போக்குவதற்கு பரிஹாரத்தை அறிந்தவனும் இப்பொழுது நடக்கிற உறுதி யான நிச்சயமுள்ளவனும் தவறு நடந்தபின் மீதமுள்ள காரியத்தை சரியாக செய்ய அறிந்தவனுமான மனிதனை பொருள்கள் விடுவதில்லை.

कर्मणा मनसा वाचा यदभीक्ष्णं निषेवते ।
तदेवापहरत्येनं तस्मात्कल्याणमाचरेत् ॥ २९६

கர்மணா மனஸா வாசா யதபீக்ஷ்ணம் நிஷேவதே ।
ததேவாபஹரத்யேநம் தஸ்மாத் கல்யாணமாசரேத் ॥

செய்கையினாலும் மனஸ்ஸினாலும் வாக்கினாலும் எதை அடிக்கடி ஸேவிக்கிறானோ, அது அவனை கவருகிறது. (திரி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கரணத்தாலும் அடிக்கடி ஸேவிக்கும் வஸ்துவானது இவனை வசப்படுத்துகிறது எனக் கருத்து) ஆதலால் நல்ல காரியத்தையே செய்யவேண்டும்.

मङ्गलालम्भनं योगः श्रुतमुत्थानमार्जवम् ।
भूतिमेतानि कुर्वन्ति सतां चाभीक्ष्णदर्शनम् ॥ २९७

மங்கலாலம்பனம் யோகः ஶ்ருத முத்தான மார்ஜவம் ।
பூதிமேதானி குர்வந்தி ஸதாம் சாபீக்ஷ்ணதர்ஶனம் ॥ 297

தயிர், அருகம்பில், பசு முதலிய மங்கள திரவியங்களை தொடுவதும் யுக்தியும் சாஸ்திரமும் முயற்சியும் நேர்மையாக இருத்தலும் அடிக்கடி ஸாதுக்களை தரிசிப்பதும் ஆகிய இவைகள் ஐச்வர்யத்தைக் கொடுக்கின்றவைகள்.

अनिर्वेदः श्रियो मूलं लाभस्य च शुभस्य च ।
महान् भवत्यनिर्विण्णः सुखं चानन्त्यमश्नुते ॥ २९८

அநிர்வேதः ஶ்ரியோ மூலம் லாபஸ்ய ச ஶுபஸ்ய ச ।
மஹான் பவத்யநிர்விண்ணः ஸுகம்
சாநந்த்யமஶ்னுதே ॥ 298

மனச்சோர்வை அடையாமல் முயற்சிப்பது லாபத்திற்கும் ஐச்வர்யத்திற்கும் மங்களத்திற்கும் மூலமாகிறது. மனச்சோர்வை அடையாமல் முயற்சி செய்பவன் மஹானாகிறான். அளவற்ற சுகத்தையும் அடைகிறான்.

नातः परतरं किंचित् अन्यत्पथ्यतमं मतम् ।
प्रभविष्णोर्यथा तात क्षमा सर्वत्र सर्वदा ॥ २९९

நாதः பரதரம் கிஞ்சித் அந்யத் பத்யதமம் மதம் ।
ப்ரபவிஷ்ணோர் யதா தாத க்ஷமா ஸர்வத்ர ஸர்வதா ॥

சமர்த்தனாக இருப்பவனுக்கு எப்பொழுதும் எல்லோர் விஷயத்திலும் பொறுமையுடையவன் இருப்பதைக் காட்டிலும் மிக ஐச்வர்யத்தை அளிப்பதும் மிக்க நன்மையைச் செய்வதும் வேறு ஒன்றுமில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

क्षमेदशक्तः सर्वस्य शक्तिमान् धर्मकारणात् ।
अर्थानर्थौ समौ यस्य तस्य नित्यं क्षमा हिता ॥ ३००

க்ஷமேதஶக்த: ஸர்வஸ்ய ஶக்திமான் தர்மகாரணாத் ।
அர்த்தானர்த்தௌ ஸமௌ யஸ்ய தஸ்ய நித்யம்
க்ஷமா ஹிதா ॥ 300

அசக்தன் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். சக்தி உள்ளவன் தர்மத்தின் காரணமாகப் பொறுத்துக்கொள்ள வேண்டும். எவனுக்கு அர்த்தமும் அனர்த்தமும் சமமோ அவனுக்கு எப்பொழுதும் பொறுமை அனுகூலமானது.

यत्सुखं सेवमानोऽपि धर्मार्थाभ्यां न हीयते ।
कामं तदुपसेवेत न मूढव्रतमाचरेत् ॥ ३०१

யத்ஸுகம் ஸேவமானோऽபி தர்மார்த்தாப்யாம்
ந ஹீயதே ।
காமம் ததுபஸேவேத ந மூடவ்ரதமாசரேத் ॥ 301

ஸகல ஸுகமும் இருந்தாலும் தர்மார்த்தங்களை விட்டுவிடக் கூடாது. அதை விடாமல் இருந்தால் அந்த ஸுகம் துடர்ந்து கிடைக்கும். மூடர்கள் செய்யும் கார்யத்தை செய்யக்கூடாது (அதாவது சுகம்தான் இருக்கிறதே தர்மம் எதற்கு என எண்ணி தர்மத்தைக் கைவிடக்கூடாது.

दुःखार्तेषु प्रमत्तेषु नास्तिकेष्वलसेषु वा ।
न श्रीर्वसत्यदान्तेषु ये चोत्साह विवर्जिताः ॥ ३०२

துக்கார்த்தேஷு ப்ரமத்தேஷு
நாஸ்திகேஷ்வலஸேஷு வா ।
ந ஶ்ரீர்வஸத்யதாந்தேஷு யே சோத்ஸாஹ
விவர்ஜிதா: ॥ 302

எப்பொழுதும் துக்கத்துடன் இருப்பவர்களிடத்திலும் மதம் கொண்டவர்களிடத்திலும் நாஸ்திகர்களிடத்திலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சோம்பேரிகளிடத்திலும், அடக்கமில்லாதவர்களிடத்திலும் ஊக்கமில்லாதவர்களிடத்திலும் ஐச்வர்யம் நிற்கிறதில்லை.

आर्जवेन नरं युक्तमार्जवात्सव्यपत्रपम् ।
अशक्तं मन्यमानास्तु धर्षयन्ति कुबुद्धयः ॥ ३०३

ஆர்ஜவேந நரம் யுக்தம் ஆர்ஜவாத் ஸவ்யபத்ரபம் ।
அஶக்தம் மன்யமாநாஸ்து தர்ஷயந்தி குபுத்தய: ॥ 303

நேர்மையுடையவனும் நேர்மையால் அகார்யங்களில் லஜ்ஜையுள்ளவனுமான மனிதனை துர்ப்புத்தியுள்ளவர்கள் சக்தியில்லாதவனாக நினைத்து அவமதிக்கிறார்கள்.

अत्यार्यमतिदातारमतिशूरमतिव्रतम् ।
प्रज्ञाभिमानिनं चैव श्रीर्भयान्नोपसर्पति ॥ ३०४

அத்யார்யமதிதாதாரம் அதிஶூரமதிவ்ரதம் ।
ப்ரக்ஞாபிமாநிநஞ்சைவ ஸ்ரீர்பயாந்நோபஸர்ப்பதி ॥ 304

ரொம்பவும் வெகுளியாக இருப்பவனையும் அதிகமாகக் கொடுப்பவனையும் அதிசூரனையும் ரொம்பவும் நியமத்தை அனுஷ்டிப்பவனையும் தானாகவே தன்னை பெரியவனாக நினைத்து, கர்வம் கொண்டவனையும் லக்ஷ்மியானவள் பயத்தினால் நெருங்குவதில்லை.

न चातिगुणवत्स्वेषा नात्यन्तं निर्गुणेषु च ।
नैषा गुणान्कामयते नैर्गुण्यान्नानुरज्यते ॥
उन्मत्ता गौरिवान्धा श्रीः क्वचिदेवावतिष्ठते ॥ ३०५

ந சாதிகுணவத்ஸ்வேஷா நாத்யந்தம் நிர்குணேஷு ச ।
நைஷா குணான் காமயதே நைர்குண்யாந் நாநுரஜ்யதே ॥
உன்மத்தா கௌரிவாந்தா
ஸ்ரீ: க்வசிதேவாவதிஷ்டதே ॥ 305

மஹாலக்ஷ்மியானவள் நல்ல குணமுள்ளவர்களிடத்திலும் தங்குவதில்லை. குணமே இல்லாதவர்களிடத்திலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தங்குவதில்லை. இவள் குணங்களை விரும்புவதில்லை. குண மில்லாவிட்டாலும் பற்றுகிறதில்லை. பித்துப் பிடித்த இவள் கண்ணில்லாத பசுப்போல் ஏதோ ஓர் இடத்திலேயே தங்கி இருக்கிருள்.

अग्निहोत्रफला वेदाः शीलवृत्तफलं श्रुतम् ।
रतिपुत्रफला दाराः दत्तभुक्तफलं धनम् ॥ ३०६

அக்னிஹோத்ரபலா வேதா: ஶீலவ்ருத்தபலம் ஶ்ருதம்
ரதிபுத்ரபலா தாரா: தத்தபுக்தபலம் தனம் ॥ 306

வேதங்கள் கற்றதின் பலம் அக்னி ஹோத்ரமேயாகும். கல்வியைக் கற்றதின் பயன் நல்ல நடத்தையும் நல்ல எண்ணமுமேயாகும். மனைவியை அடைந்ததின் பயன் காம ஸுகமும் புத்ரனுமேயாகும். பொருள் சம்பாதித்ததின் பயன் தானமும், தான் அனுபவிப்பதுமேயாகும்.

अधर्मोपार्जितैरर्थैः यः करोत्यौर्ध्वदेहिकम् ।
न स तस्य फलं प्रेत्य भुङ्क्तेऽर्थस्य दुरागमात् ॥ ३०७

அதர்மோபார்ஜிதைரர்த்தை: ய:
கரோத்யௌர்த்வதேஹிகம் ।
ந ஸ தஸ்ய பலம் ப்ரேத்ய புங்க்தேऽர்த்தஸ்ய
துராகமாத் ॥ 307

அதர்மத்தால் ஸம்பாதிக்கப்பட்ட பொருள்களால் எவன் ஒருவன் பரலோகத்திற்கான கர்மங்களைச் செய்கிருனே அவன் பரலோகம் சென்று அதன் பயனை அடைவதில்லை. (அதற்குக் காரணம் கெட்ட வழியில் அந்தப் பணம் வந்ததேயாகும்.)

कान्तारे वनदुर्गेषु कृच्छ्रास्वापत्सु संभ्रमे ।
उद्यतेषु च शस्त्रेषु नास्ति सत्ववतां भयम् ॥ ३०८

காந்தாரே வனதுர்கேஷு க்ருச்ராஸ்வாபத்ஸு
ஸம்ப்ரமே ।
உத்யதேஷு ச ஶஸ்த்ரேஷு நாஸ்தி ஸத்வவதாம் பயம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸத்வ குணமுள்ளவர்களுக்கு காடுகளிலும் வனத்திலுள்ள செல்லமுடியாத புதர் முதலான இடங்களிலும் கஷ்டமான ஆபத்துக்களிலும் பரபரப்பை உண்டு பண்ணும் காரியங்களிலும் ஆயுதங்கள். ஓங்கப்பட்ட காலங்களிலும் பயமில்லை.

उत्थानं संयमो दाक्ष्यमप्रमादो धृतिः स्मृतिः ।
समीक्ष्य च समारम्भा विद्धि मूलं भवस्य तु ॥ ३०९

உத்தானம் ஸம்யமோ தாக்ஷ்யமப்ரமாதோ
த்ருதிஃ ஸ்மிருதிஃ ।
ஸமீக்ஷ்ய ச ஸமாரம்பா வித்தி மூலம் பவஸ்ய து ।। 309

முயற்சி, இந்திரியஜயம், திறமை, அஜாக்ரதையாக இருத்தல், தைரியம், ஞாபக சக்தி, நன்கு ஆலோசித்து ஆரம்பித்தல் இவைகளை ஐஸ்வர்யத்துக்குக் காரணமென அறியவும்.

तपोबलं तापसानां ब्रह्म ब्रह्मविदां बलम् ।
हिंसा बलमसाधूनां क्षमा गुणवतां बलम् ॥ ३१०

தபோபலம் தாபஸாநாம் ப்ரம்ம ப்ரம்மவிதாம் பலம் ।
ஹிம்ஸா பலமஸாதூனும் க்ஷமா குணவதாம் பலம் ।।

தபஸ்விகளுக்கு தவமே பலம். வேத வித்துக்களுக்கு வேதம் பலம். துஷ்டர்களுக்கு ஹிம்ஸையானது பலம். நற்குணமுள்ளவர்களுக்கு பொறுமை பலம்.

अष्टौ तान्यव्रतघ्नानि आपोमूलं फलं पयः ।
हविर्ब्राह्मणकाम्या च गुरोर्वचनमौषधम् ॥ ३११

அஷ்டௌ தாங்யவ்ரதக்நாநி ஆபோமூலம் பலம் பயஃ।
ஹவிர் ப்ராம்மணகன்யா ச குரோர்வசனமௌஷதம் ।।

ஜலம், கிழங்கு, பழம், பால், ஹவிஸ் பிராம்மணனுடைய அனுமதி, குருவின் சொல், மருந்து ஆகிய இந்த எட்டையும் நற்கார்யங்கள் செய்யும்போது இவைகளை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உபயோகப்படுத்தினுல் அந்த கர்மங்களுக்கு கெடுதி வராதெனக் கருத்து. ஆதலால் தான் யாகம் முதலிய சிறந்த கர்ம்மாக்களில் மஹான்களும் ருத்விக்களாக இருக்கும்போது பழம், பால், ஹவிஸ் முதலியவற்றை நடுவில் சாப்பிடுவார்கள். அதனுல் அந்த கர்மங்களுக்கு குறைவு வராது.

न तत्परस्य संदध्यात् प्रतिकूलं यदात्मनः ।
संग्रहेणैव धर्मः स्यात्कामादन्यः प्रवर्तते ॥ ३१२

ந தத்பரஸ்ய ஸந்தத்யாத் ப்ரதிகூலம் யதாத்மனঃ ।
ஸங்க்ரஹேணைவ தர்மঃ ஸ்யாத் காமாதந்யঃ
ப்ரவர்த்ததே ॥ 312

தனக்கு எது கெடுதியோ அதைப் பிறருக்குச் செய்ய நினைக்கக்கூடாது. இந்திரிய ஜெயத்தினுல்தான் தர்மம் உண்டாகும். அதர்மமானது காமத்தினுல்தான் உண்டாகிறது.

अक्रोधेन जयेत्क्रोधं असाधुं साधुना जयेत् ।
जयेत्कदर्यं दानेन जयेत्सत्येन चानृतम् ॥ ३१३

அக்ரோதேன ஜயேத் க்ரோதம் அஸாதும் ஸாதுனு
ஜயேத் ।
ஜயேத் கதர்யம் தானேன ஜயேத் ஸத்யேந
சாந்ருதம் ॥ 313

ஸேதுஸாமாவின் ஸாரத்தைக் கூறுகிருர். கோபமின்மையால் கோபத்தை ஜெயிக்கவேண்டும். துஷ்டனை நல் ஒழுக்கத்தால் ஜெயிக்கவேண்டும். லோபியை தானத்தால் ஜெயிக்கவேண்டும். பொய்யை ஸத்யத்தால் ஜெயிக்க வேண்டும்.

स्त्रीधूर्तकेऽलसे भीरौ चण्डे पुरुषमानिनी ।
चौरे कृतघ्ने विश्वासो न कार्यो न च नास्तिके ॥ ३१४

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

**ஸ்த்ரீதூர்த்தகேऽலஸே பீரௌ சண்டே புருஷமானினீ ।
சௌரே க்ருதக்னே விஸ்வாஸோ ந கார்யோ ந ச
நாஸ்திகே ॥ 314**

ஸ்திரீகளிடத்திலும், வஞ்சகனிடத்திலும், சோம்பேரியினிடத்திலும் கொடுமையுள்ளவனிடத்திலும் தான் ஒருவனே ஆண்பிள்ளை என்ற கர்வம் கொண்டவனிடத்திலும், திருடனிடத்திலும் நன்றி மறந்தவனிடத்திலும் நாஸ்திகனிடத்திலும் நம்பிக்கை வைக்கக்கூடாது.

**अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि संप्रवर्धन्ते कीर्तिरायुर्यशो बलम् ॥ ३१५**

**அபிவாதன ஶீலஸ்ய நித்யம் விருத்தோபஸேவிந: ।
சத்வாரி ஸம்ப்ரவர்த்தந்தே கீர்த்திராயுர் யஶோ பலம் ॥**

தினமும் பெரியோர்களையும் தெய்வத்தையும் நமஸ்கரிக்கின்றவனுக்கும் நித்யம் பெரியோர்களை சேவிக்கின்றவனுக்கும் கீர்த்தியும் தானம் முதலியவற்ருல் ஏற்படும் புகழும் ஆயுஸ்ஸும் கல்வியினுல் ஏற்படும் புகழும் சரீர பலமும் ஆகிய இந்த நான்கும் தினந்தோறும் விருத்தியாகும்.

**अतिक्लेशेन येऽर्थाः स्युः धर्मस्यातिक्रमेण वा ।
शत्रोर्वा प्रणिपातेन मा स्म तेषु मनः कृथाः ॥ ३१६**

**அதிக்லேஶேன யேऽர்த்தா: ஸ்யு: தர்மஸ்யாதிக்ரமேண ச
ஶத்ரோர்வா ப்ரணிபாதேன மா ஸ்ம தேஷு மந:
க்ருதா: ॥ 316**

மிகுந்த கஷ்டத்தைத் தரும் கார்யத்தால் எந்தப் பொருள் கிடைக்குமோ தர்மத்தை மீறுவதால் எந்தப் பொருள் கிடைக்குமோ, சத்ருக்களை வணங்குவதால் எந்தப் பொருள் கிடைக்குமோ அப்பொருளை அடைய விரும்பாதீர்.

**अविद्यः पुरुषः शोच्यः शोच्यं मैथुनमप्रजम् ।
निराहाराः प्रजाः शोच्याः शोच्यं राष्ट्रमराजकम् ॥ ३१७**

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவித்யா: புருஷ: ஶோச்ய: ஶோச்யம்
மைதுனமப்ரஜம் ।
நிராஹாரா: ப்ரஜா: ஶோச்யா: ஶோச்யம்
ராஷ்ட்ரமராஜகம் ॥ 317

கல்வியற்ற மனிதன் துக்கிக்கத் தகுந்தவன். குழந்தையற்ற மனைவியின் சேர்க்கை துக்கிக்கத் தகுந்தது. உணவற்ற பிரஜைகள் துக்கிக்கத் தகுந்தவர்கள். அரசனில்லாத நாடு துக்கிக்கத் தகுந்தது.

अध्वा जरा देहवतां पर्वतानां जलं जरा ।
असंभोगो जरा स्त्रीणां वाक्शल्यं मनसो जरा ॥ ३१८

அத்வா ஜரா தேஹவதாம் பர்வதாநாம் ஜலம் ஜரா ।
அஸம்போகோ ஜரா ஸ்திரீணும் வாக்ஶல்யம்
மநஸோ ஜரா ॥ 318

மனிதர்களுக்கு நடப்பதால் கிழத்தனம் ஏற்படும். மலைகளுக்கு ஜலத்தால் ஜரை ஏற்படும். ஸ்திரீகளுக்கு போகமின்மையால் ஜரை ஏற்படும். மனதிற்கு கடுஞ்சொல்லால் ஜரை ஏற்படும்.

अनाम्नायमला वेदा ब्राह्मणस्याव्रतं मलम् ।
मलं पृथिव्या बाह्लीकाः पुरुषस्यानृतं मलम् ॥
कौतूहलमला साध्वी विप्रवासमलाः स्त्रियः ।
सुवर्णस्य मलं रूप्यं रूप्यस्यापि मलं त्रपु ।
ज्ञेयं त्रपुमलं सीसं सीसस्यापि मलं मलम् ॥ ३१९

அநாம்நாயமலா வேதா பிராம்மணஸ்யாவ்ரதம் மலம்।
மலம் ப்ருதிவ்யா பாஹ்லீகா: புருஷஸ்யாந்ருதம் மலம்।
கௌதூஹலமலா ஸாத்வீ விப்ரவாஸமலா: ஸ்திரிய: ।
ஸுவர்ணஸ்ய மலம் ரூப்யம் ரூப்யஸ்யாபி மலம் த்ரபு ।
க்ஞேயம் த்ரபுமலம் ஸீஸம் ஸீஸஸ்யாபி மலம் மலம் ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதங்களுக்கு அப்யஸிக்காமை களங்கம், பிராம் மணனுக்கு களங்கம் விரதமில்லாமை, பூமிக்கு பாஹ்லீக தேசத்து ஜனங்கள் மலம் (அழுக்கு). (ஸிந்து நதியைச் சேர்த்து ஆறு நதிகள் சேருமிடத்திற்கு பாஹ்லீகம் எனப் பெயர். அங்குள்ள சிலர் தருவதாகச் சொல்லி பின்பு கொடுக்கமாட்டார்கள் என அர்ஜுனமிஸ்ர கிருதடீகையில் கூறப்பட்டுள்ளது.) மனிதனுக்கு பொய் மலம் (அழுக்கு), பதிவ்ரதைகளுக்கு ஆடம்பரமாக இருத்தலில் ஆசை மலம், ஸ்திரீகளுக்கு பர்த்தா இல்லாமல் வெளிதேசம் செல்வது மலம், தங்கத்திற்கு வெள்ளி மலம், வெள்ளிக்கு ஈயம் மலம், ஈயத்திற்கு காரீயம் மலம், காரீயத்துக்கு அழுக்கு மலம்.

न स्वप्नेन जयेन्निद्रां न कामेन जयेत्स्त्रियः ।
नेन्धनेन जयेदग्निं न पानेन सुरां जयेत् ॥ ३२०

ந ஸ்வப்நேந ஜயேந்நித்ராம் ந காமேந ஜயேத்ஸ்திரியஃ
நேந்தநேந ஜயேதக்நிம் ந பாநேந ஸுராம் ஜயேத் ॥ 320

படுப்பதால் தூக்கத்தை ஜெயிக்கமுடியாது, காமத்தால் ஸ்திரீகளை ஜெயிக்கமுடியாது, விறகினுல் அக்னியை ஜயிக்கமுடியாது, குடிப்பதால் கள்ளை ஜயிக்கமுடியாது.

यस्य दानजितं मित्रं शत्रवो युधि निर्जिताः ।
अन्नपानजिता दाराः सफलं तस्य जीवितम् ॥ ३२१

யஸ்ய தானஜிதம் மித்ரம் ஶத்ரவோ யுதி நிர்ஜிதாஃ ।
அன்னபானஜிதா தாரா: ஸபலம் தஸ்ய ஜீவிதம் ॥ 321

மித்ரனை தானத்தால் ஜயித்தவனும், சத்ருக்களை யுத்தத்தால் ஜயித்தவனும், தாரத்தை அன்னபானத்தால் ஜயித்தவனுமாகியவர்களின் வாழ்வு பயனுள்ளதாகும்.

सहस्रिणोऽपि जीवन्ति जीवन्ति शतिनस्तथा ।
धृतराष्ट्र विमुञ्चेच्छां न कथञ्चिन्न जीव्यते ॥ ३२२

ஸஹஸ்ரிணோऽபி ஜீவந்தி ஜீவந்தி ஶதினஸ்ததா ।
த்ருதராஷ்ட்ர விமுஞ்சேச்சாம் ந கதஞ்சிந்ந ஜீவ்யதே ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

.... ஆயிரக்கணக்கான பொருளுள்ளவர்களும் ஜீவிக்சின்றனர், நூற்றுக்கணக்கான பொருளுள்ளவர்களும் ஜீவிக்கின்றனர். ஓ திருதராஷ்டிரனே, ஆசையை விடும். எப்படியாவது ஜீவிக்காமல் ஒருவருமில்லை.

यत्पृथिव्यां व्रीहियवं हिरण्यं पशवः स्त्रियः ।
नालमेकस्य तत्सर्वमिति पश्यन्न मुह्यति ॥ ३२३

யத்ப்ருதிவ்யாம் வ்ரீஹியவம் ஹிரண்யம் பஶவ:
ஸ்திரிய: ।
நாலமேகஸ்ய தத்ஸர்வமிதி பஶ்யந்ந முஹ்யதி ॥ 323

பூமியில் உள்ள நெல், யவை, பசுக்கள், ஸ்வர்ணம் ஸ்திரீகள் இவை எல்லாம் ஒருவனுக்கு போரும் என்ற எண்ணம் வராது என்று உணர்ந்தால் அவன் ஆசையின் மோஹத்தை அடையமாட்டான்.

योऽभ्यर्चितः सद्भिरसज्जमानः करोत्यर्थं शक्तिमहापयित्वा ।
क्षिप्रं यशस्तं समुपैति सन्तमलं प्रसन्ना हि सुखाय सन्तः ॥ ३२४

யோப்யர்சித: ஸத்பிரஸஜ்ஜமான: கரோத்யர்த்தம்
ஶக்திமஹாபயித்வா ।
க்ஷிப்ரம் யஶஸ்தம் ஸமுபைதி ஸந்தமலம் ப்ரஸந்நா
ஹி ஸுகாய ஸந்த: ॥ 324

எவன் ஒருவன் ஸாதுக்களால் பூஜிக்கப்பட்டும் அந்த பூஜையில் பற்றுதல் இல்லாமல் தன் சக்திக்குத் தக்கவாறு கார்யங்களை செய்கிருனோ அந்த சாதுவை புகழ் தானுகவே வந்து அடைகிறது. அவன் விஷயத்தில் சுகம் கிடைக்கும் படி ஸாதுக்கள் அருள் புரிகின்றனர்.

महान्तमप्यर्थमधर्मयुक्तं यः संत्यजत्यनपाकृष्ट एव ।
सुखं सुदुःखान्यवमुच्य शेते जीर्णां त्वचं सर्प इवावमुच्य ॥ ३२५

மஹாந்தமப்யர்த்தமதர்மயுக்தம்
ய: ஸ்ந்த்யஜத்யநபாக்ருஷ்ட ஏவ ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸுகம் ஸுதுக்காங்யவமுச்ய ஶேதே
ஜீர்ணாம் த்வசம் ஸர்ப்ப இவாவமுச்ய ॥ 325

அதர்மத்தால் நிரம்பக் கிடைக்கும் பொருளில் ஆசையினால் இழுக்கப்படாமல் எவனொருவன் அந்தப் பொருளை விட்டுவிடுகிறானோ அவன் ஸர்ப்பமானது ஜீர்ணமான தோலை விட்டு சுகமாகத் தூங்குவதுபோல் அவன் சுகமாகத் தூங்குவான்.

अनृते च समुत्कर्षो राजगामि च पैशुनम् ।
गुरोश्चालीकनिर्बन्धः समानि ब्रह्महत्यया ॥ ३२६

அந்ருதே ச ஸமுத்கர்ஷோ ராஜகாமி ச பைஶுநம் ।
குரோஶ்சாலீகநிர்ப்பந்த꞉ ஸமாநி ப்ரம்ஹஹத்யயா ॥

பொய் சொல்லிக் கிடைக்கும் மேன்மை, அரசர்களிடத்தில் ஒருவனைப் பற்றி அசூயையினால் குற்றத்தைக் கூறிக் கெடுதல் செய்வது, தாய், தந்தை, ஆசார்யன் முதலியவர்களிடத்திலுள்ள குறைகளை வெளியில் கூறுவது (அல்லது தவறான விஷயத்தைச் சொல்லும்படி அவர்களை நிர்ப்பந்திப்பது) ஆகிய இம்மூன்றும் ப்ரம்மஹத்திக்கு ஒப்பானது.

असूयैकपदं मृत्युः अतिवादः श्रियो वधः ।
अशुश्रूषा त्वरा श्लाघा विद्यायाः शत्रवस्त्रयः ॥ ३२७

அஸூயைகபதம் ம்ருத்யு꞉ அதிவாத꞉ ஶ்ரியோ வத꞉ ।
அஶுஶ்ரூஷா த்வரா ஶ்லாகா வித்யாயா꞉
ஶத்ரவஸ்த்ரய꞉ ॥ 327

பொறாமை ஒன்றே ஆயுஸ்ஸை அழிக்கும் மிருத்யு. அதிகப் பேச்சானது ஸம்பத்தை அழித்துவிடும். குருவுக்கு பணிவிடை செய்யாமை, பரபரப்பு, தற்புகழ்ச்சி இவைகள் மூன்றும் கல்விக்கு சத்ருக்களாகும்.

आलस्यं मदमोहौ च चापलं गोष्ठिरेव च ।
स्तब्धता चाभिमानित्वं तथाऽत्यागित्वमेव च ॥
एते वै सप्त दोषाः स्युः सदा विद्यार्थिनां मताः ॥ ३२८

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆலஸ்யம் மதமோஹௌ ச சாபலம் கோஷ்டிரேவ ச ।
ஸ்தப்ததா சாபிமாநித்வம் ததாऽத்யாகித்வமேவ ச ॥
ஏதே வை ஸப்த தோஷா: ஸ்யு: ஸதா
வித்யார்த்திநும் மதா: ॥ 328

கல்வி கற்பவனுக்கு இடையூருக உள்ள தோஷங்களைக் கூறுகிறர்: சோம்பல், மதம், மோஹம், சாபல்யம், வீண் பொழுதுபோக்குக் கூட்டம், திமிர், அஹங்காரம், தியாகியாக இருப்பது இவை ஏழும் கல்விக்கு இடைஞ்சலாகும்.

सुखार्थिनः कुतो विद्या नास्ति विद्यार्थिनः सुखम् ।
सुखार्थी वा त्यजेद्विद्यां विद्यार्थी वा त्यजेत् सुखम् ॥ ३२९

ஸுகார்த்திந: குதோ வித்யா நாஸ்தி வித்யார்த்திந:
ஸுகம் ।
ஸுகார்த்தீ வா த்யஜேத் வித்யாம் வித்யார்த்தீ வா
த்யஜேத் ஸுகம் ॥ 329

சுகத்தை விரும்புகிறவனுக்கு வித்யை ஏது, வித்யையை விரும்புகிறவனுக்கு சுகமில்லை, சுகத்தை விரும்பினுல் வித்யையை விடவேண்டும். வித்யையை விரும்பினுல் சுகத்தை விடவேண்டும்.

नाग्निस्तृप्यति काष्ठानां नापगानां महोदधिः ।
नान्तकः सर्वभूतानां न पुंसां वामलोचना ॥ ३३०

நாக்நிஸ்திருப்யதி காஷ்டாநாம் நாபகாநாம்
மஹோததி: ।
நாந்தகஸ்ஸர்வபூதாநாம் ந பும்ஸாம் வாமலோசனு ॥

எவ்வளவு கட்டைகளைப் போட்டாலும் அக்நி திருப்தியாவதில்லை, எவ்வளவு நதிகள் வந்து விழுந்தாலும் ஸமுத்ரம் போதுமென நினைப்பதில்லை, எல்லா பிராணிகளை அழித்தாலும் மிருத்யு ஆகிவிட்டதென திருப்தி அடைவதில்லை, ஸ்திரீகள் புருஷர்களின் போகம் போருமென நினைப்பதில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

आशा धृतिं हन्ति समृद्धिमन्तकः क्रोधः श्रियं हन्ति यशः कदर्यता
अपालनं हन्ति पशूंश्च राजन् एकः क्रुद्धो ब्राह्मणो हन्ति राष्ट्रम् ॥

ஆஶா த்ருதிம் ஹந்தி ஸம்ருத்திமந்தக:
க்ரோத: ஶ்ரியம் ஹந்தி யஶ: கதர்யதா
அபாலனம் ஹந்தி பஶூம்ஶ்ச ராஜன்
ஏக: க்ருத்தோ ப்ராம்ஹணோ ஹந்தி ராஷ்ட்ரம்

ஆசை தைரியத்தை அழிக்கும். எவ்வளவு உறவினர்கள் இருந்தாலும் யமன் அழிக்கிருன். கோபமானது ஸ்ரீயை அழிக்கிறது. காக்காமல் இருத்தல் பசுக்களை அழிக்கும். (அடிக்கடி பார்த்து ஆகாரம் ஜலம் முதலியவற்றைக் கொடுத்து பசுக்களை ரக்ஷிக்க வேண்டுமெனக் கருத்து) பீஷ்மரும் மற்ருெரு இடத்தில் பசுக்களுக்கு ஆகாரம் கொடுத்தால் ஸ்ரீமஹாலக்ஷ்மி தங்குவாளென்றும், பசுக்களுக்காக சிலவு செய்தது வீணுகாதென்றும் (**गावो लक्ष्म्यास्तथा मूलं गोषुदत्तं न नश्यति ॥**) **காவோ லக்ஷ்மியாஸ்ததாமூலம் கோஷுதத்தம் ந நஶ்யதி** எனக் கூறியுள்ளார். கோபமடைந்த ஒரு பிராமணன் இராஜ்யத்தையே அழித்துவிடுவான்.

अजाश्च कांस्यं रजतं च नित्यं मध्वाकर्षः शकुनिः श्रोत्रियश्च ।
वृद्धो ज्ञातिरवसन्नः कुलीनः एतानि ते सन्तु गृहे सदैव ॥ ३३२

அஜாஶ்ச காம்ஸ்யம் ரஜதஞ்ச நித்யம் மத்வாகர்ஷ:
ஶகுநி: ஶ்ரோத்ரியஶ்ச ।
வ்ருத்தோ க்ஞாதிரவஸன்ன: குலீந: ஏதாநி தே
ஸந்து க்ருஹே ஸதைவ ॥ 332

ஓ பாரதரே, ஆடுகள், வெண்கலப் பாத்திரம், வெள்ளி, தேன், விஷத்தைக் காட்டும் சகோரபக்ஷி, (அரசர்கள் உண்ணும்போது சகோரபக்ஷியை பக்கத்தில் வைத்துக் கொள்ளுவார்கள் உணவில் விஷம் கலந்திருந்தால் அந்த பக்ஷியின் கண்கள் சிவந்துவிடுமாம்) வேதம்கற்ற அந்தணன் வயது முதிர்ந்த பங்காளி சிரமதசயை அடைந்த நற்குலத்தில் பிறந்தோர்கள், இவர்கள் எல்லாம் எப்பொழுதும் உன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீட்டில் இருக்கவேண்டும் (அதனால் நல்ல பயன்கள் ஏற்படு மெனக் கருத்து)

अजोक्षा चन्दनं वीणा आदर्शो मधुसर्पिषी ।
विषमौदुम्बरं शङ्खः स्वर्णनाभोथ रोचना ॥
गृहे स्थापयितव्यानि धन्यानि मनुरब्रवीत् ।
देवब्राह्मणपूजार्थं अतिथीनां च भारत ॥ ३३३

அஜோக்ஷா சந்தனம் வீணா ஆதர்ஶோ மதுஸர்பிஷீ ।
விஷமௌதும்பரம் சங்கः ஸ்வர்ணநாபோத ரோசனா ।
க்ருஹே ஸ்தாபயிதவ்யாநி தன்யாநி மநுரப்ரவீத்
தேவப்ராம்ஹண பூஜார்த்தம் அதிதீநாஞ்ச பாரத ॥ 333

ஓ பாரதரே, ஆடு, காளை, சந்தனம், வீணை, கண்ணாடி, தேன், நெய், உலோகம், தாம்பர பாத்திரம், வலம்புரிச் சங்கம், சாளகிராமம், கோரோசனை இவைகளை தேவபிராம்மண அதிதி பூஜைக்காக வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டும். இவைகள் வீட்டில் இருந்தால் நிரம்பப் பொருள் கிடைக்குமென்றும் மநு கூறியுள்ளார்.

इदं च त्वां सर्वपरं ब्रवीमि पुण्यं पदं तात महा विशिष्टम् ।
न जातु कामान्न भयान्न लोभात् धर्मं जह्याज्जीवितस्यापि हेतोः ॥

இதம் ச த்வாம் ஸர்வபரம் ப்ரவீமி புண்யம் பதம்
தாத மஹாவிஶிஷ்டம் ।
ந ஜாது காமாந்ந பயாந்ந லோபாத் தர்மம் ஜஹ்யாத்
ஜீவிதஸ்யாபி ஹேதோः ॥ 334

எல்லா தர்மத்திற்கும் மேற்பட்டதும் மிகுந்த புண்யத் துக்கு இருப்பிடமும் சிறந்த மங்களங்களை அளிப்பதுமான இதை உமக்குக் கூறுகிறேன். அது என்னவென்றால் ஒருக் காலும் காமத்தாலோ, பயத்தாலோ லோபத்தாலோ உயிரின் நிமித்தமாகக் கூட தர்மத்தை விடக்கூடாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

नित्यो धर्मः सुखदुःखे त्वनित्ये जीवो नित्यः हेतुरस्य त्वनित्यः ।
त्यक्त्वाऽनित्यं प्रतितिष्ठस्व नित्ये सन्तुष्य त्वं तोषपरो हि लाभः ॥

நித்யோ தர்ம: ஸுகது:க்கே த்வநித்யே ஜீவோ நித்ய:
ஹேதுரஸ்ய த்வநித்ய: ।
த்யக்த்வா ऽநித்யம் ப்ரதிதிஷ்டஸ்வ நித்யே
ஸந்துஷ்ய த்வம் தோஷபரோ ஹி லாபா: ॥ 335

தர்மம் அழியாமல் என்றும் இருக்கக்கூடியது. அதாவது பரலோகத்திலும் வருமெனக் கருத்து, நித்யமான மோக்ஷத்திற்கும் காரணமாதலால் தர்மத்தை நித்யமெனக் கூறப்பட்டது. ஸுகம், துக்கம் இரண்டும் அனித்யங்களானதுகள் ஜீவன் நித்யமானது. ஜீவனுக ஆவதற்குக் காரணமான அவித்யையானது அநித்யமானது. அநித்யமான ஸுகதுக்கம் அவித்யை இவைகளைத் தள்ளிவிட்டு, நித்யமான தர்மத்திலும் ஆத்மாவிலும் நிலைத்திரும். சந்தோஷத்தை அடையும், சந்தோஷமாய் இருத்தல்தான் பெரும்லாபம்.

महाबलान्पश्य महानुभावान् प्रशास्य भूमिं धनधान्यपूर्णाम् ।
राज्यानि हित्वा विपुलांश्च भोगान् गतान्नरेन्द्रान् वशमन्तकस्य ॥

மஹாபலாந் பஶ்ய மஹாநுபாவாந் ப்ரஶாஸ்ய பூமிம்
தநதாந்யபூர்ணும் ।
ராஜ்யாநி ஹித்வா விபுலாம்ஶ்ச போகாந்
கதாந் நரேந்த்ராந் வஶமந்தகஸ்ய ॥ 336

பல அரசர்கள் மிக்க பலசாலிகளாகவும் மிகுந்த மகிமை வாய்ந்தவர்களாகவும் தனங்களாலும் தான்யங்களாலும் பூர்ணமாய் இருக்கிற பூமியை ஆண்டு தாங்கள் ஆண்ட ராஜ்யங்களையும் விரிவான போகங்களையும் விட்டுவிட்டு யமனுக்கு வசமானதை ஆலோசித்துப்பாரும்.

अन्यो धनं प्रेतगतस्य भुङ्क्ते वयांसि चाग्निश्च शरीरधातून् ।
द्वाभ्यामयं सह गच्छत्यमुत्र पुण्येन पापेन च वेष्ट्यमानः ॥ ३३७

அந்யோ தனம் ப்ரேதகதஸ்ய புங்க்தே வயாம்ஸி
சாக்னிஶ்ச ஶரீரதாதூந் ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்வாப்யாமயம் ஸஹ கச்சத்யமுத்ர புண்யேந
பாபேந ச வேஷ்ட்யமாநः ॥ 337

மரித்தவனுடைய பொருளை மற்ற யாராவது அநுபவிக்கிறான், மரித்தவனுடைய சரீரத்தையும் சரீர தாதுக்களையும் பக்ஷிகளும் அக்நியும் பக்ஷிக்கின்றன. புண்யத்யாலும் பாபத்தாலும் சூழப்பட்டு இரண்டுடன் பரலோகம் செல்கிறான்.

उत्सृज्य विनिवर्तन्ते ज्ञातयः सुहृदयः सुताः ।
अपुष्पानफलान् वृक्षान् यथा तात पतत्रिणः ॥ ३३८

உத்ஸ்ருஜ்ய விநிவர்த்தந்தே க்ஞாதய:
ஸுஹ்ருதய: ஸுதா: ।
அபுஷ்பாநபலாந் விருக்ஷாந் யதா தாத பதத்ரிண: ॥ 338

மரித்தவனுடைய சரீரத்தை சுடுகாட்டில் போட்டுவிட்டு ஞாதிகளும், ஸ்நேகிதர்களும், பிள்ளைகளும் திரும்பி வந்துவிடுகின்றனர். புஷ்பமும், பழமும் இல்லாத மரங்களை பறவைகள் விட்டுவிடுவது போல் திரும்பி வந்துவிடுகின்றனர்.

अग्नौ प्रास्तं तु पुरुषं कर्मान्वेति स्वयंकृतम् ।
तस्मात्तु पुरुषो यत्नाद्धर्मं सञ्चिनुयाच्छनैः ॥ ३३९

அக்னௌ ப்ராஸ்தந்து புருஷம் கர்மாந்வேதி
ஸ்வயம் க்ருதம் ।
தஸ்மாத்து புருஷோ யத்னாத் தர்ம்மம்
ஸஞ்சினுயாச்சனை: 339

அக்னியில் போடப்பட்ட அந்த மனிதனை அவனது கர்மங்கள் துடர்ந்து செல்லுகின்றன. ஆகையால் மனிதன் மெள்ள முயற்சி செய்து தர்மத்தைச் சேர்த்து வைக்க வேண்டும்.

अस्माल्लोकादूर्ध्वममुष्य चाधो महत्तमस्तिष्ठति ह्यन्धकारम् ।
तद्वै महामोहनमिन्द्रियाणां बुध्यस्व मा त्वां प्रलभेत राजन् ॥ ३४०

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஸ்மால்லோகாதூர்த்வமமுஷ்ய சாதோ
மஹத்தமஸ்திஷ்டதி ஹ்யந்தகாரம் ।
தத்வை மஹாமோஹநமிந்த்ரியாணும் புத்யஸ்வ
மா த்வாம் ப்ரலபேத ராஜந் ॥ 340

ஸ்வர்க்கத்துக்கும், பூமிக்கும் கீழே பெரும் இருள் அடைந்த அந்ததாமிஸ்ரமென்னும் நரகம் இருக்கின்றது அது அங்கு இருக்கும் துக்கத்தில், இந்திரியங்கள் ஒரு விஷயத்தையும் கவனிக்காமல் மோஹத்தை அளித்துவிடும் இதை உணர்ந்து அந்த நரகத்தை அடையவேண்டாம்.

इदं वचः शक्ष्यसि चेद्यथावन्निशम्य सर्वं प्रतिपत्तुमेव ।
यशः परं प्राप्स्यसि जीवलोके भयं न चामुत्र न चेह तेऽस्ति ॥ ३४१

இதம் வச: ஶக்ஷ்யஸி சேத்யதாவந்நிஶம்ய
ஸர்வம் ப்ரதிபத்துமேவ ।
யஶ: பரம் ப்ராப்ஸ்யஸி ஜீவலோகே பயம் ந
சாமுத்ர ந சேஹ தேऽஸ்தி ॥ 341

இந்த வார்த்தை எல்லாவற்றையும் கேட்டு நீர் உண்மையாக நடப்பீரேயாகில் இவ்வுலகில் சிறந்த கீர்த்தியை அடைவீர், உமக்கு இவ்வுலகிலும் அவ்வுலகிலும் பயமில்லை.

आत्मा नदी भारत पुण्यतीर्था सत्योदया धृतिकूला दयोर्मिः ।
तस्यां स्नातः पूयते पुण्यकर्मा पुण्यो ह्यात्मा नित्यमलोभ एव ॥ ३४२

ஆத்மா நதீ பாரத புண்யதீர்த்தா ஸத்யோ தயா
த்ருதி கூலா தயோர்மி: ।
தஸ்யாம் ஸ்நாத: பூயதே புண்யகர்மா புண்யோ
ஹ்யாத்மா நித்யமலோப ஏவ ॥ 342

ஜீவன் மஹாநதியைப் போன்றது, அந்த நதிக்கு புண்ய கர்மமே தீர்த்தம், இந்த ஜீவனுகிற நதியானது ஸத்யமான பிரம்மத்தினின்றிருந்து உண்டானது. தைன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யத்தை கரையாக உடையது. அந்த ஆத்மாவாகிற நதியில் ஸ்னானம் செய்தவன் பரிசுத்தனாகிறான். ஸகல புண்ய கர்மங்களையும் செய்தவனாகிறான். ஆத்மாவான புண்ய ஸ்வபேனாவான், சிறந்த புண்யமானது வைராக்யமேயாகும்.

कामक्रोधग्राहवतीं पञ्चेन्द्रियजलां नदीम् ।
नावं धृतिमयीं कृत्वा जन्मदुर्गाणि संतर ॥ ३४३

காமக்ரோதக்ராஹவதீம் பஞ்சேந்த்ரிய ஜலாம் நதீம் ।
நாவம் த்ருதிமயீம் க்ருத்வா ஜன்மதுர்காணி ஸந்தர ॥

காமக்ரோதங்களாகிற முதலைகளுள்ளதும் ஐந்து இந்திரியங்களாகிற ஜலமுள்ளதுமான நதியையும் அதிலுள்ள ஜன்மங்களாகிற மடுக்களையும் தைர்யமாகிற ஓடத்தைக் கொண்டு தாண்டக்கடவீர்.

प्रज्ञावृद्धं धर्मवृद्धं स्वबन्धुं विद्यावृद्धं वयसा चापि वृद्धम् ।
कार्याकार्ये पूजयित्वा प्रसाद्य यः संपृच्छेन्न स मुह्येत्कदाचित् ॥३४४

ப்ரக்ஞாவ்ருத்தம் தர்மவ்ருத்தம் ஸ்வபந்தும்
வித்யாவ்ருத்தம் வயஸா சாபி வ்ருத்தம் ।
கார்யாகார்யே பூஜயித்வா ப்ரஸாத்ய
ய: ஸம்ப்ருச்சேந்ந ஸ முஹ்யேத் கதாசித் ॥ 344

அறிவினால் முதிர்ந்தவனையும் தர்மத்தால் முதிர்ந்தவனையும் வித்யையால் முதிர்ந்தவனையும் வயதினால் முதிர்ந்தவனையும் தனக்கு பந்துவாகவும் இருப்பவனையும், கார்யாகார்யங்களில், பூஜித்து, சந்தோஷமடையச் செய்து எவன் கேழ்ப்பானோ, அவன் ஒரு போதும் மோஹத்தை அடையமாட்டான்.

धृत्या शिश्नोदरं रक्षेत्पाणिपादं च चक्षुषा ।
चक्षुः श्रोत्रे च मनसा मनो वाचं च कर्मणा ॥ ३४५

த்ருத்யா ஶிஶ்னோதரம் ரக்ஷேத்பாணிபாதம் ச சக்ஷுஷா
சக்ஷு: ஶ்ரோத்ரே ச மனஸா மனோ வாசம் ச கர்மணா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தைர்யத்தால் பெண் விருப்பத்தையும் உதரத்தையும் ரக்ஷிக்க வேண்டும், கால்களையும் கைகளையும் கண்ணினுல் ரக்ஷிக்க வேண்டும், கண்களையும் காதுகளையும் மனதால் ரக்ஷிக்கவேண்டும், மனதையும் வாக்கையும் நல்ல கர்மாவினுல் ரக்ஷிக்கவேண்டும் (கல்வியால் ரக்ஷிக்க வேண்டுமென ஒரு பாடம்)

नित्योदकी नित्ययज्ञोपवीती नित्यस्वाध्यायी पतितान्नवर्जी ।
ऋतं ब्रुवन् गुरवे कर्म कुर्वन्न ब्राह्मणश्च्यवते ब्रह्मलोकात् ॥ ३४६

நித்யோதகீ நித்யயக்ஞோபவீதி நித்யஸ்வாத்யாயீ
பதிதாந்நவர்ஜீ ।
ருதம் ப்ருவன் குரவே கர்ம குர்வன் ந
ப்ராம்ஹணஸ்ச்யவதே ப்ரம்ஹலோகாத் ॥ 346

விடியற்காலம் ஜலத்தில் நித்யம் ஸ்னானம் செய்பவனும் எப்பொழுதும் வஸ்திரத்தை யக்ஞோப வீதமாக தரிப்பவனும் நித்யம் தன் வேதத்தை அத்யயனம் செய்பவனும் பதிதர்கள் கொடுக்கும் உணவை உண்ணுதவனும் (பதிதர்கள் என்ருல் ஸ்வதர்மத்தை விட்டவர்கள்) உண்மையை உரைப்பவனும் குருவுக்குப் பணிவிடை செய்கிறவனுமான பிராம்மணன் முடிவில் பிரம்மலோகம் செல்வான். அங்கிருந்து திரும்பமாட்டான்.

अधीत्य वेदान्परिसंस्तीर्य चाग्नीनिष्ट्वा यज्ञैः पालयित्वा प्रजाश्च ।
गोब्राह्मणार्थे शस्त्रपूतान्तरात्मा हतः संग्रामे क्षत्रियः स्वर्गमेति ॥

அதீத்ய வேதாங் பரிஸம்ஸ்தீர்ய சாக்நீநிஷ்ட்வா
யக்ஞைः பாலயித்வா ப்ரஜாஸ்ச ।
கோப்ராம்ஹணார்த்தம் ஶஸ்த்ரபூதாந்தராத்மா ஹதः
ஸங்க்ராமே க்ஷத்ரியः ஸ்வர்கமேதி ॥ 347

வேதங்களைக் கற்று தினந்தோறும் அக்நிக்கு தர்ப்பத்தினுல் பரிஸ்தரணம் போட்டு அக்நி ஹோத்ரம் செய்து, யாகங்களைச் செய்து பிரஜைகளை நன்ருக ரக்ஷித்து பசுக்களுக்காகவும் பிராம்மணர்களுக்காகவும் யுத்தத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆயுதத்தினுல் கொல்லப்பட்டு பரிசுத்தமான மனதை யுடையவனுகி க்ஷத்ரியன் ஸ்வர்கலோகம் செல்கிருன்.

वैश्योऽधीत्य ब्राह्मणान् क्षत्रियांश्च धनैः काले संविभाज्याश्रितांश्च।
त्रेतापूतं धूममाघ्राय पुण्यं प्रेत्य स्वर्गे दिव्यसुखानि भुङ्क्ते ॥ ३४८

வைஶ்யோऽதீத்ய ப்ராம்ஹணுந் க்ஷத்ரியாம்ஶ்ச தனை:
காலே ஸம்விபாஜ்யாஶ்ரிதாம்ஶ்ச ।
த்ரேதா பூதம் தூமமாக்ராய புண்யம் ப்ரேத்ய
ஸ்வர்கே திவ்யஸுகானி புங்க்தே ॥ 348

வைச்யனுனவன் வேதங்களைக் கற்று பிராம்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் தன்னை அண்டினவர்களுக்கும் ஸமயத்தில் பணத்தைப் பிரித்துக் கொடுத்து பரிசுத்தமானதும் பாவத்தைப் போக்குவதுமான கார்யத்தையும் கார்ஹபத்யம் தக்ஷிணுக்நி ஆஹவனீயம் என்ற மூன்று அக்னிகளின் புகையை முகர்ந்து மரித்தபின்பு ஸ்வர்கத்தில் திவ்ய சுகத்தை அநுபவிக்கிருன்.

ब्रह्म क्षत्रं वैश्यवर्णं च शूद्रः क्रमेणैतान्न्यायतः पूजयानः।
तुष्टेष्वेतेष्वव्यथो दग्धपापस्त्यक्त्वा देहं स्वर्गसुखानि भुङ्क्ते ॥ ३४९

ப்ரம்ஹ க்ஷத்ரம் வைஶ்யவர்ணம் ச ஶூத்ர:
க்ரமேணைதாந்ந்யாயத: பூஜயான: ।
துஷ்டேஷ்வேதேஷ்வவ்யத: தக்தபாபஸ்த்யக்த்வா
தேஹம் ஸ்வர்கஸுகானி புங்க்தே ॥ 349

சூத்ரனுனவன் பிராம்மண க்ஷத்ரிய வைச்ய ஜாதிகளை முறையாக நியமப்படி பூஜிப்பவனும் இவர்கள் சந்தோஷத்தை அடைந்தபோது வருந்தாதவனுமாகி பாவங்களை எரித்து சரீரத்தை விட்டு ஸ்வர்கத்தில் சுகத்தை அனுபவிக்கிருன்.

चातुर्वर्ण्यस्यैष धर्मस्तवोक्तो हेतुं चानुब्रुवतो मे निबोध।
क्षात्राद्धर्माद्धीयते पाण्डुपुत्रस्त्वं राजन् राजधर्मे नियुङ्क्ष्व ॥ ३५०

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாதுர்வர்ண்யஸ்யைஷ தர்ம்மஸ்தவோக்தோ
ஹேதும் சாநுப்ருவதோ மே நிபோத ।
க்ஷாத்ராத்தர்மாத்தீயதே பாண்டுபுத்ரஸ்தம்
த்வம் ராஜன் ராஜதர்மே நியுங்க்ஷ்வ ॥ 350

நான்கு வர்ணங்களுடைய தர்மத்தையும் உமக்குக் கூறி விட்டேன். இதைக் கூறியதற்கு காரணத்தையும் சொல்லுகிறேன் கேளும். பாண்டு புத்ரனானவன் க்ஷத்ரிய தர்மத்திலிருந்து குறைவை அடைகிறான்! ஓ அரசரே, நீர் அவனை ராஜ தர்மத்தில் வைக்கவேண்டும் எனச் சொன்னார்.

धृतराष्ट्र उवाच —

एवमेतद्यथा त्वं मामनुशाससि नित्यदा ।
ममापि च मतिः सौम्य भवत्येवं यथाऽऽत्थ माम् ॥
सा तु बुद्धिः कृताऽप्येवं पाण्डवान्प्रति मे सदा ।
दुर्योधनं समासाद्य पुनर्विपरिवर्तते ॥
न दिष्टमभ्यतिक्रान्तुं शक्यं भूतेन केनचित् ।
दिष्टमेव ध्रुवं मन्ये पौरुषं तु निरर्थकम् ॥ ३५१

த்ருதராஷ்ட்ர உவாச —

ஏவமேதத்யதா த்வம் மாம் அநுஶாஸஸி நித்யதா ।
மமாபி ச மதி: ஸௌம்ய பவத்யேவம் யதாத்த மாம் ।
ஸா து புத்தி: க்ருதாऽப்யேவம் பாண்டவான்
ப்ரதி மே ஸதா ।
துர்யோதனம் ஸமாஸாத்ய புனர் விபரிவர்த்ததே ॥
ந திஷ்டமப்யதிக்ராந்தும் ஶக்யம் பூதேந கேனசித் ।
திஷ்டமேவ த்ருவம் மன்யே பௌருஷம் து
நிரர்த்தகம் ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ருதராஷ்ட்ரன் சொன்னான் —

ஓ விதுரா, நீ தினந்தோறும் எனக்கு உபதேசித்து வருவதெல்லாம் சரியானதேயாகும். நீ சொல்லுகிறபடிதான் என்னுடைய புத்தியும் உணருகிறது. பாண்டவர்களைக் குறித்து நல்லது செய்யவேண்டுமென்றே தோன்றுகிறது. ஆனால், துரியோதனனை அடைந்ததும் மாறிவிடுகிறது. ஒருவனாலும் தெய்வத்தை தாண்ட முடியாது. தெய்வமே நிலைத்ததென்றும் மனிதனுடைய சக்தி பிரயோஜனமற்றதென்றும் சொன்னான்.

விதுரநீதி முற்றிற்று

சுபம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

श्रीः

श्रीमदादिशंकरभगवत्पादकृता ॥

॥ श्री प्रश्नोत्तर रत्नमालिका ॥

ஸ்ரீ ப்ரச்நோத்தர ரத்நமாலிகா

ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதர்களால் சிஷ்யனுக்கு உபதேசிக்கப்பட்டது.

ஸ்ரீபகவானுடைய உபதேசங்களே வேதங்கள். அவைகளில் நமக்கு சுகத்தை அளிக்கக்கூடிய உபாயங்களும் துக்கத்தைப் போக்கக்கூடிய உபாயங்களும் கூறப்பட்டுள்ளன. சமுத்திரங்களிலுள்ள ரத்னங்களை நேராக யாவராலும் எடுத்து ஆபரணமாகத் தரித்துக்கொள்ள முடியாது. ஆனால் நல்ல தீரனான மனிதன் கவசங்களை தரித்துக் கொண்டு கடலில் மூழ்கி ரத்தினங்களை எடுத்து. சாணை பிடித்து ஆபரணமாக ஆக்கிக் கொடுத்தால் எவ்வாறு சுலபமாய் தரிக்கமுடியுமோ அவ்வாறு கருணைக் கடலாகிய ஸ்ரீ ஆதி சங்கரர் (வணக்கத்துடன் தன்னை வினவிய) சிஷ்யனுக்கு வேதங்களிலிருந்து ரத்தினம் போன்ற அந்த உபாயங்களை உபதேசித்துள்ளார். துக்கம் வேண்டாம், ஸுகம்தான் வேணுமென்ற யாவரும் இந்த உபதேசத்தை அறிந்து நடக்க வேண்டும். அந்த சுகமே ஆனந்த ரூபமான மோக்ஷமாகவும் ஆகிவிடும். இதை ஒருமுறை படித்தால் எவருடைய மனமும் சுத்தமாகிவிடும். கேள்வி பதில் இவற்றுடன் கூடிய இந்நூலானது 67 சுலோகங்கள் உள்ளதாக அமைந்துள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

कः खलु नालंक्रियते दृष्टादृष्टार्थसाधनपटीयान् ।
अमुया कण्ठस्थितया प्रश्नोत्तररत्नमालिकया ॥ १

கः கலு நாலங்கிரியதே த்ருஷ்டா த்ருஷ்டார்த்த ஸாதன படீயான் ।
அமுயா கண்டஸ்திதயா ப்ரஶ்னோத்தர ரத்னமாலிகயா ॥

இந்த பிரச்னோத்தர ரத்னமாலையை கழுத்தில் அணிந்துகொண்ட எவன்தான் (உள்ளத்தில் வைத்துக் கொண்டவன் எனக் கருத்து) இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அடையவேண்டிய ஸுகத்தின் ஸாதனத்தை அறிந்தவனாக ஆகி அலங்கரிக்கப்பட்டவனாக ஆகமாட்டான்! (அதாவது இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அடையவேண்டிய ஸுகஸாதனத்தை அறிந்து விளங்குவான் எனக் கருத்து)

भगवन्किमुपादेयं ? गुरुवचनं, हेयमपि च किम् ? अकार्यम् ।
किं गुरुः ? अधिगततत्त्वः शिष्यहितायोद्यतस्सततम् ॥ २

பகவன் கிமுபாதேயம்? குருவசனம், ஹேயமபி ச கிம் அகார்யம்?
கிம் குருः? அதிகத தத்வः ஶிஷ்யஹிதா யோத்யதஸ்ஸததம் ॥ 2

கேள்வி :—பூஜ்யர்களான ஓ குருவே, கிரஹித்துக்கொள்ள வேண்டியது எது ?

பதில் :—குருவசனம்

கே :—விடவேண்டியது எது ?

ப :—சாஸ்திரங்களில் கூடாதெனச் சொன்ன காரியம்

கே :—எவர் குரு ?

ப :—உண்மையை அறிந்து சிஷ்யர்களின் நன்மைக்காக எப்பொழுதும் முயற்சிப்பவர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

त्वरितं किं कर्तव्यं विदुषां? संसारसंततिच्छेदः।
किं मोक्षतरोर्बीजं? सम्यग्ज्ञानं क्रियासिद्धम्॥ ३

த்வரிதம் கிம் கர்தவ்யம் விதுஷாம்? ஸம்ஸார
ஸந்ததிச்சேதஃ ।
கிம் மோக்ஷதரோர்பீஜம்? ஸம்யக்ஞானம்
க்ரியாஸித்தம் ॥ 3

கே:—படித்தவர்கள் சீக்கிரமாகச் செய்யவேண்டியது எது?

ப:—பிறப்பு இறப்பின் துடர்பை அறுத்தல்

கே:—மோக்ஷமாகிற மரத்திற்கு விதை யாது?

ப:—அக்நிஹோத்ரம் முதலிய ஸத்கர்மங்களால் சித்தசுத்தி ஏற்பட்டதும் உண்டாகும் சிறந்த ஞானமே.

कः पथ्यतरो? धर्मः, कः शुचिरिह? यस्य मानसं शुद्धम्।
कः पण्डितो? विवेकी, किं विषम्? अवधीरणा गुरुषु॥ ४

கஃ பத்யதரோ? தர்மஃ, கஶ்ஶுசிரிஹ? யஸ்ய
மானஸம் ஶுத்தம் ।
கஃ பண்டிதோ? விவேகீ, கிம் விஷம்? அவதீரணா
குருஷு ॥ 4

கே:—சிறந்த நன்மையை அளிப்பது எது?

ப:—தர்மம்

கே:—இவ்வுலகில் பரிசுத்தனாக இருப்பவன் எவன்?

ப:—விவேகமுள்ளவன்

கே:—விஷம் எது?

ப:—பெரியோர்களை அலட்சியம் செய்தல்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

किं संसारे सारं? बहुशोऽपि विचिन्त्यमानमिदमेव ।
किं मनुजेष्विष्टतमं? स्वपरहितायोद्यतं जन्म ॥ ५

கிம் ஸம்ஸாரே ஸாரம்? பஹுசோऽபி
விசிந்த்யமானமிதமேவ ।
கிம் மனுஜேஷ்விஷ்டதமம்? ஸ்வபரஹிதாய
உத்யதம் ஜந்ம ॥ 5

கே :—பிறப்பு இறப்பாகிற ஸம்ஸாரத்தில் ஸாரம் எது ?

ப :—இதில் எது ஸாரமென்பதை பலமுறை ஆலோசிப்பதே யாகும் (அதாவது ஸம்ஸாரம் அஸாரமென தோன்றி விடுமென கருத்து.)

கே :—மனிதர்களுக்கு மிகப் பிரியமாய் இருக்கவேண்டியது எது ?

ப :—தனக்கும் பிறருக்கும் நன்மையை செய்ய முயற்சிக்கும் ஜன்மம்

मदिरेव मोहजनकः कः? स्नेहः, के च दस्यवो? विषयाः ।
का भववल्ली? तृष्णा, को वैरी? यस्त्वनुद्योगः ॥ ६

மதிரேவ மோஹஜனக: க:? ஸ்நேஹ:, கே ச
தஸ்யவோ? விஷயா: ।
கா பவவல்லீ? திருஷ்ணு, கோ வைரீ?
யஸ்த்வநுத்யோக: ॥ 6

கே :—கள்ளுபோல் மோஹத்தை அளிக்கக்கூடியது எது ?

ப :—ஸ்நேகம்

கே :—திருடர்கள் யார் ,

ப :—இந்திரியங்களின் விஷயங்கள்

கே :—ஸம்ஸாரத்தை வளர்க்கும் கொடி எது ?

ப :—ஆசை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—சத்ரு யார்

ப :—முயற்சி செய்யாமல் இருத்தல்

कस्माद्भयमिह? मरणात्, अन्धादिह को विशिष्यते? रागी।
कः शूरो? यो ललनालोचनबाणैर्न च व्यथितः॥ ७

கஸ்மாத் பயமிஹ? மரணாத், அந்தாதிஹ கோ
விஶிஷ்யதே? ராகீ ।
கः ஶூரோ? யோ லலநாலோசநபாணைர் ந ச வ்யதிதः ॥

கே :—இவ்வுலகில் எதனுல் பயம் ?

ப :—மரணத்தினுல்

கே :—குருடனுக்கு மேற்பட்ட குருடன் யார் ?

ப :—ஆசையுள்ளவன்

கே :—எவன் சூரன் ?

ப :—ஸ்திரீகளின் பார்வையாகிற அம்புகளினுல் மனங்கலங்காதவன்.

पातुं कर्णाञ्जलिभिः किममृतमिह युज्यते? सदुपदेशः।
किं गुरुताया मूलं? यदेतदप्रार्थनं नाम॥ ८

பாதும் கர்ணுஞ்லிபிः கிமம்ருதமிஹ யுஜ்யதே?
ஸதுபதேஶः ।
கிம் குருதாயா மூலம்? யதேததப்ரார்த்தநம் நாம ॥ 8

கே :—காதுகளாகிய அஞ்சலிகளால் இவ்வுலகில் அம்ருதம் போல் அருந்தக்கூடியது எது ?

ப :—ஸாதுக்கள் செய்யும் உபதேசமேயாகும்.

கே :—கௌரவத்திற்கு எது காரணம் ?

ப :—யாசிக்காமல் இருத்தல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

किं गहनं? स्त्रीचरितं, कश्चतुरो? यो न खण्डितस्तेन।
किं दुःखम्? असंतोषः, किं लाघवम्? अधमतो याञ्चा॥ ९

கிம் கஹநம்? ஸ்திரீசரிதம், கஶ்சதுரோ? யோ ந
கண்டிதஸ்தேந ।
கிம் துக்கம்? அஸந்தோஷ:, கிம் லாகவம்?
அதமதோ யாச்ஞா ॥ 9

கே :—கண்டுபிடிக்க முடியாதது எது ?

ப :—பெண்களின் சரிதம்

கே :—எவன் கெட்டிக்காரன் ?

ப :—பெண்களின் நடையினுல் கெடுக்கப்படாதவன்

கே :—துயரம் எது ?

ப.:—திருப்தி இல்லாமல் இருத்தல்

கே :—தாழ்மையாக்குவது எது ?

ப :—கீழ்ப்பட்டவனிடத்தில் யாசித்தல்

किं जीवितम्? अनवद्यं, किं जाड्यं? पाठतोऽप्यनभ्यासः।
को जागर्ति? विवेकी, का निद्रा? मूढता जन्तोः॥ १०

கிம் ஜீவிதம்? அநவத்யம், கிம் ஜாட்யம்?
பாடதோப்யநப்யாஸ: ।
கோ ஜாகர்த்தி? விவேகீ, கா நித்ரா? மூடதா ஜந்தோ:॥

கே :—நன்கு ஜீவித்திருத்தல் எது ?

ப :—குற்றமில்லாமலிருத்தல்

கே :—எது அறிவின்மை

ப :—கல்வியை கற்றும் அதை அப்யஸிக்காமல் இருத்தல்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—விழித்திருப்பவன் எவன் ?

ப :—விவேகமுள்ளவன்

கே :—எது தூக்கம் ?

ப :—அறிவில்லாமலிருத்தல்

नलिनीदलगतजलवत्तरलं किं ? यौवनं धनं चायुः ।
कथय पुनः के शशिनः किरणसमाः ? सज्जना एव ॥ ११

நளிநீதளகதஜலவத்தரளம் கிம்? யௌவனம் தனம் சாயு: ।
கதய புந: கே ஶஶிந: கிரணஸமா:? ஸஜ்ஜநா ஏவ ॥ 11

கே :—தாமரை இலையில் இருக்கும் ஜலம் போல் நிலை இல்லாதது எது ?

ப :—இளமை, பொருள், ஆயுள்

கே :—ஓ ஆசார்யனே, சந்திரகிரணம்போல் தாபத்தைப் போக்குகிறவர்கள் எவர்கள் ? கூறவேண்டும்.

ப :—ஸாதுக்கள்தான்

को नरकः ? परवशता, किं सौख्यं ? सर्वसङ्गविरतिर्या ।
किं साध्यं ? भूतहितं, प्रियं च किं प्राणिनाम् ? असवः ॥ १२

கோ நரக:? பரவஶதா, கிம் ஸௌக்யம்? ஸர்வஸங்கவிரதிர்யா ।
கிம் ஸாத்யம்? பூதஹிதம், ப்ரியம் ச கிம் ? ப்ராணிநாம் அஸவ: ॥ 12

கே :—எது நரகம் ?

ப :—பிறருக்கு வசமாகுதல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—ஸ்ுகத்தை அளிப்பது எது ?

ப :—எல்லா பற்றுதல்களையும் விட்டுவிடுதல்

கே :—ஸாதிக்கவேண்டியது எது ?

ப :—பிராணிகளுக்கு நன்மை செய்தல்

கே :—பிராணிகளுக்கு பிரியமாக உள்ளது எது ?

ப :—உயிர்

कोऽनर्थफलो? मानः, का सुखदा? साधुजनमैत्री।
सर्वव्यसनविनाशे को दक्षः? सर्वथा त्यागी॥ १३

கோऽநர்த்தபலோ? மாநः, கா ஸுகதா?
ஸாதுஜநமைத்ரீ ।
ஸர்வவ்யஸநவிநாஶே கோ தக்ஷः? ஸர்வதா த்யாகீ ॥ 13

கே :—கெட்ட பயனை அளிக்கக்கூடியது எது ?

ப :—அஹங்காரம்

கே :—ஸுகத்தை அளிக்கக்கூடியது எது ?

ப :—ஸாது ஜனங்களின் ஸ்னேகம்

கே :—எல்லோருடைய துக்கங்களையும் (அல்லது) எல்லா துக்கங்களையும் போக்குவதில் எவன் சமர்த்தன் ?

ப :—யாவற்றையும் கொடுத்துவிடுகிறவன்

किं मरणं? मूर्खत्वम्, किं चानर्घं? यदवसरे दत्तम्।
आमरणात्किं शल्यं? प्रच्छन्नं यत्कृतं पापम्॥ १४

கிம் மரணம்? மூர்க்கத்வம், கிம் சாநர்க்கம்?
யதவஸரே தத்தம் ।
ஆமரணாத் கிம் ஶல்யம்? ப்ரச்சந்நம் யத்க்ருதம் பாபம் ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—சாவு எது ?

ப :—படிப்பில்லாதவனின் பிடிவாதத் தன்மை

கே :—விலை மதிப்பிடமுடியாதது எது ?

ப :—நல்ல சமயத்தில் செய்யும் உதவி

கே :—சாகும்வரை மனதை துன்புறுத்துவது எது ?

ப :—இரகசியமாகச் செய்த பாபம்

कुत्र विधेयो यत्नो ? विद्याभ्यासे सदौषधे दाने ।
अवधीरणा क्व कार्या ? खलपरयोषित्परधनेषु ॥ १५

குத்ர விதேயோ யத்நோ? வித்யாப்யாஸே
ஸதௌஷதே தாநே ।
அவதீரணா க்வ கார்யா? கலபரயோஷித் பரதநேஷு ॥

கே :—எவைகளை அடைய முயற்சிக்க வேண்டும் ?

ப :—கல்வியைக் கற்பது, நல்ல மருந்தைப் பெறுவது, தானம் செய்தல் இவைகளை அடைவதற்கே

கே :—எவைகளை அலக்ஷ்யம் செய்யவேண்டும்

ப :—கெட்டவர்கள், பிறருடைய பொருள், இவைகளை

काऽहर्निशमनुचिन्त्या ? संसारासारता न तु प्रमदा ।
का प्रेयसी विधेया ? करुणा दीनेषु सज्जने मैत्री ॥ १६

காऽஹர்நிஶமநுசிந்த்யா? ஸம்ஸாராஸாரதா
ந து ப்ரமதா ।
கா ப்ரேயஸீ விதேயா? கருணா தீநேஷு ஸஜ்ஜநே மைத்ரீ

கே :—இரவு பகலாய் நினைக்கவேண்டியது எது ?

ப :—வாழ்க்கையில் ஸாரமில்லை என்பதே. பெண்டிரை நினைப்பதல்ல

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—அன்புடன் செய்யவேண்டியது எது ?

ப :—ஏழைகளிடத்தில் கருணை, சாதுக்களிடத்தில் ஸ்நேகம்

कण्ठगतैरप्यसुभिः कस्य ह्यात्मा न शक्यते जेतुम् ?।
मूर्खस्य शङ्कितस्य च विषादिनो वा कृतघ्नस्य ॥ १७

கண்டகதைரப்யஸுபி: கஸ்ய ஹ்யாத்மா ந
ஶக்யதே ஜேதும் ? ।
மூர்க்கஸ்ய ஶங்கிதஸ்ய ச விஷாதிநோ வா
க்ருதக்நஸ்ய ॥ 17

கே :—உயிர்போகும் தருவாயிலும் எவனுடைய மனதைத் திருத்தமுடியாது ?

ப :—படிப்பில்லாத பிடிவாதக்காரன் எதிலும் சந்தேஹப் படுகிறவன். ஸுகத்திலும் துக்கப்படுகிறவன் (அழு மூஞ்சி), செய்நன்றி மறந்தவன்.

कः साधुः ? सद्वृत्तः, कमधममाचक्षते ? त्वसद्वृत्तम् ।
केन जितं जगदेतत् ? सत्यतितिक्षावता पुंसा ॥ १८

க: ஸாது:? ஸத்வ்ருத்த:, கமதமமாசக்ஷதே?
த்வஸத்வ்ருத்தம் ।
கேந ஜிதம் ஜகதேதத்? ஸத்யதிதிக்ஷாவதா
பும்ஸா ॥ 18

கே :—எவன் நல்லவன் ?

ப :—ஸாதுக்களுடைய ஆசாரத்தைவிடாமல் நடத்துகிறவன்.

கே :—எவன் கீழ்ப்பட்டவன் ?

ப :—கெட்ட நடை உள்ளவன்

கே :—இவ்வுலகை எவன் ஜயிப்பான் ?

ப :—ஸத்யம், பொறுமை உள்ளவன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

कस्मै नमांसि देवाः कुर्वन्ति ? दयाप्रधानाय ।
कस्मादुद्वेगः स्यात् ? संसारारण्यतः सुधियः ॥ १९

கஸ்மை நமாம்ஸி தேவா: குர்வந்தி? தயாப்ரதாஞயா ।
கஸ்மாதுத்வேக: ஸ்யாத்? ஸம்ஸாராரண்யத:
ஸுதிய: ॥ 19

கே :—எவனை தேவர்களும் நமஸ்கரிக்கின்றனர் ?

ப :—தயையை முக்யமாய் கைக்கொண்டவனை

கே :—புத்திமான் எதைக் கண்டு பயமடைவான் ?

ப :—ஸம்ஸாரமாகிற காட்டைக் கண்டு

कस्य वशे प्राणिगणः ? सत्यप्रियभाषिणो विनीतस्य ।
क स्थातव्यं ? न्याय्ये पथि दृष्टादृष्टलाभाढ्ये ॥ २०

கஸ்ய வஶே ப்ராணிகண:? ஸத்யப்ரிய பாஷிணோ
விநீதஸ்ய ।
க்வ ஸ்தாதவ்யம்? ந்யாய்யே பதி
த்ருஷ்டாத்ருஷ்டலாபாட்யே ॥ 20

கே :—ஜீவராசிகள் எவன் வசத்திலிருக்கும் ?

ப :—ஸத்யமாயும் பிரியமாயும் பேசி வணக்கத்துடன் இருப்பவனிடம்

கே :—எந்த வழியில் இருக்கவேண்டும் ?

ப :—இவ்வுலகிலும் அவ்வுலகிலும் இலாபத்தை அளிக்கும் நியாயமான வழியில்

कोऽन्धो ? योऽकार्यरतः, को बधिरो ? यो हितानि न श्रृणोति ।
को मूको ? यः काले प्रियाणि वक्तुं न जानाति ॥ २१

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோऽந்தோ? யோऽகார்யரத:, கோ பதிரோ? யோ
ஹிதாநி ந ஶ்ருணோதி ।
கோ மூகோ? ய: காலே ப்ரியாணி வக்தும் ந
ஜாநாதி ॥ 21

கே :—யார் குருடன் ?

ப :—தப்புக் கார்யத்தையே செய்கிறவன்

கே :—செவிடன் யார் ?

ப :—நன்மையை கேழ்க்காதவன்

கே :—ஊமை யார் ?

ப :—நல்ல சமயத்தில் இனிமையான சொற்களை சொல்லத் தெரியாதவன்

किं दानम्? अनाकाङ्क्ष्य, किं मित्रं? यो निवारयति पापात्।
कोऽलंकारः? शीलं, किं वाचां मण्डनं? सत्यम्॥ २२

கிம் தானம்? அநாகாங்க்ஷ்யம், கிம் மித்ரம்? யோ
நிவாரயதி பாபாத் ।
கோऽலங்கார:? ஶீலம், கிம் வாசாம் மண்டனம்?
ஸத்யம் ॥ 22

கே :—எது தானம் ?

ப :—கேழ்க்காமலே கொடுப்பது

கே :—சினேகிதன் யார் ?

ப :—பாபம் செய்யக்கூடாதெனத் தடுக்கிறவன்

கே :—எது அலங்காரம் ?

ப :—நல்ல நடை

கே :—வாக்கிற்கு அழகு எது ?

ப :—ஸத்யம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

विद्युद्विलसितचपलं किं? दुर्जनसङ्गतिर्युवतयश्च।
कुलशीलनिष्प्रकम्पाः के कलिकालेऽपि? सज्जना एव॥ २३

வித்யுத்விலஸிதசபலம் கிம்? துர்ஜநஸங்கதிர்
யுவதயஶ்ச ।
குலஶீலநிஷ்ப்ரகம்பா: கே கலிகாலேऽபி?
ஸஜ்ஜந ஏவ ॥ 23

கே :—மின்னல் ஒளிபோல் சஞ்சலமானது எது ?

ப :—கெட்டவர்களின் ஸ்னேகமும் யௌவனமுள்ள பெண்களும்

கே :—கலியுகத்திலும் குலதர்மத்தை விட்டு வழுவாமல் நடப்பவர்கள் எவர்கள் ?

ப :—ஸத்புருஷர்கள்

चिन्तामणिरिव दुर्लभमिह किं? कथयामि तच्चतुर्भद्रम्।
किं तद्वदन्ति भूयो विधूतमनसा विशेषेण॥ २४
दानं प्रियवाक्सहितं ज्ञानमगर्वं क्षमान्वितं शौर्यम्।
वित्तं त्यागसमेतं दुर्लभमेतच्चतुर्भद्रम्॥ २५

சிந்தாமணிரிவ துர்லபமிஹ கிம்?
கதயாமி தச்சதுர்பத்ரம் ।
கிம் தத் வதந்தி பூயோ விதூத மனஸா விஶேஷேண ॥
தானம் ப்ரியவாக் ஸஹிதம் ஞானமகர்வம்
க்ஷமாந்விதம் ஶௌர்யம் ।
வித்தம் த்யாகஸமேதம் துர்லபமேதச்சதுர் பத்ரம் ॥ 25

கே :—சிந்தாமணி போல் கிடைப்பதற்கு அரிது எது ?

ப :—அறிஞர்கள் சிந்தாமணி போல் நான்கு மங்களமான விஷயங்களை கூறுகின்றனரோ அவைகளை உனக்குக் கூறுகின்றேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இனிமையான சொல்லுடன் கூடிதய தானம், கர்வமில்லாத ஞானம், பொருமையுடன் கூடிய சார்யம், கொடையுடன் கூடிய செல்வம்

किं शोच्यं ? कार्पण्यं, सति विभवे किं प्रशस्तं ? औदार्यम् ।
कः पूज्यो विद्वद्भिः ? स्वभावतः सर्वदा विनीतो यः ॥ २६

கிம் ஶோச்யம்? கார்பண்யம், மதி விபவே
கிம் ப்ரஶஸ்தம்? ஔதார்யம் ।
கஃ பூஜ்யஃ வித்வத்பி:? ஸ்வபாவதஃ ஸர்வதா
விநீதோ யஃ ॥ 26

கே :—வருந்தத்தக்கது எது ?

ப :—கருமித்தனம்

கே :—ஐஸ்வர்யமிருக்கும்போது புகழத்தகுந்தது எது ?

ப :—நிரம்பக் கொடுக்குந்தன்மை

கே :—படித்தவர்களால் பூஜிக்கத்தகுந்தவன் எவன் ?

ப :—இயற்கையாகவே எப்பொழுதும் வணக்கமுள்ளவன்

कः कुलकमलदिनेशः ? सति गुणविभवेऽपि यो नम्रः ।
कस्य वशे जगदेतत् ? प्रियहितवचनस्य धर्मनिरतस्य ॥ २७

கஃ குலகமலதிநேஶஃ? ஸதி குணவிபவேऽபி யோ நம்ரஃ ।
கஸ்ய வஶே ஜகதேதத்? ப்ரியஹிதவசனஸ்ய
தர்மநிரதஸ்ய ॥ 27

கே :—நமது குலமாகிற தாமரையை மலரச்செய்யும் சூரியன் யார் ?

ப :—குணங்கள் நிறைந்திருந்தும் வணக்கத்துடன் இருப்பவன் குலமாகிற தாமரைக்கு சூரியனுவான்

கே :—இவ்வுலகம் யாருக்கு வசப்படும் ?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப :—பிரியமாயும் ஹிதமாயும் பேசி தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்கு

विद्वन्मनोहरा का? सत्कविता बोधवनिता च।
कं न स्पृशति विपत्तिः? प्रवृद्धवचनानुवर्तिनं दान्तम्॥ २८

வித்வன் மனோ ஹரா கா? ஸத்கவிதா போதவனிதா ச ।
கம் ந ஸ்ப்ருஶதி விபத்தி:? ப்ரவ்ருத்த
வசநாநுவர்த்தினே தாந்தம் ॥ 28

கே :—படித்தவர்களின் மனதை கவறக் கூடியது எது ?

ப :—நல்ல கவிதையும் அறிவாகிற ஸ்திரீயும்

கே :—ஆபத்து எவனை அணுகாது ?

ப :—பெரியோர்களின் வார்த்தைப்படி நடப்பவனையும் அடக்கமுள்ளவனையும்

कस्मै स्पृहयति कमला? त्वनलसचित्ताय नीतिवृत्ताय।
त्यजति च का सहसा? द्विजगुरुसुरनिन्दाकरं च सालस्यम्॥ २९

கஸ்மை ஸ்ப்ருஹயதி கமலா? த்வநலஸசித்தாய
நீதிவ்ருத்தாய ।
த்யஜதி ச கா ஸஹஸா? த்விஜ குரு ஸுர
நிந்தாகரம் ச ஸாலஸ்யம் ॥ 29

கே :—லக்ஷ்மி யாரை விரும்புவாள் ?

ப :—சுறுசுறுப்பான மனதுடன் நீதி தவருமல் நடப்பவனை

கே :—லக்ஷ்மி எவனை விட்டு சீக்கிரம் விலகுவாள் ?

ப :—தனது குரு, தெய்வம் இவர்களை நிந்திப்பவனையும் சோம்பேறித்தனமுள்ளவனையும்

कुत्र विधेयो वासः? सज्जननिकटेऽथवा काश्याम्।
कः परिहार्यो देशः? पिशुनयुतो लुब्धभूपश्च॥ ३०

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குத்ர விதேயோ வாஸ:? ஸஜ்ஜந நிகடேऽதவா
காம்யாம் ।
க: பரிஹார்யோ தேஶ:? பிஶுநயுதோ
லுப்தபூபஶ்ச ॥ 30

கே :—வாஸம் செய்யவேண்டியது எங்கே ?

ப :—ஸாதுக்களுடைய சமீபத்தில் அல்லது காசியில்

கே :—எந்த தேசத்தை விட்டு விலகவேண்டும் ?

ப :—கோட்ச் சொல்லுகிறவன் இருக்குமிடத்தையும் அதிக ஆசை பிடித்த அரசன் இருக்குமிடத்தையும்

केनाशोच्यः पुरुषः ? प्रणतकलत्रेण धीरविभवेन ।
इह भुवने कः शोच्यः ? सत्यपि विभवे न यो दाता ॥ ३१

கேநாஶோச்ய: புருஷ:? ப்ரணதகளத்ரேண
தீரவிபவேன ।
இஹ புவனே க: ஶோச்ய:? ஸத்யபி விபவே
ந யோ தாதா ॥ 31

கே :—எதனால் மனிதன் துக்கமின்றி வாழ்வான் ?

ப :—வணக்கமுள்ள மனைவியாலும் நிலைத்த ஐஸ்வர்யத்தாலும்

கே :—இவ்வுலகில் எவனைப் பற்றி விசனிக்கவேண்டும் ?

ப :—ஐஸ்வர்யமிருந்தும் கொடாதவன்

किं लघुताया मूलं ? प्राकृतपुरुषेषु या याच्ञा ।
रामादपि कः शूरः ? स्मरशरनिहतो न यश्चलति ॥ ३२

கிம் லகுதாயா மூலம்? ப்ராக்ருத புருஷேஷு யா
யாச்ஞா ।
ராமாதபி க:ஶூர:? ஸ்மரஶரநிஹதோ ந யஶ்சலதி ॥ 32

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—இகழ்ச்சிக்குக் காரணம் எது ?

ப :—மட்டமான குணமுள்ளவர்களிடம் யாசித்தல்

கே :—ராமனைக் காட்டிலும் எவன் சூரன் ?

ப :—மன்மத பாணங்களால் அடிக்கப்பட்டும் தன்னிலை தவருதவன்

किमहर्निशमनुचिन्त्यं ? भगवच्चरणं न संसारः ।
चक्षुष्मन्तोऽप्यन्धाः के स्युः ? ये नास्तिका मनुजाः ॥ ३३

கிமஹர்நிஶமநுசிந்த்யம்? பகவத்சரணம் ந ஸம்ஸாரः ।
சக்ஷுஷ்மந்தோऽப்யந்தாः கே ஸ்யுः? யே
நாஸ்திகா மநுஜாः ॥ 33

கே :—இரவிலும் பகலிலும் இடைவிடாது நினைக்கத் தகுந்தது எது ?

ப :—ஸ்ரீ பகவானுடைய சரணமே, மனைவி மக்களைப் பற்றி அல்ல.

கே :—கண்ணிருந்தும் எவர்கள் குருடர்கள் ?

ப :—நாஸ்திகர்களான (தெய்வம், சாஸ்திரம், பரலோகம், இவைகள் இல்லையெனச் சொல்லுகிறவர்கள்) மனிதர்கள்

कः पङ्गुरिह प्रथितो ? व्रजति च यो वार्धके तीर्थम् ।
किं तीर्थमपि च मुख्यं ? चित्तमलं यन्निवर्तयति ॥ ३४

கः பங்குரிஹ ப்ரதிதோ? வ்ரஜதி ச யோ வார்த்தகே
தீர்த்தம் ।
கிம் தீர்த்தமபி ச முக்யம்? சித்தமலம்
யந்நிவர்த்தயதி ॥ 34

கே :—எவன் நொண்டி ?

ப :—வயது முதிர்ந்த சமயத்தில் தீர்த்தயாத்திரை செய்பவன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—முக்யமான தீர்த்தம் எது ?

ப :—மனதில் இருக்கும் அழுக்கைப் போக்குவதே முக்ய தீர்த்தமாகும்

किं स्मर्तव्यं पुरुषैः, ? हरिनाम सदा, न यावनी भाषा।
को हि न वाच्यः सुधिया ? परदोषश्चानृतं तद्वत् ॥ ३५

கிம் ஸ்மர்த்தவ்யம் புருஷை:? ஹரிநாம ஸதா, ந
யாவநீ பாஷா ।
கோ ஹி ந வாச்ய: ஸுதியா? பரதோஷஸ்சாந்ருதம்
தத்வத் ॥ 35

கே :— மனிதர்களால் ஸ்மரிக்கத்தக்கது எது ?

ப :— எப்பொழுதும் ஹரி நாமமே. ம்லேச்ச பாஷையல்ல?

கே :— நல்ல புத்தியுடையவனுல் சொல்லத்தகாதது எது ?

ப :— பிறரது குற்றமும், அஸத்யமும்.

किं संपाद्यं मनुजैः ? विद्या वित्तं बलं यशः पुण्यम् ।
कः सर्वगुणविनाशो ? लोभः, शत्रुश्च कः ? कामः ॥ ३६

கிம் ஸம்பாத்யம் மனுஜை:? வித்யா வித்தம்
பலம் யஶ: புண்யம் ।
க: ஸர்வகுணவிநாஶோ? லோப:, ஶத்ருஸ்ச க:? காம:

கே :—மனிதர்கள் எதை சம்பாதிக்கவேண்டும் ?

ப :—கல்வி, செல்வம், வலிமை, புகழ், புண்யம்

கே :—எது எல்லா நற்குணங்களையும் அழித்துவிடும் ?

ப :—கருமித்தனம் (கொடாமை)

கே :—எவன் சத்ரு ?

ப :—காமம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

का च सभा परिहार्या ? हीना या वृद्धसचिवेन ।
इह कुत्रावहितः स्यान्मनुजः ? किल राजसेवायाम् ॥ ३७

கா ச ஸபா பரிஹார்யா? ஹீநா யா வ்ருத்தஸசிவேந ।
இஹ குத்ராவஹிதஃ ஸ்யான்மநுஜ:?
கில ராஜஸேவாயாம் ॥ 37

கே :—எந்த சபைக்குச் செல்லாமல் விலக்கவேண்டும் ?

ப :—வயது முதிர்ந்த மந்திரி இல்லாத சபை,

கே :—இவ்வுலகில் மனிதன் எவ்விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் ?

ப :—ராஜசேவையில்

प्राणादपि को रम्यः ? कुलधर्मः साधुसङ्गश्च ।
का संरक्ष्या ? कीर्तिः पतिव्रता नैजबुद्धिश्च ॥ ३८

ப்ராணாதபி கோ ரம்ய:? குலதர்ம: ஸாதுஸங்கஶ்ச ।
கா ஸம்ரக்ஷ்யா? கீர்த்தி: பதிவ்ரதா நைஜபுத்திஶ்ச ॥ 38

கே :—உயிரைக் காட்டிலும் அன்பு வைக்கவேண்டியது எதில் ?

ப :—குலதர்மத்திலும் ஸாதுக்கள் சேர்க்கையிலும்

கே :—நன்கு ரக்ஷிக்கத்தக்கது எது ?

ப :—புகழ், பதிவ்ரதை, தன்புத்தி

का कल्पलता लोके ? सच्छिष्यायार्पिता विद्या ।
कोऽक्षयवटवृक्षः स्यात् ? विधिवत्सत्पात्रदत्तदानं यत् ॥ ३९

கா கல்பலதா லோகே? ஸச்சிஷ்யாயார்பிதா வித்யா ।
கோऽக்ஷய வடவ்ருக்ஷ: ஸ்யாத்? விதிவத்
ஸத்பாத்ர தத்த தானம் யத் ॥ 39

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—கற்பகக் கொடிபோல் எப்பொழுதும் பலன் அளிக்கக் கூடியது எது ?

ப :—யோக்யனான சிஷ்யனிடத்தில் உபதேசித்த வித்யை

கே :—அக்ஷயவடவிருக்ஷம் போல் அழியாமல் ஆவது எது ?

ப :—முறைப்படி ஸாதுக்களிடத்தில் செய்த தானமே ஆகும்

किं शस्त्रं सर्वेषां ? युक्तिः, माता च का ? धेनुः ।
किं नु बलं ? यद्धैर्यं, को मृत्युः ? यदवधानरहितत्वम् ॥ ४०

கிம் ஶஸ்த்ரம் ஸர்வேஷாம்? யுக்திः, மாத ச கா? தேனுः
கிம் நு பலம்? யத்தைர்யம், கோ ம்ருத்யுः?
யதவதான ரஹிதத்வம் ॥ 40

கே :—யாவருக்கும் ஆயுதம்போல் உதவி செய்வது எது ?

ப :—யுக்தி — ஸமயத்துக்குத் தக்கவாறு பயனளிக்கும்படி கூறும் ஆலோசனை

கே :—எல்லோருக்கும் தாய்போல் நன்மை அளிப்பது எது ? தாய்போல் பாதுகாக்கவேண்டியது எது ?

ப :—பசு

கே :—எது ஸைன்யம் ?

ப :—தைர்யம்

கே :—எது யமன்

ப :—கவனமில்லாமலிருப்பது

कुत्र विषं ? दुष्टजने, किमिहाशौचं भवेत् ? ऋणं नृणाम् ।
किमभयमिह ? वैराग्यं, भयमपि किं ? वित्तमेव सर्वेषाम् ॥ ४१

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குத்ர விஷம்? துஷ்டஜநே, கிமிஹாசௌசம் பவேத்?
ருணம் ந்ருணும் ।
கிமபயமிஹ? வைராக்யம், பயமபி கிம்?
வித்தமேவ ஸர்வேஷாம் ॥ 41

கே :—விஷம் எங்கு இருக்கின்றது ?

ப :—துஷ்ட ஜனங்களிடத்தில்

கே :—மனிதர்களுக்கு இவ்வுலகில் தீட்டாக ஆவது எது ?

ப :—கடன் (மற்ற தீட்டுக்களெல்லாம் குறிப்பிட்ட காலத்தில் ஸ்னனத்தால் விலகிவிடும். கடனுவெனில் ஸ்னனம் முதலியவற்ருல் விலகாது. திருப்பிக் கொடுத்தால் தான் போகும். தீட்டு உள்ளவனை ஒருவனும் அணுகமாட்டார்கள். அதுபோல் கடனுள்ளவனை பந்துக்கள் முதலிய யாவரும் கிட்டே அண்டமாட்டார்கள் எனக் கருத்து.)

கே :—இவ்வுலகில் பயமில்லாமல் இருக்கச் செய்வது எது ?

ப :—வைராக்யம்

கே :—இவ்வுலகில் யாவருக்கும் பயத்தை அளிக்கக்கூடியது எது ?

ப :—பணம்

का दुर्लभा नराणां? हरिभक्तिः, पातकं च किं? हिंसा।
को हि भगवत्प्रियः स्यात्? योऽन्यं नोद्विजयेदनुद्विग्नः॥ ४२

கா துர்லபா நராணாம்? ஹரிபக்தி:, பாதகம் ச கிம்?
ஹிம்ஸா ।
கோ ஹி பகவத்ப்ரிய: ஸ்யாத்? யோ ऽந்யம்
நோத்விஜயேதநுத்விக்ன: ॥ 42

கே :—மனிதர்களுக்கு கிடைப்பது எது ?

ப :—ஸ்ரீ விஷ்ணுவிடம் செய்யும் பக்தியே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—பாபம் எது ?

ப :—ஹிம்ஸித்தல்

கே :—ஸ்ரீ பகவானுக்கு யாரிடம் பிரியம் ?

ப :—தன் மனதை துன்புறுத்திக் கொள்ளாமலும் பிறர் மனதை துன்புறுத்தாமலும் இருப்பவனிடத்தில்

कस्मात्सिद्धिः? तपसः, बुद्धिः क नु? भूसुरे, कुतो बुद्धिः?।
वृद्धोपसेवया, के वृद्धाः? ये धर्मतत्त्वज्ञाः॥ ४३

கஸ்மாத்ஸித்தி:? தபஸ:, புத்தி: க்வ நு? பூஸுரே,
குதோ புத்தி: ।
வ்ருத்தோபஸேவயா, கே வ்ருத்தா:? யே
தர்மதத்வக்ஞா: ॥

கே :—எதனால் கார்யஸித்தி ஏற்படும்

ப :—தவத்தினால் (பகவானை நினைப்பதினால்)

கே :—சுத்தமான அறிவு எங்கு இருக்கிறது ?

ப :—காயத்ரியை ஜபிக்கும் பிராம்மணனிடத்தில்

கே :—சுத்தமான அறிவு எதனால் உண்டாகும் ?

ப :—பெரியோர்களை அடுத்து பணிவிடை செய்தால்

கே :—எவர்கள் பெரியவர்கள் ?

ப :—தர்மத்தின் தத்துவத்தை அறிந்தவர்களே. அவர்கள் வயதால் சிறியவர்களாய் இருந்தாலும் பெரியவர்களே

संभावितस्य मरणादधिकं किं? दुर्यशो भवति।
लोके सुखी भवेत्को? धनवान्, धनमपि च किं? यतश्चेष्टम्॥

ஸம்பாவிதஸ்ய மரணாததிகம் கிம்? துர்யஶோ பவதி ।
லோகே ஸுகீ பவேத் கோ? தநவான், தனமபி ச கிம்,?
யதஶ்சேஷ்டம் ॥ 44

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—பெரியோர்களால் கௌரவிக்கப்பட்டவனுக்கு மரணத்தைக் காட்டிலும் அதிகமான துயரம் எது ?

ப :—அபகீர்த்தியாகும்

கே :—உலகில் சுகியாக இருப்பவன் எவன் ?

ப :—பொருளுள்ளவன்

கே :—பொருள் என்பது எது ?

ப :—எதனுல் கார்யசித்தி ஏற்படுமோ அதுவே பொருள்

सर्वसुखानां बीजं किं? पुण्यं, दुःखमपि कुतः? पापात्।
कस्यैश्वर्यं? यः किल शङ्करमाराधयेद्भक्त्या ॥ ४५

ஸர்வஸுகாநாம் பீஜம் கிம்? புண்யம், துக்கமபி குதஃ? பாபாத் ।
கஸ்யைஶ்வர்யம்? யஃ கில ஶங்கரமாராதயேத்பக்த்யா

கே :—எல்லா சுகத்திற்கும் மூல காரணம் எது ?

ப :—புண்யம்

கே :—துக்கத்திற்குக் காரணம் எது ?

ப :—பாபமே காரணம்

கே :—ஐஸ்வர்யம் எவனுக்குக் கிடைக்கும் ?

ப :—எவன் ஸ்ரீ சங்கரனை பக்தியுடன் ஆராதிப்பானே அவனுக்கு

को वर्धते? विनीतः, को वा हीयेत? यो दृप्तः।
को न प्रत्येतव्यो? ब्रूते यश्चानृतं शश्वत् ॥ ४६

கோ வர்த்ததே? வினீதஃ, கோ வா ஹீயேத? யோ த்ருப்தஃ ।
கோ ந ப்ரத்யேதவ்யோ? ப்ரூதே யஶ்சாந்ருதம் ஶஶ்வத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—எவன் முன்னேற்றமடைவான் ?

ப :—வணக்கமுள்ளவன்

கே :—எவன் முன்னேருமல் கீழே போவான் ?

ப :—கர்வம் கொண்டவன்

கே :—எவனை நம்பக்கூடாது ?

ப :—எப்பொழுதும் பொய் சொல்லுகிறவனை

कुत्रानृतेऽप्यपापं ? यच्चोक्तं धर्मरक्षार्थम् ।
को धर्मो ? अभिमतो यः शिष्टानां निजकुलीनानाम् ॥ ४७

குத்ராந்ருதேऽப்யபாபம்? யச்சோக்தம் தர்ம
ரக்ஷார்த்தம் ।
கோ தர்மோ? அபிமதோ யஃ ஶிஷ்டாநாம் நிஜகுலீநாநாம்

கே :—எந்த சமயத்தில் பொய் சொன்னல் பாவமில்லை ?

ப :—தர்மத்தைப் பாதுகாப்பதற்காக சொல்லும் பொய் பாவமில்லை

கே :—எது தர்மம் ?

ப :—நமது குலத்தைச் சேர்ந்த ஆசாரமுள்ள பெரியோர்கள் அனுஷ்டித்து வருவதே தர்மமாகும்

साधुबलं किं ? दैवं, कः साधुः ? सर्वदा तुष्टः ।
दैवं किं ? यत्सुकृतं, कः सुकृती ? श्लाघ्यते च यः सद्भिः ॥ ४८

ஸாதுபலம் கிம்? தைவம், க: ஸாது:? ஸர்வதா துஷ்ட:।
தைவம் கிம்? யத்ஸுக்ருதம், க: ஸுக்ருதீ?
ஶ்லாக்யதே ச யஃ ஸத்பிஃ ॥ 48

கே :—ஸாதுக்களுக்கு எது பலம் ?

ப :—தெய்வம்தான்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—எவன் ஸாது ?

ப :—எப்பொழுதும் சந்தோஷமாய் இருப்பவன்

கே :—எது தெய்வம் ?

ப :—நல்ல காரியமேயாகும்

கே :—நல்ல கார்யம் செய்தவன் யார் ?

ப :—ஸாதுக்களால் கொண்டாடப்படுகிறவன்

गृहमेधिनश्च मित्रं किं? भार्या, को गृही च? यो यजते ।
को यज्ञो? यः श्रुत्या विहितः श्रेयस्करो नृणाम् ॥ ४९

க்ருஹமேதிநஶ்ச மித்ரம் கிம்? பார்யா, கோ க்ருஹீ ச? யோ யஜதே ।
கோ யக்ஞோ? யஃ ஶ்ருத்யா விஹிதஃ ஶ்ரேயஸ்கரோ ந்ருணாம் ॥ 49

கே :—க்ருஹஸ்தாச்ரமத்தில் இருப்பவனுக்கு யார் துணை ?

ப :—மனைவி

கே :—கிருஹஸ்தன் யார் ?

ப :—எவன் யாகம் செய்கிறானோ அவன்

கே :—எது யாகம் ?

ப :—வேதங்களால் விதிக்கப்பட்ட, உலக க்ஷேமத்தை அளிக்கும் கர்மம்

कस्य क्रिया हि सफला? यः पुनराचारवाञ्छिष्टः ।
कः शिष्टो? यो वेदप्रमाणवान्, को हतः? क्रियाभ्रष्टः ॥ ५०

கஸ்ய க்ரியா ஹி ஸபலா? யஃ புநராசாரவான்ஶிஷ்டஃ ।
கஃ ஶிஷ்டோ? யோ வேதப்ரமாணவான், கோ ஹதஃ? க்ரியாப்ரஷ்டஃ ॥ 50

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—எவன் செய்யும் கார்யம் பயனை அளிப்பதாக ஆகும் ?

ப :—பெரியோர்களுடைய கைப்பிடித்த சிஷ்டர்களின் கார்யமே பயனளிக்கக்கூடியது

கே :—எவன் சிஷ்டன் ?

ப :—வேதத்தை நம்பினவனே சிஷ்டன்

கே :—எவன் உயிருடன் இருந்து அழிந்தவனாகிறான் ?

ப :—ஸத்கர்மாக்களை செய்யாமல் விட்டவன்

को धन्यः ? संन्यासी, को मान्यः ? पण्डितः साधुः ।
कः सेव्यो ? यो दाता, को दाता ? योऽर्थितृप्तिमातनुते ॥ ५१

கோ தன்ய:? ஸந்யாஸீ, கோ மான்ய:? பண்டித: ஸாது:
க: ஸேவ்யோ? யோ தாதா, கோ தாதா?
யோऽர்த்தித்ருப்திமாதனுதே ॥ 51

கே :—எவன் பிறப்பின் பயனை அடைந்தவன் ?

ப :—துறவி

கே :—எவன் பூஜிக்கத்தக்கவன் ?

ப :—படித்து ஸாதுவாக இருப்பவன்

கே :—யாரை அடையவேண்டும் ?

ப :—கொடையாளியை

கே :—எவன் கொடையாளி ?

ப :—யாசகனுடைய இஷ்டத்தைப் பூர்த்தி பண்ணுகிறவன்

किं भाग्यं देहवताम् ? आरोग्यं, कः फली ? कृषिकृत् ।
कस्य न पापं ? जपतः, कः पूर्णो ? यः प्रजावान्स्यात् ॥ ५२

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிம் பாக்யம் தேஹவதாம்? ஆரோக்யம், க: பலீ?
க்ருஷிக்ருத் ।
கஸ்ய ந பாபம்? ஜபத:, க: பூர்ணோ? ய:
ப்ராஜாவான் ஸ்யாத் ॥ 52

கே :—சரீரத்தை அடைந்தவர்களுக்கு எது பாக்யம்?

ப :—வியாதியின்மை

கே :—எவன் பலனுடன் கூடியவனாக ஆவான்?

ப :—வயலில் வேலை செய்கிறவன்

கே :—எவனுடைய பாபம் விலகும்?

ப :—மந்திரங்கள், பகவன் நாமம் இவைகளை ஜபிப்பவனுடைய பாபம் விலகும்

கே :—குறைவற்றவனாய் நிறைந்தவன் யார்?

ப :—நல்ல குழந்தையைப் பெற்றவன்

किं दुष्करं नराणां? यन्मनसो निग्रहः सततम् ।
को ब्रह्मचर्यवान्स्यात्? यश्चास्खलितोर्ध्वरेतस्कः ॥ ५३

கிம் துஷ்கரம் நராணாம்? யந்மனஸோ நிக்ரஹ: ஸததம்
கோ ப்ரம்மசர்யவான் ஸ்யாத்?
யஶ்சாஸ்கலிதோர்த்த்வரேதஸ்க: ॥ 53

கே :—மனிதர்களால் மிக சிரமப்பட்டு செய்யக்கூடியது எது?

ப :—எப்பொழுதும் மனதை அடக்குவதேயாகும்

கே :—எவன் பிரம்மசாரியாக ஆவான்?

ப :—இந்திரியத்தை (ரேதஸ்ஸை) நழுவ விடாதவன்

का च परदेवतोक्ता? चिच्छक्तिः, को जगद्भर्ता? ।
सूर्यः, सर्वेषां को जीवनहेतुः? स पर्जन्यः ॥ ५४

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கா ச பரதேவதோக்தா? சிச்சக்தி:,
கோ ஜகத்பர்த்தா? ।
ஸூர்ய:? ஸர்வேஷாம் கோ ஜீவனஹேது:?
ஸ பர்ஜன்ய: ॥ 54

கே :—பரதேவதையாகக் கூறப்படுகிறவன் எவன் ?

ப :—ஞான வடிவமான பராசக்தியாவாள்

கே :—உலகத்தைத் தரிப்பவன் யார் ?

ப :—சூரியன்

கே :—உயிர் வாழ்வதற்கு எது காரணம் ?

ப :—மழை

कः शूरो ? यो भीतत्राता, त्राता च कः ? स गुरुः ।
को हि जगद्गुरुरुक्तः ? शंभुः, ज्ञानं कुतः ? शिवादेव ॥ ५५

க: ஶூரோ? யோ பீதத்ராதா, த்ராதா ச க:? ஸ குரு: ।
கோ ஹி ஜகத்குருருக்த:? ஶம்பு:, ஞானம் குத:?
ஶிவாதேவ ॥ 55

கே :—சூரன் யார் ?

ப :—பயந்தவர்களை ரக்ஷிப்பவனே சூரன்

கே :—ரக்ஷிப்பவன் யார் ?

ப :—ஆசார்யனே

கே :—ஜகத்குரு யார் ?

ப :—ஸ்ரீ சம்புவே ஜகத்குரு

கே :—ஞானத்தை எவரிடமிருந்து விரும்ப வேண்டும் ?

ப :—ஸ்ரீ பரமேஸ்வரனிடமிருந்தே ஞானத்தை விரும்ப வேண்டும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

मुक्तिं लभेत कस्मात्? मुकुन्दभक्तेः, मुकुन्दः कः?।
यस्तारयेदविद्यां, का चाविद्या? यदात्मनोऽस्फूर्तिः॥ ५६

முக்திம் லபேத கஸ்மாத்? முகுந்தபக்தேః, முகுந்தః கః?।
யஸ்தாரயேதவித்யாம், கா சாவித்யா?
யதாத்மனோऽஸ்பூர்த்திః ॥ 56

கே :—மோக்ஷம் எதனுல் கிடைக்கும் ?

ப :—முகுந்த பக்தியால் மோக்ஷம் கிடைக்கும்

கே :—மோக்ஷத்தை அளிக்கும் முகுந்தன் யார் ?

ப :—அவித்யையைத் தாண்டி வைப்பவனே முகுந்தன்

கே :—எது அவித்யை

ப :—ஆத்மாவை நினைக்காமல் இருக்கும்படி செய்வதே அவித்யை

कस्य न शोको? यः स्यादक्रोधः, किं सुखं? तुष्टिः।
को राजा? रञ्जनकृत्, कश्च श्वा? नीचसेवको यः स्यात्॥ ५७

கஸ்ய ந ஶோகோ? யः ஸ்யாத் அக்ரோதः, கிம்? ஸுகம்
துஷ்டிः ।
கோ ராஜா? ரஞ்சனக்ருத், கஶ்ச ஶ்வா ?
நீசஸேவகோ யः ஸ்யாத் ॥ 57

கே :—யாருக்கு துக்கமில்லை ?

ப :—கோபமற்றவனுக்கு

கே :—சுகம் எது ?

ப :—கிடைத்ததைக்கொண்டு மனதில் ஏற்படும் சந்தோஷம்

கே :—அரசன் (ராஜா) யார் ?

ப :—ஜனங்களை சந்தோஷிக்கும்படிச் செய்கிறவன்

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—நாய் யார் ?

ப :—எவன் நீசனிடத்தில் வேலை செய்கிருனே அவனே நாய்

को मायी? परमेशः, क इन्द्रजालायते? प्रपञ्चोऽयम् ।
कः स्वप्ननिभो? जाग्रद्व्यवहारः, सत्यमपि च किं? ब्रह्म ॥ ५८

கோ மாயீ? பரமேஶ:, க இந்த்ரஜாலாயதே?
ப்ரபஞ்சோऽயம் ।
க: ஸ்வப்நநிபோ? ஜாக்ரத் வ்யவஹார:,
ஸத்யமபி ச கிம்? ப்ரம்ம ॥ 58

கே :—மாயையை அடக்கி ஆளுகிறவன் யார் ?

ப :—பரமேச்வரன்

கே :—இந்திரஜாலப் பொய்யாக இருப்பது எது ?

ப :—இவ்வுலகமே

கே :—ஸ்வப்னம்போல் இருப்பது எது ?

ப :—விழித்துக்கொண்டிருக்கும் வியவஹாரமே

கே :—முக்காலத்திலும் அழியாமல் ஸத்யமாய் இருப்பது எது?

ப :—பரப்ரம்மம்

किं मिथ्या? यद्विद्यानाश्यं, तुच्छं तु? शशविषाणादि ।
का चानिर्वचनीया? माया, किं कल्पितं? द्वैतम् ॥ ५९

கிம் மித்யா? யத் வித்யாநாஶ்யம், துச்சம் து?
ஶஶவிஷாணாதி ।
கா சாநிர்வசநீயா? மாயா, கிம் கல்பிதம்?
த்வைதம் ॥ 59

கே :—மித்யை (பொய்) எது ?

ப :—ஞானத்தினுல் (பிரம்ம ஞானத்தினுல்) அழியக்கூடியது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—பயனை அளிக்காதது எது ?

ப :—முயல் கொம்பு முதலியன

கே :—விவரித்துக் கூறமுடியாதது எது ?

ப :—மாயை

கே :—மாயையால் கல்பிக்கப்பட்டது எது ?

ப :—இரண்டாவது வஸ்து

किं पारमार्थिकं स्यात्? अद्वैतं, चाज्ञता कुतो? अनादिः ।
वपुषश्च पोषकं किं? प्रारब्धं, चान्नदायि किं? चायुः ॥ ६०

கிம் பாரமார்த்திகம் ஸ்யாத்? அத்வைதம்,
சாக்ஞதா குதோ? அநாதிః ।
வபுஷஸ்ச போஷகம் கிம்? ப்ராரப்தம்,
சாந்நதாயி கிம்? சாயுః ॥ 60

கே :—எது பாரமார்த்தமாக உள்ளது ?

ப :—அத்வைதம் (இரண்டாவது வஸ்து அற்றது)

கே :—அக்ஞானம் எப்போது உண்டாயிற்று ?

ப :—அதற்கு ஆதியில்லை

கே :—சரீரத்தை வளர்த்து வருவது எது ?

ப :—ப்ராப்தகர்மம் (பயனை கொடுக்க ஆரம்பித்த கர்மம்)

கே :—அன்னத்தைக் கொடுப்பது எது ?

ப :—ஆயுஸ் (ஆயுள் இருப்பதால்தான் ஆகாரம் செய்யப் படுகிறது என்பது பொருள்)

को ब्राह्मणैरुपास्यो? गायत्र्यर्काग्निगोचरः शंभुः ।
गायत्र्यामादित्ये चाग्नौ शंभौ च किं नु? तत्तत्त्वम् ॥ ६१

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோ ப்ராம்மணைருபாஸ்யோ? காயத்ர்யர்—
காக்னிகோசரః ஶம்புః ।
காயத்ர்யாமாதித்யே சாக்னௌ ஶம்பௌ ச கிம் நு?
தத்தத்வம் ॥ 61

கே :—பிராம்மணர்களால் உபாசிக்க வேண்டிய தைவம் எது ?

ப :—காயத்ரி, சூரியன், அக்னி இவைகளுக்குள் அந்தர்யாமியாக விளங்கும் ஸ்ரீ பரமேச்வரன். காயத்ரீ ஜபத்தாலும் சூர்ய நமஸ்காரத்தாலும் அக்னியின் ஆராதனத்தாலும் ஸ்ரீ பரமேஸ்வரனை ஆராதிக்கவேண்டுமென்பதை உபதேசிக்கப்பட்டதாகக் கருதவேண்டும்.

கே :—காயத்ரீ, சூர்யன், அக்னி, ஸ்ரீ பரமேஸ்வரன் இவர்களுடைய உள்ளே இருப்பது என்ன ?

ப :—அந்தப் பரமசிவனுடைய தத்வஸ்வரூபமே ஆகும்

प्रत्यक्षदेवता का? माता, पूज्यो गुरुश्च कः? तातः ।
कः सर्वदेवतात्मा? विद्याकर्मान्वितो विप्रः ॥ ६२

ப்ரத்யக்ஷதேவதா கா? மாதா, பூஜ்யோ குருஶ்ச கः?
தாதः ।
கः ஸர்வதேவதாத்மா ? வித்யாகர்மாந்விதः விப்ரः ॥

கே :—நேரில் காணக்கூடிய தெய்வம் எது ?

ப :—தாயார்

கே :—பூஜிக்கத்தகுந்த குரு யார் ?

ப :—தகப்பனர்

கே :—ஸகல தேவதாஸ்வரூபியாக இருப்பவன் யார் ?

ப :—வேதம், அதில் சொல்லப்பட்ட கர்மாக்கள், இவைகளுடன் கூடிய பிராம்மணன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

कस्य कुलक्षयहेतुः ? संतापः सज्जनेषु योऽकारि ।
केषाममोघवचनं ? ये च पुनः सत्यमौनशममशीलाः ॥ ६३

கஸ்ய குலக்ஷயஹேது:? ஸந்தாப:,
ஸஜ்ஜனேஷு யோऽகாரி ।
கேஷாமமோகவசனம்? யே ச புந:
ஸத்ய மௌந ஶம ஶீலா: ॥ 63

கே :—குலத்தை அழிப்பதற்கு எது காரணம் ?

ப :—ஸாதுக்களை தாபப்படும்படி செய்வதேயாகும்

கே :—எவர்களுடைய சொற்கள் வீணுகாது ?

ப :—எவர்கள் சத்யம், மௌனம், இந்த்ரியஜயம் இவைகளுடன் கூடினவர்களாக இருக்கின்றனரோ அவர்களுடைய சொல்

किं जन्म ? विषयसङ्गः, किमुत्तरं जन्म ? पुत्रः स्यात् ।
कोऽपरिहार्यों ? मृत्युः, कुत्र पदं विन्यसेच्च ? दृक्पूते ॥ ६४

கிம் ஜந்ம? விஷயஸங்க:, கிமுத்தரம் ஜன்ம? புத்ர:
ஸ்யாத் ।
கோऽபரிஹார்யே? ம்ருத்யு:, குத்ர பதம்
விந்யஸேச்ச? த்ருக்பூதே ॥ 64

கே :—ஜன்மத்துக்குக் காரணம் எது ?

ப :—விஷயங்களில் வைத்த பற்றுதல்

கே :—அடுத்துவரும் பிறப்பு எது ?

ப :—புத்ரன் (அதாவது இவனுடைய சரீரத்திலிருந்து உண்டாகும் புத்ரனையே பிதா என வேதம் கூறுகிறது. அதைத்தான் இங்கு கூறப்பட்டுள்ளது.

கே :—தடுக்கமுடியாதவன் யார் ?

ப :—யமன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—எங்கு காலை வைக்கவேண்டும் ?

ப :—கண்களினால் பரிசுத்தமான இடத்தில்

पात्रं किमन्नदाने ? क्षुधितं, कोऽर्च्यो हि ? भगवदवतारः ।
कस्य भगवान् ? महेशः शङ्करनारायणात्मैकः ॥ ६५

பாத்ரம் கிமந்நதானே? க்ஷுதிதம், கோऽர்ச்யோ ஹி? பகவதவதார: ।
கஸ்ய பகவான்? மஹேஶ: ஶங்கரநாராயணாத்மைக: ॥

கே :—அன்னதானத்திற்குப் பாத்திரம் யார் ?

ப :—பசியுள்ளவன் (மற்ற தானங்களை ஆசாரம், வித்யை முதலியன உள்ளவனிடத்தில் செய்யவேண்டும். அன்னதானமோவெனில் பசியுள்ளவனுக்கே செய்யவேண்டும்; மற்ற குணங்களைப் பார்க்கவேண்டியதில்லை.

கே :—அர்ச்சிக்கத்தகுந்த மூர்த்தி எது ?

ப :—அவதாரங்களைச் செய்த ஸ்ரீ பகவானுடைய மூர்த்தி

கே :—அந்த பகவான் யார் ?

ப :—சங்கரனும் நாராயணனும் இருக்கும் ஒரே வஸ்துவான ஸ்ரீ மஹேசன்

फलमपि भगवद्भक्तेः किं ? तल्लोकस्वरूपसाक्षात्त्वम् ।
मोक्षश्च को ? ह्यविद्यास्तमयः, कः सर्ववेदभूः ? अथ चोम् ॥ ६६

பலமபி பகவத்பக்தே: கிம்? தல்லோகஸ்வரூப ஸாக்ஷாத்த்வம் ।
மோக்ஷஶ்ச கோ? ஹ்யவித்யாஸ்தமய:, க: ஸர்வவேதபூ: ? அத சோம் ॥ 66

கே :—ஸ்ரீ பகவானை பக்தி செய்வதின் பயனென்ன ?

ப :—அவனுடைய லோகத்தையும் அவனுடைய ஸ்வரூபத்தையும் நேரில் பார்ப்பதேயாகும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கே :—எது மோக்ஷம்

ப :—அக்ஞானத்தின் நாசமேயாகும்

கே :—எது எல்லா வேதங்களுக்கும் உற்பத்தி ஸ்தானம் ?

ப :—ஓம் என்னும் பிரணவமேயாகும்

इत्येषा कण्ठस्था प्रश्नोत्तररत्नमालिका येषाम् ।
ते मुक्ताभरणा इव विमलाश्चाभान्ति सत्समाजेषु ॥ ६७

இத்யேஷா கண்டஸ்தா ப்ரஶ்னோத்தர
ரத்னமாலிகா யேஷாம் ।
தே முக்தாபரணா இவ விமலாஶ்சாபாந்தி
ஸத்ஸமாஜேஷு ॥ 67

இந்த ப்ரச்னோத்தர ரத்ன மாலிகையை கழுத்தில் (மனதில்) முக்தாபரணம் போல் தரிப்பவன் பெரியோர்கள் நிறைந்த சபையில் முக்தாபரணம் போல் பிரகாசிப்பார்கள்.

சுபம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரதக்ஷிண விதிகள்

ஸ்ரீவிநாயகர் முதலிய தெய்வங்களையும், அரச மரத்தையும், பிரதக்ஷிணம் செய்யும் முறை

प्रदक्षिणसमो नास्ति प्रत्यक्षफलदो विधिः ।
एकं गणाधिपे कुर्यात् द्वे सूर्ये त्रीणि शङ्करे ।
चत्वारि केशवे देवे सप्ताश्वत्थे प्रदक्षिणम् ॥
पादौ पादान्तरे यस्य करौ चलनवर्जितौ ।
स्तुतिर्वाचिहृद्ध्यानं चतुरंगं प्रदक्षिणम् ॥
नैव प्रदक्षिणं कुर्यादन्तरे देवशाक्तयोः ।
देवपीठान्तरे चैव न कुर्यादिति शासनम् ॥

பிரதக்ஷிணஸமோ நாஸ்தி ப்ரத்யக்ஷபலதோ விதி: ।
ஏகம் கணாதிபே குர்யாத் த்வே ஸூர்யே த்ரீணி ஶங்கரே ।
சத்வாரி கேஶவே தேவே ஸப்தாஸ்வத்தே ப்ரதக்ஷிணம் ।
பாதௌ பாதாந்தரே யஸ்ய கரௌ சலனவர்ஜிதௌ ।
ஸ்துதிர்வாசிஹ்ருதித்யானம் சதுரங்கம் ப்ரதக்ஷிணம் ।
நைவ ப்ரதக்ஷிணம் குர்யாதந்தரே தேவஶாக்தயோ:।
தேவபீடாந்தரே சைவ ந குர்யாதிதி ஶாஸனம் ॥

பிரதக்ஷிணம் செய்வதால் கண்கூடான பலன் ஏற்படுவதுபோல் வேறு எதனாலும் ஏற்படுவதில்லை. ஸ்ரீ விநாயகருக்கு ஒரு பிரதக்ஷிணமும், சூரியனுக்கு இரண்டு பிரதக்ஷிணங்களும், ஸ்ரீ பரமேச்வரனுக்கு மூன்று பிரதக்ஷிணங்களும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு நான்கு பிரதக்ஷிணங்களும், அரசமரத்துக்கு ஏழு பிரதக்ஷிணங்களும் செய்யவேண்டும். (இதற்கு குறைவாகச் செய்யக்கூடாது. அதிகமாகச் செய்யலாம்) பிரதக்ஷிணத்திற்கு நான்கு அங்கங்கள் உள்ளன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரதக்ஷிணம் செய்யும்போது எடுத்து வைக்கும் காலை பூமியில் வைக்கப்பட்டிருக்கும் காலுக்கு உள்ளாக வைத்து மெள்ள நடந்து செல்லவேண்டும். (மற்ருெரு இடத்தில் பிரதக்ஷிண முறையைக் கூறும்போது பிரசவிக்கும் தருவாயில் இருக்கும் பூர்ண கர்ப்பிணி தலையில் எண்ணெய் குடத்துடன் நடந்தால் எவ்வாறு நடப்பாளோ அவ்வாறு நடந்து செல்ல வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது) கைகளை ஆட்டாமலும், வாக்கினுல் ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டும் ஹ்ருதயத்தில் ஸ்ரீ பகவானை த்யானித்துக்கொண்டும் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

தெய்வத்திற்கும் தெய்வத்தை உபாஸிக்கும் உபாஸகனுக்கும் நடுவில் பிரதக்ஷிணம் செய்யக்கூடாது. உபாஸகனையும் சேர்த்தே பிரதக்ஷிணம் செய்யவேண்டும். பலிபீடத்திற்கு நடுவில் சென்று பிரதக்ஷிணம் செய்யக்கூடாது.

பிரயாண கார்யசித்தி

வெளியில் செல்லும்போது காரிய சித்தியை அளித்து சுகமாய் திரும்பி வருவதற்கு ஜெபிக்கவேண்டிய சுலோகம்

वैन्यं पृथुं हैहयमर्जुनं च शाकुन्तलेयं भरतं नलं च ।
एतान् नृपान् यः स्मरति प्रयाणे तस्यार्थसिद्धिः पुनरागमश्च ॥

வைந்யம் ப்ருதும் ஹைஹயமர்ஜுநஞ்ச
ஶாகுந்தலேயம் பரதம் நளஞ்ச ।
ஏதான் ந்ருபான் ய: ஸ்மரதி ப்ரயாணே,
தஸ்யார்த்தஸித்தி: புநராகமஶ்ச ॥

ஒ கங்காதர! ஒ மஹேச்வர! பாதி சரீரத்தில் ஸ்ரீ அம்பாளை தரித்தவரே, ஸகல பாபங்களை அழிக்கின்றவரே, பரமானந்த ரூபியே, பிரும்மாதி தேவர்களுக்கும் மேலாக இருப்பவரே, தாங்கள்தான் எங்களை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரக்ஷிக்க வேண்டியவர். எங்களிடத்தில் மஹாபாபிகளும் உபபாதகத்தைத் செய்தவர்களும் ஸ்நானம் செய்து பாபங்களை எல்லாம் விட்டு விடுகிறார்கள். எங்கள் பாபத்தை எங்கு போக்கிக் கொள்வோம் எனக் கேட்டனர்.

यूयं गच्छत वेगेन अस्मिन्नेव दिने शुभे ।
शिवविष्णवोः प्रिये क्षेत्रे कुम्भकोणाह्वये शुभे ॥
लग्ने वृषभसंज्ञे तु महामाघोत्सवे परे ।
सन्निधौ कुम्भलिङ्गस्य तीर्थे पापापनोदके ॥
साक्षात्सुधापूरकृते परब्रह्माज्ञया पुरा ।
गुरौ मृगेन्द्रगे माघे मघर्क्षे पूर्णिमादिने ॥
स्नानं कुरुध्वं मद्भक्त्या ध्वस्तपातकसञ्चयाः ।
सर्वेषां पापजालानां भेदितुं शक्तिमेत्य च ॥
इतः परं पापजालैः निर्लिप्ताः तीर्थदेवताः ।
भवन्ति नात्र सन्देहः सत्यं सत्यमितीरिताः ॥

யூயம் கச்சத வேகேன அஸ்மின்னேவ தினே ஶுபே ।
ஶிவவிஷ்ண்வோ: ப்ரியே க்ஷேத்ரே
கும்பகோணாஹ்வயே ஶுபே ॥
லக்னே வ்ருஷபஸம்க்ஞே து மஹாமாகோத்ஸவே பரே
ஸன்னிதௌ கும்பலிங்கஸ்ய தீர்த்தே பாபாபனோதகே ॥
ஸாக்ஷாத்ஸுதாபூரக்ருதே பரப்ரம்மாக்ஞயா புரா ।
குரௌ ம்ருகேந்த்ரகே மாகே மகர்க்ஷே பூர்ணிமாதினே
ஸ்நானம் குருத்வம் மத்பக்த்யா த்வஸ்தபாதகஸஞ்சயா:
ஸர்வேஷாம் பாபஜாலானாம் பேதிதும் ஶக்திமேத்ய ச ॥
இத: பரம் பாபஜாலை: நிர்லிப்தா: தீர்த்ததேவதா: ।
பவந்தி நாத்ர ஸந்தேஹ: ஸத்யம் ஸத்யமிதீரிதா: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீ பரமேச்வரன் பதில் கூறியதாவது :— ஓ தீர்த்த தேவதைகளான நதிகளே, இன்றே கும்பகோணம் செல்லுங்கள். இன்று அங்கு மஹாமகம். "பாபப நோதகம்" என்ற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யுங்கள். உங்கள் பாபங்கள் எல்லாம் விலகுவதோடு இனி பாபிகள் ஸ்நானம் செய்தால் உங்களிடம் அந்த பாபம் ஸம்பந்திக்காமல் அவர்களுக்கும் பாபங்கள் விலகி விடும். இதில் ஸந்தேஹமில்லை. ஸத்யமாகக் கூறு கிறேன். ஸத்யமாகக் கூறுகிறேன் என்று பரமசிவன் கூறியதும், அந்த ஒன்பது தீர்த்த தேவதைகளும் கும்பகோணம் (திருக்குடந்தை) எங்கு இருக்கிறது, நாங்கள் அறியோம். தங்களுடைய சரண கமலம் ஒன்றைத்தான் நாங்கள் அறிவோம்.

त्वत्पादमूलमेकं तु जानीमोऽत्र न संशयः। (த்வத்பாத-மூலமேகம் து ஜாநீமோத்ர ந ஸம்ஶய:) என்று கூறினார்கள்.

ஸ்ரீ பரமசிவன் பார்வதீதேவியுடன் கைலாஸ மலையிலிருந்து விருஷபத்தின் மீது ஏறிக்கொண்டு பரிவாரங்களுடன் நான் வருகிறேன். என்னுடன் நீங்கள் வாருங்கள் என்று கூறி உடன் காசிக்குச் சென்றார்.

वाराणसीं च स्वपुरीं कन्यकाभिस्समन्वितः।

வாராணஸீம் ச ஸ்வபுரீம் கந்யகாபிஸ்ஸமந்வித: ।

அங்கு சென்று ஸ்ரீ விச்வேச்வரராகி இந்திராதி தேவதைகளுடனும், தீர்த்த தேவதைகளான ஒன்பது கன்னிகைகளுடனும், கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுகளுடனும் ஒரு க்ஷணத்தில் கும்பகோணம் வந்து சேர்ந்தார்.

இவ்வாறு வேத கோஷங்களுடனும், வாத்ய கோஷங்களுடனும் பாபாபநோதகம் என்ற மஹாமகக் குளத்தின் வடகரையில் வந்து அமர்ந்தார். அவர் வந்த வாத்ய கோஷம் வேத கோஷம் இவைகளைக் கேட்டு கிழக்கு முகமாக அமர்ந்திருந்த 'பலேச்வரர் என்ற பரமசிவன் (மஹாமகக் குளம் கீழ் கரையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உள்ளவர்) மேற்கு முகமாகத் திரும்பிவிட்டார். அந்தக் கோவிலில் உள்ள ஸுதாவல்லி என்றும், அம்ருதவல்லி என்றும் பெயர் உள்ள அம்பாள் தெற்கு முகமாக அமர்ந்து விட்டாள். இவ்வாறு ஆனதைப் பார்த்து பக்தர்களும், நவ கன்னிகைகளும் ஆச்சர்யப்பட்டனர். அதைக்கண்ட விச்வேச்வரர் அந்த நவ கன்னிகைகளைப் பார்த்து நான்தான் பலேச்வரராக இருந்து இப்பொழுது அபிமுகேச்வரர் என்று ஆனேன் என்று கூறினர்.

உடன் ஒன்பது கன்னிகைகளும் நாங்கள் இந்த தீர்த்தத்தை பார்த்துக்கொண்டு சந்த்ர சூரியன் உள்ள வரையிலும் இங்கு இருக்கிறோம். நீங்கள் எங்களை பாதுகாக்கவேண்டும் என்று வேண்டி இன்று முதல் பலேச்வரர் என்ற தங்களை அபிமுகேச்வரர் என்று அழைக்கட்டும் என்றும் வேண்டினர்கள். அப்படியே விச்வேச்வரரும் வரன் கொடுத்தார். உடன் அந்த ஒன்பது கன்னிகைகளும் ஸ்ரீ விச்வநாதருடன் அந்த பாபபநோதகம் என்ற மஹாமககுளத்தை பிரதக்ஷிணம் செய்து அந்த விச்வநாதர் கோவிலில் வந்து அமர்ந்தார்கள்.

ஸ்ரீ பிரும்மதேவர் ஸ்ரீ கும்பேச்வரருக்கு மகோத்ஸவத்தை நடத்தி பத்தாவது தினம் அந்த குளத்தில் விருஷப லக்னத்தில் அவபிருத ஸ்நானம் செய்ய பரிவாரங்களுடன் ஸ்ரீ கும்பேச்வரரை ஸ்ரீ மங்களாம்பிகையுடன் விருஷபாருடராய் அழைத்து வந்து தனது தீர்த்தமாகிய ப்ரம்மதீர்த்த மண்டபத்தில் (அதாவது மஹாமகக் குளம் வடகரையில்) அமர்த்தினர். அப்பொழுது —

सुरेन्द्रगन्धर्व महोरगाद्यैः वराप्सरोभिः सहवाद्यघोषैः ।
सोमार्कवैश्वानरसाध्यसङ्घैः महोत्सवस्यावभृथे मुदान्विताः ॥

ஸுரேந்த்ர கந்தர்வ மஹோரகாத்யை:
வராப்ஸரோபி: ஸஹவாத்யகோஷை: ।
ஸோமார்கவைச்வானரஸாத்யஸங்கை:
மஹோத்ஸவஸ்யாவப்ருதே முதான்விதா: ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவேந்திரன், கந்தர்வர்கள், உரகர் முதலியவர்கள், அப்ஸர ஸ்திரீகள், சந்திரன், சூரியன், அக்னி, ஸாத்யாள் முதலிய தேவர்கள் வாத்ய கோஷத்துடன் பிரும்ம தேவருடன் வந்தார்கள். அப்பொழுது அந்த கும்பகோணத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் உள்ள மூர்த்திகள் தங்கள் தங்கள் வாஹனங்களில் தீர்த்தம் கொடுப்பது வழக்கம். இப்பவும் அங்கு ஸ்ரீ கும்பேச்வரர், ஸ்ரீ நாகேச்வரர், ஸ்ரீ விச்வேச்வரர், ஸ்ரீ அபிமுகேச்வரர், ஸ்ரீ ஸோமேச்வரர், ஸ்ரீ கௌதமேச்வரர், ஸ்ரீ காளேச்வரர், ஸ்ரீ கோடீச்வரர், ஸ்ரீ பாணேச்வரர் முதலிய கோவில்களிலிருந்து அந்த தீர்த்தங்களுக்கு தீர்த்தம் கொடுக்க வருவது வழக்கம். மூன்று லோகத்திலும் இம்மாதிரி பிரும்மஹத்யாதி பாபங்களை போக்கும் தீர்த்தம் ஒன்றுமில்லை. இதற்கு மாகதீர்த்தம் எனப் பெயர். அதாவது "அகம்" என்றால் பாபம். "மா" என்றால் தொடாது. இதில் ஸ்நானம் செய்தவர்களை பாபம் தொடாது. அதனால் இந்தப் பெயர் வந்தது. இந்த தீர்த்தத்தை ஒருதடவை நமஸ்கரித்தால் தேவர்கள் யாவரையும் நமஸ்கரித்த புண்யம் கிடைக்கும். இந்தக் குளத்தை ஒருதடவை பிரதக்ஷிணம் செய்தால் பூமியை நூறுமுறை பிரதக்ஷிணம் செய்த புண்யம் கிடைக்கும். மஹாமகத்தன்று இந்தக் குளத்தில் ஸ்நானம் செய்தால், கங்காதீரத்தில் நூறு வருஷம் வஸித்து மூன்று காலம் ஸ்நானம் செய்த பலன் வரும். இதே மஹாமகாகுளத்தில் உள்ள ப்ரம்ம தீர்த்தத்தில் (வடபுறத்தில் உள்ளது) மகத்தன்று ஸ்நானம் செய்கின்றவன் தனது கோத்திரம், மனைவியின் கோத்திரம், மாதா மஹனின் கோத்திரம் முதலிய ஏழு கோத்திரங்களைச் சேர்ந்த நூற்றொன்று (101) தலைமுறையை ஸத்கதியை அடையச் செய்கிறான். இந்த மகாமகத்தன்று ஸ்நானம் செய்தானேவெனில் மூன்றுகோடி தலைமுறையை ஸத்கதியை அடையச் செய்கிறான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ब्रह्मतीर्थे सकृत्स्नानं यः करोति सुभक्तितः ।
उद्धरेत्सप्त गोत्राणि कुलमेकोत्तरं शतम् ॥
महामाघे सकृत्स्नानं त्रिकोटि कुलमुद्धरेत् ॥

ப்ரும்மதீர்த்தே ஸக்ருத்ஸ்நானம் ய: கரோதி ஸுபக்தித:
உத்தரேத்ஸப்த கோத்ராணி குலமேகோத்தரம் ஶதம் ।
மஹாமாகே ஸக்ருத்ஸ்நானம் த்ரிகோடி குலமுத்தரேத்

மற்ற நாட்களில் ஸ்நானம் செய்தால் ஸப்த க்ருச்ரத்தை அனுஷ்டித்த பலன் வரும். இந்த ப்ரும்ம தீர்த்தத்தை தர்சித்தாலே மஹா பாபங்களெல்லாம் விலகி ஸர்வ அபீஷ்டங்களும் உண்டாகிவிடும். ஓ நாரதா! இது ஸத்யம் ஸத்யம் (உண்மை உண்மை) என்று பிரம்மதேவர் கூறினார்.

दर्शनात् ब्रह्मतीर्थस्य महाघौघ निवारणम् ।
सर्वाभीष्टमवाप्नोति सत्यं सत्यं हि नारद ॥

தர்ஶனாத் ப்ரம்மதீர்த்தஸ்ய மஹாகௌக நிவாரணம் ।
ஸர்வாபீஷ்டமவாப்னோதி ஸத்யம் ஸத்யம் ஹி நாரத ॥

இந்த ப்ரும்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் ப்ரும்மக்ஞானம் உண்டாகும். மேலும் —

श्रियं विद्यां जयञ्चैव कीर्तिमायुः परं वसु ।
पुत्रपौत्र समृद्धिश्च ब्रह्मतीर्थ निषेवणात् ॥

ஶ்ரியம் வித்யாம் ஜயஞ்சைவ கீர்திமாயு: பரம் வஸு ।
புத்ர பௌத்ர ஸம்ருத்திஸ்ச ப்ரம்மதீர்த்த நிஷேவணாத்

லக்ஷ்மியையும், கல்வியையும், ஜயத்தையும், கீர்த்தியையும், நீண்ட ஆயுளையும், சிறந்த ஐச்வர்யத்தையும், புத்ரர்கள், பேரப்பிள்ளைகள் முதலிய ஸம்ருத்திகளையும் அந்த ப்ரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அடைகிருன். இதற்கு கீழ்புறத்தில் குபேர தீர்த்தம் உள்ளது. அதில் ஸ்நானம் செய்து தானம் செய்வதால் குபேரனுக்கு ஒப்பான ஐச்வர்யம் உள்ளவனுக ஆவான். இந்த தீர்த்தத்திற்கு கீழ்பாகத்திலும் இந்திர தீர்த்தத்திற்கு வடபுரத்திலும் உள்ள ஈசான தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் மலைபோல் உள்ள பாபங்கள் விலகிவிடும். கோரிய பலன்களை அடைவான். இதில் ஸந்தேகமில்லை.

இந்த மஹாமகக் குளத்தின் நடுவில் உள்ளது கன்யா தீர்த்தம் எனச் சொல்வது. இதில் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் உள்ளனவாம். இதில் ஸ்நானம் செய்வதால் ப்ரம்மாண்டத்திலுள்ள எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலன் கிடைக்குமாம்.

षट्षष्टि कोटि तीर्थानि संभूय किल नारद ।
कन्यातीर्थे मध्यभागे वासं कुर्वन्ति नित्यशः ॥
तत्तीर्थ स्नानकरणात् सर्वतीर्थ फलं लभेत् ॥

ஷட்ஷஷ்டி கோடி தீர்த்தாநி ஸம்பூய கில நாரத ।
கன்யாதீர்த்தே மத்யபாகே வாஸம் குர்வந்தி நித்யமு:॥
தத்தீர்த்த ஸ்நானகரணுத் ஸர்வதீர்த்த பலம் லபேத் ॥

ப்ரம்ம தீர்த்தத்திற்கும், வாயு தீர்த்தத்திற்கும் நடுவில் பாகீரதி தீர்த்தம் உள்ளது. அதில் கங்கை நித்ய வாஸம் செய்கிருள்.

तत्र स्नानान्नरो याति वैकुण्ठं नात्र संशयः ।
तत्र स्नानान्नरो याति कैलासं नात्र संशयः ॥

தத்ர ஸ்நாஞன்நரோயாதி வைகுண்டம் நாத்ர ஸம்மய:
தத்ர ஸ்நாஞன்நரோயாதி கைலாஸம் நாத்ர ஸம்மய:

இதில் ஸ்நானம் செய்பவர் தன் இஷ்டப்படி கைலாஸத்தையோ, வைகுண்டத்தையோ அடைவார். மஹாமகத்தன்று இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தால்-காசியில் வஸித்து கங்கையில் பதினாயிரம் ஸ்நானம் செய்த பலனை அடைவார் என பவிஷ்யோத்தர புராணத்தில் ப்ரம்மதேவர் நாரதரை பார்த்து கூறியிருக்கிறார்.

गङ्गास्नानायुत फलं महामाघे कृतं नृणाम् ।

கங்காஸ்நாநாயுத பலம் மஹாமாகே க்ருதம் ந்ருணாம் ।

ஆதலால்தான் நமது ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யாளான ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இந்த பாகீரதி தீர்த்தத்தில் மஹாமகத்தன்று ஸ்நானம் செய்வது வழக்கம். இக்கலியிலும் மஹாமகத்தன்று வடபுறத்தில் காசியிலிருந்து கங்கை வருவது ஆச்சரியப் படத்தகுந்ததாக இருக்கும். அங்கு பல குமுழிகள் வ்ருஷப லக்கினத்தில் ஏற்படுவதை பார்க்கலாம். இம்மாதிரி இந்த குளத்தில் இருபது தீர்த்தங்கள் உள்ளன. அங்குள்ள வைதீகர்களும், ஸங்கல்பம் செய்து வைக்கும்போது முறைப்படி மந்திரங்களைச் சொல்லி தீர்த்தங்களுடைய பெயர்களைச் சொல்லி ஸ்நானம் செய்து வைப்பார்கள். இங்கு ஒவ்வொரு தீர்த்தங்களிலும் தனித்தனி ஸங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் செய்து க்ருச்சர தானம் செய்வது ரொம்பவும் விசேஷம். க்ருச்சரம் என்றால் பசுவின் விலையை ஒரு அக்னிஹோத்ரியினிடத்திலோ, வேதவித்துக்களிடத்திலோ தானம் செய்வது வழக்கம். ப்ரத்யக்ஷ "கோ" (பசு)வை தத்தம் பண்ணியோ, நேரிலோ அக்னி ஹோத்ரிகளிடத்திலோ, வேதவித்துக்களிடத்திலோ கொடுக்கலாம். இந்த சமயத்தில் தானம் செய்வது கோடி கோதானம் செய்த புண்யமாகும். ஏனென்றால் கங்காதி புண்ய நதிகளும் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும், ஸமஸ்த தேவதைகளும் அங்கு இருப்பதால் அந்த ஸன்னிதியில் தானம் செய்வது விசேஷமாகும். அந்த தீர்த்தங்களின் பெயரை பவிஷ்யோத்தர புராணம் முதலியவைகளில் கூறியபடி கீழே காணலாம்.

(1) வாயு தீர்த்தம் — அந்த குளத்தின் வட மேற்கு திக்கில் உள்ள தீர்த்தத்தில் உள்ளது. அதிலி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ருந்து பிரதக்ஷிணமாக ஒவ்வொரு தீர்த்தங்களும் உள்ளன.

(2) பாகீரதி தீர்த்தம் (கங்கா தீர்த்தம்) — இந்த இடத்தில்தான் நமது ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாசார்யாள் ஸ்நானம் செய்வது வழக்கம்.

(3) ப்ரம்ம தீர்த்தம் (4) யமுனா தீர்த்தம் (5) குபேர தீர்த்தம் (6) கோதாவரி தீர்த்தம் (7) ஈசான தீர்த்தம் (8) நர்மதா தீர்த்தம் (9) இந்திர தீர்த்தம் (10) ஸரஸ்வதீ தீர்த்தம் (11) அக்னி தீர்த்தம் (12) காவேரி தீர்த்தம் (13) யம தீர்த்தம் (14) குமரி தீர்த்தம் (15) நிருருதி தீர்த்தம் (16) பயோஷ்ணீ (பாலாறு) தீர்த்தம் (17) தேவ தீர்த்தம் (18) வருண தீர்த்தம் (19) ஸரயூ தீர்த்தம் (20) கன்யா தீர்த்தம். நடுவில் அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள் உள்ளன. இந்த மஹாமக குளத்தில் ப்ரம்மா அவபிருதம் செய்ததால் "பிரம்ம தீர்த்த" மென்றும், பாபங்களை போக்குவதால் "பாபாபநோதகம்" என்றும், அமிருததாரையினின்றும் பெருகினதால் "ஸுதா தீர்த்தம்" என்றும், கங்காதி ஒன்பது தீர்த்தங்களும் கன்னிகைகளாக வந்து ஸ்நானம் செய்ததால் "கன்யா தீர்த்தம்" என்றும் பொதுவாக பெயர்கள் கூறப்படுகிறது.

இந்த மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்வதற்கு முன் காவேரியில் ஸ்நானம் செய்வது வழக்கம். முடிந்தால் முதல் தினமோ அன்றோ பஞ்சகவ்யத்தை பிராசனம் செய்யலாம்.

இந்த மஹாமக வருஷத்தில் மஹாமகத்திற்கு ஒரு வருஷம் முன்னமேயே கங்காதி அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் ஸமஸ்த தேவதைகளும் கும்பகோணத்திற்கு வந்துவிடுகின்றனராம். ஆதலின் இந்த மஹாமக வருஷத்தில் வேறு தேசத்திலுள்ள தீர்த்தங்களுக்குப் போவதில்லை. விவாஹாதி சுப முகூர்த்தங்களைச் செய்வதில்லை. "ஆனால் ஸ்ம்ருதிகளில் ஸர்வ தேவதைகளும் விந்திய மலைக்கும் நர்மதைக்கும் தென்புறமுள்ள தென்னாட்டில் வருவதால் விந்திய மலைக்கு தெற்கே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உள்ளர்கள் விவாஹாதி சுப முகூர்த்தங்கள் செய்யலா மென்றும், அதற்கு வடக்கே உள்ளவர்கள் தான் செய்யக் கூடாது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வியாஸ ஸ்மிருதியில் கூறிய வசனங்களை கீழே காணலாம் —

नर्मदोत्तरदेशे तु सिंहस्थे देवमन्त्रिणि ।
विवाहं नैव कुर्वीत निषेधो नास्ति दक्षिणे ॥

நர்மதோத்தரதேசே து ஸிம்மஸ்தே தேவமந்த்ரிணி ।
விவாஹம் நைவ குர்வீத நிஷேதோ நாஸ்தி தக்ஷிணே ॥

இப்படியே மத்ஸ்ய, கர்க, ஸ்மிருதிகளிலும் கூறப் பட்டுள்ளது.

விச்வநாத ஸ்வாமி கோவிலிலுள்ள ஒன்பது கன்னிகைகளை பூஜை செய்ய வேண்டும். இந்த கன்னிகைகள் தமது ஓர் அம்சத்தால் இந்தக் கோவிலில் பெண்களின் உருவங்களாகவும், மற்ற அம்சத்தால் தீர்த்த உருவங்களாகவும் விளங்குகின்றனர். இவர்கள் தினந்தோறும் மந்த்ர பீடேச்வரியான ஸ்ரீ மங்களாம்பிகை யையும், திரிபுர ஸம்ஹாரம் செய்து சத்ரு பயத்தைப் போக்குகின்ற ஸ்ரீ கும்பேச்வரரையும், ஸ்ரீ கோமளவல்லி யையும், கதாதரனும், ஸர்வக்ஞனுமான ஸ்ரீ சாரங்க பாணியையும் நமஸ்கரித்து ஸேவித்து வருகின்றனர்.

இந்த மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்ததும் ஒன்பது முறங்களில் மாதுளம் பழம் முதலிய பழங்களை யும், வஸ்திரம், தாம்பூலம் முதலியவைகளை வைத்து வேதவித்துக்களிடத்தில் தானம் செய்ய வேண்டும். அந்த மஹாமகத்தன்று ஸ்நானம் செய்வதும், தானம் செய்வதும், பித்ருக்களை குறித்து தர்பணம் செய்வதும், ஸ்ரீ அபிமுகேச்வரர், ஸ்ரீ விச்வேச்வரர், ஸ்ரீ கௌதமேச் வரர், ஸ்ரீ நாகேச்வரர், ஸ்ரீ காளேச்வரர், ஸ்ரீ ஸோமேச் வரர், ஸ்ரீ கும்பேச்வரர், ஸ்ரீ சாரங்கபாணி, ஸ்ரீ சக்ரபாணி, ஸ்ரீ வராஹப்பெருமாள், ஸ்ரீ கோடீச்வரர் முதலிய மூர்த்தி களை தர்சித்து பூஜித்து அர்ச்சனம் செய்வது அளவு கடந்த பயனை அளிக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

तस्मात्तस्मिन्दिने स्नात्वा सर्वतीर्थफलं लभेत् ।
तदा स्नानञ्च दानञ्च पितॄनुद्दिश्य तर्पणम् ॥
भगवत्पूजनं चैव अनन्तफलदं विदुः ॥

தஸ்மாத்தஸ்மிந்தினே ஸ்நாத்வா ஸர்வதீர்த்தபலம் லபேத் ।
ததாஸ்நானஞ்ச தானஞ்ச பித்ரூநுத்திஶ்ய தர்பணம் ॥
பகவத்பூஜனம் சைவ அனந்தபலதம் விது: ॥

ஸ்ரீ விச்வனாதஸ்வாமி கோவிலிலிருக்கும் ஒன்பது கன்னிகைகளையும் பூஜித்து அர்ச்சனம் செய்து ஒன்பது முறங்களில் புஷ்பம், பலம், குங்குமம், தேங்காய், வஸ்திரம் இவைகளை வைத்து அதன் மேல் ஒன்பது முறங்களால் மூடி, ஒன்பது சுமங்கலிகளிடத்தில் கொடுக்க வேண்டும்.

மஹாமகத்தன்று இருபது தானங்கள் செய்ய வேண்டும். அந்த தானங்களை தீர்த்தக்கரையிலோ, அங்குள்ள அரசமரத்தடியிலோ, கோவில்களிலோ, வீட்டிலோ செய்யலாம். அந்த தானங்களாவன :—

(1) பூமி தானம் (2) கன்னிகாதானம் (இதற்காக பொருளை தானம் செய்வது) (3) ஸ்வர்ண தானம் (4) யக்ஞோபவீததானம் (5) கோதானம் (6) அச்வ தானம் (குதிரை) (7) வ்ருஷப தானம் (காளை மாடு) (8) அன்ன தானம் (9) பாயஸ தானம் (10) தான்ய தானம் (11) கல்பக வ்ருக்ஷ தானம் (தென்னை) (12) குப்த தானம் (பூஷணிக்காய் அல்லது பலாப்பழம் அல்லது இள நீர், இவைகளில் ஒரு ரூபாய் அகலத்திற்கு பூரி, அதற்குள் ரத்னம், ஸ்வர்ணம், வைரம், வைடூர்யம், வெள்ளி, முத்து இவைகளை போட்டு எடுத்த தோலினாலேயே மூடி, தக்ஷிணையுடன் கொடுப்பது குப்த தானம்) (13) சந்தன தானம் (14) நல்முத்துதானம் (15) நவரத்ன தானம் (16) தேன் தானம் (17) உப்பு தானம் (18) எள்ளுதானம் (19) மாதுளம் பழம்தானம் (20) 16 விதமான பழங்களை வைத்து 16 பேர்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தானம் செய்வது ஷோடசபலதானம் ஆக இந்த இருபது தானங்களையும் தன் சக்திக்குத் தக்கவாறு அவரவர்கள் வஞ்சனையில்லாமல் செய்ய வேண்டும்.

ஸத்புத்ரனை விரும்புகிறவன் செய்ய வேண்டிய தானங்களாவன —

(1) கல்பகவிருக்ஷம் (தென்னைமரம்) (2) பதினேரு எள்ளுருண்டை (3) ஐம்பது பலம் எடையுள்ள வெண்ணைக்குள் நவரத்தினங்களை வைத்து லிங்கமாகச் செய்து வேதவித்துக்களிடம் தானம் செய்ய வேண்டும். இந்த தானங்களை அங்குள்ள அரச மரத்தடியிலேயே செய்வது நலம். முடியாவிடில் வேறு இடத்திலும் செய்யலாம். அதன் வசனமாவது —

पिप्पलद्रुममूलं तु समासाद्य द्विजोत्तमम् ।
संपूज्य कल्पवृक्षन्तु दानं कुरु द्विजोत्तम ॥
तिलपिण्डकदानं तु शर्कराक्तं तथैककम् ।
नवनीतकृतं शम्भुं पञ्चाशत्पलनिर्मितम् ॥
नवरत्नसगर्भन्तु ददस्व त्वं द्विजातये ॥

பிப்பலத்ருமமூலம் து ஸமாஸாத்ய த்விஜோத்தமம் ।
ஸம்பூஜ்ய கல்பவ்ருக்ஷம்து தானம் குரு த்விஜோத்தம ॥
திலபிண்டகதானம் து ஶர்கராக்தம் தஶைககம் ।
நவநீதக்ருதம் ஶம்பும் பஞ்சாஶத்பலநிர்மிதம் ॥
நவரத்னஸகர்பந்து ததஸ்வ த்வம் த்விஜாதயே ॥

இதனல் அழகான புத்ரன் பிறப்பான் என்று சாண்டில்ய முனிவர் வீர சர்மா என்ற அரசனுக்கு உபதேசித்து அவ்வாறு அந்த அரசன் செய்து புத்ர லாபத்தை அடைந்தான். அன்று வேதவித்துக்களுக்கு போஜனம் செய்து வைப்பது மிகவும் புண்யமாகும்.

நினைத்தமாத்திரத்தில் பாபங்களைப் போக்கும் ஸ்ரீ கும்பேச்வரர், ஸ்ரீ சாரங்கபாணி, ஸ்ரீ சக்ரபாணி, ஸ்ரீ நாகேச்வரர் முதலிய மூர்த்திகளை சிறந்த முறையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூஜித்து அர்சனை செய்து வேதவித்துக்களுக்கு அன்ன தானம் செய்து வைக்க வேண்டும்.

कुम्भलिङ्गं च शम्भोश्च स्मरणात् पापभेदिनः ।
श्रीमद्वैकुण्ठनाथस्य शार्ङ्गपाणेश्च चक्रिणः ॥
महदभ्यर्चनं कृत्वा प्रणमेच्च ततः परम् ॥

கும்பலிங்கம் ச ஶம்போஸ்ச ஸ்மரணாத் பாபபேதிநః ।
ஸ்ரீமத்வைகுண்டநாதஸ்ய ஶார்ங்கபாணேஸ்ச
சக்ரிணः ॥
மஹதப்யர்சனம் க்ருத்வா ப்ரணமேச்ச ததः பரம் ॥

அன்று செய்த சிறிதளவு தானமும் மேருமலைக்கு ஸமானமாக ஆகி அனந்த புண்யங்களைத் தரும்.

கும்பகோணத்தில் தீர்த்தச்ராத்தம் செய்வது நலம். மஹாமகத்திற்கு முன் தினங்களிலும் செய்யலாம். அன்றும் செய்யலாம். ஹிரண்ய ரூபமாகச் செய்து பிண்ட தானமும் செய்யலாம். அன்று ஸௌகர்யப் பட்டால் கழுத்துக்குமேல் வபனம் செய்து கொள்ளுவது நலம். அந்த வசனமாவது —

कक्षोपस्थं वर्जयित्वा क्षौरकर्म समाचरेत् ॥

கக்ஷோபஸ்தம் வர்ஜயித்வா க்ஷௌரகர்ம ஸமாசரேத் ।

இதற்கு பின்பு ஸ்நானம் செய்து தர்பணம் தானம் முதலியவைகளை செய்ய வேண்டும்.

महामघव्रतं त्वेवं यः करोति नरो भुवि ।
करस्थं तस्य कैवल्यं किमुताखिल संपदः ॥

மஹாமகவ்ரதம் த்வேவம் யः கரோதி நரோ புவி ।
கரஸ்தம் தஸ்ய கைவல்யம் கிமுதாகில ஸம்பதः ॥

இம்மாதிரி மஹாமக வ்ரதத்தை (மகாமக ஸ்நான தான பூஜைகளை) இவ்வுலகில் எவன் செய்கிறானோ அவன் கையில் மோக்ஷம் கிட்டிவிடும். அப்படி இருக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவனுக்கு ஸகல ஸம்பத்தும் கிடைக்கும் என்பதில் என்ன ஸந்தேகம்.

அன்று கும்பகோணம் போக முடியாத அசக்தர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே ஸ்நானம் செய்து அந்த கும்பகோணம் இருக்கும் திக்கை குறித்து நமஸ்கரித்து மஹாதானங்களை முடிந்தவரையில் வேத வித்துக்களிடத்தில் செய்யலாம்.

இந்த கும்பகோணமானது சிறந்த க்ஷேத்திரம் என்பதற்கு பல ப்ரமாணங்கள் உள்ளன. மனிதர்கள் செய்யும் பாபங்கள் எல்லாம், புண்ய க்ஷேத்திரங்களில் ஸ்நானம் தானங்கள் செய்வதால், விலகிவிடும். புண்ய க்ஷேத்திரங்களிலிருப்பவர்கள் அங்கு செய்யும் பாபங்களை, காசியில் சென்று ஸ்நான தானங்கள் செய்தால் பாபங்கள் விலகிவிடும். காசியில் செய்யும் பாபங்கள், கும்பகோணம் வந்து ஸ்நான தானங்கள் செய்தால் விலகிவிடும். கும்பகோணத்தில் செய்யும் பாபங்கள் கும்பகோணத்தில்தான் போகும். ஆதலால் தான் காசியில் உள்ளவர்களும் மஹாமக ஸ்நானத்திற்கு இங்கு வருகின்றனர். இதன் வசனமாவது —

अन्यक्षेत्रे कृतं पापं पुण्यक्षेत्रे विनश्यति ।
पुण्यक्षेत्रे कृतं पापं वाराणस्यां विनश्यति ॥
वाराणस्यां कृतं पापं कुम्भकोणे विनश्यति ।
कुम्भकोणे कृतं पापं कुम्भकोणे विनश्यति ॥

அன்யக்ஷேத்ரே க்ருதம் பாபம்
புண்யக்ஷேத்ரே விநஶ்யதி ।
புண்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம்
வாராணஸ்யாம் விநஶ்யதி ॥

வாராணஸ்யாம் க்ருதம் பாபம்
கும்பகோணே விநஶ்யதி ।
கும்பகோணே க்ருதம் பாபம்
கும்பகோணே விநஶ்யதி ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்த மஹாமக உத்ஸவ அவபிருத ஸ்நான காலத்தில் எல்லா தேவர்களும், எல்லா தீர்த்தங்களும் சேர்ந்து வருவதால் பெரிய ப்ராயச்சித்தங்களாலும், கங்காதி புண்ய தீர்த்த ஸ்நானங்களாலும் விலகாத, "ப்ரம்மஹத்தி, ஸுராபானம், ஸ்வர்ணஸ்தேயம், (பொன்னை திருடுதல்) குருவின் மனைவியை விரும்புதல், இந்த மேலே சொன்ன நான்கு பாதகிகளோடு சேர்ந்து வஸித்தல்" ஆகிய ஐந்து மஹா பாதகங்களும் விலகும். வேதவித்துக்களுக்கு துரோஹம் செய்தல், குரு துரோஹம், தாய் தந்தைகளுக்கு துரோஹம் செய்தல், விஷ்ணு துரோஹ்ம், சிவ துரோஹம், துர்தானங்களை வாங்குவது, துஸ்ஸங்கம் செய்பவன், கெட்ட புத்தியுடையவன், நம்பினவனை மோசம் செய்வது, பில்வ மரம், அரசமரம் முதலிய புண்ய மரங்களை வெட்டுவது, பிறர் மனைவிகளுடன் சேருவது, சிவத்ரவ்யத்தை அபகரிப்பது, கிணறு, குளம், குட்டை முதலியவைகளை மூடுவது, எள், எண்ணை முதலிய விற்கக் கூடாத தான்யங்களை விற்று பிழைப்பது, சிவலிங்கம், ஸாளக்ராமம் முதலிய பூஜா சாமான்களை திருடுவது, ஸாளக்ராமத்தை விற்பது, பழம், புஷ்பம் முதலியவைகளை திருடுவது, கொடுப்பதாக வாக்களித்து பின்பு இல்லை எனச் சொல்வது, பிதாவுக்கும் பிள்ளைக்கும் விரோதத்தை உண்டாக்குவது, தம்பதிகளுக்குள் விரோதத்தை உண்டாக்குவது, தாய் தந்தைகளுடைய ச்ராத்தத்தை விடுவது, குழந்தைகளைக் கொல்லுவது, கர்பத்தை அழிப்பது, விஷம் கொடுப்பது, வீட்டை கொளுத்துவது, தன்னுடைய கோத்திரத்தில் பிறந்த பெண்ணை மணப்பது, விலக்கத்தக்கதும் ஆசாரமில்லாமல் பாகம் செய்யப்பட்டதுமான ஆஹாரங்களை உண்பது, ஆசௌசம் உள்ளவர்களின் அன்னத்தை புஜித்து ஜீவிப்பது, யாகாதி கர்மாக்களை தடுப்பது, தர்மத்தை தூஷிப்பது முதலிய பாபங்களை செய்தவர்கள் கூட இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் உடன் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாக மாஸத்தில் மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்து தர்பணம் செய்வதால், பதினாயிரம் முறை கயாச்ராத்தம் செய்த பலன் கிட்டும்.

माघमासे माघतीर्थे तिलैस्तर्पयते पितॄन् ।
गया श्राद्धायुत फलं लभन्ते नात्र संशयः ॥

மாகமாஸே மாகதீர்த்தே திலைஸ்தர்பயதே பித்ரூன் ।
கயாஸ்ராத்தாயுத பலம் லபந்தே நாத்ர ஸம்ஶய: ॥

கன்யா தீர்த்தத்தில் மஹாமகத்தில் ஸ்நானம் செய்து எள்ளினால் தர்பணம் செய்தால், நூற்றெட்டு தலைமுறைகள் நமது முன்னோர்கள் நரகத்திலிருந்து கரையேறுவார்கள்.

कन्यातीर्थे महामाघे तिलैस्तर्पणमाचरेत् ।
उद्धरेत्सप्त गोत्राणि कुलमेकोत्तरं शतम् ॥

கன்யாதீர்த்தே மஹாமாகே திலைஸ்தர்பணமாசரேத் ।
உத்தரேத்ஸப்த கோத்ராணி குலமேகோத்தரம் ஶதம் ॥

மஹாமகத்தில் அக்குளக்கரையில் விருஷோத்ஸர்கம் (காளையை விடுதல்) செய்தால் கோடி முறை கயாச்ராத்தம் செய்த புண்யத்தை அடைவான். இது நிச்சயம்.

இந்த கும்பகோணத்தில் சிவவிஷ்ணு பேதமின்றி யாவரும் எல்லா ஆலயங்களுக்கும் சென்று வழிபடுவதால் மூன்று மதஸ்தர்களும் ஒற்றுமையாக இருப்பதைக் காணலாம்.

சுபம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீ கும்பகோணம்
என்று பெயர் வந்ததற்குக் காரணம்

ப்ரளயம் வருவதற்கு முன் ஸ்ரீ பரமாத்மா ப்ரம்ம தேவனை புண்ய க்ஷேத்திரங்களிலிருந்தும் சிறிது சிறிது மண்ணை கொண்டுவரச் செய்து அமிருதத்தை விட்டுப் பிசைந்து ஓர் குடமாகச் செய்யும்படி சொன்னார். அக் குடத்திற்குள் அம்ருதத்தையும், வேதங்கள், இதிஹாஸ புராணங்கள், ஆகமங்கள், மந்திர சாஸ்திரங்கள், அடுத்த கல்பத்தில் ஸ்ருஷ்டி செய்ய வேண்டிய விதைகள் முதலியவற்றை வைத்து அதன்மேல் ஐந்து விதமான துளிர்களை வைத்து ஓர் கூர்ச்சத்தையும், தேங்காயையும் வைத்து சந்திரகலையால் உள்ளே இருக் கும் அம்ருதம் வெளிவராமல் செய்து அக்குடத்தின் மேலும் அமிருதத்தைப் பூசி தர்பையால் செய்யப்பட்ட உறியில் அக்குடத்தை வைத்து ப்ரம்ம தேவனுடைய வீட்டின் நடுவில் கட்டி வைக்கும்படியும் சொன்னார். சிறிது காலத்திற்கு பிறகு ப்ரளயம் ஏற்பட்டது. காற்றி னால் தள்ளப்பட்டு அக்குடம் ப்ரளய ஜலத்தில் மிதந்து வந்தது. அப்பொழுது அந்தக் குடத்தின் மேலிருந்த கூர்ச்சமானது கும்பகோணத்திற்கு பக்கத்தில் விழுந் தது. அந்த இடம் தான் சாக்ஷிபுரம் என்னும் திருப் பிரம்பியம் என்னும் க்ஷேத்திரமாக ஆகியது. அந்த கூர்ச்சம் (தர்பையால் கட்டிய முடிச்சு) தான் சாக்ஷீச் வரரென்னும் பரமேச்வரராக ஆனார். அதாவது உலகத் திலுள்ளவர்களின் தர்மம் அதர்மம் இவற்றுக்கு சாக்ஷி யாக அமைந்துள்ளார்.

குடத்தில் வைத்திருந்த மாங்கொழுந்து முதலிய இலைகள் விழுந்த இடத்தில் வன்னிமரம் உண்டாகியது. அந்த மரமானது தர்மம் அதர்மம் இவற்றின் பயனான சுக துக்கத்தை அளிக்கும்படி பாதுகாத்து வருகிறது.

அந்த குடத்தை பாதுகாப்பதற்காக ப்ரம்ம தேவரால் கட்டளையிடப்பட்ட ஏழு கன்னிகைகள் அக்குடத்தை பாதுகாத்து வந்தனர். அந்த ஏழு கன்னிகைகள் :—

(1) ப்ராம்மீ (2) மாஹேச்வரி (3) கௌமாரி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(4) வைஷ்ணவீ (5) வாராஹி (6) இந்திராணி (7) சாமுண்டா எனப்படுகின்றனர். இந்த ஏழுபேர்களும் அந்த சாக்ஷீச்வரரை பூஜித்தனர். ப்ரம்மா முதலிய தேவர்களும் தாங்கள் கோரிய பயன்களை அடைவதற்காக அந்த சாக்ஷீச்வரரை பூஜித்து வஸித்து வந்தனர். அந்த கூர்ச்சம் விழுந்த இடத்திற்கு தென் கிழக்கு திக்கில் சுமார் ஏழு மைல் தூரத்தில் உள்ளதும் பரம பரிசுத்தமானதும் அனாதியாய் உள்ளதும் மூன்று கோடி தேவதைகள் வஸிக்கும் தீர்த்தமாகிய பொற்றாமரை தீர்த்தத்தின் மேல் கரையில் உலகத்திலுள்ள ஸகல க்ஷேத்திரங்களின் தேஜஸ்ஸுக்களின் ஸாரபூதமாயும் உள்ள இடத்தில் அக்குடமானது ப்ரளய கால காற்று நின்றதும் தங்கிவிட்டது. உடன் ஸ்ரீ பரமாத்மாவின் கட்டளையின் பேரில் அக்குடத்தின் மீது புஷ்ப வர்ஷம் ஏற்பட்டது. ஆகாசத்திலிருந்து அசரீரி வாக்கும் உண்டாயிற்று.

शुभमेतत्पदं दिव्यं शुभमेतत्पदोत्तमम् ।
जयत्येतत्पदं श्रेष्ठं मङ्गलं मङ्गलन्त्विति ॥
बभूवाऽमाऽनुषी वाणी पुनः कुसुमवृष्टयः ॥

ஶுபமேதத்பதம் திவ்யம் ஶுபமேதத்பதோத்தமம் ।
ஜயத்யேதத்பதம் ஶ்ரேஷ்டம் மங்களம் மங்களந்த்விதி ॥
பபூவாऽமாऽநுஷீ வாணீ புந: குஸும வ்ருஷ்டய: ॥

“இந்த திவ்யமான ஸ்தலமானது மங்களத்தை அளிக்கக்கூடியது. இந்த ஸ்தலமானது எல்லா க்ஷேத்திரங்களுக்கும் மேல் சிறப்புவாய்ந்தது. இந்த சிறந்த ஸ்தலமானது மிகச் சிறப்பாக விளங்கப் போகிறது. இது பரம மங்களமான ஸ்தலம் பரம மங்களமான ஸ்தலம் எனக் கூறப்பட்டு மறுபடியும் புஷ்பவர்ஷம் ஏற்பட்டது” ப்ரளய ஜலமும் சிறிது சிறிதாக குறைந்தது. அந்த மங்களமான ஸ்தலத்தில் அந்த அமுதக் குடமானது தங்கி நின்றதும் ஸ்ரீ பரம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிவன் வேட உருவம் கொண்டு அம்பினால் மிகச் சிரமப் பட்டு அக்குடத்தில் துளைபோட்டார்.

அப்பொழுது அக்குடத்தின் கழுத்து தெரித்து விழுந்த இடம் தான் குடவாயில் என்னும் சிறந்த க்ஷேத்திரம் இந்த குடவாசலுக்கு மூன்று மைல் தூரத்தில் எங்கள் ஊராகிய சேங்காலிபுரம் கிராமம் உள்ளது. அங்கு மஹா குருக்களாகிய இரண்டு மஹான்களின் ஸமாதி கோவில்களும் நான்கு வேத பாடசாலைகளும் உள்ளன. அந்த ஸமாதி கோவிலில் உள்ள ஒருவராகிய எங்கள் பிரபிதாமஹர் அக்னி ஹோத்ரம் யாகங்கள் செய்து கொண்டு நூறு வருஷம் ஜீவித்து இருந்து ஸன்யாஸம் செய்துகொண்டு சித்தி அடைந்தவர். மற்றொருவராகிய என்பிதாமஹர் முத்தண்ணாவாள் என்ற ஸ்ரீவைத்தினாத தீக்ஷதர் 16-வது வயதில் ஸோம யாகம் செய்து நித்யாக்னி ஹோத்ரம் செய்து வந்து தனது 63-வது வயதில் நந்தன வருஷம் தை மீ 2 தேதி கோபூஜை ஏகாதசியன்று காலையில் ஸன்யாஸம் செய்துகொண்டு மறுதினம் துவாதசியன்று சித்தியானவர்கள். இவர்களுடைய 75வது ஆராதனை பிலவங்க வருஷம் தை மீ 12 தேதி 1968 ஜனவரி மாதம் 26 தேதி வெள்ளிக்கிழமையன்று நடக்கிறது. இந்த ஸமாதிகளில் வயிற்றுவலி, ஹ்ருதயநோய் உள்ளவர்கள் பிரார்த்தித்துக்கொண்டு அங்கு நடக்கும் அன்னதானத்திற்கு உதவி புரிந்து குருவார விரதமிருந்து, ஸ்ரீ ஸமாதிகளுக்கு அபிஷேகம் அர்சனம் செய்ததும் அவைகள் விலகி விடுகின்றன. இதே போல் அங்கு பிரார்த்தனை செய்து கொள்ளுகிறவர்களுக்கு ஸகல காரிய சித்திகளும், புத்ரலாபமும் நிச்சயமாய் உண்டாகின்றன. இந்த மஹானுடைய சரித்திரம் காமகோடி பத்திரிகையில் வெளி வந்தது. அதை ஜயமங்களம் 8வது பாகத்தில் எழுதப்பட்டுள்ளது. அந்த க்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தத்தில் காலையில் ஸ்நானம் செய்து விட்டு பிறகு மஹாமக குளத்தில் வந்து ஸ்நானம் செய்வார்கள் பல பெரியோர்கள். அந்த ஸ்ரீ பரமேச்வரருக்கு கோணேச்வரர் எனப்பெயர். அவர் மலையின் மீது அமர்ந்துள்ளார். அங்கு க்ஷேத்திர விருக்ஷம் பலாமரம் அந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மரத்தில் பாம்பு இன்றும் வசிக்கிறது. அந்த பழங்களை அங்குள்ள ஸ்ரீ பரமேச்வரருக்கு நிவேதனம் செய்யாமல் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுத்தால் அந்த சுளைகளில் புழுக்கள் உண்டாகின்றன.

குடத்திலிருந்து பெருகிய அமுதம் நான்கு பக்கத்திலும் சுமார் ஐந்து மைல் தூரத்திற்கு பரவியது. இரண்டு இடத்தில் தேங்கியது. அதில் ஒன்று மஹாமக குளம். மற்ருென்று பொற்ருமரை குளம்.

ஸோமேச்வரர் அந்த அமிருத கலசம் வைத்த சிக்யத்தி (உறியி) லிருந்து ஆவிர்பவித்தார். இந்த ஸோமேச்வரரை சந்திரன் பூஜித்து, இவர் எதிரில் சந்திர புஷ்கரணி என்ற தீர்த்தத்தை நிர்மாணித்து தன் உபாதியை நீக்கிக் கொண்டு, ஸ்ரீ ஸோமேச்வரருடைய சிரஸ்ஸுக்கு ஆபரணமானுர்.

நாகேச்வரர்

அந்த அமிருத கலசத்தின் மேலுள்ள பில்வ தளம் இங்கு விழ அது பில்வ விருக்ஷமாக ஆயிற்று. இங்கு நாகேச்வரரெனப்படும் ஸ்ரீ பகவானை பூ பாரத்தை தாங்கும் சக்தி பெற ஸ்ரீ ஆதிசேஷன் பூஜித்து தனது அபீஷ்டத்தைப் பெற்ருர். இந்திரன் இவரை ஆராதித்து தன் சரீரத்திலுள்ள ஸ்த்ரீ சின்னங்களை ஆயிரம் கண்களாக மாற்றிக் கொண்டார். ஸ்ரீ வாஸுகி இவரை பூஜித்து நாக தீர்த்தத்தை நிர்மாணம் செய்தார். த்வஷ்டாவின் சாபத்தால் சூரியன் ஒளி இழந்து இந்த நாகேச்வரரை ஆராதித்து பூஜித்து, சூரிய புஷ்கரணி என்ற தீர்த்தத்தை நிர்மாணித்து முன்போல் ஒளியைப் பெற்ருர். தற்போதும் சித்திரை மாதம் மூன்று நாட்களில் சூரினியன் ஒளி இந்த நாகேச்வரரின் மேல் மஹாத்வாரம் வழியாய் விழுகிறது. அது சமயம் (சித்திரை 11, 12, 13 தேதிகளில்) சூரிய பூஜை நடக்கிறது.

கௌதமேச்வரர்

அந்த குடத்தின் மேல் சாற்றியிருந்த யக்ஞோபவீதம் இங்கு விழுந்தது. அதிலிருந்து ஆவிர்பவித்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தால் உபவீதேச்வர்ர் எனப் பெயர். பின்பு கௌதம முனிவருக்கு மஹரிஷிகளால் ஏற்பட்ட கோஹத்தி தோஷம் விலக இவரை ஆயிரம் வருஷம் ஆராதித்து நீங்கியது. ஆதலால் கௌதமேச்வரர் என்ற பெயரும் ஏற்பட்டது. இங்கு கௌதம தீர்த்தம் என்ற ஓர் தீர்த்தம் இவருல் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோயில் மஹாமக குளத்ததின் மேல் கரையிலிருக் கிறது.

அந்த அமிருத கலசத்தின் மேல் வைத்திருந்த தேங்காய் விழுந்து அதிலிருந்து ஆவிர்பவித்தவர் தான் அபிமுகேச்வரர். இவருக்கு பலேச்வரர் என்ற பெயரும் உண்டு. கைலாசத்திலிருந்து காசிவிச்வேச்வரர் நவ கன்னிகைகளுடன் இந்த மஹாமக குளத்திற்கு வரும் கோலாகலத்தைப் பார்க்க கிழக்கு முகமாயிருந்த அபிமுகேச்வரர் மேற்கு முகமாய் திரும்பிப் பார்த்தார். பிறகு நவ கன்னிகைகள் "தாங்கள் இந்த தீர்த்தத்தைப் பார்த்தபடியே மேற்குமுகமாய் இருக்க வேணுமென்று" கேட்டுக் கொண்டதின் பேரில் அப்படியே மேற்கு முகமாயிருக்கிறுர்.

ततः कैरातरूपीसः शङ्करोवृषभध्वजः ।
मृत्सैकताभ्यां कृत्वातु लिङ्गं परमसुन्दरम् ॥
सुधयाप्लावितं कृत्वा स्थापयामास तत्तटे ॥

ததः கைராதரூபீஸ; ஶங்கரோ வ்ருஷபத்வஜஃ ।
ம்ருத்ஸைகதாப்யாம் க்ருத்வாது லிங்கம்
பரமஸுந்தரம் ॥
ஸுதயாப்லாவிதம் க்ருத்வா ஸ்தாபயாமாஸ தத்தடே

"பின்பு வேட உருவம் கொண்ட வ்ருஷபத்வஜரான ஸ்ரீ பரமசிவன் மணல், மண் இவ்விரண்டையும் சேர்த்து அமிருதத்தை விட்டு பிசைந்து ஓர் அழகிய லிங்கம் செய்து, அக்குடத்தின் மீது வைத்து பூஜை செய்தார். அந்த லிங்கத்தில் தானே ப்ரவேசித்தார். அந்த லிங்கம் தான் ஆதிகும்பேச்வரரென விளங்குகிறது. இதனுல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தான் கும்பகோணம் எனப் பெயர் வந்தது. இந்த கும்பகோணத்திற்கு சுற்றிலும் அமிருதம் பெருகிய ஐந்து இடங்களை பஞ்சக்ரோசமென புராணம் கூறுகிறது. அங்கு சென்றதும் பாவங்கள் போய் விடுகிறேன், போய் விடுகிறேன் என அலறி சிதறுவதால் க்ரோசமென பெயர் வந்ததாக புராணம் கூறுகிறது. அந்த பஞ்சக்ரோச க்ஷேத்திரங்களாவன : (1) மத்தியார்ஜுனம் (திருவிடை மருதூர்) (2) சம்பகாரண்யம் (திருநாகேச்வரம்) (3) ருத்ராக்ஷாரண்யம் (தாராசுரம்) (4) குஹாசலம் (சுவாமி மலை) (5) பாடலீவனம் (கருப்பூர்). சக்தி உள்ளவர்கள் இந்த ஐந்து க்ஷேத்திரங்களுக்கும் சென்று தர்சித்து பின்பு மஹாமக தீர்த்தத்தில் வந்து ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்வதற்கு முன்பு ஸ்ரீ கும்பேச்வரர் முதலிய ஸ்ரீ பரமசிவ மூர்த்திகளையும், ஸ்ரீ சாரங்கபாணி, ஸ்ரீ சக்ரபாணி முதலிய விஷ்ணு மூர்த்திகளையும் அர்சித்து ப்ரார்த்தித்து ஸ்நானம் செய்வது வழக்கம். இந்த பஞ்சக்ரோச யாத்திரையை ஒரே தினத்தில் ஆகார நியமத்துடன் செய்வது நலம். இந்த பஞ்சக்ரோசம் கும்பகோணத்திற்கு முதல் ஆவரணமாக உள்ளது.

இரண்டாவது ஆவரணமாகிய பதினெட்டு க்ஷேத்திரங்களாவன —

(1) மத்யார்ஜுனம் (திருவிடமருதூர்) ஸ்ரீ அம்பாள் ப்ருஹத் ஸுந்தரகுசாம்பிகை, ஸ்ரீ ஸ்வாமி மஹாலிங்கம் ப்ரும்மஹத்தியை போக்கும். இன்றும் அச்வமேத ப்ரதக்ஷிணம் செய்வதால் பைத்தியங்கள் நிவர்த்தியாகிறது. அங்கு ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி ஆசார்யாள் மடமும் இருக்கிறது.

(2) திரிபுவனம். இது மத்யார்ஜுனத்திற்கு ½ மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு தர்மவர்தனி அம்பாள், ஸ்ரீ கம்பகரேச்வரர் ஸ்வாமி — ஒரு சமயம் த்ரிபுராசுரர்களைக் கண்டு தேவர்கள் நடுங்கிய போது அந்த பயத்தை நிவர்த்தி செய்தார். இங்கு கர்பூர மரத்தின் அடியில் தேவர்களால் ஸுர தீர்த்தமென்ற புண்ய தீர்த்தம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு வைசாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பௌர்ணமியில் ஸ்நானம் செய்வது விசேஷம். இங்கு சத்ரு பயத்தைப் போக்கும் சரபமூர்த்தி விளங்குகிறது. இந்த சரப மூர்த்தியானது நங்கவரம் பெரிய பண்ணை போன்ற பல குடும்பங்களில் தெய்வமாக விளங்குகிறது. இந்த மூர்த்தியை தரிசிப்பதும் இந்த மூர்த்திக்கு அர்சனம் அபிஷேகம் முதலியன செய்து வழிபடுவதும் இந்த சரப மந்திரத்தை ஜெபிப்பதும் சத்ரு பயத்தை போக்கும்.

(3) தர்பாரண்யம் அல்லது பைரவ க்ஷேத்திரம் (அம்மா சத்திரம்) இங்கு அம்பாள் ஞானம்பிகை ஸ்ரீ ஸ்வாமி பைரவேசர். இந்த க்ஷேத்திரத்தில் தேவ தீர்த்தம். இதில் கும்ப மாஸத்தில் ஸ்நானம் செய்வது விசேஷம். கும்பகோண க்ஷேத்திரத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக எட்டு பைரவ ரூபியாய் ஸ்ரீ பைரவர் இங்கு எட்டு திக்குகளில் விளங்குகிறார்.

(4) திருநாகேச்வரம்.

(5) ரக்தகதளீவனம் (செல்வரம்பை) அய்யாவாடி என்ற பெயர்கள் உள்ளது. அங்கு அம்பாள் ஆனந்த தாயினி, ஸ்ரீ ஸ்வாமி கதளீவனேச்வரர், காம தீர்த்தம் (கோரிய பொருள்களை அளிக்கும் தீர்த்தம்)

(6) கண்வபுரம் (சிவபுரம்) ஸ்ரீ அம்பாள் ப்ரஹன் நாயகி, ஸ்ரீ ஸ்வாமி ப்ரும்ம புரேசர், கண்வதீர்த்தம்.

(7) லாங்கலாரண்யம்(சாக்கோட்டை)ஸ்ரீஅம்பாள் யோகாம்பிகை, ஸ்ரீ ஸ்வாமி ஸுதாகடேச்வரர், அமிருத தீர்த்தம். இங்கு ஸ்ரீ ஸ்வாமி கச்யபருக்கு வரனை அளித்தார்.

(8) அமிருதஸ்தானம் (மருதாநல்லூர்) ஸ்ரீ அம்பாள் அம்ருதவல்லி, ஸ்வாமி ஸ்ரீ ஸோமேச்வரர். ஸோம தீர்த்தம். இங்குதான் ஸ்ரீ ராமன் தாயார் கோரியபடி க்ருஹஸ்தனாய் அரிசியை பிக்ஷை வாங்குவதற்காக ஸத்குரு ஸ்வாமியாய் அவதாரம் செய்து உஞ்சவ்ருத்தி எடுத்தார். இங்கு ஸத்குரு ஸ்வாமிமடம் விளங்கி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வருகிறது. இந்த மடத்தில் நித்யம் ஸ்ரீராம நாமம்தான் ஜபம். மார்கழி மாதம் 24-ம் தேதி ராதா கல்யாணம் சாச்வதமாய் நடந்து வருகிறது.

(9) பஞ்சாக்ஷரபுரம் (பட்டீச்வரம்) ஸ்ரீ அம்பாள் ஞானம்பிகை, ஸ்ரீ ஸ்வாமி தேனுபுரீச்வரர், பக்ஷி தீர்த்தம்.

(10) த்ரிசக்திபுரம் (திருச்சத்திமுத்தம்) இது பட்டீச்வரத்திலிருந்து ½ மைல் தூரத்தில் உள்ளது. இங்கு ஸ்ரீ அம்பாள் ப்ரஹன் நாயகி, ஸ்ரீ ஸ்வாமி சக்தி வனேச்வரர், சக்தி தீர்த்தம்.

(11) ருத்ராக்ஷாண்யம் (தாராசுரம்).

(12) தக்ஷிணுவர்த்த ஸம்ஸ்தானம் (திருவரிஞ்சுழி) இது தாராசுரத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு ச்வேத விஞயகர், ஆவர்த்த தீர்த்தம்.

(13) குஹாசலம் (ஸ்வாமி மலே) ஸ்ரீ முருகனின் ஆறு முக்ய க்ஷேத்திரங்களில் இது ஒரு முக்ய க்ஷேத்திரம். இங்கு அங்க பிரதக்ஷிணம் செய்வதால் ப்ரம்ம ஹத்தி முதலிய பாபங்கள் போகும். கோரிய பொருள்கள் கிட்டும். பிள்ளே, பேரன் முதலிய லாபங்கள் உண்டாகும். ஸ்ரீ ஸ்வாமிநாதனுக்கு பசுவின் பால், தேன், சர்க்கரை, பஞ்சாமிருதம் இவைகள் அபிஷேகத்திற்கு மிகவும் அவச்யமாகும். இந்த அபிஷேகத்தை வேதவித்துக்களே வைத்து ருத்ர ஜபம் செய்யச் சொல்லி செய்வது பெரிய புண்யமாகும்.

(14) இனபுரம் (இன்னம்பூர்) ஸ்ரீ ஸ்வாமி மலேயிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ளது. ஸ்ரீஸ்வாமி திவா நாதேச்வரர் சூரிய தீர்த்தம்.

(15) ஸாக்ஷிபுரம் (திருப்பிரம்பியம்) இது இன்னம்பூரிலிருந்து முக்கால் மைல் தூரத்திலுள்ளது. பிரளய ஜலத்தில் மிதந்து வந்த அமிர்த கடத்தின் மீதிருந்த கூர்ச்சம் இங்கு சமீவிருக்ஷமாய் (வன்னிமரம்) வளர்ந்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருக்கிறது. அதை ஸம்ரக்ஷித்த ஏழு கன்னிகைகள் அங்கு இருக்கிருர்கள். இவர்களை நான்கு தடவை நமஸ்கரிக்க வேண்டும். ஸ்வாமி ஸாக்ஷிநாதர், ஸுதா பிந்து என்னும் தீர்த்தம்.

(16) கோடிபுரம் (கொட்டையூர்) இது திருப்பிரம் பியத்திலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இங்கு அம்பாள் கந்துக்ரீடாம்பிகை (பந்தாடும் நாயகி) ஸ்வாமி கோடீச்வரர். அமிருத தீர்த்தம். சமீபத்தில் இங்கு கும்பகோணத்தில் பிரபல பப்பர்மெண்ட் தொழிற் சாலைக்கு சொந்தக்காரரான ஸ்ரீமான் குஞ்சிபாதம் செட்டியார் அவர்கள் தனது ஏராளமான திரவியத்தைக் கொண்டும் இன்னும் பல ஆஸ்திகர்களுடைய உதவி யைக் கொண்டும் மஹா கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடத்திஞர்.

(17) பாடலீவனம் (கருப்பூர்) இது கொட்டை யூரிலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது.

(18) பாதராயணபுரி (வாணுதுரை) இது கும்ப கோணத்திலேயே கிழக்குப் பக்கத்தில் உள்ளது. இங்கு அம்பாள் ஸோமகலாம்பிகை, ஸ்வாமி பாணபுரீச் வரர், வ்யாஸ தீர்த்தம்.

இவ்வாறு மேலே சொல்லப்பட்ட பதினெட்டு க்ஷேத்திரங்களில் உள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, அங்குள்ள பகவத் மூர்த்திகளை தரிசித்து ஜபம் தானம், ச்ராத்தம், தர்ப்பணம் முதலியவைகளையும் செய்து, கும்பகோண க்ஷேத்ரத்தை மேலே கண்டபடி முறையாக வலம் வந்து கும்பகோணத்திற்குள் பிரவே சித்து, ஆதிகும்பேச்வரரை தரிசித்து, இந்த பதினெட்டு க்ஷேத்திர யாத்திரையை முடித்து கடைசியாக ஸ்ரீ சாரங்கபாணியை தரிசித்து நமஸ்கரித்து அவரிடம் இந்த யாத்திரையின் பலனை அர்ப்பணம் செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீ மங்களாம்பாள்

மிக அழகு வாய்ந்த பார்வதியை ஸ்ரீ கும்பேச்வரரான பரமேச்வரர் கைலாஸத்திலிருந்து வரவழைத்து, தன் வடபார்ச்வத்தில் மந்திர ரத்னம் என்னும் விமானத்தில், எழுபத்திரண்டாயிரம் மந்த்ர தேவதைகள் வசிக்கும் பீடத்தில், மந்த்ர பீடேச்வரி என்ற திருநாமத்துடன் ஸ்தாபித்தார். ஸமஸ்த மங்களங்களையும் பக்தர்களுக்கு அளிப்பதால் மங்களாம்பாள் என்ற திருநாமம். ஒவ்வொருவரும் ஸாயங் காலத்தில் ஸ்ரீ மங்களாம்பிகையை தரிசித்து நமஸ்கரித்தால் ஸர்வ கர்மங்களையும் நல்ல முறையில் செய்த பலனை அடையலாம். மேலும் பூத ப்ரேத பிசாசாதி பாதைகள் ஸ்ரீ அம்பாளுடைய கடாக்ஷம் சிறிது மேல்பட்டதும் உடன் விலகி விடும்.

ते हि सन्ध्यामुखे नित्यं दर्शनान्नमनादपि ।
साङ्गं कृतानां पुण्यानां पात्रभूता भवन्ति हि ॥

தே ஹி ஸந்த்யாமுகே நித்யம் தர்ஸநாந்நமநாதபி ।
ஸாங்கம் க்ருதாநாம் புண்யாநாம் பாத்ரபூதா
பவந்தி ஹி ॥

மேலும் வெள்ளிக்கிழமையில் ஒருமுறை தர்சனம் செய்து நமஸ்கரித்தால் ஸகல க்ஷேமங்களும் மேலும் மேலும் வளரும்.

मङ्गलानि च वर्धन्ते भार्गवे दर्शनात्सकृत् ॥
மங்களாநி ச வர்த்தந்தே பார்கவே தர்ஸநாத்ஸக்ருத் ॥

ஸ்ரீ மங்களாம்பிகையை இன்னும் பலர் ப்ரார்த்தித்துக்கொண்டு பல கஷ்டங்களினின்றும் உடன்விடுபடுகின்றனர். இன்னும் பல ஸ்த்ரீகள் தன் கணவருக்கு வியாதி முதலியவற்றால் ஆயுஸ்ஸுக்கு ஹானி வருமோவென்று பயந்து ஸ்ரீ மங்களாம்பாளுக்கு திருமங்கல்யம் போடுவதாக ப்ரார்த்தித்துக் கொண்டு உடன் தீர்க ஸௌமங்கல்யத்தை அடைகின்றனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரங்கபாணிப் பெருமாள்

அசுரர்களை வதம் செய்து சார்ங்கம் என்னும் வில்லை கையில் தரித்துக் கொண்டு, கும்பகோணம் வந்து அங்கத்துக்கு அங்கம் அழகுடன் விளங்கும் இந்த மூர்த்தியை எத்தனை தடவை தரிசித்தாலும் போதும் எனத் தோன்றுது. ஆதலால் அபர்யாப்தாமிருதர் (ஆருவமுதர்) எனப் பெயரும் உண்டு. ஸ்ரீ சாரங்க பாணிக்கு முத்தங்கி சாத்தி அலங்காரம் செய்த போது தர்சித்தால் லக்ஷம் கண்கள் பார்ப்பதற்கு வேணும் எனத் தோன்றும்.

முன்ஞெரு சமயம் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஏதோ ஒரு காரணத்தால் ஸ்ரீ பகவானை விட்டு கோபத்தினுல் பிரிந்து இருந்தவள் கும்பகோணம் வர ஸ்ரீ பகவான் ஸ்ரீ சாரங்கபாணி உருவமாய் இருக்கும் மூர்த்தியைப் பார்த்து, ஸ்ரீ பகவானுடன் சேர்ந்து வசிக்கிருள். வேங்கட மலையிலிருந்து ஸ்ரீ வெங்கட்டரமண ஸ்வாமி இங்கு சாரங்கபாணிக்கு ஸமீபத்தில் இருந்து வருகிருர். இவரை பாதாள வெங்கட்டரமணர் எனச் சொல்வது வழக்கம். இவரை தர்சிப்பதால் ஸகல க்ஷேமங்களும் உண்டாகும்.

பூவராஹர்

ஹிரண்யாக்ஷன் பூமியை சுருட்டி பாதாளத்துக்கு எடுத்துப் போக அப்பொழுது ஸ்ரீ மஹாவிஷ்ணு அந்த அசுரனை ஸம்ஹரித்து, வராஹ மூர்த்தியாய் ஆவிர் பவித்து, தன் தித்திப்பல்லால் பூமியை எடுத்துக் கொண்டு இங்குள்ள வராஹ தீர்த்தத்தின் வழியாய் வெளி வந்து இந்த இடத்தில் ப்ரத்யக்ஷமானுர். இங்குள்ள வராஹ தீர்த்தத்தில் தேவர்கள் ஸ்நானம் செய்து தனது அபீஷ்டத்தை அடைந்தனர்.

ஸ்ரீ ராமர்ஸ்வாமி கோவில்

ஸ்ரீ கும்பேச்வரர் ஆலயத்திற்கு தென் கிழக்கில் ஸ்ரீ ராமர் கோவிலிருக்கிறது. இந்த கோவிலில் ஸ்ரீ ஸீதா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸமேத, ஸ்ரீ ராமர், ஸ்ரீ லக்ஷ்மணர், ஹனுமார் இவர்கள் உள்ளனர். இந்த கோவிலின் உள் பிராகாரத்தின் சுவற்றில் ஸ்ரீ ராமாயணம் பூராவும் சித்ரமாக வரையப் பட்டிருக்கிறது. மூன்று ப்ரதக்ஷிணம் செய்தால் பூராவையும் பார்த்து விடலாம். இதை அவசியம் பக்தர்கள் தர்சனம் செய்ய வேண்டும்.

இதேபோல் காளஹஸ்தீச்வரர் கோவில், பக்த புரீச்வரர், அக்ரஹாரத்திலுள்ள சிவாலயம், பல விநாய கர்களின் ஆலயங்கள், ஜெகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அத்வைத மடம், விசிஷ்டாத்வைத மடம், துவைத மடம் ஸ்ரீ ராயர்வாள் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் போன்ற பல புண்ய ஸ்தலங்களை அவச்யம் தரிசிக்க வேண்டும்.

கும்பகோணத்தை தரிசித்தால் பூவைகுண்டமோ, பூகைலாஸமோ, தேவலோகமெனத் தோன்றும். இதில் கூறப்பட்ட மஹிமை முழுவதும் பவிஷ்யோத்தர புராணத்தில் கூறப்பட்டதேயாகும். அதில் ஆதி கும்பேச்வரர் என ஸ்ரீ கும்பேச்வரர் கோவிலை அனாதி யாக கூறியபோதிலும் இதற்கு முன்னமேயே உள்ளது நாகேச்வரர் கோவில் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த கோவிலை தரிசித்தால் ஸர்ப தோஷங்கள் விலகும். ஸ்வப்பனத்திலும் வீட்டிற்குள்ளும் பாம்புகள் வருவது விலகும். ஸ்ரீ நாகேச்வர பிரசாதத்தால் ஸகல பாக்யங் களும் உண்டாகும்.

சேங்காலிபுரம் **அனந்தராம தீக்ஷிதர்**

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ ब्रह्मदेवकृत श्रीकुम्भेश्वरस्तोत्रम् ॥

ப்ரம்மதேவனால் செய்யப்பட்ட

ஸ்ரீ கும்பேச்வர ஸ்தோத்ரம்.

ப்ரம்ம தேவர் மஹாமக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ கும்பேச்வரரை துதிக்கிறார். இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பதால் குடும்பத்திலுள்ள சிவாபசாரம் நீங்கி அபம்ருத்யு பயமும் நீங்கும். ஜாதகத்தில் குரு சூரியன் முதலிய கிரஹங்கள் தோஷமுள்ளவைகளாக இருந்தால் அவைகள் நீங்கி புத்ரலாபம் ஆரோக்யம் முதலிய க்ஷேமங்கள் உண்டாகும்.

नमो नमः कारण कारणाय श्रीमत्सुधाकुम्भग विग्रहाय ।
कल्याणसान्द्राय गुणाकराय श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥ १

நமோ நம: காரண காரணாய
ஸ்ரீமத்ஸுதாகும்பக விக்ரஹாய ।
கல்யாண ஸாந்த்ராய குணாகராய
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 1

காரணங்களுக்கெல்லாம் காரணமாக இருப்பவரும், அம்ருத கலசத்தையே தனது ஸ்வரூபமாகக் கொண்டவரும், கல்யாணங்கள் நிறம்பியவரும், கல்யாண குணங்களுக்கெல்லாம் இருப்பிடமானவருமான ஸ்ரீ கும்பேச்வரருக்கு நமஸ்காரம். (1)

भीमाय भीमाधिहराय शंभवे नागाय शान्ताय मनोहराय ।
महाजटाजूटधराय भूतये श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥ २

பீமாய பீமாதிஹராய ஶம்பவே
நாகாய ஶாந்தாய மனோஹராய ।
மஹாஜடாஜூடதராய பூதயே
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 2

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சத்ருக்களுக்கு பயத்தை அளிப்பவரும், பயங்கர மான மனோவியாதியை போக்குகின்றவரும், சுகத்துக்கு இருப்பிடமானவரும், ஸர்பங்களை ஆபரணமாக தரித்த வரும், சாந்த ஸ்வரூபியும், பக்தர்களின் மனதைக் கவரு கின்றவரும், பெரிய ஜடையின் கூட்டத்தை தரித்த வரும், விபூதியின் ஸ்வரூபமாக இருப்பவருமான ஸ்ரீ கும்பலிங்க ஸ்வரூபியான ஸ்ரீ பரமேச்வரனுக்கு நமஸ்காரம். (2)

सर्वागमाम्नाय शरीरधारिणे सोमार्कनेत्राय महेश्वराय ।
यज्ञाय यज्ञेश्वरपूजिताय श्रीकुंभलिङ्गाय नमश्शिवाय ॥ ३

ஸர்வாகமாம்நாய ஶரீரதாரிணே
ஸோமார்க்க நேத்ராய மஹேஶ்வராய ।
யக்ஞாய யக்ஞேஶ்வர பூஜிதாய
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 3

எல்லா வேதங்களையும் சரீரமாக தரிக்கின்றவரும், சந்திர சூரியர்களை கண்களாக உடையவரும், மஹேச் வரரும், யக்ஞ ஸ்வரூப்மாக இருப்பவரும், யக்ஞேச்வர ரான மஹாவிஷ்ணுவால் பூஜிக்கப்பட்டவருமான ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம்.

कात्यायनी कामितदायकाय दुर्गार्धदेहाय कृतागमाय ।
कालाय कालेश्वरपूजिताय श्रीकुंभलिङ्गाय नमश्शिवाय ॥ ४

காத்யாயனீ காமித தாயகாய
துர்கார்த்த தேஹாய க்ருதாகமாய ।
காலாய காலேஶ்வர பூஜிதாய
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 4

காத்யாயனிதேவி கோரிய பொருளை அளிப்பவரும், ஸ்ரீ துர்காதேவியை பாதி சரீரமாகக் கொண்டவரும், ஆகம சாஸ்திரங்களைச் செய்தவரும், கால ரூபியாக இருப்பவரும், சூரியனால் பூஜிக்கப்பட்டவருமான ஸ்ரீ கும்பேச்வரரான மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (4)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

विभूतिदानेक शरीरधारिणे कल्पाय कल्पान्तकराय शंभवे ।
विश्वाय वैश्वानर लोचनाय श्रीकुंभलिङ्गाय नमश्शिवाय ॥ ५

விபூதிதாநேக ஶரீரதாரிணே
கல்பாய கல்பாந்தகராய ஶம்பவே ।
விஶ்வாய வைஶ்வாநரலோசனாய
ஶ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 5

உலகத்திற்கு பலவித ஐச்வர்யங்களை அளிக்கும் பலவித ஸ்வரூபமாக இருப்பவரும், பிரளய காலத்தைச் செய்கின்றவரும், சுகத்துக்கு இருப்பிடமானவரும், உலகத்தின் உருவாக இருப்பவரும், அக்னியை நெற்றிக் கண்ணாக உடையவரும், ஸ்ரீ கும்பரூபியுமான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (5)

मायाप्रपञ्चाय मनोहराय मायाघटेशाय महाधिहारिणे ।
मायाप्रपञ्चैक निदानमूर्तये श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥ ६

மாயாப்ரபஞ்சாய மனோஹராய
மாயாகடேசாய மஹாதிஹாரிணே ।
மாயாப்ரபஞ்சைக நிதானமூர்த்தயே
ஶ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 6

உலகத்தை மாயையால் உண்டு பண்ணியவரும், மனதைக் கவரும் உருவை உடையவரும், மாயையால் செய்த கும்பரூபியாக இருப்பவரும், பெரும் மனக் குறைகளை நீக்குகிறவரும், மாயையினால் செய்த உலகிற்கு காரணமாக இருப்பவரும், ஸ்ரீ கும்பேச்வர ரூபியான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (6)

भोगीन्द्र संपूजित विग्रहाय भोगीन्द्रभूषाय भवान्तकाय ।
श्रीभारती शंकर पूजिताय श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥ ७

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போகீந்த்ர ஸம்பூஜித விக்ரஹாய
போகீந்த்ர பூஷாய பவாந்தகாய ।
ஸ்ரீபாரதீ ஶங்கரபூஜிதாய
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 7

ஆதிசேஷனால் பூஜிக்கப்பட்டவரும், ஸர்பங்களை ஆபரணமாகக் கொண்டவரும், ஸம்ஸார பயத்தைப் போக்குகின்றவரும், விஷ்ணு, பிரம்மா இவர்களால் பூஜிக்கப்பட்டவருமான ஸ்ரீ கும்பலிங்கத்துக்கு நமஸ் காரம். (7)

ताम्राय चामीकर भूषिताय श्रीसोमकोटीरविभूषिताय ।
समस्तसत्क्षेत्र कलावराय श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥ ८

தாம்ராய சாமீகரபூஷிதாய
ஸ்ரீஸோமகோடீரவிபூஷிதாய ।
ஸமஸ்த ஸத்க்ஷேத்ர கலாவராய
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 8

சிவப்பு நிறமுள்ளவரும், தங்க நகைகளை அணிந்தவரும், சந்திரனை தலையில் ஆபரணமாக அணிந்தவரும், எல்லா புண்ய க்ஷேத்திரங்களுக்கும் மேற்பட்ட கலையை தரிக்கின்றவருமான ஸ்ரீ கும்பேச்வரருக்கு நமஸ்காரம். (8)

सृष्टिस्थितिध्वंसन कारणाय श्रीसृष्टिबीजांगमनोहराय ।
सच्छास्त्रवेदान्त कलेबराय श्रीकुम्भलिंगाय नमश्शिवाय ॥ ९

ஸ்ருஷ்டிஸ்திதி த்வம்ஸன காரணாய
ஸ்ரீஸ்ருஷ்டி பீஜாங்க மனோஹராய ।
ஸச்சாஸ்த்ர வேதாந்த களேபராய
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 9

படைத்தல், காத்தல், அழித்தல் இவைகளைச் செய்கின்றவரும், அம்ருத கலசத்தில் வைக்கப்பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ருஷ்டிபீஜத்தை மனோஹரமான அங்கமாகக் கொண்ட வரும், வேதங்கள், வேதாந்தங்கள், வேதாந்தம் இவை களை சரீரமாக உடையவரும். ஸ்ரீ கும்பேச்வரரான மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (9)

षड्वर्गसंभेदन दीक्षिताय षडाननादित्य फलप्रदाय ।
समस्तमन्त्रार्थनिदानरूपिणे श्रीकुम्भलिंगाय नमश्शिवाय ॥ १०

ஷட்வர்க ஸம்பேதன தீக்ஷிதாய
ஷடானனாதித்ய பலப்ரதாய ।
ஸமஸ்த மந்த்ரரார்த்த நிதான ரூபிணே
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 10

காம க்ரோதம் முதலிய ஆறுவகையான சத்ருக் கூட்டங்களை அழிப்பதில் தீக்ஷை கொண்டவரும், முருகன், சூரியன் இவர்களுக்கு நற்பயனை அளித்த வரும், ஸகல மந்திரங்களின் பயனை அளிப்பதற்கு மூலகாரணமாக இருப்பவரும், ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (10)

कुम्भोद्भव प्रमुख पूजित विग्रहाय वीराय वीरान्तकराय मायिने ।
भक्तेष्टदाननिपुणाय भवाब्धि पोत्रे श्रीकुम्भलिंगाय नमश्शिवाय ॥

கும்போத்பவ ப்ரமுகபூஜித விக்ரஹாய
வீராய வீராந்தகராய மாயினே ।
பக்தேஷ்டதான நிபுணாய பவாப்தி போத்ரே
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 11

அகஸ்தியர் முதலிய முனிவர்களால் பூஜிக்கப்பட்ட சரீரத்தை உடையவரும், யுத்த வீரனாக விளங்குகின்ற வரும், சத்ருக்களான வீரர்களை அழிப்பவரும், மாயையை தன் வசமாக்கிக் கொண்டவரும், பக்தர்கள் கோரியதை அளிப்பதில் திறமை வாய்ந்தவரும், ஸம்ஸார ஸமுத்திரத்துக்கு படகாக இருப்பவரும், ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (11)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

मूलाय मूलागमपूजिताय पातालमूलाय निधीश्वराय ।
नित्याय सिद्धेश्वरपूजिताय श्रीकुम्भलिंगाय नमश्शिवाय ॥ १२

மூலாய மூலாகம பூஜிதாய
பதாள மூலாய நிதீஸ்வராய ।
நித்யாய ஸித்தேஸ்வர பூஜிதாய
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 12

ஆதி மூலமாக இருப்பவரும், மூலாகமத்தால் பூஜிக்கப்பட்டவரும், பாதாளத்தில் ஒரு சிரஸ்ஸை உடையவரும், சங்கம் முதலிய ஒன்பது நிதிகளுக்கு அதிபராக இருப்பவரும், எக்காலத்திலும் இருப்பவரும், ஸித்தர்களின் தலைவர்களால் பூஜிக்கப்பட்டவரும், ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (12)

समस्तकल्याण वरप्रदाय समस्तकल्याण निदानमूर्तये ।
श्रीमङ्गलाम्बार्चित पादपद्मिने श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥ १३

ஸமஸ்த கல்யாண வரப்ரதாய
ஸமஸ்த கல்யாண நிதானமூர்த்தயே ।
ஸ்ரீமங்களாம்பார்ச்சித பாதபத்மிநே
ஸ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 13

கல்யாணங்கள் யாவையும் வரனுக அளிப்பவரும், கல்யாணங்கள் யாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்பவரும், ஸ்ரீ மங்களாம்பாளால் அர்சிக்கப்பட்ட சரண கமலங்களை உடையவரும், ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (13)

लग्नाधिपेशाय ग्रहार्चिताय श्रीकामधेनुसुरसङ्घसुपूजिताय ।
पञ्चाननाय परमार्थनिदर्शकाय श्रीकुम्भलिंगाय नमश्शिवाय ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லக்னாதிபேஶாய க்ரஹார்ச்சிதாயா
ஶ்ரீகாமதேநு ஶுராஸங்க ஸுபூஜிதாய ।
பஞ்சானநாய பரமார்த்த நிதர்ஶகாய
ஶ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 14

லக்னங்களுக்கு அதிபதிகளான நவக்ரஹங்களுக்கும் தலைவராக இருப்பவரும், நவக்ரஹங்களால் பூஜிக்கப்பட்டவரும், ஸ்ரீ காமதேனு தேவர்களின் கூட்டம் இவர்களால் பூஜிக்கப்பட்டவரும், ஐந்து முகங்களை உடையவரும், புருஷார்த்தத்தை காண்பித்துக் கொடுப்பவருமான ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (14)

तीर्थाधिनाथाय फलप्रदाय फलस्वरूपाय फलाङ्गधारिणे ।
श्रीमन्त्रपीठेश्वरि वल्लभाय श्रीकुम्भलिंगाय नमश्शिवाय ॥ १५

தீர்த்தாதிநாதாய பலப்ரதாய
பலஸ்வரூபாய பலாங்கதாரிணே ।
ஶ்ரீமந்த்ர பீடேஶ்வரி வல்லபாய
ஶ்ரீகும்பலிங்காய நமஶ்ஶிவாய ॥ 15

கும்பகோணத்திலுள்ள தீர்த்தங்களுக்கு அதிபராக இருப்பவரும், தீர்த்த ஸ்நானத்தின் பயனை அளிப்பவரும், பலத்தின் உருவாக இருப்பவரும், கோரிய பயனை அளிக்கும் ஸ்வரூபத்தை உடையவரும், ஸ்ரீ மந்த்ர பீடேச்வரியான ஸ்ரீ மங்களாம்பாளின் கணவருமான ஸ்ரீ கும்பேச்வரருக்கு நமஸ்காரம். (15)

कारुण्यनिधये तुभ्यं कल्याणगुणसिन्धवे ।
शूलिने मालिने तुभ्यं नमस्ते विश्वमूर्तये ॥ १६

காருண்யநிதயே துப்யம் கல்யாணகுணஸிந்தவே ।
ஶூலிநே மாலிநே துப்யம் நமஸ்தே விஶ்வமூர்த்தயே ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கருணைக்கு இருப்பிடமானவரும், கல்யாண குணங்களுக்கு கடலாக இருப்பவரும், சூலத்தை தரித்தவரும், புஷ்பமாலைகளை அணிந்தவரும், உலகத்தின் உருவாக இருப்பவரும், ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (16)

अघोराय नमस्तुभ्यं वामदेवाय ते नमः ।
सद्योजाताय नीलाय लोहिताक्षाय ते नमः ॥ १७

அகோராய நமஸ்துப்யம் வாமதேவாய தே நம: ।
ஸத்யோஜாதாய நீலாய லோஹிதாக்ஷாய தே நம: ॥ 17

அகோர மூர்த்தியான தங்களுக்கு நமஸ்காரம் வாமதேவ மூர்த்தியான தங்களுக்கு நமஸ்காரம். ஸத்யோஜாத மூர்த்தியும், நீலவர்ணமாக இருப்பவரும், சிவந்த கண்களை உடையவருமான தங்களுக்கு நமஸ்காரம். (17)

चन्द्रखण्डाय शान्ताय कालकालान्तकाय च ।
रुद्राय नीलकण्ठाय नमो मृत्युञ्जयाय च ॥ १८

சந்த்ரகண்டாய ஶாந்தாய காலகாலாந்தகாய ச ।
ருத்ராய நீலகண்டாய நமோ ம்ருத்யுஞ்ஜயாய ச ॥ 18

சந்திரனின் சகலத்தை தரித்தவரும், சாந்தியுடன் கூடினவரும், காலரூபியாகவும், காலனுக்கும் அந்தகரூபியாக இருப்பவரும், ருத்ரனும் கழுத்தில் நீலவர்ணமுள்ளவரும்; மிருத்யுவை ஜயித்தவருமான தங்களுக்கு நமஸ்காரம். (18)

शिपिविष्टाय कालाय कालदण्डाय ते नमः ।
श्रीमते वेदनिधये वेदवेद्याय ते नमः ॥ १९

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஶிபிவிஷ்டாய காலாய காலதண்டாய தே நம: ।
ஶ்ரீமதே வேதநிதயே வேதவேத்யாய தே நம: ॥ 19

பிரஜைகளின் ஹ்ருதய கமலத்தில் அமர்ந்திருப்பவரும், காலரூபியாக இருப்பவரும், துஷ்டர்களை சிக்ஷிக்கும் காலதண்டமாக விளங்குகிறவரும், ஶ்ரீமானும் வேதங்களுக்கு இருப்பிடமானவரும், வேதங்களால் அறியத்தக்கவருமான தங்களுக்கு நமஸ்காரம். (19)

वैद्याय वसुनाथाय वरिष्ठाय नमो नमः ।
शर्वाय शाखिने तुभ्यं मदनांगविभेदिने ॥ २०
चन्द्रचूडाय चण्डाय नमस्ते खण्डितारये ।
हरिकेशाय देवाय पुष्टानांपतये नमः ॥ २१

வைத்யாய வஸுநாதாய வரிஷ்டாய நமோ நம: ।
ஶர்வாய ஶாகினே துப்யம் மதனாங்கவிபேதினே ॥ 20
சந்த்ரசூடாய சண்டாய நமஸ்தே கண்டிதாரயே ।
ஹரிகேஶாய தேவாய புஷ்டானாம்பதயே நம: ॥ 21

வியாதிகளைப் போக்கும் மருந்தளிக்கும் வைத்யராக இருப்பவரும், ஸ்வர்ணம் முதலிய பொருள்களுக்கு அதிபராக இருப்பவரும், உலகிற்கெல்லாம் சிறந்து விளங்குகிறவருமான தங்களுக்கு நமஸ்காரம். உலகத்தின் தாபத்தைப் போக்குவதில் கிளைகள் நிரம்பிய மரம்போல் இருப்பவரும், மன்மதனின் சரீரத்தைப் பிளந்தவரும், சந்திரனை தலையில் ஆபரணமாகக் கொண்டவரும், துஷ்டர்களிடத்தில் மிகுந்த கோபம் கொண்டவரும், சத்ருக்களை வதம் செய்கிறவருமான தங்களுக்கு நமஸ்காரம். காந்தியுள்ளவராகவும், பாதுகாக்கிறவர்களுள் தலைவனாக இருக்கும் தங்களுக்கு நமஸ்காரம். (20, 21)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

पशूनांपतये तुभ्यं वृषभाक्षाय ते नमः ।
वृषवाहाय विषवे पुण्यकालाय ते नमः ॥ २२

பஶூநாம்பதயே துப்யம் வ்ருஷபாக்ஷாய தே நம: ।
வ்ருஷவாஹாய விஷவே புண்யகாலாய தே நம: ॥ 22

பசுக்களுக்கு பதியாக இருப்பவரும், ருத்ராக்ஷ மாலையை தரித்தவரும், தர்மரூபமான விருஷபத்தை வாஹனமாகக் கொண்டவருமான தங்களுக்கு நமஸ்காரம். விஷுவங்களான சித்திரை, ஐப்பசி, மாதப் பிறப்பு புண்யகாலங்களாக இருப்பவருமான தங்களுக்கு நமஸ்காரம். (22)

कार्यकारणरूपाय भेदभेद्याय ते नमः ।
पुरतः पृष्ठतश्चैव पार्श्वतस्ते नमो नमः ।
भूयो भूयो नमस्तुभ्यं भूयो भूयो नमो नमः ॥ २३

भविष्योत्तर पुराणे ब्रह्मदेवकृत कुम्भेश्वर स्तोत्रम् संपूर्णम् ॥

கார்யகாரணரூபாய பேதபேத்யாய தே நம: ।
புரத: ப்ருஷ்டதஶ்சைவ பார்ஶ்வதஸ்தே நமோ நம: ।
பூயோ பூயோ நமஸ்துப்யம் பூயோ பூயோ நமோ நம: ॥

காரியம் காரணம் இவைகளாக இருப்பவரும், அபிப்ராய பேதங்களை யெல்லாம் போக்குகிறவருமான தங்களுக்கு நமஸ்காரம். முன்பும் பின்பும் பக்கத்திலும் தங்களுக்கு நமஸ்காரம். திரும்பத் திரும்பவும் மறுபடியும் திரும்பத் திரும்பவும் நமஸ்கரிக்கிறேன். (23)

பவிஷ்யோத்தர புராணத்தில் பிரம்மதேவனால் செய்யப்பட்ட கும்பேச்வர ஸ்தோத்ரம் முற்றிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீ கும்பகோண மாஹாத்மியத்தில் ஸ்ரீ சக்ர தீர்த்தத்தின் மஹிமை

(ஸ்ரீ சக்ரப்படித்துறை)

சண்டிகை முதலிய மாத்ருகா கணங்கள் அந்த மலையைச் சுற்றிலும் இருப்பதால், அந்த தேவிகளுக்கும் நமஸ்காரம் செய்து விட்டு, மலைமீதேற வேண்டும். (16)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

पुष्ये मासि च पौष्ये च स्वाम्यद्रीशस्य सेवने ।
पदमेकं चलेद्यस्तु स्वगृहाद्वा मुनीश्वर ।
पदेपदेऽश्वमेधानां फलं प्राप्नोति पुष्कलम् ॥ १७

புஷ்யே மாஸி ச பௌஷ்யே ச ஸ்வாம்யத்ரீஶஸ்ய
ஸேவனே ।
பதமேகம் சலேத்யஸ்து ஸ்வக்ருஹாத்வா முனீஶ்வர ।
பதேபதேஶ்வமேதானாம் பலம் ப்ராப்னோதி புஷ்கலம் ॥

தை மாதம் புஷ்ய நக்ஷத்திரத்தன்று, ஸ்வாமி மலைக்குச் செல்லுகிறேன் எனச் சொல்லி ஒரு அடி எடுத்து வைத்தாலும் கூட, அவன் ஸ்ரீ ஸ்வாமிநாதனுடைய அருளுக்கு பாத்ரனாகி விடுவான். அவன் வைக்கும் ஒவ்வொரு அடி வைப்பிலும் அச்வமேதம் செய்த பூர்ண பலனை அடைவான். (17)

तिष्ययात्रां प्रकुरुते स्वाम्यद्रिं प्रतिमानवः ।
किं तस्य दुर्लभं लोके गुहाऽभिन्नो भवेद्ध्रुवम् ॥ १८

திஷ்யயாத்ராம் ப்ரக்ருதே ஸ்வாம்யத்ரிம் ப்ரதிமானவः
கிம் தஸ்ய துர்லபம் லோகே குஹாऽபின்னோ
பவேத் த்ருவம் ॥ 18

புஷ்யத்தன்று ஸ்ரீ முருகனை தரிசிக்க ஸ்வாமி மலைக்கு புறப்படுகிறவனுக்கு இவ்வுலகில் அடைமுடியாதது ஒன்றுமில்லை அவன் ஸ்ரீ குஹனாகவே ஆகி விடுவான். (18)

तिष्ययात्रां प्रकुरुते योऽणुमात्रं ददाति च ।
स कुबेरसखो भूत्वा गुहसायुज्यमाप्नुयात् ॥ १९

திஷ்யயாத்ராம் ப்ரக்ருதே யோऽணுமாத்ரம் ததாதி ச ।
ஸ குபேரஸகோ பூத்வா குஹஸாயுஜ்யமாப்னுயாத் ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புஷ்யத்தன்று ஸ்ரீ ஸ்வாமிநாதனை தரிசிப்பதற்கு முன் சிறிதளவேனும் பொருளை தானம் செய்வானே யாகில், அவன் குபேரனுக்கு சமமாக ஆகி முடிவில் குஹனாகவே ஆகிவிடுவான். அல்லது செல்லுகிறவர் களுக்கு தானம் செய்வானேயாகில் அவ்வாறு ஆவான். (19)

मुनिव्रतं समासाद्य यो गच्छेत् षण्मुखालयम् ।
दर्शनान्तं सुरेशत्वं लभते नात्र संशयः ॥

முனிவ்ரதம் ஸமாஸாத்ய யோ கச்சேத் ஷண்முகாலம்
தர்ஶனாந்தம் ஸுரேஶத்வம் லபதே நாத்ர ஸம்ஶய: ||

ஸ்வாமினாதனை தரிசிக்கச் செல்லும் போது மௌனத்துடன் சென்று தரிசனம் செய்து, மௌன விரதத்தை விடுவானேயாகில், அவன் தேவர்களுக் கெல்லாம் அதிபனாவான். இதில் சந்தேஹமில்லை. (20)

स्वाम्यद्रीशस्य यात्रार्थं गच्छामीत्युक्तिमात्रतः ।
तिष्यमासे विशेषेण स एव स्यात् षडाननः ॥

ஸ்வாம்யத்ரீஶஸ்ய யாத்ரார்த்தம் கச்சாமீத்யுக்தி
மாத்ரத: |
திஷ்யமாஸே விஶேஷேண ஸ ஏவ ஸ்யாத் ஷடானன:

ஸ்வாமி மலைக்குச் சென்று ஸ்ரீ ஸ்வாமினாதனை தரிசிக்கப் போகிறேன் என தை மாதத்தில் எவன் கூறுவானோ, அந்த சொல்லினாலேயே அவன் ஆறுமுக கடவுளாக ஆகிவிடுவான். (21)

गुहाद्रेः पूर्वभागस्थे तीर्थानामुत्तमोत्तमे ।
कुमारतीर्थेयः स्नाति तिष्यपूर्णा तिथिंगते ।
सपुत्रपौत्रान् लभते अचिरादेवनान्यथा ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குஹாத்ரே: பூர்வ பாகஸ்தே தீர்தானா முத்தமோத்தமே
குமாரதீர்தே ய: ஸ்னாதி திஷ்யபூர்ணும் திதிம் கதே ।
ஸபுத்ரபௌத்ரான் லபதே அசிராதேவநான்யதா ॥

ஸ்ரீ ஸ்வாமிநாதனுடைய கோவிலுக்கு முன் பாகத்தில் இருக்கும் மிகச் சிறப்புவாய்ந்த, குமார தீர்த்தத்தில் ஒருவன் ஸ்நானம் செய்தானேயாகில், அவன் வம்சமானது பிள்ளை பேரன் முதலியவற்றால் துடர்ந்து விளங்கும். வேறு எந்த புண்யத்தாலும் இவ்வாறு வம்ச விருத்தியை அடைய முடியாது. (22)

जीर्णोद्धारञ्च यः कुर्यात् तस्यः तीर्थस्य मानवः ।
तिष्यस्नानं प्रकुरुते तयोर्वंशोभि वर्धते ॥

ஜீர்ணோத்தாரம் ச ய: குர்யாத் தஸ்ய தீர்தஸ்ய மானவ:
திஷ்யஸ்நானம் ப்ரக்ருதே தயோர்வம்ஸோபி வர்ததே ॥

அந்த குமார தீர்த்தத்தை எவனொருவன் மண் எடுத்து படிக்கட்டுகள் கட்டி, திருப்பணி செய்வானோ, புஷ்யத்தில் ஸ்நானம் செய்வானோ, அவ்விருவர்களின் வம்சம் மேன்மேலும் விருத்தியாகும். (23)

नमनं वा प्रकुरुते दत्वावा दीपमेककम् ।
बिल्वार्चनं च कुरुते ससुरांशो भवेद्ध्रुवम् ॥

நமனம் வா ப்ரகுருதே தத்வா தீபமேககம் ।
பில்வார்சனம் ச குருதே ஸஸுராம்ஸோ பவேத்த்ருவம்

ஸ்ரீ ஸ்வாமிநாதனை நமஸ்கரித்தோ ஒரு தீபத்தை அவன் ஸன்னிதியில் வைத்தோ, அல்லது பில்வ தளங்களால் அர்சனம் செய்தாலோ, அவன் தெய்வாம்சம் பொருந்தியவனாக ஆகி விடுவான். (24)

தை மாதம் புஷ்யத்தில் அங்கு ஸ்நானம் செய்து, விதிப்படி மலைமீது ஏறி ஸ்ரீ ஸ்வாமிநாதனுக்கு அபிஷேகம் செய்வித்து, அர்சனம் செய்வானேயாகில், வாத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரோகம் முதலிய மஹா ரோகங்கள் விலகுமென ஸ்ரீ ஜாபாலி முனிவர் கூறியுள்ளளார்.

ஹைஹயன் என்ற அரசன் பாபங்களைப் போக்கும் ஸ்ரீ ஸ்வாமி மலைக்கு திருப்பணி செய்து படிக்கட்டுக்களுக்கு தங்கத்தினாலும், ரத்தினங்களாலும் அலங்காரம் செய்து, மதில் சுவர், கோபுரம் முதலிய திருப்பணிகள் செய்து, அங்க பிரதக்ஷிணமும் செய்தான். அதனால் அவன் வாதரோகம் நீங்கி நிகரில்லாத கார்தவீர்யார்ஜுனன் என்ற உத்தம புத்ரனை அடைந்தான்.

ஸ்ரீ ஸ்வாமிநாதனுக்காக பால் காவடி கட்டியதும் அதில் ஸர்வ தேவர்களும் ஸான்னித்யமடைகின்றனர். கால் அதன் மேல் படக்கூடாது. பால் காவடி எடுப்பதினால் பிள்ளைகள் பேரன்கள் வம்சத்தில் துடர்சியாக ஏற்பட்டு, அஷ்டைச்வர்யமும் உண்டாகும்.

सर्वे देवाश्च तिष्ठन्ति क्षीरशिक्ये सदैवतु ।

ஸர்வே தேவாஸ்ச திஷ்டந்தி க்ஷீரஶிக்யே ஸ தைவது ।

பால் காவடியில் எல்லா தேவர்களும் வஸிக்கின்றனர். (இப்பவும் எங்கள் குடும்பத்தில் உபநயனம் முதலிய சுபமுகூர்த்தங்கள் செய்வதற்கு முன்பு, அந்த குழந்தைகளைக் கொண்டு ஸ்ரீ ஸ்வாமிநாதனுக்கு பால் காவடி எடுத்து அபிஷேகம் செய்வது வழக்கம்). (25)

दूरात्सन्दर्शनात्सद्यः विमानं शक्तिधारिणः ।
सर्वान् कामानवाप्नोति सत्यं सत्यं न संशयः ॥

தூராத்ஸந்தர்ஶனாத்ஸத்ய: விமானம் ஶக்தி தாரிண:
ஸர்வான் காமானவாப்னோதி ஸத்யம் ஸத்யம் ந
ஸம்ஶய: ॥ ।

வேலை கையில் தரித்த ஸ்ரீ முருகனுடைய கோவில் விமானத்தை வெகு தூரத்துக்கு அப்பால் இருந்து தரிசித்தாலும் கூட ஸர்வ அபீஷ்டங்களையும் அடைவான். இதை ஸத்யமாகக் கூறுகிறேன், இதை ஸத்ய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாகக் கூறுகிறேன் என நாரதரைப் பார்த்து ஸ்ரீ பிரம்ம தேவன் கூறியுள்ளார். (26)

स्वाम्यद्रिनाथस्य महाविभूतिं ब्रह्मेशमुख्यैरपि कृत्स्नशो मुने ।
वक्तुं न शक्यं तदपारचित्रं कथामृताधारमभीष्टसिद्धिदम् ॥

इति भविष्योत्तरपुराणे श्रीकुम्भकोण माहात्म्ये पञ्चक्रोशयात्रायां
चतुर्थक्रोशविभवानुवर्णनं नाम सप्तमोऽध्यायः ॥

ஸ்வாம்யத்ரிநாதஸ்ய மஹா விபூதிம்
ப்ரம்மேஶமுக்யைரபி க்ருத்ஸ்னஶோ முனே ।
வக்தும் ந ஶக்யம் ததபார சித்ரம்
கதாம்ருதாதாரமபீஷ்ட ஸித்திதம் ॥

இதி பவிஷ்யோத்தர புராணே ஸ்ரீகும்பகோண மாஹாத்ம்யே பஞ்சக்ரோசயாத்ராயாம் சதுர்தக்ரோச விபவானுவர்ணனம் நாம ஸப்தமோத்யாய: ||

ஸ்வாமி மலையின் மஹிமையை பிரம்மா, பரமேச்வரர் முதலியவர்களும்கூட முழுவதும் கூற முடியாது. அதே போல் ஸ்ரீ முருகனுடைய கதைகளை வெளிக் காட்டுகின்றதும், கோரிய பொருள்களை அளிக்கின்றதும், மிக ஆச்சரியமான சித்திரங்களை (அங்கு மதில் சுவற்றில் எழுதியவைகளை) வருணிக்க முடியாது.

தஞ்சை ஜில்லா சிறுகளத்தூர் கிராமத்தில் N. ராதா கிருஷ்ணய்யர் என்கிற ஆஸ்திக பிரபுவாகிய ஓர் மஹான் இருந்தார். அவரது பிதா ஒவ்வொரு கிருத்தி கைக்கும் பால் காவடி எடுத்துக் கொண்டு, தனது ஊரிலிருந்து இருபது மைல் தூரமுள்ள ஸ்ரீ ஸ்வாமி மலைக்கு நடந்து செல்வாராம். இந்த புண்யத்தால் அவர்களது புத்ரரான ஸ்ரீ N. R. அய்யர் அவர்கள் கோடீச்வரராக விளங்கினர். இவரது புத்ரரான ஸ்ரீ ராம்ஜீதாஸய்யரும் இப்பொழுது, ஸகலபோக போக்யங்களுடன் விளங்கி வருகிறார். (27)

இவர்களும் இவர்களது குடும்பத்தினரும் அடிக்கடி அங்கு சென்று இப்பொழுதும் அபிஷேகம், அர்சனம் முதலிய வழிபாடுகளை நடத்தி வருகின்றனர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கும்பகோணத்தில் பிரபல டாக்டராக இருந்துவரும் ஸ்ரீ M. K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் சில வருஷங்களுக்கு முன்பு மிகுந்த முயற்சியுடன் ஸ்ரீ ஸ்வாமிநாதனுக்கு கோடி அர்ச்சனையை பல ஆஸ்திகர்களுடைய உதவியையும் சேர்த்துக்கொண்டு வேத கோஷம் முதலியவைகளுடன் மிக ஆச்சரியமாய் நடத்தினார்கள். அதனால் நமது தேசத்திற்கு வந்த பல பயங்கள் நீங்கின.

இப்படி மஹிமைவாய்ந்த ஸ்ரீ ஸ்வாமிநாதனை பூஜை செய்யும் சிவாசாரியர்களும் தர்மகர்தாக்களும் பக்தியுடன் எல்லா காரியங்களையும் நடத்துவது போற்றத்தக்கது. மேலும் அங்குள்ள வைதிகர்கள் ஸ்ரீ ஸ்வாமிநாதனுடைய காவடி பூஜை முதலியவைகளை முறைப்படி நடத்தி வைத்து அபிஷேக காலத்தில் ஸ்ரீ ருத்ரம் முதலிய மஹா மந்திரங்களை முறைப்படி ஜெபித்து நடத்திக் கொடுப்பது மிகுந்த பாக்யமாகும். மேலும் அங்கு புஷ்பம், பழம், தேங்காய், கர்பூரம் முதலிய வியாபாரம் செய்யும் வியாபாரிகள் கூட சூது வாது இல்லாமல் நடந்து கொள்ளுவது அவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிநாதனிடத்தில் இருக்கும் பக்தியை காட்டுகிறது.

இவ்வாறு ஸ்ரீபவிஷ்யோத்தர புராணத்தில் கூறப்பட்ட
ஸ்வாமிமலையின் சரிதம் முற்றிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உப்பிலியப்பன் சரித்திரம்

இனி பவிஷ்யோத்ர புராணத்தில் கூறிய உப்பிலியப்பன் கோவிலில் விளங்கும் ஸ்ரீ அப்பனின் பெருமை கூறப்படுகிறது.

இந்த க்ஷேத்திரத்திற்கு ஆகாச புரமென்றும், துளசீவனமென்றும் பெயருண்டு. மார்க்கண்டேய முனிவர் ஸ்ரீ பகவானை மாப்பிள்ளையாக அடைய வேண்டுமெனக் கடுந்தவத்தை இந்த ஸ்தலத்தில் செய்தார். பூமிதேவியானவள், அவர் முன்னிலையில் புத்ரியாகத் துளசீவனத்தில் தோன்றினாள். முனிவர் அக்குழந்தையை அன்புடன் வளர்த்து வந்தார். ஸ்ரீ ஸ்ரீநிவாசனான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர், வயது முதிர்ந்த அந்தணர் உருவில் வந்து, இப்பெண்ணை மணக்க மனம் கொண்டார். அளவு கடந்த தேஜஸ் ஸுடன் இவர் இருந்த போதிலும் கிழவராக இருக்கிறாரே என்று முனிவர் கவலை கொண்ட சமயத்தில், ஸ்ரீ பகவான், அங்கத்துக்கு அங்கம் அழகு வாய்ந்த சுந்தர புருஷராக தரிசனமளித்தார். உடன், முனிவர் பூமிதேவியை அவருக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். ஸ்ரீ பகவான் பரமானந்தத்துடன், தம்மிடம் வரன் கேட்கும்படி முனிவரிடம் கூறினார் அப்பொழுது மார்க்கண்டேய மஹரிஷியானவர், "நான் பல ஆயிரக் கணக்கான வருஷங்கள் உப்பில்லாமலே ஆஹாரம் செய்து கொண்டு தவம் செய்து வந்தேன். அதனால் என் பெண்ணும் உப்பில்லாமலேயே சமையல் செய்து வருகிறாள். அதனால், தாங்கள் இனி உப்பில்லாமல் என் குழந்தை சமையல் செய்தாலும் அல்லது பக்தர்கள் உப்பில்லாமல் நிவேதனம் செய்தாலும், உப்புள்ளது போல் ஆகும்படி செய்து அனுக்ரஹிக்க வேண்டும். மேலும் இந்த ஆசிரமத்திலேயே என் பெண்ணுடன் கோவில் கொண்டு அருள வேண்டும். மேலும் பக்தர்கள் இந்தக் கோவிலுக்கு வந்தவுடன் அவர்கள் மனக் கவலைகளெல்லாம் நீங்கி, துக்கங்களெல்லாம் விலக வேண்டும்", என ஸ்ரீ பகவானை வேண்ட, ஸ்ரீ ஸ்ரீநிவாச

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

னும் அப்படியே செய்வதாக வாக்களித்தார். இப்பொழுதும் ஸ்ரீ உப்பிலியப்பன் சன்னதியில் உப்பில்லாமல் நிவேதனம் செய்வதும், ஆனால் அவை உப்பு போட்டது போலவே அமைவதும் ஆச்சரியமாய் இருக்கும். மேலும் அந்த க்ஷேத்திரத்திற்குச் சென்றதும் ஆனந்த மேற்படுவதும், மனக்குறைகள் நீங்குவதும், கல்யாணம் முதலிய காரிய சித்திகள் ஏற்படுவதும், இக்கலியிலும் பிரத்யக்ஷமாக உள்ளது இந்த க்ஷேத்ரத்திலும் மிகச் சிறப்பாகக் கோடி அர்ச்சனை பக்தர்களால் செய்யப்பட்டது.

திருநாகேச்வரம்

இந்த க்ஷேத்ரமானது கும்பகோணத்திற்குத் தென் கிழக்கில் இருக்கிறது. இதற்கு சம்பகாரண்யமெனப் பெயர் அங்கு ஆதிசேஷன், தான் ஸ்ரீ பரமேச்வரனுக்கு ஆபரணமாக ஆக வேண்டுமென தவம் செய்து, அவ்வாறே ஆகி, சம்பக விருக்ஷத்தை க்ஷேத்ரவிருக்ஷமாக ஸ்தாபித்தார். இந்த க்ஷேத்திரத்தில் புகுந்த மாத்திரத்திலேயே பாபங்கள் எல்லாம் விலகுமென்றும், பிரம்ம தேவனாக ஆகிவிடுவானென்றும், இங்குள்ள ஸ்ரீ நாகேச்வரரை அர்ச்சித்தால் ஸர்ப்ப தோஷங்கள் எல்லாம் விலகி, புத்ரலாபம் முதலிய க்ஷேமங்கள் உண்டாகுமென்றும், ரோகங்கள் நீங்கும் என்றும் புராணம் கூறுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ श्रीमध्यार्जुनेशाष्टकम् ॥

ஸ்ரீமத்யார்ஜுனேசாஷ்டகம்

மத்யார்ஜுனம் என்னும் மஹா க்ஷேத்ரமானது கும்பகோணம் மாயூரத்துக்கு நடுவில் காவேரிக் கரையில் அமைந்துள்ளது. அர்ஜுனம் என்னும் மருத மரம் இந்த க்ஷேத்திரத்திற்கு க்ஷேத்ர விருக்ஷமாகும். மிகப் பெரிதான கோவில் அங்குள்ளது. அங்குள்ள லிங்கம் மிகப் பெரியதாலும், உலகத்திலிள்ள லிங்கங்களுக்கெல்லாம் இந்த லிங்கம் மூலஸ்தானமாக விளங்குவதாலும், மஹாலிங்கமென பெயருடன் விளங்குகிறது. இந்த கோவிலில் பிரதக்ஷிணம் வரும் பாகத்தை அச்வமேத பிரதக்ஷிணமென சொல்லப்படுகிறது. அச்வமேதாதி மஹா யாகங்களால் விலகும் மஹா பாபங்கள் இந்த அச்வமேத பிரதக்ஷிணத்தால் விலகும் அதனுல் இக்கலியிலும், சித்தபிரமம் முதலிய வியாதி உள்ளவர்கள் இந்த க்ஷேத்திரம் வந்து தங்கி கால் மண்டலமோ, அரை மண்டலமோ, ஒரு மண்டலமோ அச்வமேத பிரதக்ஷிணம் செய்தால் அவைகள் விலகுவது மிக ஆச்சரியமாய் இருக்கும். ஜாதகத்தில் சூரியனே குருவோ தோஷமுள்ளவர்களாக இருந்தால், சிவாபராதம் முதலிய தோஷங்கள் இருக்கும். தை, மாசி மாதங்களில் பிறந்தவர்களுக்கு பெரும்பாலும் தலை வலியோ, தலை சுற்றலோ இருக்கும். அந்த தோஷங்களெல்லாம் இந்த மத்யார்ஜுனேசாஷ்டகத்தை படிப்பதால் விலகும்.

मध्यार्जुनेशं भजेहं साम्बमध्यार्जुनेशं महालिंगमाद्यं
मध्यार्जुनेशंभजेहम् ॥

மத்யார்ஜுனேசம் பஜேஹம் — ஸாம்ப
மத்யார்ஜுனேசம் மஹாலிங்கமாத்யம்
மத்யார்ஜுனேசம் பஜேஹம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மத்யார்ஜுன க்ஷேத்திரத்திற்கு அதிபரும், அம்பாளுடன் கூடியவரும், ஆதிமூர்த்தியுமான ஸ்ரீ மஹாலிங்கத்தை பஜிக்கிறேன்.

ज्योतिर्महालिंगरूपं – क्लृप्तभूषं भुजंगेन कृत्तारिबृन्दं
भक्तार्ति संहार्यपांगं – ब्रह्मविष्ण्वादिवृन्दैर्मुदापूजितांघ्रिं
(मध्यार्जुनेशं भजेहम्) १

ஜ்யோதிர்மஹாலிங்கரூபம் — க்லுப்த
பூஷம் புஜங்கேன க்ருத்தாரி ப்ருந்தம் ।
பக்தார்தி ஸம்ஹார்யபாங்கம் — ப்ரம்ம
விஷ்ண்வாதி ப்ருந்தைர்முதா பூஜிதாங்க்ரிம் ॥ 1
(மத்யார்ஜுனேஶம் பஜேஹம்)

ஜ்யோதிர்மயமான மஹாலிங்கத்தின் உருவாக விளங்குகிறவரும், ஸர்பங்களை ஆபரணமாக கொண்டவரும், சத்ருக்களை அழிப்பவரும், பக்தர்களின் மனக் குறைகளை போக்கும் கடைக்கண் பார்வையை உடையவரும், ப்ரம்மா, விஷ்ணு முதலிய தேவ கூட்டங்களால் பூஜிக்கப்பட்ட பாதகமலங்களை உடையவருமான ஸ்ரீ மத்யார்ஜுன க்ஷேத்திரத்திற்கு அதிபரான ஸ்ரீ மஹாலிங்க மூர்த்தியை பஜிக்கிறேன். (1)

रुद्राक्षमालां धरन्तं ब्रह्महत्यादि पापानि संनाशयन्तम् ।
रक्षन्तमापत्सुभक्तान् भ्रान्तचित्तस्थदोषान् समुन्मूलयन्तम् ॥
(मध्यार्जुनेशं भजेहम्) २

ருத்ராக்ஷமாலாம் தரந்தம் — ப்ரம்மஹத்யாதி
பாபானி ஸந்நாஶயந்தம் ।
ரக்ஷந்தமாபத்ஸு பக்தான் — ப்ராந்த
சித்தஸ்த தோஷான் ஸமுன்மூலயந்தம் ॥ 2
(மத்யார்ஜுனேஶம் பஜேஹம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ருத்ராக்ஷ மாலைகளை தரிக்கின்றவரும், பிரம்மஹத்தி முதலிய பஞ்ச மஹா பாதகங்களை அடியோடு நாசம் செய்கின்றவரும், பக்தர்களை ஆபத்துக்களிலிருந்து ரக்ஷிக்கின்றவரும், சித்த பிரமம் உள்ளவர்களின் தோஷங்களை அடியோடு போக்குகின்றவரும், ஸ்ரீமத்யார்ஜுன க்ஷேத்திரத்துக்கு ஈசனுமான ஸ்ரீ மஹாலிங்கத்தை பஜிக்கிறேன். (2)

पुण्याश्वमेधप्रचारैः भूतबाधादिचोरैः भवाम्भोधितारैः ।
कुर्वन्तिभक्ताः प्रसन्नं पुत्रपौत्राद्यभीष्टान् सदा पूरयन्तम् ॥
(मध्यार्जुनेशं भजेहम्) ३

புண்யாஶ்வமேதப்ரசாரை: — பூத
பாதாதி சோரை: பவாம்போதிதாரை: ।
குர்வந்தி பக்தா: ப்ரஸன்னம் — புத்ர
பௌத்ராத்யபீஷ்டான் ஸதா பூரயந்தம் ॥ 3
(மத்யார்ஜுனேஶம் பஜேஹம்)

பூத பிரேத பாதைகளை போக்குகிறதுகளும், ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தின் கரைக்கு ஏற்றிச் செல்லுகின்றதுகளுமான புண்யமான அச்வமேத பிரதக்ஷிணங்களால் பக்தர்கள் ஸ்ரீ மஹாலிங்கத்தை பிரஸன்னராகச் செய்கின்றனர். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் முதலிய அபீஷ்டங்களை பக்தர்களுக்கு நிரம்ப தருகின்ற ஸ்ரீ மஹாலிங்கத்தை பஜிக்கிறேன். (3)

भस्मादिभूषाविशेषं पुष्पबिल्वादिपत्रैर्जुषाणं सुतोषम् ।
सर्वार्थदायिप्रदोषं विप्रवर्यौघ सम्प्रोक्तसामादिघोषम् ॥
(मध्यार्जुनेशं भजेहम्) ४

பஸ்மாதி பூஷாவிஶேஷம் — புஷ்ப
பில்வாதி பத்ரைர்ஜுஷாணம் ஸுதோஷம் ।
ஸர்வார்ததாயி ப்ரதோஷம் — விப்ர
வர்யௌக ஸம்ப்ரோக்த ஸாமாதி கோஷம் ॥ 4
(மத்யார்ஜுனேஶம் பஜேஹம்)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விபூதி முதலிய அலங்காரங்களால் பிரகாசிக்கின்றவரும், புஷ்பம், பில்வம் முதலிய பத்ரங்களால் மிகுந்த சந்தோஷத்தை அடைகின்றவரும், ஸகல புருஷார்தங்களையும் அளிக்கும் மஹா பிரதோஷ தரிசனத்தை உடையவரும், சிறந்த பிராமணர்களின் ஸமூஹங்களால் பாராயணம் செய்யப்பட்ட ஸாமவேதம் முதலிய மந்திர கோஷங்களை உடையவருமான ஸ்ரீ மஹாலிங்கத்தை பஜிக்கிறேன் (4)

सह्याद्रिजातीर भाग्यं – साधुभोग्यं सुरेन्द्रैः सदासाधुमृग्यम् ।
प्राप्यं कृतानेकपुण्यैः – दीनरक्षैकदीक्षं कृपापूर्णवीक्षम् ॥
(मध्यार्जुनेशं भजेहम्) ५

ஸஹ்யாத்ரிஜாதீர பாக்யம் — ஸாது
போக்யம் ஸுரேந்த்ரை: ஸதா ஸாது ம்ருக்யம் ।
ப்ராப்யம் க்ருதானேகபுண்யை — தீன
ரக்ஷைகதீக்ஷம் க்ருபா பூர்ண வீக்ஷம் ॥ 5
(மத்யார்ஜுனேஶம் பஜேஹம்)

காவேரீ தீரத்தில் உள்ளவர்களின் பாக்யமாய் விளங்குகின்றவரும், உலகத்திலுள்ள ஸாதுக்களால் அநுபவிக்கத் தக்கவரும், தேவ சிரேஷ்டர்களாலும் நன்கு தேடத் தகுந்தவரும், மிகுந்த புண்யம் செய்தவர்களால் அடையத் தகுந்தவரும், ஏழைகளை ரக்ஷிப்பதில் தீக்ஷை கொண்டவரும், கருணை ததும்பும் கடைக்கண் பார்வையை உடையவருமான ஸ்ரீ மஹாலிங்கத்தை பஜிக்கிறேன். (5)

पुष्योत्सवे पुण्यगोष्ठ्यां – सामवेदादिघोषैः प्रमोदेनभान्तम् ।
ज्योतिर्मयानन्दकन्दं – स्वर्जुनाख्यस्य वृक्षस्य मूले वसन्तम् ॥
(मध्यार्जुनेशं भजेहम्) ६

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புஷ்யோத்ஸவே புண்ய கோஷ்ட்யாம் — ஸாம
வேதாதி கோஷை: ப்ரமோ தேன பாந்தம் ।
ஜ்யோதிர்மயானந்த கந்தம் — ஸ்வர்ஜு
நாக்யஸ்ய வ்ருக்ஷஸ்ய மூலே வஸந்தம் ॥ 6
(மத்யார்ஜுனேஸம் பஜேஹம்)

புஷ்ய மாதத்திய புஷ்ய உத்ஸவத்தில் புண்யசாலிகள் சேர்ந்த சமயத்தில், ஸாம வேதம், யஜுர் வேதம், ரிக்வேதம் முதலியவைகளால் சந்தோஷமாய் விளங்குகின்றவரும், ஜ்யோதிஸ்வரூபமாயும், ஆனந்தத்துக்கு இருப்பிடமாயும் இருப்பவரும், மங்களமான மருத மரத்தின் அடியில் விளங்குகிறவருமான ஸ்ரீ மஹாலிங்கத்தை பஜிக்கிறேன். (6)

पुष्येरथे कालधौते – दिव्यपुष्पाभिरामेवृषैरुह्यमाने ।
पश्यन्तमत्यन्तभक्तां – सुन्दराभ्यां बृहद्भ्यां कुचाभ्यां युतांताम् ॥
(मध्यार्जुनेशं भजेहम्) ७

புஷ்யே ரதே கால தௌதே — திவ்ய
புஷ்பாபிராமே வ்ருஷைருஹ்யமானே ।
பஶ்யந்த மத்யந்த பக்தாம் — ஸுந்தராப்யாம்
ப்ருஹத்ப்யாம் குசாப்யாம் யுதாம் தாம் ॥ 7
(மத்யார்ஜுனேஸம் பஜேஹம்)

புஷ்ய உத்ஸவத்தில் ஸ்வர்ணத்தினால் செய்யப்பட்டதும் மிகச் சிறந்த புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதும், காளைகள் பூட்டப்பட்டதுமான ரதத்தில் மிகுந்த அன்பு கொண்டவளும், மிக பெரிய ஸ்தனங்களோடு கூடியவளுமான ஸ்ரீ ப்ரஹத்ஸுந்தரகுசாம்பாளை அன்போடு பார்கின்றவருமான ஸ்ரீ மஹாலிங்கத்தை பஜிக்கிறேன். (7)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

स्तोत्रं कृतं भक्तिपूर्वं – दीक्षितानन्तरामेण पापौघशान्त्यै ।
नित्यं पठेद्यस्तु भक्त्या – तस्यसर्वार्थलाभो भवेदाशुतोषात् ।।
(मध्यार्जुनेशं भजेहम्) ८

ஸ்தோத்ரம் க்ருதம் பக்தி பூர்வம் — தீக்ஷி-
தானந்தராமேண பாபௌகஶாந்த்யை ।
நித்யம் படேத்யஸ்து பக்த்யா — தஸ்ய
ஸர்வார்த்த லாபோ பவேதாஶு தோஷாத் ॥ 8
(மத்யார்ஜுனேஶம் பஜேஹம்)

பாபங்கள் விலகுவதற்காக மிகுந்த பக்தியினுல் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரால் செய்யப்பட்டதான இந்த ஸ்தோத்திரத்தை பக்தியுடன் எவன் படிப்பானே அவனுக்கு சீக்கிரத்தில் அநுக்ரஹம் செய்யும் மஹா லிங்கத்தின் அருளால் ஸகல புருஷார்தங்களும் கிடைக்கும். (8)

ஸ்ரீமத்யார்ஜுனேசாஷ்டகம் ஸம்பூர்ணம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ श्री गणपति द्वादशनामस्तोत्रम् ॥

ஸ்ரீமஹா கணபதி த்வாதசநாம ஸ்தோத்திரம்

இதைப் படிப்பதால் ஸகல காரிய சித்திகளும் ஏற்படும். ஜாதகத்தில் 1–5, 9, இந்த இடங்களில் கேது இருந்தால் பிராமண சாபமோ யதி சாபமோ இருக்ககூடும். 2ல் கேது இருந்தால் வாக்கில் தடங்கலோ, திக்கலோ, இருக்க கூடும்; மனதிலோ, காதிலோ தோஷமிருக்க கூடும்; அல்லது குடும்பக் கவலைகள்; இருக்கக்கூடும். அவைகள் இதைப் படிப்பதால் உடன் நீங்கும் (கலௌ து கணநாயகம் – कलौ तु गणनायकं) கலியில் ஸ்ரீ கணபதியின் அருள் சீக்கிரம் கிட்டுமென சாஸ்திரம் கூறுகிறது.

अस्य श्री गणपति द्वादशनाम स्तोत्रस्य व्यासः ऋषिः ।
अनुष्टुप्छन्दः । भगवान् श्री गणपतिः देवता ॥
ओं नमो गणपतये मन्त्र एष उदाहृतः ॥
गणपतिर्विघ्नराजो लम्बतुण्डो गजाननः ।
द्वैमातुरश्च हेरम्ब एकदन्तो गणाधिपः ॥
विनायकश्चारुकर्णः पशुपालो भवात्मजः ।
द्वादशैतानि नामानि प्रातरुत्थाय यः पठेत् ॥
विश्वं तस्य भवेद्वश्यं न च विघ्नं भवेत् क्वचित् ।
महाप्रेताः शमं यान्ति पीड्यते व्याधिभिर्न च ।
सर्वपापाद्विनिर्मुक्तो ह्यक्षयं स्वर्गमश्नुते ॥

इति श्री ब्रह्मपुराणे श्रीगणपति द्वादशनामस्तोत्रम् सम्पूर्णम् ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஸ்ய ஸ்ரீகணபதி த்வாதஶ நாம ஸ்தோத்ரஸ்ய வ்யாஸ: ருஷி: । அனுஷ்டுப் சந்த: । பகவான் ஸ்ரீகணபதி: தேவதா ॥

ஓம் நமோ கணபதயே மந்த்ர ஏஷ உதாஹ்ருத: ॥
கணபதிர் விக்னராஜோ லம்பதுண்டோ கஜானன: ।
த்வைமாதுரஶ்ச ஹேரம்ப ஏகதந்தோ கணாதிப: ॥
விநாயகஶ்சாருகர்ண: பஶுபாலோ பவாத்மஜ: ।
த்வாதஶைதானி நாமானி ப்ராதருத்தாய ய: படேத் ॥
விஶ்வம் தஸ்ய பவேத் வஶ்யம் ந ச விக்னம்
பவேத் க்வசித் ।
மஹாப்ரேதா: ஶமம் யாந்தி பீட்யதே வ்யாதிபிர்ந ச ।
ஸர்வ பாபாத் வினிர்முக்தோ ஹ்யக்ஷயம்
ஸ்வர்கமஶ்னுதே ॥

இதி ஸ்ரீ பாத்மபுராணே ஸ்ரீ கணபதி த்வாதஶநாம
ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

இந்த ஸ்தோத்திரத்தைக் கண்டறிந்தவர் வியாஸ முனிவர். சந்தஸ் அநுஷ்ட்டுப். திவ்ய ஞான சம்பன்னரான ஸ்ரீ மஹா கணபதி தேவதை 'ஓம் நமோ கணபதயே' என்பதுதான் மூல மந்திரமாக கூறப் பட்டுள்ளது. அதாவது இந்த மூல மந்திரந்தை 16 தடவைக்குக் குறைவில்லாமல், 108 தடவையோ, 1008 தடவையோ முடிந்த அளவு ஜபிக்கலாம். பூத கணங்களுக்கு தலைவராக இருப்பவர், இடையூறுகளை அடக்கி ஆளுபவர், தொங்குகின்ற துதிக்கையை உடையவர், யானையின் முகத்தைக் கொண்டவர், இரண்டு தாய்களை உடையவர், பக்தர்களுக்கு அருள் புரிபவர், ஒரு தந்தத்தை உடையவர், கணங்களுக்கு தலைவராய் இருப்பவர், துஷ்டர்களையும், இடையூறுகளை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யும் போக்குகிறவர், அழகிய காதையுடையவர், பசுக்களை ரக்ஷிப்பவர், பரமசிவனின் புத்திரர், இந்த பன்னிரண்டு நாமாக்களையும் எவன் காலையில் எழுந்ததும் படிப்பானோ அவனுக்கு இந்த உலகமே வசமாகி விடும். ஒரு காரியத்திலும் அவனுக்கு இடையூறு ஏற்படாது. பிரேத பாதைகளெல்லாம் நீங்கி விடும், வியாதியினால் பீடை ஏற்படாது. எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டு, குறைவற்ற திவ்ய போகங்களை நித்யம் அனுபவிப்பான்.

இவ்வாறு பாத்ம புராணத்தில் கூறிய ஸ்ரீ கணபதி ஸ்தோத்திரம் முற்றிற்று.

சுபம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ देव्यष्टकम् ॥

ஸ்ரீ தேவீ அஷ்டகம்

குடும்பத்தில் சுமங்கலி கோபம், பசுவின் சாபம், சந்த்ரன், சுக்ரன், ராகு முதலிய கிரஹதோஷம், மனக் கலக்கம், கெட்ட ஸ்வப்பனம், முதலிய தோஷங்கள் இதை பாராயணம் செய்வதால் விலகும்.

श्रीगणेशाय नमः ।

महादेवीं महाशक्तीं भवानीं भववल्लभाम् ।
भवार्तिभञ्जनकरीं वन्दे त्वां लोकमातरम् ॥ १

ஸ்ரீகணேஶாய நம: ।

மஹாதேவீம் மஹாஶக்திம் பவானீம் பவவல்லபாம் ।
பவார்திபஞ்ஜநகரீம் வந்தே த்வாம் லோகமாதரம் ॥ 1

ஓ தேவியே, மஹாதேவனுடைய மனைவியும், மிகுந்த சக்தி வாய்ந்தவளும், பவானியும் பரமசிவனிடத்தில் அன்பு கொண்டவளும், சம்சார வாழ்க்கையில் ஏற்படும் மனக் கவலையை போக்குகிறவளும், உலகங்களுக்கு தாயுமான உங்களை நமஸ்க்கரிக்கிறேன். (1)

भक्तप्रियां भक्तिगम्यां भक्तानां कीर्तिवर्धिकाम् ।
भवप्रियां सतीं देवीं वन्दे त्वां भक्तवत्सलाम् ॥ २

பக்தப்ரியாம் பக்திகம்யாம் பக்தானும் கீர்திவர்திகாம் ।
பவப்ரியாம் ஸதீம் தேவீம் வந்தே த்வாம்
பக்தவத்ஸலாம் ॥ 2

பக்தர்களிடம் அன்பு கொண்டவளும், பக்தியினால் அடைய தகுந்தவளும், பக்தர்களுக்கு கீர்த்தியை வளர்ப்பவளும், பரமசிவனிடம் அன்பு கொண்டவளும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பதிவிரதையும், பக்தர்களிடம் அன்பு கொண்டவளு மான தங்களை நமஸ்க்கரிக்கிறேன். (2)

अन्नपूर्णां सदापूर्णां पार्वतीं पर्वपूजिताम् ।
महेश्वरीं वृषारूढां वंदे त्वां परमेश्वरीम् ॥ ३

அன்னபூர்ணாம் ஸதாபூர்ணாம் பார்வதீம் பர்வபூஜிதாம்
மஹேஶ்வரீம் வ்ருஷாரூடாம் வந்தே த்வாம்
பரமேஶ்வரீம் ॥ 3

நிரம்பிய அன்னம் உள்ளவளும், எப்பொழுதும் போக போக்யங்களால் நிரம்பியவளும், பர்வதராஜனின் புத்திரியும், பௌர்ணமி முதலிய பர்வ தினங்களில் பூஜிக்கப்பட்டவளும், மஹேஸ்வரனுடைய மனைவியும், விருஷபவாஹனத்தில் அமர்ந்தவளும், பிர்மாதி தேவர் களுக்கெல்லாம் ஈஸ்வரியுமான தங்களை நமஸ்கரிக் கிறேன். (3)

कालरात्रिं महारात्रिं मोहरात्रिं जनेश्वरीम् ।
शिवकान्तां शम्भुशक्तिं वंदे त्वां जननीमुमाम् ॥ ४

காலராத்ரிம் மஹாராத்ரிம் மோஹராத்ரிம்
ஜனேஶ்வரீம் ।
ஶிவகாந்தாம் ஶம்புஶக்திம் வந்தே த்வாம்
ஜனனீமுமாம் ॥ 4

பிரளயகால ராத்திரியாக இருப்பவளும், மிகப் பெரிய ராத்திரியாக இருப்பவளும், (சிவராத்திரி முதலிய புண்யகால ராத்திரியாக இருப்பவளும்), மோஹத்தை கொடுக்கும் இரவாக இருப்பவளும், ஜனங்களுக்கு ஈஸ்வரியாக இருப்பவளும், பரமசிவனுக்கு சந்தனம், புஷ்பம் இவைகளை அளித்து அன்பு காட்டுகிறவளும், பரமசிவனுடைய சக்தியாய் இருப்பவளும், உமையுமான பிரணவத்தின் பொருளுமான தங்களை நமஸ்கரிக் கிறேன். (4)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

जगत्कर्त्रीं जगद्धात्रीं जगत्संहारकारिणीम् ।
मुनिभिः संस्तुतां भद्रां वंदे त्वां मोक्षदायिनीम् ॥ ५

ஜகத்கர்த்ரீம் ஜகத்தாத்ரீம் ஜகத்ஸம்ஹாரகாரிணீம் ।
முனிபி: ஸம்ஸ்துதாம் பத்ராம் வந்தே த்வாம்
மோக்ஷதாயினீம் ॥ 5

ஜகத்தை உண்டு பண்ணுகிறவளும், ஜகத்தை ரக்ஷிப்பவளும், உலகத்தை கடைசியில் ஸம்ஹரிப்பவளும், மஹரிஷிகளால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டவளும், பக்தர்களுக்கு மங்களத்தை அளிப்பவளும், மோக்ஷத்தை கொடுப்பவளுமான தங்களை நமஸ்கரிக்கிறேன். (5)

देवदुःखहरामंबां सदा देवसहायकाम् ।
मुनिदेवैः सदासेव्यां वंदे त्वां देवपूजिताम् ॥ ६

தேவது:கஹராமம்பாம் ஸதா தேவஸஹாயகாம் ।
முனிதேவை: ஸதாஸேவ்யாம் வந்தே த்வாம்
தேவபூஜிதாம் ॥ 6

தேவர்களின் துயரங்களை போக்குகிறவளும், எப்போதும் தேவர்களுக்கு உதவி புரிபவளும், மஹரிஷிகளாலும், தேவதைகளாலும், ஸேவிக்கத் தகுந்தவளும், தேவர்களால் பூஜிக்கப்பட்டவளுமான தங்களை நமஸ்கரிக்கிறேன். (6)

त्रिनेत्रां शंकरीं गौरीं भोगमोक्षप्रदां शिवाम् ।
महामायां जगद्बीजां वंदे त्वां जगदीश्वरीम् ॥ ७

த்ரிநேத்ராம் ஶங்கரீம் கௌரீம் போகமோக்ஷப்ரதாம்
ஶிவாம் ।
மஹாமாயாம் ஜகத்பீஜாம் வந்தே த்வாம் ஜகதீஶ்வரீம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூன்று கண்களுடன் கூடியவளும், பக்தர்களுக்கு மங்களங்களை செய்கின்றவளும், தங்க வர்ணமாய் இருப்பவளும், போகங்களையும் மோக்ஷங்களையும் கொடுப்பவளும், மங்கள ஸ்வரூபமாய் இருப்பவளும், மஹா மாயா ஸ்வரூபிணியாக இருப்பவளும், உலகங்களுக்கு காரணமாய் இருப்பவளும், உலகங்களுக்கெல்லாம் ஈஸ்வரியுமாக இருக்கும் தங்களை நமஸ்கரிக்கிறேன். (7)

शरणागतजीवानां सर्वदुःखविनाशिनीम् ।
सुखसंपत्करां नित्यं वंदे त्वां प्रकृतिं पराम् ॥ ८

इति देवि अष्टकं संपूर्णम् ॥

ஶரணாகதஜீவானாம் ஸர்வது:கவினாஶினீம் ।
ஸுக ஸம்பத்கராம் நித்யம் வந்தே த்வாம்
ப்ரக்ருதிம் பராம் ॥ 8

இதி தேவி அஷ்டகம் ஸம்பூர்ணம்.

சரணமடைந்த ஜனங்களின் துக்கங்கள் யாவையும் போக்குகின்றவளும், சுகங்களையும், அஷ்டசம்பத்துகளையும் அளிப்பவளும், உலகத்திற்கு காரணமான சிறந்த பிரகிருதியுமான தங்களை நமஸ்கரிக்கிறேன். (8)

ஸ்ரீ தேவியின் அஷ்டகம் முற்றிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ देवीक्षमापनस्तोत्रम् ॥

தேவீக்ஷமாபன ஸ்தோத்திரம்

ஜாதகத்தில் சந்திரன், ராகு, சுக்ரன் முதலிய கிரஹங்கள் தோஷமுள்ளவர்களாக இருந்தால், சித்த பிரமம், ஆஸ்த்துமா, டி. பி., இவைகளோ வயிற்றுக் குள்ளோ, தொண்டை முதலிய இடங்களில் புண்களோ இருக்கக் கூடும் மனக் கவலையும் இருக்கலாம். இந்த ஸ்தோத்திரத்தை படிப்பதால் அவைகளெல்லாம் நீங்கிவிடும். கெட்ட ஸ்வப்னங்களும் விலகும். இந்த ஸ்தோத்திரத்தை பக்தி சிரத்தையுடன் படித்து வந்தால், தானுகவே குருக்கள் வந்து, ஸ்ரீ புவனேஸ்வரி முதலிய மஹாமந்திரங்களை உபதேசம் செய்வார்கள். அம்பாளுடைய பூஜையையோ ஸ்தோத்திரங்களையோ, மந்திரத்தையோ செய்து முடித்ததும் இதை ஜெபிப்பது நலம்.

श्रीगणेशाय नमः ।

अपराधसहस्राणि क्रियंतेऽहर्निशं मया ।
दासोऽयमिति मां मत्वा क्षमस्व परमेश्वरि ॥ १

ஸ்ரீகணேஶாய நம: ।

அபராதஸஹஸ்ராணி க்ரியந்தேऽஹர்நிஶம் மயா ।
தாஸோऽயமிதி மாம் மத்வா க்ஷமஸ்வ பரமேஶ்வரி ॥ 1

ஓ பரமேஸ்வரி, இரவு பகலாக ஆயிரக்கணக்கான குற்றங்களைச் செய்கிறேன். தங்களுக்கு பணிவிடை செய்யும் பக்தன் எனக் கருதி பொறுத்துக் கொள்ள வேண்டும். (1)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

आवाहनं न जानामि न जानामि विसर्जनम् ।
पूजां चैव न जानामि क्षम्यतां परमेश्वरि ॥ २

ஆவாஹனம் ந ஜானாமி ந ஜானாமி விஸர்ஜனம் ।
பூஜாம் சைவ ந ஜானாமி க்ஷம்யதாம் பரமேச்வரி ॥ 2

ஓ பரமேஸ்வரி, தங்களை எப்படி அழைப்பதென எனக்குத் தெரியாது. தங்களை இருக்கும் இடத்திற்கு எப்படி செல்லுங்கள் என சொல்ல வேண்டுமெனத் தெரியாது. பூஜை செய்ய வேண்டிய முறையையும் நான் அறியேன், தாங்கள் பொறுத்தருள வேண்டும். (2)

मंत्रहीनं क्रियाहीनं भक्तिहीनं सुरेश्वरि ।
यत्पूजितं मया देवि परिपूर्णं तदस्तु मे ॥ ३

மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் ஸுரேச்வரி ।
யத்பூஜிதம் மயா தேவி பரிபூர்ணம் ததஸ்து மே ॥ 3

ஓ தேவர்களுக்கெல்லாம் ஈஸ்வரியே, நான் செய்யும் பூஜையில் மந்திரக் குறைவோ, கர்மங்களின் குறைவோ, பக்திக் குறைவோ இருந்தாலும், அது பரிபூர்ணமான பூஜையாக ஆகும்படி பொறுத்துக் கொண்டு அருள் செய்ய வேண்டும். (3)

अपराधशतं कृत्वा जगदंबेति चोच्चरेत् ।
यां गतिं समवाप्नोति न तां ब्रह्मादयः सुराः ॥ ४

அபராதசதம் க்ருத்வா ஜகதாம்பேதி சோச்சரேத் ।
யாம் கதிம் ஸமவாப்னோதி ந தாம் ப்ரம்ஹாதய: ஸுரா:

நூற்றுக் கணக்கான குற்றங்களை செய்தாலும், ஓ ஜகதம்பா, (உலகங்களுக்கெல்லாம் தாயே) என கூறி விட்டால், அவன் எந்த போக போஜ்யங்களை அடைவானோ, அந்த லாபங்களை பிர்மாதி தேவர்கள் கூட அடைய முடியாது. (4)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

सापराधोऽस्मि शरणं प्राप्तस्त्वां जगदंबिके ।
इदानीमनुकंप्योऽहं यथेच्छसि तथा कुरु ॥ ५

ஸாபராதோऽஸ்மி ஶரணம் ப்ராப்தஸ்த்வாம் ஜகதம்பிகே
இதானீமனுகம்ப்யோऽஹம் யதேச்சஸி ததா குரு ॥ 5

ஓ ஜகதம்பிகே, நான் குற்றவாளியாக இருக்கிறேன் ஆயினும் தங்களை சரணமாக அடைந்து விட்டேன். இப்பொழுது நான் தங்களால் தயை செய்ய தகுந்தவன். எப்படித் தோன்றுகிறதோ அப்படிச் செய்யுங்கள். (5)

अज्ञानाद्विस्मृतेर्भ्रान्त्या यन्न्यूनमधिकं कृतम् ।
तत्सर्वं क्षम्यतां देवि प्रसीद परमेश्वरि ॥ ६

அஜ்ஞானத்விஸ்ம்ருதேர்ப்ராந்த்யா யன்யூனமதிகம் க்ருதம் ।
தத்ஸர்வம் க்ஷம்யதாம் தேவி ப்ரஸீத பரமேஶ்வரி ॥ 6

ஓ பரமேஸ்வரி. அறியாமையினுலோ, மறதியினுலோ, பிரமத்தினுலோ, குறைவாகவோ அதிகமாகவோ நான் பூஜைகளை செய்திருக்கலாம். அவை யாவையும் பொறுத்துக் கொள்ளுங்கள், அருள்புரிய வேண்டும். (6)

कामेश्वरि जगन्मातः सच्चिदानन्दविग्रहे ।
गृहाणार्चामिमां प्रीत्या प्रसीद परमेश्वरि ॥ ७

காமேஶ்வரி ஜகன்மாத: ஸச்சிதானந்த விக்ரஹே ।
க்ருஹாணார்சாமிமாம் ப்ரீத்யா ப்ரஸீத பரமேஶ்வரி ॥ 7

ஓ காமேஸ்வரி, உலகிற்கெல்லாம் தாயே, சத்து, சித்து, ஆனந்தம் இவைகளின் வடிவாக இருப்பவளே, நான் செய்த இந்த பூஜையை அன்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஓ பரமேச்வரி, அருள் புரிய வேண்டும். (7)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

गुह्यातिगुह्यगोप्त्री त्वं गृहाणास्मत्कृतं जपम् ।
सिद्धिर्भवतु मे देवि त्वत्प्रसादात्सुरेश्वरि ॥ ८

इति देवीक्षमापनस्तोत्रं संपूर्णम् ॥

குஹ்யாதிகுஹ்யகோப்த்ரீ த்வம்
க்ருஹாணாஸ்மத்க்ருதம் ஜபம் ।
ஸித்திர்பவது மே தேவி த்வத்ப்ரஸாதாத் ஸுரேஶ்வரி

இதி தேவீக்ஷமாபனஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

மிக ரகசியமாக உள்ள மந்திரங்களை தாங்கள் பாது காக்கிறீர்கள். நான் செய்த ஜபத்தை தாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும். ஓ தேவியான ஸுரேச்வரீ எனக்கு மந்த்ரஸித்தி தங்கள் அருளால் ஏற்பட வேண்டும். (8)

தேவீக்ஷமாபன ஸ்தோத்திரம் முற்றிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொட்டையூர் தல வரலாறு

பத்ர யோகி என்ற முனிவர் ஸ்ரீபரமேச்வரனைக் குறித்து ஹிமய மலையில் கடுந்தவம் செய்துகொண்டு இருக்கையில் சத்யரதி என்ற அரசன் அங்கு வேட்டை யாட வந்தான். முனிவர் ஸமாதியில் இருந்ததால் அரசனை வரவேற்கவில்லை. அதை அறியாத அரசன் முனிவர் தன்னை அவமதித்ததாக எண்ணி அவர் தவத் துக்கு இடையூறு செய்தான். அதனால் தவம் கலைந்து எழுந்த முனிவர் அரசனை பிசாசாக ஆகித் திரியும்படி சபித்தார். கோபத்தின் காரணமாக தனக்கு ஏற்பட்ட தவத்தின் இடையூறை அறிந்து அதற்கு பிராயச்சித்த மாக கோடி சிவக்ஷேத்திரங்கள் சென்று ஸ்ரீபரமேச்வரனை தரிசிப்பதற்காக புறப்பட்டு பல க்ஷேத்திரங்களுக்கு சென்று வருகையில், கொட்டையூர் வந்து அங்குள்ள அம்ருத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ கோடீச் வரரை தரிசித்து விட்டு வேறு க்ஷேத்திரத்திற்கு புறப் படுகையில் ஓர் அசரீரியானது ஏற்பட்டது. "ஓ, முனி வரே, கோடி ஸ்தலங்களுக்குச் சென்று கால் தேய வேண்டாம், இந்த ஏரண்டேச்வரரை தரிசித்த மாத்தி ரத்திலேயே கோடி லிங்கங்களை தரிசித்த புண்யம் கிட்டும், உன் விரதம் பூர்த்தியாகி விட்டது" என்று. உடன் ஸ்ரீ பரமேச்வரன் கோடி அம்பாளுடனும், கோடி முருகனுடனும், கோடி விநயகருடனும், கோடி சண்டி கேச்வரர்களோடும், தானும் கோடி லிங்கமாக ஆவிர் பவித்தார்.

அதனால் ஸ்ரீ பரமேச்வரனுக்கு இங்கு கோடீச் வரர் எனப் பெயர் ஏற்பட்டது. பின்பு பத்ரயோகி அங்கேயே வசித்து ஸ்ரீ பகவானை வழிபட்டு வருகையில் ஒரு நாள் ஸ்ரீ அம்பாள் பந்தாடும் காக்ஷியைக் கண்டு களித்தார். அதிலிருந்து ஸ்ரீ அம்பாளுக்குப் பந்தாடு நாயகி (கந்துகக்ரீடாம்பிகை) எனப் பெயர் வந்தது. இன்றும் அங்குள்ள சிவலிங்கத்தின் மேல் முழுவதும் பலாக்காய் போல் முள்முள்ளாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு முள்ளும் ஒவ்வொரு சிவலிங்கமாகும். அதே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போல் அங்குள்ள விநாயகரின் திருமேனியிலும் கோடிக் கணக்கான விநாயக வடிவில் காணப்படுகின்றன.

ஸ்ரீ பரமேச்வரனுக்கு மிகப் பிரியமான பில்வ விருக்ஷங்கள் இங்கு மிகுதியாக இருப்பதால் இந்த க்ஷேத்திரத்திற்கு பில்வாரண்யம் என்றும் பெயர்.

அத்ரி மஹரிஷி வம்சத்தில் பிறந்த ஓர் முனிவர் இந்த ஊர் க்ஷேத்ர விருக்ஷமாகிய (ஏரண்ட) கொட்டை மரத்தினடியில் இருந்து தவம் செய்ததால் இவ்வூருக்கு ஏரண்டபுரம் கொட்டையூர் எனப் பெயர் வந்தது. இந்த ஸ்தலத்தில் விளங்கும் மூர்த்திகளை தரிசிப்பதால் கோடிக்கணக்கான க்ஷேத்திரங்களுக்குச் சென்று அங்குள்ள மூர்த்திகளை தரிசித்த புண்யம் கிட்டுமென்றும், இந்த க்ஷேத்திரத்தில் செய்யும் புண்யமானது கோடி மடங்கு அதிகமானதென்றும், அவ்வாறே இத்தலத்தில் செய்யும் பாவமும் கோடி மடங்கு அதிகமாகுமென்றும் புராணம் கூறுகிறது. "கொட்டையூரில் செய்த பாவம் கட்டையோடே" என்ற உலகப் பழமொழியும் இப்புராணத்தின் வரலாற்றை உணர்த்துகிறது.

சத்யரதி அரசனுக்கு ஏற்பட்ட பைசாச பாவம் நீங்க பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று அங்குள்ள மூர்த்திகளை தரிசித்தும் அங்குள்ள தீர்த்தங்களில் நீராடியும் விலகாமல் முடிவில் வியாச பகவானுடைய வாக்கின்படி கொட்டையூர் வந்து ஸ்ரீ கோடீச்வரரை தரிசித்து அங்குள்ள அமுதக் கிணற்றில் நீராடி அத்தன்மை (பிசாசு) விலகியது.

இவ்விதச் சிறப்பு வாய்ந்த இந்த க்ஷேத்ரத்திற்கு குடந்தை - பெப்பர்மெண்ட் பாக்டரி உரிமையாளரான ஸ்ரீ குஞ்சிதபாதம் செட்டியார் அவர்கள் தனது பெருமுயற்சியினல் திருப்பணிக்குழு அமைத்து ஏராளமாகப் பொருள் திரட்டி பிலவங்க வருஷம் ஆவணி மாதம் 7-ந் தேதி புதன்கிழமை (23—8—67) அன்று மஹா கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடத்திஞர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருவிடைமருதூர்

ஸ்ரீ மத்யார்ஜுனம் என்னும் இந்த மஹா க்ஷேத்ரத்தில் தை மாதம் புஷ்யோத்ஸவத்தில் ஸாமவேத பாராயணத்தை பல தலைமுறைகளாக கோனேரிராஜபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ச்ரௌதிகளும் அவர்களுடைய தம்பிகள் ஸ்ரீ ராமஸ்வாமி ச்ரௌதிகள் முதலியவர்களும் மிகச் சிறப்பாய் நடத்தி வருகின்றனர். அதேபோல் இவர்களுடைய புத்திரர்கள் ஸ்ரீ நாராயணஸ்வாமி வாஜபேயர் என்னும் நித்யாக்னிஹோத்ரியும், இவர்கள் தம்பி ஸாம வேத நிபுணர்களாகிய ஸ்ரீ ராமச்சந்திர ச்ரௌதிகளும், திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜில் ஸாமவேத உபாத்தியாயர்களாக இருந்த ஸ்ரீ மஹாலிங்க ச்ரௌதிகளும் மிகச் சிறப்பாய் இன்றும் நடத்தி வருகின்றனர். அங்கு சென்று ஸாம வேதத்தை சிரவணம் செய்தால் எல்லா துக்கங்களும் விலகிவிடும். அவர்கள் அன்புடன் செய்யும் அன்னதானத்தைப் பற்றி எவ்வளவு கூறினலும் கூறலாம். இந்த உண்மைகளை உணர்ந்து பலரும் உதவிபுரிகின்றனர். அவசியம் உதவி செய்ய வேண்டும். இதேபோல் கருப்பத்தூர் ஸ்ரீ விஸ்வநாத தீக்ஷிதர் அவர்களும் மற்றும் பலரும் யஜுர் வேதம் முதலிய பாராயணங்களும் மிகச் சிறப்பாய் நடத்தி வருகின்றனர். இதற்கு நான்கூட பாத்திரங்கள் சிறிது வாங்கி உதவி செய்திருக்கிறேன்.

S. அனந்தராம தீக்ஷிதர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ सर्वमङ्गलाष्टकम् ॥

ஸர்வமங்களாஷ்டகம்.

இந்த எட்டு சுலோகங்களில் விஷ்ணு முதலிய தேவர்கள், முனிவர்கள், தார்மிகர்களான க்ஷத்திரியர்கள் மேரு முதலிய பர்வதங்கள், கங்கை முத்லிய நதிகள், வேதம், உபநிஷத்து முதலியவைகள், நவகிரஹம் முதலியவர்களின் பெயர்களை யெல்லாம் தனித்தனியாக கூறி வேண்டப்படுகின்றனர். இதை நித்யம் காலையிலோ, மாலையிலோ பாராயணம் செய்வதால் ஏழ்மை, கஷ்டம், வியாதி, மனக்கவலை முதலியவைகள் உடன் நீங்கி ஸகல மங்களங்களும் உண்டாகும்.

लक्ष्मीर्यस्य परिग्रहः कमलभूः सूनुर्गरुत्मान् रथः
पौत्रश्चन्द्र विभूषणः सुरगुरुः शेषश्च शय्यासनः ।
ब्रह्माण्डं वरमन्दिरं सुरगणा यस्य प्रभोस्सेवकाः
स त्रैलोक्य कुटुम्बपालनपरः कुर्यात्सदा मङ्गलम् ॥ १

லக்ஷ்மீர்யஸ்ய பரிக்ரஹ: கமலபூ:
ஸூனுர்கருத்மான் ரத:
பௌத்ரஶ்சந்த்ரவிபூஷண: ஸுரகுரு:
ஶேஷஶ்ச ஶய்யாஸன: ।
ப்ரம்மாண்டம் வரமந்திரம் ஸுரகணு
யஸ்ய ப்ரபோஸ்ஸேவகா:
ஸ த்ரைலோக்ய குடும்ப பாலனபர:
குர்யாத் ஸதா மங்களம் ॥ 1

எவருக்கு மஹாலக்ஷ்மி மனைவியோ, பிரம்மதேவன் புத்ரனோ, கருடன் தேரோ, தேவர்களுக்கு ஞானோபதேசம் செய்யும் ஸ்ரீருத்ரன் பேரனோ, ஆதிசேஷன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படுக்கையோ, பிரம்மாண்டம் முழுவதும் தனது சிறந்த வீடோ, தேவர்கள் யாவரும் எந்த பிரபுவுக்கு வேலைக்காரர்களோ, தன் குடும்பமாக எவர் மூன்று உலகங்களையும் காத்து வருகிருரோ அப்படிப்பட்ட ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் எப்பொழுதும் மங்களத்தை அளிக்கட்டும். (1)

இதற்குமேல் உள்ள சுலோகங்கள் யாவும் பெயர்களாகவே அமைந்துள்ளதால் அர்த்தம் யாவருக்கும் சுலபமாக அறியப்பட்டதாகும். அதனுல் அவைகளுக்கு அர்த்தம் எழுதப்படவில்லை. சில பதங்களுக்கு மட்டிலும் அர்த்தம் எழுதப்பட்டுள்ளது.

ब्रह्मा वायुगिरीशशेषगरुडाः देवेन्द्रकामौ गुरुः
चन्द्रार्कौ वरुणानलौ मनुयमौ वित्तेशविघ्नेश्वरौ ।
नासत्यौ निर्ऋतिर्मरुद्गणयुताः पर्जन्यमित्रादयः
सस्त्रीकास्सुरपुङ्गवाः प्रतिदिनं कुर्वन्तु वो मङ्गलम् ॥ २

ப்ரம்மா வாயுகிரீஶஶேஷகருடா:
தேவேந்த்ரகாமௌ குரு:
சந்த்ரார்கௌ வருணுனலௌ
மனுயமௌ வித்தேஶவிக்னேஶ்வரௌ ।
நாஸத்யௌ நிர்ருதிர்மருத்கணயுதா:
பர்ஜன்ய மித்ராதய:
ஸஸ்த்ரீகாஸ்ஸுரபுங்கவா: ப்ரதிதினம்
குர்வந்து வோ மங்களம் ॥ 2

कुर्वन्तु वो मङ्गलम् । குர்வந்து வோ மங்களம் என்று ஒவ்வொரு சுலோகத்தின் முடிவில் வரும் ஒவ்வொன்றுக்கும் நம் யாவருக்கும் மங்களத்தைச் செய்யட்டும் எனக் கருத்து.

अनलः - அக்நி, वित्तेशः - குபேரன், नासत्यौ - அச்விநீ தேவர்கள் (ஸ்திரீகளுடன் கூடிய தேவ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிரேஷ்டர்கள் யாவரும் நமக்கு மங்களத்தை அளிக்கட்டும் (2)

विश्वामित्र पराशरौर्वभृगवोऽगस्त्यः पुलस्त्यः क्रतुः
श्रीमानत्रिमरीचिकौत्सपुलहाः शक्तिर्वसिष्ठोंगिराः ।
माण्डव्यो जमदग्नि गौतम भरद्वाजादयस्तापसाः
श्रीमद्विष्णुपदाब्ज भक्तिनिरताः कुर्वन्तु वो मङ्गलम् ॥ ३

விஸ்வாமித்ர பராஶரௌர்வப்ருகவோऽ
கஸ்த்யః புலஸ்த்யः க்ரதுः
ஸ்ரீமானத்ரிமரீசிகௌத்ஸபுலஹாः
ஶக்திர் வஸிஷ்டோங்கிரா: ।
மாண்டவ்யோ ஜமதக்நி கௌதம பர-
த்வாஜாதயஸ்தாபஸாः
ஸ்ரீமத்விஷ்ணு பதாப்ஜ பக்திநிரதாः
குர்வந்து வோ மங்களம் ॥ 3

ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சரண கமலங்களில் பக்தி உள்ளவர்கள் இவர்கள் (3)

मान्धाता नहुषोऽम्बरीषसगरौ राजा पृथुर्हैहयः
श्रीमान् धर्मसुतो नलो दशरथो रामो ययातिर्यदुः ।
इक्ष्वाकुश्च विभीषणश्च भरतश्चोत्तानपादध्रुवा
वित्याद्या भुवि भूभुजः प्रतिदिनं कुर्वन्तु वो मङ्गलम् ॥ ४

மாந்தாதா நஹுஷோऽம்பரீஷஸகரௌ
ராஜா ப்ருதுர்ஹைஹயः
ஸ்ரீமான் தர்மஸுதோ நளோ தஶரதோ
ராமோ யயாதிர்யதுः ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இக்ஷ்வாகுஶ்ச விபீஷணஶ்ச பரதஶ்
சோத்தான பாதத்ருவா-
வித்யாத்யா புவி பூபுஜ: ப்ரதிதினம்
குர்வந்து வோ மங்களம் ॥ 4

ஹைஹய: கார்த்தவீர்யார்ஜுனன் - பூமியில் விளங்கிய அரசர்கள் நம் யாவருக்கும் மங்களத்தை அளிக்கட்டும்.

श्रीमेरुर्हिमवांश्च मन्दरगिरिः कैलासशैलस्तथा
माहेन्द्रो मलयश्च विन्ध्यनिषधौ सिंहस्तथा रैवतः ॥
सह्याद्रिर्वरगन्धमादनगिरिर्मैनाकगोमन्तका-
वित्याद्या भुवि भूभृतः प्रतिदिनं कुर्वन्तु वो मङ्गलम् ॥ ५

ஶ்ரீமேருர்ஹிமவாம்ஶ்ச மந்தரகிரி:
கைலாஸஶைலஸ்ததா
மாஹேந்த்ரோ மலயஶ்ச விந்த்யநிஷதௌ
ஸிம்ஹஸ்ததா ரைவத: ।
ஸஹ்யாத்ரிர்வரகந்தமாதனகிரிர்
மைநாககோமந்தகா-
வித்யாத்யா புவி பூப்ருத: ப்ரதிதினம்
குர்வந்து வோ மங்களம் ॥ 5
(5)

பூப்ருத: மலைகள்.

गङ्गा सिन्धुसरस्वती च यमुना गोदावरी नर्मदा
कृष्णा भीमरथी च फल्गुसरयूः श्रीगण्डकी गोमती ।
कावेरी कपिला प्रयागविनतावेत्रावतीत्यादयो
नद्यः श्रीहरिपादपङ्कजभवाः कुर्वन्तु वो मङ्गलम् ॥ ६

கங்கா ஸிந்துஸரஸ்வதீ ச யமுனா
கோதாவரீ நர்மதா
க்ருஷ்ணா பீமரதீ ச பல்குஸரயூ:
ஶ்ரீகண்டகீ கோமதீ ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காவேரீகபிலாப்ரயாகவிநதா
வேத்ராவதீத்யாதயோ
நத்ய: ஸ்ரீஹரிபாதபங்கஜபவா:
குர்வந்து வோ மங்களம் ॥ 6

हरि पाद पङ्कज भवाः ஸ்ரீ மஹா விஷ்ணுவின் பாத கமலங்களிலிருந்து உண்டானவைகளான நதிகள். (6)

वेदाश्चोपनिषद्गणाश्च विविधाः साङ्गा पुराणान्विता
वेदान्ता अपि मन्त्रतन्त्रसहितास्तर्कस्मृतीनां गणाः ।
काव्यालंकृतिनीतिनाटकगणाः शब्दाश्च नानाविधाः
श्रीविष्णोर्गुणराशिकीर्तनकराः कुर्वन्तु वो मङ्गलम् ॥ ७

வேதாஸ்சோபநிஷத்கணாஸ்ச விவிதா:
ஸாங்கா புராணான்விதா:
வேதாந்தா அபி மந்த்ரதந்த்ரஸஹிதா-
ஸ்தர்கஸ்ம்ருதீநாம் கணா: ।
காவ்யாலங்க்ருதி நீதிநாடககணா:
ஶப்தாஸ்ச நாநாவிதா:
ஸ்ரீவிஷ்ணோர் குணராஶிகீர்த்தனகரா:
குர்வந்து வோ மங்களம் ॥ 7

श्रीविष्णोः गुणराशि कीर्तनकराः ஸ்ரீ மஹா விஷ்ணுவின் கல்யாண குணங்களை கூறுவதையே நோக்கமாகக் கொண்ட வேதம் முதலியவைகள். (7)

आदित्यादिनवग्रहाः शुभकरा मेषादयो राशयो
नक्षत्राणि सयोगकाश्च तिथयस्तद्देवतास्तद्गणाः ।
मासाब्दा ऋतवस्तथैव दिवसाः सन्ध्यास्तथा रात्रयः
सर्वे स्थावरजङ्गमाः प्रतिदिनं कुर्वन्तु वो मङ्गलम् ॥ ८

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆதித்யாதி நவக்ரஹா: ஶுபகரா
மேஷாதயோ ராஶயோ
நக்ஷத்ராணி ஸயோககாஶ்ச திதய:
தத்தேவதா: தத்கணா: ।
மாஸாப்தா ருதவஸ்ததைவ திவஸா:
ஸந்த்யாஸ்ததா ராத்ரய:
ஸர்வே ஸ்தாவரஜங்கமா: ப்ரதிதினம்
குர்வந்து வோ மங்களம் ॥ 8

इत्येतद्वरमङ्गलाष्टकमिदं श्रीवादिराजेश्वरैर्व्याख्यातं
जगतामभीष्टफलदं सर्वाशुभध्वंसनम् ।
माङ्गल्यादि शुभक्रियासु सततं सन्ध्यासु वा यः पठे-
द्धर्मार्थादिसमस्तवाञ्छितफलं प्राप्नोत्यसौ मानवः ॥ ९

இத்யேதத்வரமங்களாஷ்டகமிதம்
ஸ்ரீவாதிராஜேஶ்வரைர்
வ்யாக்யாதம் ஜகதாமபீஷ்டபலதம்
ஸர்வாஶுபத்வம்ஸநம் ।
மாங்கல்யாதி ஶுபக்ரியாஸு ஸததம்
ஸந்த்யாஸு வா ய: படேத்
தர்மார்த்தாதி ஸமஸ்தவாஞ்சிதபலம்
ப்ராப்நோத்யஸௌ மாநவ: ॥ 9

மத்வ மதத்தைச் சேர்ந்த மிகப் பெரியவர்களான ஸ்ரீவாதிராஜரால் இந்த ஸ்தோத்திரம் செய்யப்பட்டது. இச்சிறந்த மங்களாஷ்டகமானது உலகத்துக்கெல்லாம் கோரிய பொருளை அளிக்கும் எல்லாவித அசுபங்களையும் (பாபங்களையும்) அடியோடு அழிக்கும். கல்யாணம் முதலிய மங்கள காரியங்களிலும் ஸந்தியா காலங்களிலும் இதை எவன் படிப்பானே அவன் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இந்த நான்கு புருஷார்த்தங்களையும் அடைவான்.

ஸ்ரீவாதிராஜரால் செய்யப்பட்ட ஸர்வ மங்களாஷ்டகம் முற்றிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ हनुमल्लांगूलास्त्र स्तोत्रम् ॥

ஸ்ரீ ஹநுமந்லாங்கூலாஸ்த்ர ஸ்தோத்ரம்

இது சத்ரு பயத்தை போக்கும். சரீர வியாதி, மனோ வியாதி, மறதி, பயம், கல்விக்கு வரும் இடையூறு, அபகீர்த்தி முதலிய தோஷங்கள் உடன் போகும். சனி, செவ்வாய், சூர்யன், புதன், ராகு முதலிய நவக்கிரஹ தோஷங்களைப் போக்கும். இந்த ஸ்தோத்திரத்தை அரச மரத்தின் அடியிலிருந்து படிப்பது நலம்.

श्रीगणेशाय नमः ॥

हनुमन्नञ्जनीसूनो महाबलपराक्रम ।
लोलल्लांगूलपातेन ममारातीन्निपातय ॥ १

ஸ்ரீ கணேஶாய நம: ॥

ஹனுமந்நஞ்ஜனீஸூநோ மஹாபலபராக்ரம ।
லோலல்லாங்கூலபாதேன மமாராதீந்நிபாதய ॥ 1

ஓ ஹநுமாரே, அஞ்சனா தேவியின் புத்திரனே, மிகுந்த பலத்தையும் சத்ருக்களை ஆக்ரமிக்கும் சக்தியை உடையவரும் ஆடுகின்ற வாலாகிற அஸ்த்திரத்தை பிரயோகிப்பதால் என்னுடைய சத்ருக்கள் யாவரையும் அடித்துத் தள்ள வேண்டும். (1)

मर्कटाधिप मार्ताण्ड मण्डलग्रासकारक । [लोल......निपातय] २

மர்கடாதிப மார்தாண்ட மண்டலக்ராஸகாரக ।
(லோல ...... நிபாதய) 2

குரங்குகளுக்கெல்லாம் தலைவரே சூர்ய மண்டலத்தை விழுங்கச் சென்றவரே, ஆடுகின்ற வாலாகிற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஸ்த்திரத்தை பிரயோகிப்பதால் என்னுடைய சத்துருக்கள் யாவரையும் அடித்துத் தள்ள வேண்டும். (2)

अक्षक्षपण पिङ्गाक्ष दितिजासुक्षयंकर । [लोल ...... निपातय] ३

அக்ஷக்ஷபண பிங்காக்ஷ திதிஜாஸுக்ஷயம்கர ।
(லோல .... நிபாதய) 3

அக்ஷய குமாரனை அழித்தவரே, மஞ்சள் நிறமுள்ள கண்களை உடையவரே, அஸுரர்களின் உயிரை நாசம் செய்கின்றவரே, அசங்குகின்ற வாலாகிற அஸ்த்திரத்தை பிரயோகிப்பதால் என்னுடைய சத்துருக்கள் யாவரையும் அடித்துத் தள்ள வேண்டும். (3)

रुद्रावतार संसार दुःखभारापहारक । [लोल ...... निपातय] ४

ருத்ராவதார ஸம்ஸார து:கபாராபஹாரக ।
(லோல .... நிபாதய) 4

பரமசிவனுடைய அவதாரமாக இருப்பவரே ஸம்சார துக்கமாகிற சமுத்திரத்திலிருந்து கரையேற்றுகிறவரே. (4)

श्रीरामचरणाम्भोजमधुपायित मानस । [लोल ...... निपातय] ५

ஸ்ரீராமசரணாம்போஜ மதுபாயித மானஸ ।
(லோல ...... நிபாதய) 5

ஸ்ரீ ராமனுடைய சரண கமலத்தில் தேன் குடிக்கும் வண்டு போன்ற மனதை உடையவரே. (5)

वालिप्रमथनक्लान्तसुग्रीवोन्मोचनप्रभो । [लोल...... निपातय] ६

வாலிப்ரமதனக்லாந்த ஸுக்ரீவோன்மோசன ப்ரபோ ।
(லோல ...... நிபாதய) 6

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாலியினுல் அடிபட்ட சுக்ரீவனை பாதுகாத்த பிரபுவே. (6)

सीता विरहवारीशमग्नसीतेशतारक। [लोल ...... निपातय] ७

ஸீதா விரஹவாரீஶ மக்னஸீதேஶதாரக।
(லோல ...... நிபாதய) 7

ஸீதையின் பிரிவாகிற சமுத்திரத்தில் மூழ்கிய ஸ்ரீ ராமனை கரையேற்றியவரே. (7)

रक्षोराजप्रतापाग्नि दह्यमान जगद्घन। [लोल .... निपातय] ८

ரக்ஷோராஜப்ரதாபாக்னிதஹ்யமான ஜகத்வன।
(லோல ...... நிபாதய) 8

ராவணனுடைய பிரதாபமாகிற அக்னியினுல் எரிந்த உலகத்திற்கு மழை ஜலமாக இருப்பவரே. (8)

ग्रस्ताशेष जगत्स्वास्थ्य राक्षसाम्भोधिमन्दर [लोल ......] ९

க்ரஸ்தாஶேஷ ஜகத்ஸ்வாஸ்த்ய ராக்ஷஸாம்போதிமந்தர
(லோல ...... நிபாதய) 9

உலகத்தாரின் நலனுக்கு தீங்கு செய்யும் ராக்ஷஸர்களாகிற ஸமுத்திரத்திற்கு மந்தர மலையாக இருப்பவரே. (9)

पुच्छगुच्छस्फुरद्वीर जगद्दग्धारिपत्तन। [लोल ......] १०

புச்சகுச்சஸ்புரத்வீர ஜகத்தக்தாரிபத்தன।
(லோல .... நிபாதய) 10

வாலின் நுனியாகிற பூங்கொத்தில் பல வீரர்களை சுருட்டியவரே, சத்துருவின் பட்டிணத்தில் தீ வைத்தவரே. (10)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

जगन्मनोदुरुल्लङ्घ्यापारावारविलङ्घन [लोल ......] ११

ஜகன்மனோதுருல்லங்க்யாபாராவாரவிலங்கன ।
(லோல ...... நிபாதய) 11

உலகத்தில் உள்ளவர்களின் மனதினால்கூட தாண்டமுடியாத அபாரமான சமுத்திரத்தை தாண்டியவரே. (11)

स्मृतमात्रसमस्तेष्टपूरक प्रणतप्रिय । [लोल ......] १२

ஸ்ம்ருதமாத்ர ஸமஸ்தேஷ்டபூரக ப்ரணதப்ரிய ।
(லோல ...... நிபாதய) 12

நினைத்த மாத்திரத்தில் கோரிய எல்லா பொருள்களையும் கொடுப்பவரே, நமஸ்கரித்தவர்களிடம் அன்பு கொண்டவரே. (12)

रात्रिंचरतमोरात्रिकृन्तनैकविकर्तन । [लोल ......] १३

ராத்ரிம்சரதமோராத்ரிக்ருந்தனைக விகர்தன ।
(லோல ...... நிபாதய) 13

ராக்ஷஸர்களாகிற இருள் சூழ்ந்த ராத்திரியை போக்குவதில் சூர்யனாக இருப்பவரே. (13)

जानक्या जानकीजानेः प्रेमपात्र परंतप । [लोल ......] १४

ஜானக்யா ஜானகீஜானே: ப்ரேமபாத்ர பரம்தப ।
(லோல ...... நிபாதய) 14

ஸீதையினுடையவும் ஸ்ரீராமனுடையவும் அன்புக்கு பாத்திரமானவரே, சத்துருக்களை தவிக்கச்செய்கிறவரே.

भीमादिक महाभीम वीरावेशावतारक । [लोल ......] १५

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பீமாதிக மஹாபீம வீராவேஶாவதாரக ।
(லோல ...... நிபாதய) 15

பீமன் முதலிய மஹா பயங்கர வீரர்களின் சக்தியை அடைந்து அவதாரம் செய்தவரே. (15)

वैदेही विरहक्लान्त रामरोषैक विग्रह । (लोल ....) १६

வைதேஹீ விரஹக்லாந்த ராமரோஷைக விக்ரஹ ।
(லோல ...... நிபாதய) 16

ஸீதையின் பிரிவினுல் வாடிய ராமரின் கோபத்தின் உருவாக இருப்பவரே. (16)

वज्रांगनखदंष्ट्रेश वज्रिवज्रावगुण्ठन । (लोल ......) १७

வஜ்ராங்க நகதம்ஷ்ட்ரேஶ வஜ்ரிவஜ்ராவகுண்டன ।
(லோல ...... நிபாதய) 17

வஜ்ராயுதம் போன்ற அங்கங்கள் நகங்கள் தித்திப் பற்கள் உடையவரே, இந்திரனுடைய வஜ்ராயுதத்தை வீணுக்கியவரே. (17)

अखर्वगर्व गन्धर्वपर्वतोद्भेदनस्वर । (लोल ......) १८

அகர்வகர்வகந்தர்வ பர்வதோத்பேதனஸ்வர ।
(லோல .... நிபாதய) 18

மிகுந்த கர்வங்கொண்ட கந்தர்வர்கள் வஸிக்கின்ற மஹேந்திர பர்வதத்தை பிளக்கின்ற சிம்மநாதத்தை உடையவரே. (18)

लक्ष्मणप्राणसंत्राण त्राततीक्ष्णकरान्वय । (लोल ....) १९

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

 1930. In Public Domain. Muthulakshmi Research Academy

லக்ஷ்மணப்ராண ஸம்த்ராண த்ராததீக்ஷ்ண்கரான்வய
(லோல ...... நிபாதய) 19

லக்ஷ்மணனுடைய உயிரை ரக்ஷித்ததால் சூர்ய வம்சத்தை காத்தவரே. (19)

रामादि विप्रयोगार्त भरताद्यार्तिनाशन । (लोल ....) २०

ராமாதி விப்ரயோகார்த்த பரதாத்யார்த்தி நாஶன: ।
(லோல .... நிபாதய) 20

ராமனுடைய பிரிவினுல் துயரம் கொண்ட பரதன் முதலியவர்களுடைய மனக்கவலையை போக்கியவரே.

द्रोणाचल समुत्क्षेप समुत्क्षिप्तारिवैभव । (लोल ....) २१

த்ரோணுசல ஸமுத்க்ஷேப ஸமுத்க்ஷிப்தாரி வைபவ ।
(லோல ...... நிபாதய) 21

ஓஷதி பர்வதத்தை தூக்கி வந்ததால் சத்துருக்கனின் மஹிமையை போக்கியவரே. (21)

सीताशीर्वादसंपन्न समस्तावयवाक्षत ।
लोलल्लांगूलपातेन ममारातीन्निपातय ॥ २२

ஸீதாஶீர்வாத ஸம்பன்ன ஸமஸ்தாவயவாக்ஷத ।
லோலல்லாங்கூலபாதேன மமாராதீன் நிபாதய ॥ 22

சீதையின் ஆசீர்வாதத்தினுல் சரீரத்தில் அஸ்திர பாதை இல்லாமல் ஆன ஓ ஆஞ்சனேய, அசங்குகின்ற வாலாகிற அஸ்திரத்தை பிரயோகிப்பதால் எனது சத்துருக்களை அடித்து தள்ள வேண்டும். (22)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

इत्येवमश्वत्थतलोपविष्टः शत्रुञ्जयं नाम पठेत्स्वयं यः ।
स शीघ्रमेवास्त समस्तशत्रुः प्रमोदते मारुतजप्रसादात् ॥ २३

இத்யேவமஸ்வத்ததலோபவிஷ்ட:
ஶத்ருஞ்ஜயம் நாம படேத் ஸ்வயம் ய: ।
ஸ ஶீக்ரமேவாஸ்த ஸமஸ்த ஶத்ரு:
ப்ரமோததே மாருதஜப்ரஸாதாத் ॥ 23

சத்துரு ஜெயத்தை கொடுக்கும் இந்த ஸ்தோத்திரத்தை அரசமரத்தின் அடியில் இருந்து படித்தால் ஸ்ரீ ஹநுமாருடைய பிரசாதத்தால் சத்ருக்களற்றவனுகி சந்தோஷமடைவான். (23)

ஸ்ரீ ஹநுமன் லாங்கூலாஸ்திர ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ ஜயமங்கள ஸ்தோத்திரம் 13-ம் பாகம் முற்றிற்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi